S.55

உ

குமரன்றுணை

தேவ ரிஷி முனி சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

வைத்திய வாத யோக

# ஞானசாஸ்திரத்திரட்டு

பத்தாம் பாகப் புஸ்தகம்.

இஃது

மதுரை வித்துவான்

த. குப்புசாமி நாயுடு அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம.

## குருசாமிக் கோனார்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீ ராமச்சந்திர விலாச அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1922.

**Registered Copy Right.**

உ

கடவுள் துணை.

# முகவுரை.

உலகின்கண் சர்வேஸ்வரனால் உற்பத்தி யாக்கப்பட்ட பல வுயிர்களிலும் சுவதேஜம்-அண்டஜம்-உற்பீஜம்-சராயுஜமாகிய நால் வகையோனி, எழுவகைத் தோற்றம், எண்பத்துநான்கு லட்சம் ஜீவராசிகளிற் சிரேஷ்டமானது இம்மானிடப் பிறவியேயாம்; இதில் ஜெனிக்கும் சிசுக்கள்-பாலர்-குமாரர்-எவ்வனர்-விருத்தர்களாகிய ஆண் பெண்ணினங் களுக்குரிய சகல சுக துக்கங்களையும், தர்மார்த்த காமமோக்ஷ மர்மங்களையும், இகபர சாதனங்கட்குரிய இயல்பினையும், எண்ணிலாப் பிறவித் துன்பங்களையும், இஷ்ட காமியார்த்த இன்ப ரசங்களையும் எடுத்துக்கூறிய நூல்கள் பல வாயினும், அவற்றினை இனிது விளங்கக் கூறுவன: அகண்ட பரிபூரண சச்சிதானந்த வடிவாயுள்ள சின்மயசொரூப நிலையைப் பெற்ற தேவ, ரிஷி, முனி, சித்தர்கள் திருவாய் மலர்ந்தருளிய யோக ஞான சாஸ்திரங்களேயாம்.

இவ்வித சாஸ்திரங்களை வெளிவிடாது நமது முன்னோர்கள் தொன்றுதொட்டு ஓலை ஏடுகளிலெழுதி, வீடுகளில் காலை மாலை பூசையில் வைத்துப் பூசித்து வாசித்து வருவது யாவருக்குந் தெரிந்த விஷயமே. அப்படிப்பட்ட அரிய சாஸ்திரங்கள் நமது நண்பர் இ. ராம. குருசாமிக்கோனார் மூதாதைகள் கையாண்டுவந்த ஓலை ஏட்டுப் பிரதிகள் பலவாம். அவற்றுட் சிலவற்றையும் கனம் ந. ராம. கணபதியாபிள்ளை யவர்களிடத்திலும், என்னிடத்திலும் கைவசமாயிருந்த ஓலைச் சுவடிகளையும் ஒருங்கேதிரட்டிப் பார்க்கையில்; பதினெண் சித்தர்களிற் சில இருந்தும் சில இல்லாதிருக்கவே அதையுஞ் சேர்த்து அச்சிடக் கருதி ”சொல்லும் பொருளுஞ் சுவையுங்கனியும், எல்லும் ஒளியும் இருப்பது போல' என்பாற் பிரியா தெழில் நட்பதனை, அன்பாற் கொண்ட அருமை நண்பர்” இ. ராம. குருசாமிக்கோனாரிடம் வெளியிட, அவருமதற்கிணங்கி பல தேயங்களிற் சென்று சில ஏடுகளைச் சேகரித்துக்கொண்டு வந்தனர். அச்சமயம் தெய்வ கடாக்ஷத்தால் திருப்பழனியின் கண் வசிக்கும் ஸ்ரீகைலாச போகமகாரிஷீஸ்வர சுவாமி யவர்கள் ஆதீன ஆச்சிரமம் மகா கைலாச பரம்பரை 225-வது பட்டம் ஸ்ரீ கைலாச தெண்டாயுதபாணி ரிஷீஸ்வர சுவாமியவர்

# முகவுரை.

கள் தமது ஆச்சிரமத்திற் கையாண்டுவந்த பலசாஸ்திரங்களடங்கின ஏட்டுச் சுவடிகளை வரப்பிரசாதத்துடன் கொடுத்து அச்சிடும்படி உதவி புரிந்தனர்கள்.

எல்லாச் சுவடிகளையும் காகிதத்தில் எடுத்தெழுதிப் பார்க்கையில் அதிற் சில சாஸ்திரங்களில் ஒவ்வோரிடத்தில் ஒவ்வொரு செய்யுட்களில் இரண்டுவரியும் மூன்றுவரியுமாக இருந்ததுடன், சிலபாக்களில் எதுகைமோனைகளேதுமில்லாமலுமிருந்தன. அவைகளைப் பூர்த்தி செய்யவேண்டிய, இப்புஸ்தகத்தில் அச்சிட்டிருக்கும் ஒவ்வொரு சாஸ்திரங்களின் முடிவிற் கண்டிருக்கிற நமது ஆத்மநண்பர்கள் ஒவ்வொரு வரிடத்திலும் ஒரு பிரதிக்கு நாலு ஓலை யேட்டுப்பிரதிகளைப் பெற்று அவற்றுள் வரைந்துள்ள லிகிதப்பிரகாரம், அனேக மகான்களின் உதவியைக்கொண்டு என் சிற்றறிவுக் கெட்டியவாறு சீர்திருத்தஞ் செய்ததுமன்றி, இதற்கு தேவரிஷிமுனி சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய "யோக ஞான சாஸ்திரத்திரட்டு" எனத் திருநாமஞ் சூட்டிப் பன்னிரண்டு பாகங்களாக அச்சிட்டிருக்கின்றனன்.

இச்சாஸ்திரங்களை யெல்லாந் திரட்டி ஒன்றுசேர்த்து அச்சிடுவதற்காகப் பொருட்செலவும், தேகப்பிரயாசையும் எடுத்துக்கொண்டுசதா துணைக் கருவியாயிருந்த மதுரை புதுபண்டபம் புஸ்தக வியாபாரியும், ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் பிரஸ் சொந்தக்காரருமாகிய நமது நேயர் இ. ராம குருசாமிக்கோனாரவர்களது நன்றியும் தாலபத்திர சாஸ்திரச் சுவடிகளுதவிய ஏனைய நண்பர்களதுநன்றியும் யான் என்றும் மறக்கத்தக்கனவன்று.

இவ்விதம் பன்னிரண்டு பாகமாய் அச்சிட்டிருக்கிற இவ்வரிய பெரிய சாஸ்திரங்கள் ஒருபுஸ்தகத்திலிருப்பது மற்றொருபுஸ்தகத்திலில்லா திருப்பதால்' பதினெட்டு வாலியத்தையும் பார்ப்பதவசியம். ஆகையால் ஒவ்வொருவரும் இதனைவாங்கிக் கையாண்டு வருவீர்களென நம்புகின்றனன்.

இங்ஙனம்.

☞ த. குப்புசாமி நாயுடு.

மதுரை.

# பத்தாவது புஸ்தகம் அட்டவணை.


| இலக்கம் | சாஸ்திரங்களின் பெயர் | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | அகஸ்தியர் ஞானச் சுருக்கம் | 1 | 1 |
| 2 | ஷை யார் ஞானச் சுருக்கம் | 2 | 1 |
| 3 | ஷை யார் ஞானச் சுருக்கம் | 3 | 2 |
| 4 | ஷை யார் மெஞ்ஞானச் சுருக்கம் | 4 | 3 |
| 5 | ஷை யார் நஞ்சு முறிவு | 5 | 4 |
| 6 | ஷை யார் சூஸ்திர ஞானம் | 6 | 6 |
| 7 | ,, பிரமஞானம் | 7 | 8 |
| 8 | ,, ஞான சூஸ்திரம் | 8 | 10 |
| 9 | ,, சமாதி சூஸ்திரம் | 9 | 13 |
| 10 | ,, குழம்பு | 10 | 15 |
| 11 | ,, ஞான தீட்சாவிதி | 11 | 17 |
| 12 | ,, முப்புவழலை சூஸ்திரம் | 12 | 20 |
| 13 | ,, சிவலிங்கா பூஜாவிதி | 13 | 24 |
| 14 | ,, வாசிக் குளிகை | 14 | 28 |
| 15 | ,, அகஸ்தியர் சூஸ்திரஞானம் | 15 | 32 |
| 16 | ,, தேவியின் பூர்வபக்ஷப் பூஜாவிதி | 16 | 36 |
| 17 | ,, தேவியின் அமரபக்ஷப் பூஜாவிதி | 17 | 41 |
| 18 | ,, ஞானச் சுருக்கம் | 18 | 46 |
| 19 | ,, சொரூப ஞானம் | 19 | 51 |
| 20 | ,, பால வாகடம் | 20 | 56 |
| 21 | ,, பூரணம் 205க்கு சூஸ்திரச்சுருக்கம் | 21 | 62 |
| 22 | ,, திருமந்திர விளக்கம் | 22 | 68 |
| 23 | ,, கயனஒட்டு வித்தைசூஸ்திரம் | 23 | 74 |
| 24 | ,, வகாரச் சத்து | 24 | 80 |
| 25 | ,, தண்டக சூஸ்திரம் | 25 | 87 |
| 26 | ,, முப்பு சூஸ்திரம் | 26 | 94 |
| 27 | ,, அதிசய சூஸ்திரம் | 27 | 101 |
| 28 | ,, முதுமொழி ஞானம் | 28 | 108 |
| 29 | ,, வாசிக்குறி தீட்சை | 29 | 112 |
| 30 | ,, குருநூல் 50-க்கு சுருக்கம் | 30 | 116 |
| 31 | ,, ஜெயகீர்க் குருநூல் | 31 | 123 |
| 32 | ,, சூட்ச முப்பு | 32 | 131 |
| 33 | ,, மெஞ்ஞான சூஸ்திரம் | 33 | 140 |
| 34 | ,, ஞான விளக்கம் | 34 | 146 |
| 35 | ,, அகஸ்தியர் பரிபூரணஞானம் | 53 | 158 |
| 39 | ,, செந்தூரம் 300ல் சூஸ்திரம் | 36 | 168 |
| 37 | ,, பஞ்சாட் சரம் | 27 | 178 |
| 38 | ,, குருக்கிடைச் சூஸ்திரம் | 38 | 188 |
| 39 | ,, பாலக்கிரக தோஷ நிவர்த்தி | 39 | 198 |
| 40 | ,, சூத்திர ஞானம் | 40 | 205 |
| 41 | ,, குரு நூல் | 50 | 216 |
| 42 | ,, வைத்தியக் குருநூல்முப்பு | 50 | 229 |
| 43 | ,, காதாந்தச் சித்தர் சூஸ்திரம் | 16 | 253 |
| 44 | ,, ஷை [illegible] | 30 | 257 |

உ

குருவேதுணை

பத்தாவது.

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# ஞானச்சுருக்கம் க.

உண்ணும்போ துயிரெழுத்தை யுயரவாங்கி
உறங்குகின்ற போதெல்லாம் மதுவேயாகும்
பெண்ணின்பா லிந்திரியம் விடும்போ தெல்லாம்
பேணியே வலம்நோக்கி நிலைத்தாயாகில்
தின்னுங்கா யிலைபழங்க ளருந்தும்போதும்
தினந்தோறு மிப்படியே செலுத்தவல்லார்
மண்ணூழி காலமட்டும் வாழ்வார்பாரு
மறலிகையி லகப்படவு மாட்டார் தானே (1)

# ஷியார் ஞானச்சுருக்கம் உ.

விந்துநிலை தனையறிந்து விந்தைகண்டால்
விதமான நாதமது குருவாய்ப்போகும்
அந்தமுள்ள நாதமது குருவாய்ப்போனால்
ஆதியந்த மானகுரு நீயேயாவாய்
சந்தேக மில்லைபுலத் தியனேஐயா
சகலகலைக் கியானமெல்லா மிதுக்கொவ்வாது
முந்தாநாள் யிருவருமே கூடிச்சேர்ந்த
மூலமதை யறியாட்டால் மூலம்பாரே. (1)

மூலமதை யறிந்தாக்கால் யோகமாச்சு
முறைமையுடன் கண்டாக்கால் வாதமாச்சு
ஜாலமில்லை கண்டவருன் வசமாய்நிற்பார்
சாஸ்திரத்தைக் கண்டறிந்தா லவனேசித்தன்
சிலமுள்ள புலத்தியனே பிரமயோகி
செப்புமொழி தவறும லுப்பைக்கண்டால்
ஞாலமதில் மயேந்திரமாஞ் சோதிதன்னை
நாட்டினார் சகலசித்தும் நல்குமுற்றே (2)

அகஸ்தியர் ஞானச்சுருக்கம் க. உ, முற்றிற்று

உ

குருவே துணை

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# ஞானச்சுருக்கம் ரு.

எட்டிரண்டும் பத்தகர உகரமாகி
எண்ணியே ஆண்பெண்ணு மானவாரும்
கட்டுடனே சாதியவள் ரூபமாது
கன்னியவள் வாலையடா வாமப்பாலைத்
தட்டுடனே அங்கென்று ரவியில்வாங்கித்
தனித்தவொரு மதியில்விட்டுத் தகமைதேர்ந்து
பட்டுடனே இப்படிநீ கலவிசெய்து
பராபரைக்குச் சுண்ணமது கொடுத்துவாங்கே (1)

வாங்கியே பீங்கானிற் பளிச்சென்றேதான்
வளமான சரக்கஞ்சு தாரங்கெந்தி
தாங்கியெ பூரலிங்க ரசமுஞ்சேர்த்துச்
சாமுள்ள கல்வத்தி லிட்டூட்டித்
தேங்கியே வில்லைசெய்து ரவியிற்போடு
திரமான கெசபுடத்திற் பற்பமாகும்
ஆங்கியே சிதம்பரத்தி னையனோடே
ஆதிகுரு கொடுக்கவொரு மாத்துப்பத்தே. (2).

பத்தான மாத்தெடுத்துத் தகடுதட்டிப்
பற்பமது திரிகோணச் செலத்திற்பூசி
அத்தருளாற் புடம்போடப் பற்பமாகும்
அதிகமுள்ள பற்பத்தை தின்றுபாரு
சித்தருளாற் றேகம்பத் தரைதானாகும்
சிவன்சொன்ன செந்தூரம் வழலைகூட்டிப்
புத்தியுடன் வாலையடா தேகந்தேகம்
புதுமையிது வாகுமப்பா மூன்றுமுற்றே. (3)

அகஸ்தியர் ஞானச் சுருக்கம் ரு. முற்றிற்று

உ

பரமபதிதுணை

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# மெஞ்ஞானச் சுருக்கம் ௪.

நாலான வேதமொடு ஆறு சாஸ்திரம்
நவிலுகிறோ முந்திமுந்திக் கணேசன் காப்பு
காலான தத்துவங்கள் தொண்ணூற் றாறும்
கனிந்துநின்ற அஞ்செழுத்தின் சுழியே காப்பு
பாலான மதியமுர்தம் நாத விந்து
பாங்கான குண்டலியின் பார்வை யேற்றி
மேலான சிதம்பரத்தில் நடன மாட
மேவிநின்ற பரவெளியி லின்னங் கேளே (1)

இன்னமதுக் கப்பாலே வட்ட மொன்று
மிருக்குதுபார் யெட்டாத வட்ட மீதில்
சொன்னகுறி அடையாள முப்பாழ் தாண்டி
துரியமென்ற ஞானவெளி யூடு சென்று
வண்ணமணி பூங்குழளாள் மாது லீலை
வண்மையுடன் பரவசமா யிருந்து கொண்டு
அண்ணலவர் சொன்னமொழி தன்னைக்கேட்டே
அகண்டமதில் வாழ்ந்திருப்பார் ஆஊ என்றே (2)

ஆமெனவும் ஊமெனவும் மிரண்டு மொன்றாய்
ஆதார உச்சிநடு வீடு மாகி
நாமெனவுந் தில்லைநட ராஜனாகி
நடனமிடும் நாதபரப் பிரம லீலை
[illegible]மவுனச் சுழியாகி உலகி லேதான்
தற்பரமாய் நின்றபரா பரையின் சூச்சம்
ஓமெனவும் ஓங்கார பீட மாகி
உதித்தபர நாதசிவ விந்து மூலம் (௩)

மூலமென்ற ஓரெழுத்தைச் சொல்லக் கேளு
முச்சந்தி வீதிதனில் ஊமை யாச்சு
பாலமென்ற ஈரெழுத்தே மொழியு மாச்சு
பரவெளியில் சத்திசிவ மதுவே யாச்சு
நீலமணி யாதபர நாதந் தன்னை
நேர்சுழியில் கண்டவற்குச் சித்தி முத்தி
வாலகுரு நஞ்சுண்ட மூர்த்தி தானும்
வழியறிந்த சுழிநாடி வாசி முற்றே (4)

அகஸ்த்தியர் ஞானம் ௪ முற்றிற்று

உ

பரமபதி துணை.

## அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# நஞ்சுமுறிவு. ரு

ஆகமமாய் வேதமுமா யனேகங் காப்பு
அறைந்திட்டேன் முறிவுவகை சொல்லக் கேளு
பாகமாய் நாவிபா ஷாணத் தோடு
பாங்கான ஊமத்தை சேராங் கொட்டை
வாகமாய் எருக்குமுத லெட்டி வித்து
மைந்தனே கள்ளிப்பால் தேன்சுண்ணும்பு
தாகமாய் நஞ்சுவகை யாவுக் குந்தான்
சரியான முறிவுவகை பாருபாரே. (1)

பாரடா முறிவுதான் ஊமத் தைக்குப்
பாங்கான பசலியிலை யதிலே போகும்
தாரடா களநீருங் குடிக்கப் போகும
தப்பாத யெட்டிக்கு நாவற் பட்டை
ஆரடா வெந்நீருங் குடிக்கப்போகும்
அப்பனே தாமரையின் கிழங்கிற் போகும்
கோடா கடுக்காய்வெந் நீரிற் போகும்
நீடாளிக் கிழங்குமதில் நீங்கு மேலே (2)

கேளப்பா சோரங்கொட் டைக்குத் தானுங்
கெடியான லவுங்கத்திற் போகும் போகும்
வாளப்பா புங்கயிலைச் சாற்றில்த் தீரும்
வளமான புளியிலே தீருந் தீரும்
நாளப்பா மாச்சக்கா யதனாற் றீரும்
நாவிதின்றால் பழரசத்தாற் போகும் போகும்
கேளப்பா பாஷாணந் தின்ற பேர்க்குக்
கொடுத்திடுவாய் மிளகவுரி கொடுக்கப்போமே (3)

போகுமடா கள்ளிப்பால் குடித்த பேர்க்குப்
பொன்னவரைச் சார்கரம்பைத் தெளிவிற் தீரும்
பாகமடா கருணைதின்று தடித்த பேர்க்குப்
பண்பான நல்லெண்ணெய் புளியிற் றீரும்
தாகமுடன் கதலிப்பழ மதிகந் தின்றால்
தருமிளகு பொடியதனாற் றீரு மப்பா
சேகரமாப் பலாப்பழங்க ளதிகந்தின்றால்
தேனிற்போம் சுக்குதூள் தன்னிற் போமே (4)

போமப்பா எருக்கம்பால் குடித்த பேர்க்குப்
புகழான பருத்தியிலைச் சாற்றிற் றீரும்
நாமப்பா அவுரிவேர் தன்னாற் றீரும்
நல்லெண்ணெய் வெற்றிலைச்சார் குடித்த பேர்க்கு
தாமப்பா சுண்ணாம்புத் தெளிவிற் றீரும்
தக்கலரி நல்லெண்ணெய் தான் கொண் டோர்க்கு
சாமப்பா துருசுத்தூள் உள்ளே கொள்ளச்
சரியான வாந்தியால் தீரும் பாரே. (5)

நஞ்சமுறிவு ஐ முற்றிற்று.

உ

சிவமயம்

அகஸ்தியர் திருவாய் மலந்தருளிய.

# சூஸ்த்திரஞானம் கூ.

(*)

முத்திதருங் கனகசபை நடுவில் நின்று
 மோனவெளிக் கப்பாலேமுடிந்த சோதி
வெத்திமதி குருவருளைப் போற்றி நின்று
 வேதாந்த சின்மயத்தி னருளைக் கண்டு
நித்யபரி பூரணமாய் நின்றசூட்சம்
 நேரறிந்து கண்டபர ஞான மாகி
சித்திதருஞ் சுழிமுனையி லாடி நின்ற
 திருவடியைக் கண்டனடா சென்னி தானே (1)

தானென்ற சென்னிமலைக் குள்ளே சென்று
 தாயான மனோன்மணியைப் பூசை பண்ணி
தேனென்ற சித்தர்மணிமண்ட பத்தில்
 சென்றனடா சித்தருட பதியைக் கண்டு
ஊனென்ற அமுர்தமதை யுண்டேன் பாரு
 ஓங்கார நிலையறிந்து வாசி பூட்டி
வானென்ற வீட்டினுள்ளே நிரைந்த சோதி
 மதிரவியின் வட்டமட்டா வளமை பாரே. (2).

பாரப்பா வெளியொளியாய் நின்ற நந்தி
 பார்க்கையிலே யென்னசொல்வேன் பளிங்கு மெத்தக்
காரப்பா கயிலாச முடிவில் நின்று
 காவென்றுங் கூவென்றுங் கூவிக் கொண்டு
ஏரப்பா இடகலையி லேறி யேறி
 எள்ளளவு மனதுபிச காமற் றானே
சேரப்பா பிங்கலையிற் சேர்த்துக் கொள்ளே
 திடமாக ஒருமனதாய் மலையி லேறே. (3)

மலையான மயேந்திரகிரி தன்னிற் சென்று
மகத்தான ரிசிகளையுந் தெரிசித் தேதான்
தலையான உச்சிமுடி தன்னில் நின்றேன்
தஞ்சமென நின்றூர்கள் அஞ்சு பேரும்
சிலையதுபோல் பவளஒளி நீலச்சோதி
சிவசிவா ஆறிவாற் பரத்தின் மூலம்
நிலையதுகண் டுரைத்தபடி கண்டு கொள்ளு
நீமயங்கித் திரியாதே மலையி லேறே. (4)

ஏறினே னம்மலையிற் சூட்சங் கேளு
என்மகனே சாரைவருங் கோடா கோடி
தேறினே னதைகண்டு வெளியில் வந்தேன்
திருஸ்டியிலே கருநெல்லி தன்னைக் கண்டு
மாறினேன் கலைமாறிச் சிலைநூலோதி
மாட்டினேன் பூட்டதனை மதியால் வாங்கி
கூறினேன் வாவாவா வென்றே கூவிக்
குருவிருந்த பதியதுதான் மதியார் பாரே. (5)

மதியான கேசரியின் மூல வட்டம்
மதிரவியின் சூட்சமடா மவுன வாலை
விதியருளு மெஞ்ஞான யோக நாதன்
வீதிநடு முச்சந்தி தன்னிற் கூடி
நதியருளுஞ் சீரங்க பட்டணத்தில்
நாதகுரு நஞ்சுண்ட மூர்த்தி தானும்
பதியரிந்த ஞானமடா நிலைகண் டோது
பாலமுர்தம் விந்துநிலை பரமா முற்றே. (6)

அகஸ்தியர் சூத்திர ஞானம் ௬ முற்றிற்று

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# பிர்மஞானம் எ.

பராபரமாம் பரமகுரு தன்னைப் போற்றி
பரவெளியி லாடிநின்ற குருவே அய்யா
நிராதரமாய் நிர்மலத்தின் சூட்சா சூட்சம்
நிறமான கணபதிவல் லபையைப் போற்றி
சராசரங்கள் அண்டபிண்ட நடுவு மாகி
சத்திசிவ முத்திசிறு வாச லாகி
தாராதரமாஞ் சுழிமுனையின் நடுவில் நின்ற
சச்சிதானந் தகுரு மூலங் காப்பே, (1)

மூலமுத லாதார பீட மாகி
முக்கோண வீட்டிதழின் முனையைப் பற்றிப்
பாலமெனு மயிர்ப்பாலந் தன்னைத் தாண்டிப்
பார்க்கையிலே தீபவொளி ஞானச் சோதி
நீலமணி யானகுரு நாத ரூபம்
நேர்சுழியிற் கண்டறிந்து கொள்ளு வாய்நீ
வாலையுரு வடிவான ஆத்தாள் தன்னை
மயேந்திரகிரிச் சார்புதனிற் கண்டேன் பாரே (2)

பாரப்பா கண்டறிந்து கொள்ளு வாய்நீ
பாழ்வெளியுங் கடந்துசுழி முனையிலேறி
ஏரப்பா கம்பநுனி மீதி லேதான்
எட்டாத வட்டபரந் தன்னைக் கண்டு
கூரப்பா குறிப்பறிந்து தீயை மூட்டி
குமரியிவ ளாடிநின்ற ஞான சூட்சம்
ஆரப்பா அறிவார்க ளானந தத்தை
ஆகாச வட்டமடா அறிந்து கொள்ளே. (3)

கொள்ளுதற்கு மின்னமொரு சூட்சங் கேளு
கூறான சந்திரனில் தோய்ந்தே யேறு
எள்ளளவும் மனதுபிச காமற் றானே
ஏறுநீ மலைச்சார்பு மேருக் கப்பல்
கொள்ளிகொண்டுமூட்டியது தீயைப் போலே
குறிகாட்டுஞ் சிவயோகி சித்தர் ஞானி
வள்ளலுட மகிமைதனைக் கண்டு தேறி
வழியறிந்து சுழிமுனையில்வாழ்ந் திருப்பார் பாரே. (4)

இருப்பார்கள் அவர்மகிமை யென்ன சொல்வேன்
    ஏகபர வெளிதனிலே சூட்ச மாகிச்
சிரிப்பார்கள் பிரபஞ்ச மாயை நீக்கித்
    தேஜோம யானந்த மூர்த்தி யாகி
விரிப்பார்கள் சாத்திரத்தில் நூல்கள் தோறும்
    விபரமது கண்டுரைப்பார் மேல்மூ லத்தோர்
தரிப்பதுதான் காயசித்தி விண்ணிற் கூடித்
    தானிருப்பார் பதினெட்டுச் சித்தர்தானே (5)

சித்தரென்ற பேரதுதான் வேறென் றெண்ணி
    செகத்திலே நீமயங்கித் திரியவேண்டாம்
பத்தமென்ற மனமதுதான் சித்த மாச்சு
    பரவெளியிற் சத்திசிவ மொன்றே யாச்சு
எத்திசையுங் காடுமலை செடிகள் தோறும்
    யிருப்பாரோ காயசித்தி யான பேர்கள்
சுத்தமில்லா மூடர்களே தேக மாயை
    தொலையில்லை உன்னுடைய சுழியிற் பாரே. (6)

பாரேநீ சித்தருட பதியைக் கண்டால்
    பளிச்சென்றே வெட்டவெளி யாகு மங்கே
காரேநீ கண்ணினொளி விண்ணுக் குள்ளாய்க்
    கண்டபர ஞானமல் லோ கருதிப் பாரு
ஊரேநீ கேட்டதெல்லா மூவந் தளிப்பார்
    ஊமைபர நாதவிந்து சித்த மாச்சு
வேரேநீ உலகமதில் மண்விண் ணொன்று
    விரும்பாதே விட்டகுறை சுழிதான் முற்றே (7)

அகஸ்தியர் ஞானம் ஏ முற்றிற்று

உ

பரமபதி துணை.

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# ஞானசூத்திரம் அ.

வணங்கியே தாய்பதத்தை போற்றி செய்து
மகத்தான எட்டிரண்டு மறிய வேணும்
இணங்குதற்குக் குருவேணும் இயல்பு வேணும்
எந்நூல்தா னாயிரத்தி யிருநூற் றுள்ளே
குணங்காமற் சொல்லிவைத்தேன் அகார மீசன்
கூடிநிற்கும் உகாரமல்லோ சத்தியாகும்
அணங்கினுக்குத் தானுரைத்தா ரீசன் நன்றாய்
ஆச்சரிய மகாரத்தி லடங்கிப் போச்சே (1)

அடங்கினின்ற மகாரமல்லோ மவுன தீட்சை
ஆதாரங் கடந்துநின்ற அத்தொய் தத்தில்
ஒடந்தனைக்கொண் டாகாசங் கலந்து போச்சு
தாரகப்பிர் மக்கியான சார்பி தாச்சு
தொடர்ந்தேறிப் பார்த்தாக்கா லெய்து முத்தி
தூலமதைப் பார்ப்பவர்க்குச் சொரூப மில்லை
குடந்தனக்குள் ளாகாசம் நிராகா சத்தைக்
கூட்டுகின்ற தன்மையல்லோ கொழுகிப் பாரே (2).

பாரப்பா புலத்தியனே மகார சூட்சம்
பலித்தாக்கால் யோகியென்றே பகர லாகும்
சேரப்பா அகாரத்தி னுகாரங் கூட்டு
சிகாரததில் வகாரத்தைச் சேர்த்துப் போடு
நேரப்பா அரியெழுத்துக் குறிதான் சிவன்
நின்றவிடம் மூலத்தில் நகாரங்காணும்
பேரப்பா ஓங்காரப் பிரண வத்தார்
பேச்சான சிவகளை பிறக்குந் தானே (3)

தானென்ற மூலத்தில் வாசி யாட்டம்
சதாசிவனார் பீடத்திற் புக்கித் தானால்
ஊனென்ற சடம்போங்கற் பூர தேகம்
உன்றனுக்கு வாய்த்ததடா வீசன் வாழ்க்கை
நானென்ற ஆணவத்தை நீத்த வென்றால்
நகார மென்ற கீழாணி வேரைத் தள்ளு
பானென்ற அகாரமுனை யூடு தாக்கு
பன்னிரண்டுக் குள்ளடங்கும் பதியுள் ளாச்சே (4)

உள்ளாகச் சிகாரவன்னி பற்றிக் கொண்டால்
ஓடாமற் பிரணவம்வந் தொட்டிக் கொள்ளும்
தள்ளாதே ஓரெழுத்து மகார மையா
சகஸ்திரத்தென் மலர்க்குள்ளாய்ச் சார்ந்து கொள்ளும்
விள்ளாதே மேற்கொண்டால் துவாத சாந்தம்
வெட்டவெளிக் குள்ளானால் ஞான மாச்சு
துள்ளாட்ட மேதுமில்லை புருவ மையச்
சுழிக்குளொரு வெழுத்தறிந்தாற் றுரிய மாச்சே (5)

துரியமென்ற வகாரத்தை மாறி யேற்றச்
சுடரான சிகாரமதே சோதி யாகும்
அரியெழுத்துக் குள்ளாக ரவிதான் நிற்கும்
அந்தெழுத்தும் வானெழுத்தி லாடி நிற்கும்
எரியெழுத்தைப் பற்றிநின்றால் இ-உ ஐயும்
எட்டெழுத்தும் விட்டெழுத்துக் கேறு மையா
குறியிருக்கு மிடத்திலொரு பகைய தாகக்
குற்றெழுத்தைப் போக்கிவிட்டார் குருவி தாச்சே (6)

குருவிருக்கு மிடந்தானே புருவ மையம்
கூடுவலக் கண்தானே சிவ சாட்சி
திருவிருக்கு மூலமல்லோ ஞான சித்தி
சிக்குவக்கு மென்றானாற் பேறு முத்தி
கருவிருக்கு மவுனத்தி னிந்த மார்க்கம்
கைகாட்டிச் சொல்வதற்கும் அறிவே யாசான
உருவெடுத்தா லென்னபல னிறந்து போனால்
ஒன்பது கெல் பிரமாண மூடு தாக்கே (7)

தாக்கப்பா இடக்கண் ணுவலக்கண் ணுஞ் சேரு
சச்சிதா னந்தவன்னி தானே யேறும்
மூக்கிலே ஓடாது வாசித் தம்பம்
முத்தியென்ன நெத்திக்கண் ணுள்ளே நிற்கும்
நாக்கிலே நின்றபரை யறியா துண்டோ
நாலிரண்டும் மூவிரண்டும் ஞான யோகம்
பாக்கியமே செய்தவர்க்கு மகார நீட்சை
பலிக்குமடா விருநான்கு பாடல்முற்றே (8)

அகஸ்தியர் சூத்திரம் அ முற்றிற்று.

உ

பரமபதி துணை

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# சமாதிசூத்திரம் ௩௰.

ஆதியா மத்தி யமர்ந்திடுஞ் சமாதி
ஓதிய முப்பொருள் ஒன்றாகத் தோன்றும்
வேதியன் மேல்தாழ் வீடதுவா மப்பு
போதியக் கண்டம் பொருந்திடும் வாயுவே. (1)

வாயுக் கருமை வாரிநீர் வெள்ளையாம்
தேயு சிகப்பாங் தெளிவுடன் பாரு
மாயும் பூதம் மனவேறவ் வஞ்சஞ்
சாயுமே புந்தியில் சத்தியம் பெற்றதே. (2)

பெற்ற வுடலது பிரேத மதுவானால்
உற்றது கழன்று ஒருகடி கைப்போதில்
அற்லது சீல னைம்புல னொடுங்கும்
வித்தலை யறிவாய் மேவியுட் கொள்ளே. (3)

கொள்ளவே வாசிக் குறிப்பைநீ கேளு
மெள்ளவே சமாதி மேவிடு கண்டத்தில்
உள்ளவே காட்டி யுரைத்தூது ஊது
எள்ளவே வுன்மன மிறுத்திநீ பாரே. (4)

பாரே சமாதி பகர்ந்திடக் கேளு
ஆரே விபூதி யாசனம் போடு
நேரேவோ ராண்டு நிலைத்துச் சமாதி
தேரே பெழுந்திடு திசைப்பற்றுப் போமே. (5)

போமே நரைதிரை புகழ்பட கோபறும்
தாமே தேகந் தளிர்நிற மொத்திடும்
தேமே தேகந் திகழும் பதினாறப்
ஓமே வாசியென் றுள்ளிட நிற்குமே. (6)

ஓம்வாசி யென்றே உள்ளிட்ட போது
ஆம்வாசி யென்றே அருள்பெறத் தோன்றுமே
வாம்வாசி யுலகெலாம் வசியம் தாகும்
தாம்வாசி மெய்யாய்த் தழைத்திடு நன்றே. (7)

நன்றே மதுப்பூசை நாட்டிற் பிரணவம்
என்றே சுத்தியு மெடுத்திடு மெய்யினில்
அன்றே பொசிப்பு அரைமட் டுண்ணு
கொன்றே தேறுவா கோடியி லொருவரே (8)

ஒருவரின் உந்தியில் உதிப்ப திருவரும்
திருவென் மூன்றாய்த் தெரிந்திடு நாமம
மருவே வுண்டுபோர் மாசற்ற சோதி
குருவெனத் தெளிந்தால் கூடுவார் வீடே. (9)

அகஸ்தியர் சமாதி முற்றிற்று.

உ

பரமபதி துணை.

# அகஸ்தியர்குழம்பும.

பருவதந் தண்ணில் வாழும் பரமனா ரருளி னாலே
அருமையா யுலகில் நாளும் அன்புள்ள மக்க ளுக்கு
வருபல வியாதி யெல்லாம் மாயவே யுண்மை யாசப்
பெருகிய முனிவர் தாமும் பேசிய மருந்து கேளே (1)

பேசிய மருந்து கேளாய் பெருங்காயங் கடுகிர் துப்பு
வீசிய காரஞ் சூதம் விசமனோ சிலையுங் கூட்டி
ஆசில்திப் பிலியோ டொக்க வருந்தகட் டரிதா ரந்தான்
மாசிலாக் கரிய சீரம் வகைக்கொரு களஞ்சி வாங்கே (2)

வாங்கிய களஞ்சுக் கொவ்வா வாளமும் வறுத்துப் பாதி
தாங்கிய பச்சைபாதி சமன்மூணை போக்கி நீக்கித்
தீங்கிலா மருந்து பத்துஞ் சேரவே யரைக்கக் காந்தல்
ஓங்கிடு மோருஞ் சோறு முண்டுநீ நன்று யாட்டே (3)

ஆட்டிய மருந்தின் பேரு மகத்தியன் குழம்பதாகும்
ஈட்டிய சுரமே சுக்கில் இருமலே கடுக்காய்ச் சாற்றில்
வாட்டிய குளிர்சு ரங்கள் வகைசுக்கில் மிளகிற் கொள்ள
நீட்டிட திரத்த மூலம் நெய்பாலிற் கொள்ளப் போமே (4)

பாலையும் வெறுக்குஞ் சோகை பருவயி றுமை பாண்டு
மேலிவை மிளகுத் தூள்-வெள் வெங்காயத் திடவுத் தீரும்
காலனேர் சன்னி யெல்லாங் கழற்கொடி முசு முசுக்கை
கோலமார் நொச்சிச் சாற்றிற் கொடுத்திடத் தீரும் பாரே (5)

இடுகண்ணிற் கடுகிற்பாதி யிலைந்தகற் றூனைச் சோறு
வடுதயிர் சந்தனங்கள் வைத்துநீர் கட்ட மாறும்
படுபெரு பிளவை வானோ பக்கரை யாப்புப் புண்கள்
ஓடுவருஞ் சிலந்தி யாதி யுமிழ்நீரிற் பூசப் போமே (6)

பூசிடு மூலேக்குத் துக்கும் புண்ணுக்கு மதுவே யாகும்
கூசிடும் வாத சூலே குட்டங்கள் நொச்சிச் சாற்றில்
சூசிகா வலி குன் மங்கள் தொலேயுமே நொச்சிச் சாற்றில்
தோசமார் முகவா தம்-போஞ் சுக்குநொச் சிச்சாற் றாலே (7)

வேறு சந்தம்.

சாரக்கபால வலிமுதலாய்த் தனக்கும்பசாசந் திரிப்புகையால்
நேரா யொடுங்கும் நீர்ச்சுருக்கு நீர்க்கல் லடைப்பு தானேவிழ்று
தீராக் கிரந்தி பரங்கிமுதற் றீருங் குப்பிச் சாறுதன்னிற்
போரார் தோசம் பலவிதமும் போகும் போகுந் திரிபிடியே(8)

திரிதான் குழம்பிற் றேய்த்துருட்டுஞ் சீலேயதனிற்புகை பிடித்தால்
இரியா மண்டை யிடிதீரும் இந்தக் குழம்பிற் பணவிடைதான்
பரிவெள் ளாட்டுப் பால்நாவற் பட்டைச் சாறு சுரஞ்செய்
தரிதாக்கொடுத்தாற் சூதகவாய் வனேத்துபோம்நல் விதியிதுவே(9)

விதிபால் மருந்து மிதைவிட்டு வேறே தேட வேண்டாமே
பதிவாம் நாலா யிரத்துடனே பகரும் வியாதி யெல்லாம்போம்
மதியா லிதனே யறிந்துகொண்டு வருத்த அனுப்பா னத்திலிட
துதியாய்த் திகழும் வயித்தியர்க்குச் சொன்னூர் பொதிகை முனியே

அகஸ்தியர் குழம்புமு முற்றிற்று (10)

உ

பரமபதிதுணை

அகஸ்தியர் திருவாய்மலர்ந்தருளிய

# ஞானதீட்சாவிதி.௰௧

ஆதியென்ற கருவறிந்த கபாலயோகி
அஷ்டமா சித்தியெல்லா மாடுஞ் சோதி
வீதியெனும் பரவெளியி லாடியேதான்
வேதாந்த மூலசுழி முனையு மாகி
மேதினியி லண்டபிண்ட நடுவு மாகி
மேல்மூல வட்டதிரி கோணந் தன்னில்
நாதியந்த மானகுரு நாதலிங்கம்
நாதாந்த சோதியுட் மூலங் காப்பே (1)

மூலமுத லாதார பீட மாகி
முச்சுடராம் உச்சிவெளி தன்னி லேறி
மாலயனு மறியாத பாதந் தன்னை
மயேந்திரகிரிச் சார்புதனிற் கண்டு தேறி
கோலமுடி வன்னிமலை சன்னி திக்குள்
கூடிநின்று நெடுநேரங் கூவிக் கொண்டு
பாலவனந் தனிற் சென்று மயிர்ப்பா லத்திற்
பார்புகுந்தே னைங்கோணந் திரிகோ ணத்தே (2)

ஐங்கோணம் அஞ்சு முகமாகி நிற்கும்
அதில்நிற்குந் திரிகோண மையமாகி
எண்கோண மென்னுடைய தேகமாகி
என்னுக்குள் வெளியுமா யேக மாகி
தங்கநிற வடிவான சந்தி வாலை
தாரகமா மவுனசுழி நடுவு மாகி
நங்கோணம் நவகோணம் தால மாகி
நாடிநின்ற அறுகோணம் உடலு மாமே (3)

உடலாகி யுயிராகி யுணர் வுமாகி
உதித்தபர நாதவிந்து கலையு மாகி
கடலாகிப் பாற்கடலிற் பள்ளி கொண்ட
காயாம்பு மேனியனைக் கருத்துள் வைத்துச்
சடமான சன்னிக்குள் தீப சோதி
தன்னுக்குள் ளறிந்தபாம் வெளியு மாகிப்
படமாகி யீரேழு உலக மெல்லாம்
படைத்தபசம் ஊமை யேன்றே பகிர்ந்து பாரே (4)

பாரேநீ உண்மைபரனு ரசடுங் தில்லைப்
பாலமெனும் வாசிநிலை முடிவு மாகி
காரேநீ கற்பூர தீப சோதி
கபாலவெளி யூடு சென்று மேலே யேறி
வாரேநீ அமுர்தமது வழியிற் பாயும்
வந்தவழி தனையறிந்து மலையி லேறிச்
சீரேநீ வேறொன்று மெண்ணு தேயோர்
செகசோதி பாதமதை வணங்கி நில்லே (5)

நில்லென்ற இடமதுதான் பரமு மாச்சு
நேத்திரத்திற் சூடினது சிவமு மாச்சு
வில்லென்ற புருவநடு மைய மாச்சு
விளையாத பொருளதுதான் விண்ணி லாச்சு
வல்லபர நாதவிந்து கலையு மாகி
வாழ்கின்ற ஓங்கார வீட தாகிச்
செல்லவழி மனதறிவால் ஞானக் கண்ணைத்
திறந்தடா சுழிமுனையிற் கண்டு கொள்ளே (6)

கொள்ளுவது பென்னவென்றால் கற்ப விந்து
குறிப்பறியா மானிடர்க்குத் தோணு மோசொல்
தள்ளுவது பெண்ணாசை விண்ணிற் பாரு
தாயான மனோன்மணியைப் பூசை பண்ணு
எள்ளுவது பிரபஞ்ச மாயை நீக்கி
யிசைந்த சச்சி தானந்தஅறிவிற் கூடி
விள்ளுவது மென்னவென்றால் மைந்தா கேளு
வேகாது சாகாது யிரண்டுந் தானே (7)

இரண்டான விபரமது மொன்றாய்ப் போக
விரேசகபூ ரகந்தனிலே மேவிச் சென்று
குரண்டமலைச் சார்புதனி லேறி னுக்கால்
கூடுவது கும்பகந்தா னிராச லிங்கம்
காண்டமலைக் கருநெல்லிச் சாறுதானும்
காணுமடா சாகாது வேகா தப்பா
சாண்டருமோர் பழம்பொருளாம் சுழினை சோதி
சார்ந்தவர்க்குப் பரவெளிசத் தியமதாமே (8)

சத்தியமாய் நானுனக்குச் சொன்னேன் மைந்தா
சற்குருவை யறியாத பூசை யென்ன
நித்தியமும் சேமநிஷ்டை விரத மாகி
நீதியறி யாமல்மனக் கசடு போமோ
முத்திதரும் வாலைகளு கண்ட மூர்த்தி
முனையறிந்து முப்பாழுக் கப்பாற் சென்று
வைத்தபொருள் தனையெடுத்து உச்சி மீதில்
வடிவுகண்ட வாலையது சிவமு மாச்சே (9)

சிவமாச்சு பரமாச்சு வாலை யாச்சு
சிகாரவெளி நாதபரம் பூமி யாச்சு
தவமான சித்தருக்கு வாணி யானால்
தங்கநிற வடிவுடைய சோதி யானுன்
நவகோண பீடமதில் லீலை யானுள்
நாதாந்த சோதியென்ற பேரு மாச்சு
புவனமதிற் பதினாலு லோகத் துள்ளே
பூரணமாய் நிறைந்தபர நாதந் தானே (10)

நாதமென்ற ஊமையடா வாய்வா தாரம்
நாசிமுனை வெளியாகி ஒளியு மாகிப்
போதமய மானசுழி மவுனத துட்டிப்
புகுந்தனடா பரவெளியிற் கண்டு கொள்ளு
சோதியுரு வாகிநடு மையத் துள்ளே
துலங்கிநின்ற பூரணத்தின் சூட்சா சூட்சம்
பாதியிரு விழியாகிச் சுடரைப் போற்றி
பாடினேன் தீட்சைபதி னொன்று முற்றே (11)

அகஸ்தியர் ஞான தீட்சை கக முற்றிற்று.

உ

பரமபதி துணை.

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# முப்பூவழலை சூத்திரம் ௧௨.

காப்பு

---

பன்னிரண்டு காலான புரவி யப்பா
பாங்கான மூலவெளி தன்னில் நிற்கும்
நண்ணபமாய் வாசிதனி லேறிக் கொண்டு
நாட்டியந்த நடுவீடு தன்னில் நின்றால்
முன்னின்ற முப்பாழுக் கப்பா லேயோர்
முகப்புண்டு முச்சந்தி வந்து கூடுஞ்
சின்னசிறு வாசல்கடந் தப்பாற் சென்றார்
சிதம்பரமுங் காணுமுத்தி சித்தி யாமே

நூல்.

தாயான மனோன்மணித்தாய் பாதம் போற்றி
சாற்றுகிறேன் னாயிரத்து யிருநூற் றுக்குள்
தோயாத கருவொன்று மில்லை யில்லை
சொல்லடக்க மாயுரைத்தேன் வழலை யொன்று
காயாகும் மிதைக்குறுக்கி யிருநூறுஞ் சொன்னேன்
கனிபோல விந்நூல்பன் னிரண்டி னுக்குள்
வாயாரச் சொல்லுகிறேன் வகார மார்க்கம்
மதியிரவி அண்டபிண்ட வளமை கேளே (1)

வளமையென்ற அண்டமென்றால் முட்டை யல்ல
மானிடர்கள் மண்டையல்ல வுவர்நீ ரல்ல
இளையான ரோமமல்ல கண்ணீ ரல்ல
யீசன்விந்து சூதமென்பர் அதுவு மல்ல
தளிரான மூலிகையு மதுவு மல்ல
சமாதிநிலை பூனுப்புத் தானு மல்ல
குளமான சுக்கிலத்தின் கூறு மல்ல
கொடியதொரு சுண்ணாம்புக் கூட்டந் தள்ளே (2)

தள்ளப்பா உவரல்ல துருசு மல்ல
சவுக்கார மண்வேகச் சத்து மல்ல
விள்ளப்பா ஆணல்ல பெண்ணு மல்ல
வெடியுப்பு கறியுப்பு விஷநீ ரல்ல
கொள்ளப்பா ரத்தினமல்ல மலைதா னல்ல
கோசமல்ல அஸ்தியல்ல குருவண் டல்ல
எள்ளப்பா வஸ்துவல்ல சிறுநீ ரல்ல
ஏதென்றாற் பஞ்சபூ தத்தி லொன்றே (3)

பூதமென்ற அஞ்சுக்கும் நடுவாய் நின்ற
பூரணமே தேய்வாச்சு புலத்தி யாகேள்
வேதமென்ற அட்சரத்திற் சிகார மாச்சு
மேலான வகாரமது தோன்றலாச்சு
நாதமென்ற வெடியதுவுங் காண லாச்சு
நலமான தலையாச்சு காலு மாச்சு
ஓதவென்றால் ரவியாச்சு சுழியு மாச்சு
உவட்டுமண்ணைப் புகழ்ந்துகொண்டா லுப்பு மாமே (4)

உப்பான வாகாசம் வன்னி பீசம்
ஜகோ-கோ சமாதியிலே யுப்பே யண்டம்
அப்பான மேகத்தாற் பிறந்த வன்னி
ஆசைகொண்டு பிரிதிவியி லடங்கி நிற்கும்
செப்பார்கள் வண்ணானைச் சோதித் தோர்கள்
சிவனைவெளி யாக்குமந்தத் தேயு உப்பு
துப்பான பிண்டத்திற் சேரும் போது
சொர்ணவித்தை கைவசமாய்த் தோன்றும் பாரே (5)

பாரப்பா பிண்டத்தைச் சொல்ல வென்றாற்
பாரமில்லை சாரமில்லை பயனோ யில்லை
சேரப்பா பெண்ணில்லை பெண்ணாள் பெற்ற
பிள்ளையில்லை கருவில்லை சிசுவு மில்லை
கூரப்பா மங்கையர்கள் தூர மான
குருதியில்லை கும்பிடுகல் பூமி யில்லை
வாரப்பா பலசீவ செந்து மில்லை
மதுவில்லை மலமில்லை வரையாய்க் கேளே (6)

வகையான மண்ணென்றும் மதிதா னென்றும்
மாவென்ற மலமென்றும் அமுரி யென்றும்
தொகையான பூவென்றும் வருஷ காலத்
தூத்தலென்றஞ் சூரியனற் சுட்ட தென்றும்
தகையான யேழுவகைத் தோற்றத் துக்கு
தாயென்றும் யோனியென்றும் சத்தி யென்றும்
பகையாதே கொடிவெள்ளைச் சாதியென்றும்
பாஷாண மூவர்நிலத்தே பகரு வாரே. (7)

வாரான மண்ணல்லோ பிண்ட மாச்சு
வன்னியல்லோ பூமியின்கி ழண்ட மாச்சு
கூரான அக்கினியும் வாயுங் கூடிக்
குடியிருந்த சருவானி நிலத்தை பேணி
நீரான தண்ணீரும் மண்ணுங் கூடி
நின்றதினுர் பெண்ணுச்சு தீயோ ஆனும்
பாரான திவ்விரண்டுஞ் சேர்ந்த போது
பலமான வாதசித்தும் பெலத்துப் போச்சே. (8)

போச்சப்பா ஆணுக்கு மென்றே தீட்சை
புகழான பெண்ணுக்கு மிரண்டே தீட்சை
நீச்சப்பா பூரணநூல் தன்னிற் சொன்னேன்
நிசமாகச் சொல்லிவைத்தேன் முப்பத் தொன்றில்
வாச்சப்பா மதிபாக ரவியின் பாகம்
வளமாகப் பாகத்தைச் சொல்லி வந்தேன்
ஏச்சப்பா சொல்லவில்லை கைபா கங்க
ளித்தனையு முப்பதிலே யிசைந்து பாரே (9)

இசையவே வள்ளிக்கு கலேதா னென்றும்
இாட்டிப்பு வேணுமடா தண்ணீ ருக்கு
அசையார மண்ணுக்குக் கலேதான் நான்கு
ஆணுக்குக் கலைநாலுக் கதிகம் வேண்டாம்
பசையில்லா ஆகாச மகிழ்ந்து கொள்ளும்
பருவமா யிந்தமுறை பாட மாட்டார்
திசையான பூநீற்றைச் சிறுநீர் தண்ணீர்
தெளிவிறுத்து நீரெரிந்து தியங்குவாரே. (10)

தியங்காமல் மேஷமடா பெண்ணுக் காச்சு
செப்புகிறேன் மீனமடா ஆணுக் காச்சு
மயங்காதே காலையிலே மாலை சேரும்
மத்தியா னந்தனிலே ஒன்றாய்ச் சேரும்
தயங்காமற் றிதிபதினைந் தென்பா ரந்தச்
சோடசத்தைக் காணார்கள் துடர்ந்து பாரு
தயங்கமாற் புலத்தியனே யிந்த மார்க்கம்
சாடினால் ஞானசித்தி தகுதி தானே (11)

தானென்ற அண்டபிண்டக் குருவைச் செய்ய
தவம்வேணுஞ் செபம்வேணுந் தயவு வேணும்
மானென்ற அக்கினியா முறையைக் காண
மதிவேணும் விதிவேணும் வாசம் வேணும்
நானென்ற ஆணவத்தை யடக்கவேணும்
நல்லரிவாற் சாஸ்திரத்தை யுணர வேணும்
தேனென்ற சற்குருவைக் காக்க வேணுஞ்
சித்தியாம் பன்னிரண்டுஞ் சிறக்க முற்றே. (12)

முப்புவழலை சூத்திரம் முற்றிற்று

உ

பரமபதிதனே

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# சிவலிங்க பூஜாவிதி கஙு

கேளப்பா புலஸ்தியனே ரசத்திற்போதம்
கெடிபடாச் சிவனைப்போல் வார்த்துக்கொண்டு
தாளப்பா பூஜைசெய்யக் கைலாசபோதந்
தப்பாமற் சதகோடி காலமாகும்
தேளப்பா கொட்டினதோர் விஷத்தைப்போலத்
தேடரிது ரசத்தினுட குளிகைவேகம்
வாளப்பா புலத்தியனே காவினுள்ளே
வாயடக்கஞ் செய்துகொள்ள யோகமாச்சே (1)

ஆச்சப்பா புலத்தியனே சூதங்கட்ட
ஆருனு முடியாது அறிவான்சித்தன்
பேச்சப்பா அக்கினியில் செயித்ததானல்
பேரண்டங் கிழிந்தாட வேதையாகும்
நீச்சப்பா குளிகைகட்ட வகையைக்கேளு
நீதிபெற எவருக்கு மரிதாமப்பா
ஏச்சப்பா யிதனுடைய வர்மஞ்சொல்வேன்
எந்தனுக்குப் பரையீச னீந்தான்றானே. (2)

தானென்ற புலஸ்தியனே வகையக்கேளு
தயங்காமற் சொல்லுகிறேன் வகைதானப்பா
கோனென்ற வராட்டி யனு மெனக்குச்சொன்னார்
குறிப்பாக மனந்தேறிக் கூறிச்சென்றேன்
ஏனென்றால் புலஸ்தியனே உனக்குயானும்
இன்பமுடன் சொல்லிவிட்டேன் கருத்தானப்பா
ஊனென்ற சூதமொன்று வெள்ளியொன்று
உத்தமமாம் போகமணிச் சாத்திலாட்டே (3)

ஆட்டப்பா கருவூமத் தஞ்சார்விட்டு
அதுகன்றாய் கடிகைபட வாட்டிக்கொண்டு
நீட்டப்பா ரவியினுட இன்னந்தானும்
நிலக்கவே காதுவிர லங்குலத்தால்
மூட்டப்பா ஒட்டிவிட்டிச் சீலைசெய்து
மூதண்டக் குக்குடத்திற் புடந்தைப்போடு
கோட்டப்பா மேலேறிப் பதங்கங்காணும்
குமரவழிக் காரமிட்டு வுருக்கிக்கொள்ளே (4)

கொள்ளப்பா மணியதுபோ லுருகியாடும்
குருகிமுக மொளிவான கருப்பதாகும்
மெள்ளப்பா அதினுடைய வேதைமார்க்கம்
வெட்டவெளிக் குருடனுக்கு மெய்க்கோலப்பா
உள்ளப்பா யிதுகொண்டு சனங்கள்செய்வார்
உலகத்துள் நரகததே கிடந்துமாய்வார்
தள்ளப்பா யிதுவல்லோ காயசித்தி
தாண்டவமே புரியசிவ பூஜைபண்ணே (5)

பண்ணப்பா வோராண்டு செய்தாயானல்
பராபரமே யுனக்குவந்து யேவல்செய்யும்
விண்ணப்பா வொருவருக்கும் நீசொல்லாதே
மேதினியில் நரகத்துள் கிடந்துமாள்வாய்
கண்ணப்பாவுனக்கேத்த பிள்ளையானல்
கைமுறையாய்ச் செய்து அவன் குணத்தைப்பாரு
ஒண்ணப்பா கருவைத்தா னெளிக்கவில்லை
உற்றுணர்ந்து மனந்தேறிப் பாருபாரே. (6)

பாரப்பா யிதுக்குக்கை லாசமுண்டாம்
பாடாமற் சித்தரிதை மறைத்துப்போட்டார்
ஆரப்பா எனைப்போலே திறந்துசொல்வார்
ஆச்சரிய மிதனுடைய வேகமப்பா
ஊரப்பா யிதினாலே யோகசித்தி
உத்தமனே சிவபூஜை பண்ணகன்று
காரப்பா யிதுதன்க்குப் பூஜைசெய்து
கருவாக அர்ச்சனைசெப் பதங்கஞ்செய்யே (7)

செய்யப்பா விப்படியே பூஜைகொண்டு
    திறமாகச் செய்யவல்லோர் பலத்தைக்கேளு
மெய்யப்பா அவனுடைய பிதிர்களெல்லாம்
    மிகக்கோடி நரகசென்ம மல்லவல்ல
பொய்யப்பா சொல்லவில்லை தேர்ந்துபாரு
    புலஸ்தியனே உந்தனுக்குக் கருவைச்சொன்னேன்
வையப்பா பூஜையிலே என்னைவைத்து
    மவுனமாய் சிவனைவைத்து நோக்குநீயே (8)

நீயென்றும் நானென்றும் வேறுமில்லை
    நிராகரன்போ லுந்தனுக்குத் தோணுந்தோணும்
நாயென்னுஞ் சென்மத்தைத் தாண்டியெத்தும்
    நரசென்ம மல்லவப்பா சித்தன்சித்தன்
பாயென்று கூடுவிட்டுக் கூடுகொள்ளும்
    பதருமவிருந்து கொள்ளக் கெவுனஞ்சாடும்
நோயென்ற வருமையெல்லா மகன்றுபோகும்
    நுண்ணிமையாய்ச் சிவலிங்க போதந்தானே (9)

தானென்ற குளிகை செபமாலைசெய்து
    தாக்கப்பா பதினாறு நடுத்தானென்றும்
மானென்ற மதியானை வட்டஞ்செய்ய
    மகமேரு போலலவோ ஒளியுங்காணும்
கோனென்ற அவன்ரூபங் குறிக்கப்போகா
    கோடிரவி ரூபமவன் சொல்லக்கேளு
தேனென்ற மனோன்மணியாள் சிவனுமங்கே
    சிந்தித்த போதமெல்லாந் தெளியுந்தானே (10)

## தாளகலித்தை

தானென்ற அரிதாரந் தேவிநாதந்
    தாக்கப்பா புலத்தியனே நீதான்கேளு
ஏனென்ற பவ்விடைதான் சூதங்கூட்டி
    யிதமாக அரக்கம்வேர் சாத்திலாட்டி
ஊனென்ற ரவிகிண்ணி யாலேமூடி
    உத்தமனே சீலைசெய்து புடத்தைப்போடு
வானென்ற கிண்ணியிலே பதங்கமேறும்
    வழித்துநன்று யுருக்கிடவே மணியுமாமே (11)

ஆமப்பா புலத்தியனே பிதுவாம்லிங்க
மர்ச்சனையே செய்தவர்க்கு யோகஞ்சித்தி
தாமப்பா விதினாலே சொர்ணஞ்செய்வார்
சண்டாள மாண்பரங்கே கெடுப்பாரையோ
ஓமப்பா குழிக்கிரை தான் தேரும்புல்லர்
உற்றுணர்ந்து பாராமர் கெர்வஞ்செய்வார்
காமப்பா புலஸ்த்தியனே பூஜைசெய்து
நவகோடி காலமெல்லாம் நடந்திட்டாசே (12)

ஏரென்ற உலகத்தின் மாண்பரெல்லாம்
இக்குளிகை செந்தூரஞ் செய்துகொண்டே
ஊரென்ற செம்பிலிட்டு மதியிலிட்டு
உதரத்துச் சீவனங்கள் பண்ணுவார்கள்
ஆரென்று விதினாலே தோஷமில்லை
ஆச்சரியம் பரதேசிக் கண்ணமிட்டு
வாரென்ற தேவியுட யோகபூஜை
வருத்தவனே சமுசாரி யோகியாச்சே (13)

அகஸ்தியர் சிவலிங்க பூசாவிதி கருமுற்றிற்று

உ

பரமபதிதுணை

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# வாசிக்குளிகை ௱ச

ஆதியந்த மில்லாசின் மயத்தின் பாதம்
　　அகண்டபரி பூரணியாம் ஆத்தாள் பாதம்
சோதிமிர மாகிநின்ற கணேசன் பாதம்
　　சொல்தனக்குக்குருவான கந்தன் பாதம்
வீதியென்றபராபரத்தின நந்திபாதம்
　　வேதாந்த சாஸ்திரத்தின் வெளியின் மார்க்கம்
சோதியெனு மம்பரத்தில் நடனஞ் செய்த
　　சுடரொளியின் பாதமது காப்புத் தானே (1)

தானென்ற ஞானிக்குக் குளிகை யுண்டு
　　சாற்றுகிறேன் புலத்தியனே சார்ந்துகேளு
தேனென்ற விந்துவல்லோ ரசமிதாச்சு
　　திரண்டுமணி யாவதற்கு வகையைக் கேளு
மானென்ற அக்கினியே புடந்தா னாகும்
　　மக்களே ரசமணியின் மார்க்கத் தாலே
ஊனென்ற சடத்திலே மணிபோற் செய்தால்
　　உத்தமனே ககனத்தி லோட லாமே (2)

ஓடலாம் பராபரத்தினுள்ளே தானும்
　　ஓகோகோ சொக்குவிக்கும் மணியின் மார்க்கம்
காடெல்லாந் திரிந்தலைந்து ரசத்தை வாங்கி
　　கட்டியொரு மணியாகச் செய்வேனென்று
நாடெல்லா மலைவார்கள் உலுத்த மாண்பர்
　　நமனுலகி லவர்கட்கு நரக மெய்தும்
பாடுபட்டால் விந்துதனைக்காணலாகும்
　　பரப்பிர்ம மணியாகும் பாரு பாரே (3)

பாரப்பா விந்துவைத்தான் மணியாய்ச் செய்யப்
பாடுகிறேன் புலத்தியனே ஐயா கேளு
வீரப்பா உன்னுடைய வாசிதன்னை
விதமாகப்பீஜத்துள் ளடக்கியேத்து
காரப்பா வாசியைத்தம் பனம்நீ செய்வாய்
காட்டுகிறேன் கபாலத்திற் கண்டு கொள்ளு
வீரப்பா நுனிநா வுண்ணாக்கில் மோதி
விளங்குகிற தமரதனை யடைத்துப் பாரே (4)

அடைக்கையிலே ஜும்மென்று யிருட்டுக் காணும்
அலைத்துவிடுந் தேகமதை மலைக்க வேண்டாம்
உடைக்கையிலே அவ்விடத்திற் சத்தங் காணும்
ஓங்கிநின்ற சுடரொளியுங் கதிரும் வீசும்
படைக்கையிலே விழிகொண்டு மறைக்கண் பாரு
பருமூக்கின் சுழிமீதிற் குறிப்பைப் பூணி
கடைக்கையிலே காதுகொண்டு மசைவு காணும்
கடைத்தேழ்வா சல்கதவ டைக்கும் பாரே (5)

பாரப்பா அடைத்துவிடும் வாச லேழும்
பன்பான வாசியது கீழே நோக்கும்
சேரப்பா வாசியது இறங்கும் போது
சிவ்வென்று சுழிவயிற்றை யழுத்திக் கொள்ளும்
காரப்பா நந்தியுட பீட மாகும்
மரமவிட வாசியைத்தான் சுழித்துக் கொள்ளும்
ஆரப்பா லிங்கவட்டம் அபான வாசல்
அடைக்குமடா நந்தியுட வேகந் தானே (6)

தானென்ற வாசிபீ ஜத்திற் செல்லும்
சரிவரவே சென்றபின்பு சொல்லக் கேளு
மானென்ற கபாலமெலாம் விம்பல் வாங்கி
மயங்காமற் ககனத்தின் உள்ளே செல்லும்
தேனென்ற சுடர்க்கம்பம் கொதிப்புக் கொள்ளும்
செல்லவென்றால் மயக்கமது காணுங் காணும்
ஊனென்ற மவுனத்தின் கம்பத் தோரம்
ஓதுக்கிநீ பீஜத்தி லமர்த்தி யூனே (7)

ஊணவே வாசியது மேலே நோக்கும்
    உட்புகுந்து தண்டுவெளியோடும் பாரு
சாணவே சுடர்க்கம்பங் காண்ப தொன்றா
    காண்பதற்குள் அஞ்சுதமர் கண்போல் நிற்கும்
ஏணவே யதுவழியே வாசியேறி
    ஏகுமடா கமலத்தி னண்டத் துள்ளே
ஆணவே அமுதத்தில் வாசி சிக்கும்
    அப்பவல்லோ அக்கினியு மதிகமாமே (8)

அதிகமென்ற அக்கினியாங் கதிரோ கோடி
    ஐயையோ கண்ணிமைக்குள் அடங்குமோசொல்
பதிகமென்ற விந்துதனை வாசி தானும்
    பம்பரம் போற் சுத்தியல்லோ மணிபோல் பண்ணும்
கதிகமென்ற விந்துசாரணையே செய்யக்
    காட்டுகிறேன் புலத்தியனே கருதிக் கேளு
உதிகமென்றே நுனிநாக்கை யணுப்போல் நீக்கி
    உருண்டுவரு மணியுடனே வாசி பாரே (9)

பாரப்பா விந்துமணி வாசி கூடப்
    பனிரென்றுயிறங்கிவிடும் பீசத் துள்ளே
காரப்பா நந்தியுட வழியிற் செல்லுங்
    காணதற்குள் சுழன்றுமணி சிக்கிக் கொள்ளும்
ஆரப்பா அவ்விடமக் கினியின் வீடு
    அப்பொழுதே அண்ணாக்கைத் திறந்து மூடிச்
சேரப்பா நூறுதரந் திறந்து மூடு
    சிவந்துருகி வலமாஞ்சா ரணையென் றெண்ணே (10)

எண்ண நூற் றெட்டுசா ரணையு மாகும்
    ஏகுமடா வண்டத்தின் மணியின் வேகம்
உண்ணநுனி நாக்கையரை வாசி வாங்க
    ஓடிவருங் கபாலத்தில் மணிதா னப்பா
கண்டவுட னவ்விடத்தில் மணியை வைத்துக்
    கபாலவரை பெருவாசல் மூடும்போது
நண்ணவே சடமதனை யுயரத் தூக்கி
    நாலுரெண்டு வரைவாக்குஞ் சொக்கும் பாரே (11)

சொக்கவே அண்டமுதற் றிசைக ளெட்டும்
சுழன்றுவரும் நிமிஷத்தில் மணியின் வேகம்
தக்கவே முன்போலக் கதவை மூட
சணத்திலே கம்ப நுனி மேலே செல்லும்
சிக்கவே கதவின் நுனி சற்று நீக்கிச்
சீக்கிரத்தி லோடிவரு மணிதா னப்பா
கக்கவே ரசமணியின் மார்க்கஞ் சொன்னேன்
கண்டுகொள்ளு மிந்தநூல் தன்னி லாமே (12)

ஆமென்ற ரசமணியின் வேகத்தாலே
அண்டர்களும் முனிவர்களும் மயங்கி னார்கள்
தேமென்ற விம்முறையைச் சொன்னேன் யானுங்
சிவஞானி மௌனிக்குச் சொன்ன தல்லால்
ஊமென்றே பிறந்திறக்கு முலுத்தருக்கே
உற்பனமா யிம்முறையைச் சொன்னா ரானால்
காமென்ற கழுதையுட ஜென்ம மாகிக்
கடைப்பிறப்பாய்ப் பிறந்திடுவார் கருதிப் பாரே (13)

பார்க்கவே யிம்முறைநீ சொன்னா யானால்
பாழான நகரமது மெய்தும் பாரு
கார்க்கவே சிடனுட மனதைக் கண்டு
கைமுறையாய்ச் சொல்லிவிடு ஞான மார்க்கம்
ஏர்க்கவே ரசமணியின் மார்க்கந் தன்னை
என்மகனே சொல்லிவிட்டேன் யோக மார்க்கம்
சேர்க்கவே யிப்பாகந்தவறா மற்செய்
செழுங்கருணை பதினாலிற் கடாக்ஷ முற்றே (14)

அகஸ்தியர் வாசிக் குளிகை கச. முற்றிற்று

பரமபதி துணை.

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய.

# சூஸ்திரஞானம் ௰௫.

பூரணமாய் நிறைந்தமலர் வாணி பாதம்
புசனுகிறேன் நந்தியொளி கணேசன் காப்பு
காரணமாய் நின்றபர நாத விந்து
கடந்துசுழி ஞானபர வெளியு மாகும்
வாரணனு மாலயனு மறியாச் சூட்சம்
வகையாக வெனக்களித்த வாமி காப்பு
ஆரணமாம் வேதங்கள் பெற்ற நாளும்
ஆடிநின்ற ஐங்கன்ருள் போற்றி னேனே (1)

போற்றிநின்ற சின்மயத்தின் நேர்மை கேளு
புகுந்தசிறு வாசல்திரி கோணந் தன்னுள்
வீற்றிருந்தேன் சுழிநாடி வட்ட மீதில்
வெட்டவெளி யூடுசென்று நிலையில் நின்று
பாற்றிருந்தேன் பதியறிந்து கூத்துங் கண்டேன்
பாங்கான குண்டலியின் பார்வை யாலே
மாற்றிநின்றே யிப்பிறவி மைந்தா கேளு
வாரிதியிற் கண்டசுழி முனையு மாமே (2)

ஆமையெனு மைந்தெழுத்துக் குயிரு மாகி
யஞ்செழுத்தே பஞ்சமுக மாகி நின்று
ஊமையனும் ஆதார மாறு மாகி
உற்றுநின்ற பரவெளியில் உகார சத்தி
சோமனெனும் வன்னிரவி ஒளியு மாகித்
தொட்டெழுத்தும் விட்டெழுத்தும் மூல மாகி
ஓம்நமசி வாயவென்றைந் தெழுத்து மாகி
ஓடுதுபார் உச்சிநடு முடியிற் றானே. (3)

மூடியான மூலத்தின் சோதி கண்டு
முளைத்தெழுந்த முக்கோணச் சக்க ரத்தின்
படியான மலைச்சார்பு தன்னி லேறிப்
பாற்கடலிற் பள்ளிகொண்ட அரியைப் போற்றி
குடியான சிவனுயி ரிருப்புங் கண்டு
குருபரனும் நஞ்சுண்ட மூர்த்தி தானும்
வடிவுமொரு சிவலிங்க சொரூப மாகி
வாழுகிற பதியறிந்து மதிதான் பாரே. (4)

மதியான மோட்சமது சொல்லக் கேளு
மவுனகுறி கெவுனவெளி பாய்ந்தே யோடி
நதியான ஆறுதலந் தாண்டி நின்று
நற்கமல மாயிரத்தெட் டிதழின் மேலே
விதியான விட்டகுறை உதித்த போது
மேல்மூல மாதாரம் வசமே யாச்சு
சதியான தூலவுடல் சமாதி நேர்மை
தானடைந்து மனக்கண்ணு லறிந்து பாரே. (5)

அறிவான ஐம்பத்தோ ரெழுத்துக் கெல்லாம்
ஆதிமணிச் சோதிநிற மான வாலை
விரிவான ராஜலிங்க சுரூப மாகி
வின்னிறெளி சித்தருக்குத் தெய்வ மாகிச்
சரியான நடுவணையிற் பருவ மாகி
சடாட்சரத்தின் கோவையதாய் நின்ற மூலம்
குறியான பதியறிந்து குறியைக் கண்டு
கூடினேன் சிதம்பரத்தி லாடி னேனே. (6)

ஆடிநின்ற தில்லைவனந் தன்னிற் சென்று
அம்பரத்தே சென்றுகுகை வர்சல் தாண்டி
நாடிநின்ற பாசமது ஒங்கா ரத்தால்
நடனமிடுங் கனச்சபை தன்னி லேறிச்
சூடியதோர் மேல்வட்ட மூலமாகிச்
சொல்லறியா மந்திரத்தின் சூட்சத் தாலே
பாடியதோர் பலநூலும் ஞான மாகிப்
பரமகுரு தன்னருளாற் பகுந்து பாரே (7)

பாரேநீ பரவெளியில் ஞான சத்தி
        பஞ்சவர்ன நீலமணி சொரூப மாகி
சீரேநீ பரமகயி லாசந் தன்னிற்
        சிதம்பரத்தின் நடனவெளி சித மாகி
நீரான விந்துஜல மணியு மாகி
        நேத்திரத்திற் கண்டபரம் ஊமை யாகி
ஆரானவாயு வெளி பாதா ரந்தான்
        அங்கமதி லிங்கமணி யறிந்து கொள்ளே. (8)

கொள்ளுகிற வரிசையினிச் சொல்லக் கேளு
        குறிகாட்டும் பெரியோரை யடுத்து நில்லு
தள்ளுமது பெண்ணாசை விட்டுத் தேரு
        தாயான மனோன்மணியைப் பூஜை பண்ணு
வள்ளலுட பெருமைதனைச் சிவமென் றெண்ணி
        வாகான முச்சுடரின் மேலே நின்று
உள்ளுணர்ந்து மனதறிவாம் ஞானக் கண்ணால்
        உற்றுப்பார் வெட்டவெளி உருவ மாமே (9)

உருவமென்ற தேகமது பிளந்து தானால்
        உன்தேகம் காயசித்தி விண்ணிற் பாரு
பருதிமதி ஆனந்த சித்த ராகப்
        பரவெளியில் வாழ்ந்திருப்பார் நீயும் பாரு
சுருதிமறை நான்முடிவோர் காணாச் சூட்சம்
        சுழிதனிலே கண்டனடா சோதி சோதி
கருதியதோர் அஞ்செழுத்தின் உறுதி யாலே
        காட்டினேன் கற்பூர தீபம் பாரே (10)

பாரான பிருதிவியும் அப்புங் கூடிப்
        பாலமெனும் ஓங்கார வீட தாகிச்
சீரான தேய்வுடனே வாயுங் கூடி
        செனித்தஉயிர் பரமாகி வெளியு மாகி
வாரான ஆகாச வட்டந் தன்னில்
        வல்லபையுங் கணபதியும் உத்தி யாகித்
தாரான மண்டலத்தி லாடுஞ் சோதி
        தன்னுச்சி வழிகடந்து ஓடும் பாரே. (11)

ஓடுகின்ற சாரையது நாளும் பாரு
உதித்தகரு நெல்லியதில் நடுவே பாரு
ஆடுகின்ற ஐந்துதலை நாகத் தாலே
ஆத்தாளா மப்பனையும் அறிந்து கொண்டேன்
சாடினேன் பிரபஞ்ச மாயை தன்னைச்
சச்சிதா னந்தமென்ற சுழியி லேறிக்
கூடினேன் பரவெளியில் நாத மாகிக்
கூறினேன் நிலையறிந்த வெளியு மாமே. (12)

வெளியான பரவெளியின் பூட்டைக் கண்டு
வேதாந்தத் திறவுகோல் சுழியால் வாங்கி
அழியாத வட்டகுரு மூலசோதி
அகண்டமதி லாடியே பாத்திற் சேர்ந்து
செழியான சின்மயத்தின் சொரூபந் தன்னைத்
தெரிசித்தேன் நாதலிங்க மூர்த்தி பாதம்
விழியான பொருள்தானே மனதிற் கொண்டு
விட்டகுறை யிருந்தமதி வேணும் பாரே (13)

மேனுமென்ற சோதியொளி நடனங்கண்டேன்
வெந்தயிடம் வேகாத யிடமுங் கண்டேன்
ஊணுகின்ற மூலஒளி சுழியுங் கண்டேன்
ஊணுறக்க மற்றவிடந் தானுங் கண்டேன்
காணுகின்ற கயிலைமலையேணி கண்டேன்
கற்பூர தீபவொளி காட்சி கண்டேன்
ஆணுவங்க ளற்றவிடந் தானுங் கண்டேன்
அரகரா உச்சிமுடி அகாரந் தானே (14)

தானென்ற அகாரமுடன் உகாரஞ் சேர்ந்து
தனித்து நின்ற ஓங்கார பீடந்தன்னில்
வாலென்று வைத்தகுறி மனமே யாகி
வாசிநடு கண்ணெதிரே கூசும் பாரு
பானமூர்தம் விந்துகற்பம் உண்டு தேரு
பார்வையினாற் கயிறுகொண்டு கட்டு கட்டு
நானுமொரு சுழியாகி வழியைக் கண்டு
நாட்டினேன் நாவியதில் ஞான முற்றே (15)

அகஸ்த்தியர் ஞானம் ௧௦ முற்றிற்று

உ

பரமபதி துணை.

## அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய.

# தேவியின் பூர்வபக்ஷப் பூஜாவிதி. ௰௬

அகரவுரு வாயெங்கு மமர்ந்து நின்ற
    அன்னைமனோன் மணிபதத்தை யகத்துட் கொண்டே
இகமதனில் நீதிவர்க்கந் தனைத் தெரிந்தே
    இயம்புகிறேன் சோடசத்தை யின்ப மாகத்
தகவுடனே யிதையறிந்து பூசிப் போர்கள்
    சம்பத்து மிகப்பெற்றுத் தரணி மீதிற்
றுகளகற்றி யட்டாங்க யோக ராகிச்
    சொல்லரிய பேரின்பம் பெறுவார் தாமே. (1)

அம்மாவா சியுமான அரூபித் தாயே
    அகண்டபரி பூரணியே யமல சத்தி
நம்மாலே பாடரியே னுனது பேரில்
    காவிலே வந்தருள்செய் நாயே னுக்கு
தம்மாலே சோடசசூத் திரம்வி ளங்கத்
    தயவுசெய்து நின்பதத்திற் றரிந்து கொள்வாய்
சும்மாநீ யிருக்காதே எனைக்கண் பாரு
    ஜோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே (2)

பிரதமையிற் பிரவிடையாய்க் கலைவே றாகிப்
    பிங்கலைவிட் டிடைகலையிற் பிறந்த கன்னி
உறவாகி ரவிதனைவிட் டகலா நிற்கும்
    உமையவளே பிணிப்பிறவி யொழியச் செய்வாய்
இறவாத மருந்தாகி யின்ப மாகி
    இட்டமுட னட்டசித்தி யெல்லாம் நல்கிச்
சுருதியுத்தி யனுபவமாய் நின்ற ஞான
    ஜோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே. (3)

துதிகைதனி லுபயமெனு மிடைபின் னொன்றும்
சொர்க்கமெனும் நகரமெனுஞ் சொல்லப் பெற்ற
மதிரவியா யடிமுடியா யுயிரு மாகி
வாழ்வான பெண்ணாக வந்த தாயே
விதிதுலைந்து வினைதுலைந்து வெட்கங் கெட்டே
விம்புபய மாசைதுக்கம் விட்டே யோடச்
சுதன்முகத்தைப் பாரம்மா ருக்ஷா ருக்ஷ
ஜோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே (4)

திரிதிகையிற் சுத்த மற்றுச் சுத்த மாகிச்
சிற்சொரூப மாயெங்குஞ் சிறந்த தேவி
உறுதியுட னுனதுபத மகலாச் சிந்தை
யுறவெனக்கு நீதருவா யுமையே தாயே
அருவிபோ லிருக்கண்ணீர் பொழிந்தே யுந்தன்
அடியிணையைத் துதிக்கின்ற அடியே னுக்குச்
சுருதியாய் வந்தெனது துயரந் தீர்ப்பாய்
ஜோதி மனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே (5)

சதுர்த்தியிலே நாதமெனும் வாம பூசை
தரவேணுந் தயவாக அடியே னுக்கு
மதித்தபடி வரமருள்வாய் வாலை யம்மா
வானவெளி யேவாசி மவுனத் தாயே
பதித்துனது பாதத்தி லெந்தன் சென்னி
பரிதிமதி யகன்றாலு மகலா மற்றுன்
துதித்தபடி நின்சரண மெனக்குத் தந்தாய்
ஜோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே (6)

பஞ்சமியிற் பெற்றெடுத்தாய் பாலன் றன்னைப்
பால்கொடுத்தாய் பதநடனஞ் செய்தா யம்மா
கொஞ்சமொரு காரியத்திற் றவக்கஞ் செய்தாற்
குப்பைவளர் பயிர்கூரை யேறு மோதான்
தஞ்சமென்ற நின்னடியைச் சார்ந்தே னம்மா
தன்னைத்தா னறிந்துமுன்னைத் தொண்டு செய்து
துஞ்சாம லிருக்கவுந்தான் றுணைசெய் வாய்நீ
ஜோதி மனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே (7)

சஷ்டியெனுஞ் சடாக்ஷரத்துட் சதாசிவத்தின்
சைதன்ய போதத்திற் றானாய் நின்றாய்
அஷ்டதிக்குப் பாலகரும் பெரியோர் வானோர்
அயன்றிருமால் முதலான சித்தர் யாரும்
கிட்டுவந்து அருள்தந்தா யடியே னுக்குக்
கிடைத்ததுவு முனதுடைய கிருபை யம்மா
சுட்டியுடன் ரவிமதியுந் தரித்து வந்த
ஜோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே (8)

சத்தமியாஞ்சபைதனிலே நடன மாடிச்
சப்தருஷி சப்தகன்னி பணிந்து போற்ற
அத்தனிடப் பாகமதாய் முக்கோ ணத்தி
லமர்ந்திருந்த பேரின்ப மாதித் தாயே
இத்தினத்திற் படிந்துபராங்காணார் போலே
யிருந்து விட்டா லாதரிப்பா ரார்கண்பாரு
சுத்தமதி ரவிகலந்தே ஒளியாய் நின்ற
ஜோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே (9)

அட்டமியி லட்டகலை யட்ட நாகம்
அட்டகிரி யட்டகஜ மாக யின்னும்
இட்டமுட னெங்கெங்குந் தானாய் நின்றாய்
என்தாயே நின்னடியை யிறைஞ்சு கின்றேன்
திட்டமுட னன்பர்களும் பெரியோர் வானோர்
செப்பரிய தெள்ளமுதே தெவிட்டாத் தேனே
துட்டர்களை யடக்கியன்பர் தன்னை யாண்ட
ஜோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே (10)

நவமியிலே நவரத்தின மகுடஞ் சூட்டி
நவகோடி சித்தர்கள்வந் துனைப்ப ணிந்து
தவம்பெருக வீராறுகலையுந் தாண்டிச்
சாசுவத மானபதந் தரிசித் தோர்க்குச்
சிவகாமி நின்னுடைய கிருபை யாலே
செகமதனி லெப்படியே சித்தம் வைப்பாய்
சுவர்ணமய மாய்விளங்குங் கருணை யாலே
ஜோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே (11)

தசமியிலே சாகரத்திற் கப்பா லேறி
சிலம்பொலிக்கு முன்னுடைய திருத்தாள் போற்றி
நிசமாகத் தூலருக் குமத்தி லொன்றாய்
நிஷ்களத்தில் நீரோடு மொன்றா யாகி
அசைபாத வானந்த மாய வற்றுள்
அருள்வெளிபாய் வரமருள்வா யகண்ட ரூபி
சசியாகப் பிள்ளையையுன் தொண்ட ருக்கும்
ஜோதிமன்னோன் மணித்தாயே சமூலை வாழ்வே (12)

ஏகாத சியுமான தானத் துள்ளே
இருந்தநா தம்பரத்தி லேறிச் சென்று
சாகாத காலறிந்து வோடிச் சென்று
தப்பாமற் பிடித்தபின்பு யெங்கே போவாய்
வேகாத தலைகண்டு வெளியிற் செல்ல
வேறேதா னுனையல்லா லெனக்கிங் காரு
தோகாயென் னுள்ளத்தே யினிக்குந் தேனே
ஜோதிமனோன் மணித்தாயே சமூலை வாழ்வே. (13)

துவாதசியாய்த் தானிருந்தே முக்கோ ணத்திற்
சோலமனதிற் கெட்டாத துரிய மார்க்கத்
தலைமுடியில் நடஞ்செயுமுன் சரணங் காணச்
சந்ததமும் ஞானக்கண் தருவா யம்மா
புவியதனி லெடுத்தவெந்தன் தேகம் போமுன்
போதமுற வேயென்னைப் புனித னுக்கிச்
சுவையாகி யேயறிவிற் சேர்க்குந் தாயே
ஜோதிமனோன் மணித்தாயே சமூலை வாழ்வே. (14)

திரியோத சியாயிருந்தே இடைபின் மையஞ்
சேர்ந்து வரவாதாரந் தன்னிலேறிக்
குறியறியு மாக்கினையைக் கடந்து மேவிக்
குருவுருவிற் குருவாக விளங்கு மன்னை
அறிவையரி வாலறிந்து அநுப வித்து
அறிவிலே மனமிருக்கத் துணைசெய் யார்த்தாள்
சுருதிமுடி வறிந்தயெந்தன் தாயே காப்பாய்
ஜோதிமனோன் மணித்தா யேசமூலை வாழ்வே. (15)

சதுர்த்தசியி லானவொரு நாள்காய் நின்ற
தற்பரையே இற்பரியே ஷட்கோ ணத்திற்
குதித்தோடிப் போகாம லெட்டிற் சேர்ந்து
கும்பகத்திற் றம்பனமாய்க் கூட்டி யம்மா
மதிப்பான வுன்பதத்திற் சேர்த்த ணைத்து
மனங்கலங்கி வாடாமல் மதிப்பா லீந்து
சுதன்முகத்தைப் பாரம்மா துரியா தீத
ஜோதிமனோன் மணித்தாயேசுழுனை வாழ்வே. (16)

தேவியின் பூஜாவிதி மசு முற்றிற்று.

உ

பராமபதிதுணை

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# தேவியின் அமரபக்ஷப் பூஜாவிதிகள்.

நிரஞ்சனமாய் நிராமயமாய் நினைவே யாகி
நீங்காத பெருவாழ்வே லோக மாதா
பரஞ்சோதி யானபூ ரணியே தாயே
பாற்கடலே எனையீன்ற பரமே சத்தி
சரமாகி யுலகமெலாம் வளர்க்குந் தேவி
சங்கரியே பௌர்ணமியின் வடிவங் காட்டி
திறவான ருஷிமுனிவர் பணியச் செய்த
ஜோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே (1)

க்ஷேமமது தருவதற்கு நேரே வந்த
திரிபுரையே சாம்பவியே மணப்பூ வாணிக்
காமனையும் வாமனையும் படைத் தாயே
கன்னியே வளர்பிறையே கனக மாகி
நீமறைவாய் நின்றதென்ன நினைவே யம்மா
நீடூழி காலமெலா முலகத் தோர்க்குச்
சோமகலை போலாகி யுருவங் காட்டும்
ஜோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே (2

வாழ்வான வுலகமெலாம் நீயே யம்மா
மண்டலங்க ளெங்குமே வளர்ந்த சோதி
தாழ்வேது வுனையடைந்த சித்தர்க் கெல்லாம்
தங்கமய மாயிருந்த தேவி ரூபி
பாழ்போன வாக்குநல்ல சித்தி தந்து
பாக்கியமா யடங்காத அண்டத் தோடே
சூழ்ந்திருந்து மகிழ்ந்தென்னைப் பெற்ற மாதா
ஜோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே (3)

மதியான நாலுகலை யான ரூபி
　　மாதாவே வரப்பிரசா தங்கள் தந்து
கெதிபெறவே செய்தபூ ரணியே யம்மா
　　கிருபையுடன் தவநிலையைக் காட்டி வைத்தாய்
பதிவான கலைநாலும் பாழ்போ காமற்
　　பாக்கியங்கள் தந்தருளு பரையே சித்தர்
துதிதனையே பெரிதென்று நினைக்குந் தேவி
　　ஜோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே (4)

பஞ்சமியி லுலகமெலாம் பெற்ற மாதா
　　பரப்ரம்ம மானதொரு பாக்ய ரூபி
தஞ்சமென்ற சித்தர்களைக் காக்குஞ் சத்தி
　　தமியேனை யீடேறச் செய்த தாயே
பஞ்சையாந்தொண் ணூற்றாறு தத்து வத்தைப்
　　பறக்கடித்த சுமங்கலையே ரிஷிகள் தம்மைத்
துஞ்சுதலில் லாமற்று ணிருக்கச் செய்தாய்
　　ஜோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே (5)

உன்னுடைய கிருபைவைத்துத் தவத்தைப் பெற்றே
　　ஒன்றாகி இரண்டாகி ஆறு மாகி
தன்னுடைய தீட்சைவைத்து ஞானந் தந்த
　　சங்கரியே சாம்பவியே சாகாக் காலே
கன்னிகையே மதுரரச மான தேவி
　　கற்பகமே கனகபிர காச மான
துன்னுதிருச் சுழிமுனையி லாடுந் தேவி
　　ஜோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே (6)

பந்தவினை போக்கிடுமென் னருமைத் தாயே
　　பாக்யவதி பூரணியே பருவ மாதே
வந்தநீ சுருள் பெருக யெனை வளர்த்த
　　மாதாவே சுடரொளியாய் வழங்கப் பெற்ற
எந்தனையு மகத்யனெனப் பெயரு மிட்டு
　　எட்டெழுத்தில் மூன்றெழுத்தாய் விளங்கி நின்ற
சுந்தரியே கன்னிகையே யகண்ட ரூபச்
　　ஜோதி மனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே (7)

திங்களொழி யாயமர்ந்த சப்த கன்னி
தேவர்களுக் கமுதளித்த சிறுபெண் ணாத்தாள்
அங்கசத்தி ரீங்காரி அனந்த ரூபி
அண்டரெலாம் போற்றஅவ தரித்த தேவி
மங்களமாய் நவராத்திரிப் பூசைக் காக
வந்தமர்ந்த திரிசூலி மகிழோங் காரி
துங்கமய மானவா னந்தித் தாயே
ஜோதி மனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே (8)

நீதமுடன் உருவாகி அரூப மாகி
நிஷ்களமாய் நிராமயமாய் நின்ற நீலி
வேதமுடி வாகிநின்ற விமலித் தாயே
விண்ணொளியாய்ப் பரவெளியா யகண்ட சத்தி
பாதமதிற் சிலம்புகலீர் கலீரென் றோதப்
பத்தருக்காய்ப் பிரசன்ன மான ரூபி
சோதனையாய்ச் சோமகலை யாக வந்த
ஜோதி மனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே (9)

காலான சந்திரகலை நாலுங் காட்டி
கண்மூடித் திறக்குமுன்னே ஜோதி காட்டி
மாலான அரிதனையு மங்கே காட்டி
மறைந்துநின்ற சுயரூபந் தன்னைக் காட்டி
பாலான சோமகலைப் பாலு மூட்டி
பாங்குடனே பெணைவளர்த்த பருவ மாதா
சூலான தாய்வற்யிறிற் சொரூபந் தந்த
ஜோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே (10)

அண்டாண்ட புவனமுந்தான் நீயே யானாய்
அம்புவியிற் சோதிமனோன் மணியு மானாய்
கண்டதொரு காட்சிகளைச் சொல்லப்போமோ
காரணியே பூரணியே கன்னி யாளே
விண்டதொரு மகிமைகளை வெளிவி டாமல்
வேண்டியதோர் தீட்சைகளை முடித்துக் கொண்டேன்
தொண்டனைநீ யெப்போதும் ஆள்வா யம்மா
ஜோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே (11)

சொல்லவென்றால் ஜோதிமய மான தாயே
சுந்தரியே உன்பாதங் கொடுப்பா யம்மா
நல்லதொரு திருநடன மாடுந் தேவி
நாதாக்கள் பணிகின்ற வாம ரூபி
வல்லசித்தர் மனதிலுறை மகிமைத் தாயே
வாலைதிரி புரையெனக்கு வாக்குத் தந்து
தொல்லுலகத் தாசைகளை மறக்கச் செய்த
ஜோதி மனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே (12)

பாசவலை தனிற்சிக்கி யலையா மற்றான்
பண்புடனே அஞ்ஞான மதனைப் போக்கி
நேசமுடன் சது கிரி மலையி லேதான்
நித்தியமும் நடனமது புரிந்த நீலி
பேசரிய ஞானமதை யெனக்க ளித்த
பேரான சுமங்கலையே பெரியோ ருக்குத்
தோஷமது வாராமற் காக்குந் தேவி
ஜோதி மனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே (13)

பத்துடனே நாலாகி யெங்குந் தானாய்
பராபரியே பரஞ்சோதிப் பருவ மாகிச்
சித்தாகி யுலகமெங்கும் மயக்குந் தாயே
திருவருளே திரிபுரையே தேவி யம்மா
வித்தாகி முளைத்தெழுந்த சுடரே தீப
விமலியே குண்டலிஓங் காரசத்தி
சுத்தான அண்டமெலாம் நிறைந்து நின்ற
ஜோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே (14)

பிரியமுடன் பதினைந்து கலையு மாகிப்
பேசரிய தீபவொளிப் பிரமை யாகி
உரியதொரு நந்தியொளிதீபங் காட்டி
ஓங்கார ரீங்காரச் சத்தி யாகி
சரியென்று மதித்திடவே யென்முன் வந்த
சங்கரியே சாம்பவியே சர்வ ரூபி
துரியதுரி யாதீதத் தமர்ந்து நின்ற
ஜோதி மனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே (15)

எட்டெட்டுக் கலையாகி யுருவ மாகி
எங்கெங்குந் தானாகி யரூபி யாகி
விட்டுவிட்ட குறையிருந்தோர்க் குபதே சித்து
வேண்டியதோர் வரங்கொடுத்தே அவர்க ளுக்கு
கட்டுமெட்டாய்ச் செல்வமதைத் தான்கொ டுத்துக்
கனிவாக வரைதனிலே யிருக்க வைத்தாய்
தொட்டுந்தன் பாதமதைத் தொழுதே னம்மா
ஜோதி மனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே (16)

பறையான வுந்தனையும் பணிந்தே னம்மா
பக்ஷமொடு வரமருள வேண்டுந் தாயே
நிறையான செல்வமது கொடுத்துக் காத்தாய்
நிச்சயமாய்ச் சுழிமுனையைக் காட்டித் தந்தாய்
வறையான எட்டிரண்டுந் தெரிவித் தென்னை
வாழ்வித்தாய் கற்பமுறை வழியுஞ் சொல்லித்
துறைதெரியச் செய்துவைத்த இமயவல்லி
ஜோதிமனோன் மணித்தாயே சுழுனை வாழ்வே (17)

தேவியின் அமரபக்ஷப் பூஜாவிதி கள.முற்றிற்று.

உ

பரமபதிதுணை

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# ஞானச்சுருக்கம்.௧அ

(*)

ஆதிமறை சாத்திரங்கள் பிறந்த வாறும்
அடிமுடியும் நடுவாகிப் பொருள்மூன் றாகி
வேதியனும் மால்சிவனும் நின்ற வாறும்
வேதமுட னாகமங்கள் பிறந்த வாறும்
சாதிபல தொழில்முறைக ளான வாறும்
தன்னுக்குள் அஷ்டாங்கம் செய்த வாறும்
ஓதியனா லவரவர்கள் உரைத்த வாறும்
ஓம் மகா ராஜகண பதிகாப் பாமே (1)

காப்பான கணபதியை யெழுப்பி மேலே
கருதினல் மனமகிழக் கருதிபூது
சேப்பான தீபமதிற் சார்பு கொண்டு
சிவசிவா நடுவான நிலையில் நின்று
கோப்பான புலத்தியனே நாதத் தோங்கு
கும்பகமே சதாநித்த மனதுபூண்டு
வாப்பானு லிதுவல்லோ மவுன யோகம்
மற்றதெல்லாம் யோகமல்ல மடையன்செய்கை (2)

மடையனவன் சலத்திலுள்ளே யிருந்தே னென்பான்
மாடுநிற்கும் யோகமல்ல வித்தை யாச்சு
சடைவளர்த்தா லாவ தென்ன கண்ணை மூடிச்
சாம்பவியென் றேயுரைப்பார் தவமில் லார்கள்
உடையவன்தான் நாசிவிட்டு மாறிச் செல்வான்
உலுத்தனவன் சாதகத்தாற் செய்வா னின்னும்
அடையோக மென்பார்கள் உயரத் தாக்கும்
ஐயோகோ வீண்பாடு அறிந்துகொள்ளே (3)

அறிந்துகொள்ளு புலத்தியனே யின்னங் கேளு
ஆயிரத்தில் ஞானமதை யடக்கிச் சொன்னேன்
பிறிந்துநின்ற வெள்ளாட்டி பிள்ளை யப்பா
பெரிதாகக் கும்பிப்பே னென்பான் மட்டை
செறிந்தகிடாய் வால்கிளப்பிக் கொண்டு துள்ளி
சிறுதல்போற் சிறிமுட்ட வருஞ்சுணங்கன்
முறிந்தெழல்போல் கூக்கலிட்டு வாதித் தார்ப்பான்
மூடனவன் றனைவிட்டுத் தனியே நில்லே (4)

நில்லென்றே யிரண்டுகண்ணும் மூடிக் கொண்டு
நெடுவிரலால் நாசியொடு வாயும்பொத்திக்
கல்லென்றே திக்கல்முக்க லாடி நின்றால்
கன்மமுறுங் கண்தெரிக்குங் கபாலம் போகும்
வல்லமையால் மூச்சடக்கிப் பார்த்தோர் கோடி
வாய்பேசா மவுனியென்றே அலைந்தோர் கோடி
தில்லைவெளி கானவென்று சுழிபார்ப் பார்கள்
செத்திறந்து போவதற்கு திரிந்தவாரே (5)

வாறான அபானத்துள் சலத்தைத் தானும்
வாங்கியவ ருள்ளேதா னலசித் தானும்
கூறான அபானத்தாற் றள்ளு வாறாய்க்
கும்மெனவே கண்மூடிச் செவிப்பார் கோடி
தேனான மூன்றெழுத்தை நினைத்தோர் கோடி
தீட்சைபத்தும் பெறவலைந்து செத்தோர் கோடி
வேறான வாதமுறை செய்தோர் கோடி
மெய்யறியா ரிவரையெல்லாம் புடைத்துத்தள்ளே. (6)

புடைத்ததனாற் பலனுண்டு புத்தி யுண்டு
புகன்றிட்ட சாஸ்திரமும் பொருளும் நன்றாம்
அடைத்த பொருள் குருவிடமாய் நிலையாய் நிற்கும்
அம்மம்மா யுகம்வரைக்கும் அதனைப்பேணு
நட்த்தையிலே குருமுகத்தை யுற்றுப் பாரு
நாடோறும் ஒருமனதாய்த் துணிந்து நில்லு
உடைத்துவிட்டேன் பதினாறில் யோக மெல்லாம்
ஒன்றுபொரு ளாயிரத்துக் குரியிதாமே. (7)

உயிரான காவியந்தா னுயி ரத்தில்
 ஒன்றுபோல்கருவையெல்லாம்வெளியாய்ச் சொன்னேன்
பயிரான ஆயிரத்தி யிருநூறுக் குட்
 பயிரிட்டேன் வாதமென்ற பொன்மேராகக்
சுயிரான தைத்தொடுத்தே ஊஞ்சல் போட்டாற்
 கருதியதி லேறிவிளை யாட லாகும்
செயிரான தொழிய சாம் பவிபைக் காணுர்
 திரிந்துநின்று வாதியென்று சுடுவார் வீணே (8)

சுடுகாட்டிற் பிணம்பிறக்கித் திரிவர் கோடி
 சூட்சமதி லிருந்துரவி யறியார் தேடி
பிடிகாட்டும் பொருளதனை யறிய மாட்டார்
 பிழுக்கையவர் யோகமென்ற வழியுங் காணுர்
விடுகாட்டுஞ் சந்துநடு விழுவார் நாய்போல்
 வெள்ளாட்டி மைந்தருக்கு நூலும் மெய்யோ
அடிதொட்டு முடிவரைக்கும் ஏற நீதான்
 அரசாங்க சிவயோகம் நிலேக்கப் பாரே (9)

பாரப்பா புலத்தியனே ராஜ யோகம்
 பண்ணிஞேர்க்கு வாதமுறை பரிசு காணும்
சேரப்பா ரேசகபூ ரகமுங் கும்பஞ்
 செய்வோர்க்குச் சுழிமுனையுந் திறந்து நிற்குஞ்
சாரப்பா அடிமூலம் நடுவாம் மேலும்
 சமர்த்தருக் கெட்டு வதி யலேயந்தோணும்
சேரப்பா சிவராஜ யோகத் திற்குச்
 செப்புவேன் பேர்வகையைத் தெரிந்து கொள்ளே. (10)

தெரிந்துகொள்வாய் அடையோகம் மவுனயோகம்
 செலத்தம்பம் முதலான சுழினை யோகம்
பரிந்துகொள்வாய் அம்பிகையின் நாசி யோகம்
 பக்குவமாய்ச் செய்யுமொரு கெவுன யோகம்
வரிந்துகொள்வாய் தாரணியில் கௌரி யோகம்
 மாருட்டம் பண்ணிடுமிவ் வளவும் வீணே
பிரிந்துகொள்வாய் இவ்வளவும் விட்டு மேலாய்ப்
 பேசுகுரு ராஜயோ கத்தைக் கேளே (11)

கேளப்பா ராஜனுக்குத் தீங்கு முண்டோ
கீர்த்திபெற்ற புலத்தியனே நன்றாய்க் கேளு
வாளப்பா யித்தனைநாள் நூல்கள் தோறும்
மறைத்ததனை வெளிதிறந்து கூறுவேன் கேள்
தாளப்பா யோகியர்க்கும் பிராண னுகும்
சதாசிவனும் மெச்சுமிந்தப் பதினு றப்பா
கூளப்பா சட்டைமுனி வெளியாய்ச் சொன்ன
குருநூலை மூலரவர் கிழித் திட்டாரே. (12)

கிழித்திட்டா ரதினுலே யிந்த நூலைக்
கிருபையுள்ள சிவனுட்யுத் தாரங் கேட்டு
கழித்திட்டுப் போகாமல் ராஜயோகங்
கழறுகிறேன் வெளிதிறந்து மைந்தா கேளு
அழித்திட்டு மூடர்களை யகலத் தள்ளு
அசடர்களைப் பல்லுதிர அறைந்து தள்ளு
பழித்திட்ட மூர்க்கர்களை அப்பால் வைத்துப்
பாடுகிறேன் தெரிந்தோர்க்கே யோகங் கேளே. (13)

கேளப்பா அடிமூலம் அமர்ந்து வாங்கு
கெடியாக அறுபத்து நாலுஞ் செல்லும்
வாளப்பா நடுமூலம் நிறுத்தி நில்லு
வளமாக வேமுப்பத் திரண்டுந் தீருஞ்
சூளப்பா புருவமையக் குறிகண் ணுட்டு
சூட்சமதாய்ப் பதினுறுந் தீர வாங்கு
பாளப்பா போகாதே யிதுக்குப் பேர்கேள்
பதிவான ரேசகபூ ரகமே யாச்சே. (14)

ஆச்சப்பா கும்பகமுந் தீர்ந்த பின்பு
அரகரா சுழிவாசி நிலையில் நிற்கும்
பேச்சப்பா ஒன்று மில்லை வாசியோகம்
பெருமையுற்ற சிவராஜ யோகமாகும்
போச்சப்பா மற்றமற்ற யோகமெல்லாம்
பொய்யாச்சு தென்பதல்ல சிறந்த தில்லை
காச்சப்பா நடுவாசி யுண்ணுவ் மேலே
காட்டினேன் சிவராஜ யோகங் காணே. (15)

காணப்பா காவியத்தின் சுருக்கந் தன்னைக்
கருவாகப் பதினாறிற் கருதிச் சொன்னேன்
வீணப்பா வென்று சொல்லி யலைந்தி டாதே
வெட்டவெளி யாகவே திறந்து சொன்னேன்
வேணப்பா வாதத்தைச் சுருக்க மாக
விரும்பிநீ கேட்டபடி சொல்லக்கேளு
மானப்பா சிவராஜ யோகங் கண்டோன்
வருந்தியே செய்தாக்கால் மாதாவாளே. (16)

மாதரொளிர் வாலையவ ளிருது வானால்
மைந்தனே அவளோடே யிருப்பா யானால்
போதமுடன் உன்விந்து அவள்நா தந்தான்
பூரணமாய்ப் பீங்கானி லிரண்டும் வாங்கிச்
பூதமுட னிலிங்கமது சிலையுங் காரம்
சுத்தமுள்ள தாரமுடன் பூரங் கெந்தி
நேரமுடன் பொரிகார லவணஞ் சாரம்
நினைவாகப் பன்னென்று சரக்கைப் போடே (17)

போட்டபின்பு ரவியில்வைத்துக் கல்வத் தாட்டு
பூரணியைத் தியானித்து வில்லை தட்டி
நாட்டமுட னிதையெடுத்து ஓட்டில் வைத்து
நலமான மேலோடு கொண்டு மூடி
ஆட்டமுடன் சீலைசெய்து புடத்தைப் போடு
அப்பனே ரசபற்ப மாகும்பாரு
தீட்டமறு செம்புவெள்ளி யிரண்டி னுக்கும்
சிவசிவா பத்தரைதான் மாத்து மாமே (18)

அகஸ்தியர் ௧௮ முற்றிற்று

உ

பரமபதி துணை.

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய.

# சொரூபஞானம் ௰௬.

சீர்கொண்ட செங்கமல மதன வல்லி
திரிபுரையா ளஞ்செழுத்தின் சிவையே யைய்யா
கார்கொண்ட நீலமணி முகமே யாறு
கண்மூன்று சிரசைந்து யிதமோ பத்து
ஏற்கொண்ட முடிகாத விந்து மூலம்
ஈராறு பன்னிரண்டாம் அங்குலத்தில்
தார்கொண்ட சமாதிக்குள் நடுவாய் நின்ற
சச்சிதா னந்தகுரு மூலங் காப்பே. (1)

குருபாதம் வெட்டவெளி யாக வேதான்
குறிப்பறிந்து முக்கோணச் சக்க ரத்தில்
திருவான விற்புருவ நடுவு மாகிச்
செனித்தபரம் ஒளியாகி வெளிய தாகி
அருவாகி உருவாகிப் பாமு மாகி
ஆதார உச்சிமுடி வீதி லேறிக்
கருவாகிச் சிதம்பரத்தில் நடனங் கண்ட
கற்பூர தீபமதைக் கலந்து மூட்டே (2)

மூட்டடா மூக்குநுனி சுழியைப் பார்த்து
மூக்காலும்வாலே தனைக் கண்டு பூசி
ஆட்டடா கண்ணதனை உருட்டி யேதான்
அம்பரத்திற் சென்றுக்கால் பிறைபோல் வட்டம்
நாட்டடா கருநெல்லிச் சாரை தானும்
நடுமையந் தனிலாகுஞ் சோதி பாரு
ஒட்டடா! அஞ்செழுத்தின் நிலையைப் பாரு
ஓம் நமசி வாயபூ ரணத்தைத் தானே (3)

பூரணமாய்த் திரண்டகன்னி வாலை யாகும்
புதுமையதாய்ச் சொல்லிவிட்டேன் முப்பூ வப்பா
காரணமாய்ச் சனிகையிடம் மூன்று நாளுங்
கணக்காகப் பீங்கானிற் சேறை வாங்கி
வாரணமா யதையெடுத்து வைத்துக் கொண்டு
வளமான அவனவனின் அமுரிவாங்கிக்
காரணமாய் மூன்றுநா ளான பின்பு
கனமான சட்டியிலே விட்டுக்காச்சே. (4)

காச்சடா உப்பாகு மெடுத்துக் கொண்டு
கண்டெடைக்கு ஞானியண்டச் சுண்ணந் தாக்கு
பாச்சடா சரிசமன் முன் நாதம் விட்டுப்
பாங்காக வைத்திருக்க மெழுகு மாகும்
மாச்சடா வெள்ளிசெம்பு வெட்டு ரெண்டும்
வளமாக எடைசரியாய் நிறுத்துக் கொண்டு
மூச்சடா குகையிவிட்டு உருகும் போது
முன்மெழுகிற் குன்றியிடை கொடுத்துப் பாரே (5)

பாரப்பா பத்தரையாம் மாத்து மாகும்
பைங்கொடியாள் தந்தவித்தை இதுதா னப்பா
சேரப்பா பரையுடனே சேர்ந்த போது
செப்பரிய மூலம்விழுந் துளியோ பத்து
நேரப்பா அமுரிதனில் பிழிந்து நீயும்
நித்த நித்த மாகவுநீ செய்த வித்தை
பாரப்பா உலகத்தில் சனிகை பார்த்துப்
பட்சமுற உன்னிடத்தில் பனுக்கம் வேண்டே (6)

வசியத்துக் காகுமடா இந்த வித்தை
வழியோடே செய்தாக்கால் வாத மாகும்
பசியென்று வந்தவர்க்கே அன்னம் போடு
பாதேசி யானுக்கால் அன்பு செய்நீ
வசியென்று தான்செபிநீ லெட்ச மப்பா
வளமாகத் தான்செபித்து வருவாய் நீதான்
பசியென்று மாட்டிவிட்டால் இலய மாகும்
மாத்தான்முன் வந்துவிட்டா லுடனே செய்யே. (7)

செய்படா இன்னமொன்று சொல்லக் கேளு
செப்பரிய நாதாக்க ளடக்கமப்பா
மெய்யடா யிக்தவித்தை பொய்யே யில்லை
மேதினியிற் சொல்லிவிட்டா லுனக்கே கேடு
பையடா யிந்தமுதற் போலே யப்பா.
பரத்துக்கே தெரியுமல்லால் மற்றோர் காணார்
உய்யடா வாலையவள் நல்ல பெண்தான்
உயர்வான பெண்டீரு மவள்தான் பாரே (8)

பெண்டீரோ அவள்தானே தாயு மாவாள்
பேச்சறிந்து பேசுதற்கு வாலை யானாள்
கண்டீரோ தண்ணீரிற்றவளே தானும்
கனமாக விருந்துமாவை குடிக்கக் காணீர்
உண்டீரோ உட்பொருளை யொருவர்காணார்
உத்தமியா ளிப்படித்தா னிருந்தாள் பாரு
கொண்டீரோ பணம்போட்டுச் சலித்திட்டீரோ
கோதைக்குப் பால்பழமோ டன்னம் போடே. (9)

போடப்பா சம்பாநெல் லரிசி யோடு
புதுப்பச்சைப் பயறிட்டுப் பொங்கல் செய்து
பாடப்பா பசுவினெய்யும் பசுவின் பாலும்
பாங்கான சர்க்கரை தேன் கூட்டி யுண்ணே
நாடப்பா அவளுக்கோ விரண்டு நேரம்
நன்றான தீஞ்சுவைப்பண் டங்க ளீந்தே
ஆடப்பா யிப்படியே மூன்று நேரம்
அப்பனே சொன்ன படி அமர்ந்து செய்யே. (10)

அமர்ந்திட்ட சருவருட மூலம் கீந்தும்
அப்புறத்தே போக்கிவிட்டா லாகாதப்பா.
நிமிர்ந்திட்ட நிண்ணயமாச் செய்தா யானால்
நிரமயமாம் பூரணத்திற் காய சித்தி
கமிர்ந்திட்ட ஞானசித்தி யோக சித்தி
கன்னியுட பாலமுர்தம் வாம சித்தி
செமர்ந்திட்ட வாத சித்தி வாமிசித்தி
சிங்குவங்கு எட்டுமெட்டுச் சித்தியாச்சே , (11)

சத்தியென்றும் சனிகையா லெடுத்த கூறு
சிவயநம வானதிலே பிறந்த கூறு
பித்தனென்றும் பேராகிச் சிவமு மாகிப்
பிரபலமா ஞானியென்ற உலகமாகிப்
பத்தனென்றும் பேரெடுக்க எட்டிரண்டாய்ப்
பராபரையுந் தான்கொடுத்தா லிரண்ட தென்றும்
அத்தனென்றும் எட்டுடனே யிரண்டுங் கூட்டில்
அவனியுயிர் உடலாகும் யகாரம் பத்தே (12)

பத்தான பொருளிதுதான் பத்தில் வீழ்ந்த
பாம்பதுவுஞ் சாகாது சொன்னே னப்பா
கொத்தான வெட்டிரண்டும் சேர் கிழங்கு
கூடியல்லோ பத்தான திதுதான் மாசம்
உத்தான பனிக்குடநீர் அதினு லாச்சு
உண்மை பாசகுண்ட நஞ்சு மிதுநா லாச்சு
முத்தான வருத்தமுடன் பெற்ற தாய்நீ
மூச்சறியா வுலகத்தோர் தீட்டென்பாரே. (13)

தீட்டான கெச்சனித்தல் தீட்டுத் தீட்டு
திறமாக மற்றதொன்றுந் தீட்டாகாதே
மூட்டான மூட்டுமென்பார் தீட்டுமென்பார்
முதியோர்கள் சனிகையுட ருதுவாவென்பார்
ஆட்டான ஆட்டமதை வண்ணான் கண்டே
அதையெடுத்துச் சுத்திசெய்தான் வெளுப்ப தற்குப்
பாட்டான பாடுகண்ட வண்ணான் மூத்ரம்
பாங்காக ஆற்றோடே போகும் பாரே. (14)

போகுதடா வீணிலேதா னென்று சொல்லிப்
புதுமையதா யெவருக்குஞ் சகாயஞ் செய்து
போகுதடா அதைநீயும் போகா தென்று
புத்தியினால் நிறுத்திவிடப் பாரு பாரு
போகுதடா மாதனுக்குத் துணிதா னப்பா
பொறுமையுட னதையெடுத்துப் பந்தஞ் செய்து
போகுதடா சுவாமிக்குத் திவெட்டி போட்டுப்
பொதிபோலவ் வெளிச்சத்தை கும்பி டாயே. (15)

கும்பிட்டும் அரகரா வென்று மோங்கு
குருநமசி வாயவென்றுஞ் சொல்வ தாச்சு
அம்பிட்டுக் கொண்ட துணி மோட்சம் பெற்றே
ஆலயங்கள் சுற்றிவந்த புதுமை தானும்
உம்பிட்டுக் கன்னியர்கள் ஒழித்த சேலை
உபாயமாய் வெளியில்வந்து துலக்க மாச்சு
செம்பிட்டுக் கட்டிவைத்தா லடங்கா தென்று
தேசிக்குக் கடிவாளம் பூட்டி னுனே (16)

பூட்டினுள் மூன்றுநா ளான பின்பு
பூட்டக்க மாகவவ ளேறிக் கொண்டு
நாட்டிலே அறிவதற்குத் துணியெ றிந்தால்
நலமான செம்பிருப்பு தனிலே பட்டுத்
தாட்டிகமாய் உவர்ச்சார மதிலே யேறித்
தகதகென நவலோக மெல்லாந்தாமும்
மூட்டியதோ ரிரவிபட்டுப் பழுத்துப் போகும்
முன்னோர்க ளறிவார்மற் றோர்கா ணாரே. (17)

காணார்கள் கண்டெடுத்து வைத்துக் கொண்டு
கனமாக நிறுத்திட்டு முறையே செய்து
தோணார்கள் ஆரெவரோ போட்டா ரென்றுஞ்
சொந்தமவன் பிறந்திருந்தான் கிடைத்த தென்பார்
காணமற் போனபொருள் வந்த தென்று
கையடக்க மாகவேதான் பதனம் பண்ணி
நாணார்கள் இதையெடுத்துக் கிரையஞ் செய்து
நல்லோர்கள் தர்மமிகக் கொடுப்பார் பாரே. (18)

பாரப்பா இப்படியே யிருந்த செம்பொன்
பரதேசிக் கன்னமிட்டு வாவி வெட்டக்
கோரப்பா பசுககளுக்குத் தண்ணீர்த் தெப்பம்
குளம் வெட்டித் தர்மங்கள் செய்து பாரு
ஊரப்பா தர்மசிந்தை யென்று சொல்வார்
உற்றபர தேசியப்பா உன்னி டத்தில்
ஆரப்பா வந்தசிவ யோகி மார்கள்
ஆருக்கும் பிள்ளையென்றே யறிந்து போற்றே. (19)

அகஸ்தியர் சொருப ஞானம் பத்தோன்பது
முற்றிற்று.

உ

பரமபதி துணை.

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# பாலவாகடம் ௨௰.

பூரணமே குருவாகும் அதனைப் போற்றப்
போதரவா யறிவுடனே மிகுந்து பாரு
காரணமாம் வாயுவினால் ரசங்க ளாகிக்
கனமானசூதசுரோ ணிதங்க ளாகித்
தாரணமாய் சுரோணிதசுக் கிலங்க ளாகித்
தழைத்துதப்பா வுலகத்திற் றையல் தேடி
வாரணியுங்கொங்கைமதி மின்னாள் வந்து
மகிழ்ந்திருந்து வொருமணியாய் வாங்கினாளே.

வாங்கினாள் வைத்திருக்க விடமிங் கேது
மயிர் நுனிபோற் சுழியுண்டு வதிலே சிக்கித்
தேங்கினால் நாதவிந்தா விரண்டுங் கூடித்
திரண்டுதப்பா குமிழிபோற் பிண்ட மாச்சு
தூங்கினாள் மிகுந்தாசை சிகாரங் கொண்டு
துதித்திருந்தாற் சனனத்தா லினிப்பி னாலே
ஏங்கினாள் புசிப்பதற்கும் புளிப்ப தற்கும்
இதமான வாகைபுசித்தா ளினிப்பாற் றானே. (1)

புசிப்பதனால் வாதமுடனமுதம் பொங்கிப்
புகழாகப் பிண்டத்தை வளர்ந்து தப்பா
புசிப்பதனாற் சூடேறி நீர ருந்திப்
புகையான சேத்துமந் தானு மாகிக்
கசிப்பதனால் மூலமொடு கூடிக் கொண்டு
கருவோடே ஆவியுமே கலந்து போச்சு
மூசிப்பதனால் முன்னாறுஞ் சென்ற பின்பு
மூதண்டலோகத்தி லுதித்த வாறே. (2)

உதித்ததொரு பிள்ளைக்கு வியாதி கண்டால்
உண்மையுடன் சொல்லுகிறேன் தருமமாகப்
பதித்திருக்கும் நாடிகளைப் பார்க்கும் போது
பரிவுடனே தோணுமற் கலங்கிப் போகும்
கதித்திருக்குங் குணங்களைத்தான் சொல்லக் கேளு
கரப்பானுங் கிரந்தியொடு மாந்த மாகும்
மதித்ததொரு கரப்பானுஞ் சன்னி தோஷம்
வருமாகில் வஞ்சியர்க்கு மருந் தீவாயே. (3)

வஞ்சியரைக் கருவாகச் சார்ந்து பாரு
வண்மையுடன் வாயு வந்து உடலைப் பற்றி
மிஞ்சியே மலஞ்சிக்கிக் கருகிக் கொண்டு
மிகுந்தசிறு நீர்துவுங் கட்டிக் கொண்டு
அஞ்சியே யலறியழுந் தேங்கித் தேங்கி
அன்னையன்னை எனக்கூவித் தேடு மப்பா
உஞ்சிமுலை யுண்ணாது பிரண்டு பார்க்கும்
உள்மாந்தக் குணமீதென் றுணர்ந்து கொள்ளே (4)

கொள்ளடா வியாதியென்றூர் கொஞ்ச மல்ல
கொடுங்கார மேற்றுதற்கு வகையைக்கேளு
வில்லடா நிலவேம்பு சிவதை வேரும்
விரைவான நிம்பையவே ருள்ளி காயம்
கள்ளமல்ல வொன்றுக்குக் கழஞ்சு சேர்த்துக்
கருத்துறவே யெண்ணெய்யரைப் படியில் வெந்து
உள்ளதொரு காசிடையா யுள்ளே வார்க்க
ஒருமித்த உள்மாந்த மோடிப் போமே. (5)

ஓடிப்போம் மலபேதி நீரைப் போலே
ஒருநிறமாயிருக்காது பிள்ளை தேகக்
தேடியே திகைத்தது போற் சொக்கிக் கொண்டு
சேல் விழிகள் மேல் நோக்காய்ச் சொருகிக் கொள்ளும்
வாடியதோ ரன்னை முகம் பாரா தப்பா
மைந்தனே சலமாந்தம் மலத்திற் காணும்
நாடியதோ ரிராட்சதனுஞ் சிறையில் வைத்த
நல்லிலையு மிரட்டிலையும் நம்பிப்பாரே. (6)

நம்புவது வெதுப்படக்கிக் காய்க்கு மல்லி
 காவிலேயுஞ் சமனுகச் சாறு வாங்கி
வெம்பியதோர் வேழ்விழிமீ]துறையும் வேரு
 வியாசன் முதல் யோகிக்கு நிறைப்ப தகுாம்
துன்பமற நறுக்கிடுவாய் கழஞ்சு வீதம்
 தூக்கிடுசேர் வெண்ணெயிற்சார் சேர்த்து நன்றாய்த்
தென்புடனே பெரித்திடுவாய் மெழுக தாகத்
 தினமுமொரு காசிடையாய்க் குழைத்தி டாயே (7)

குழைத்திடுவாய் முலைப்பாலில் மூன்று நாள்தான்
 கொடுத்தவுடன் ஓடிவிடுஞ் சலமாங் தந்தான்
அழைத்திடுமிப் பிள்ளையுமாங் துளிர்போ லாகும்
 அதைவிட்டு யின்னுமொரு வகையைக் கேளு
பழக்கமுறுங் திப்பிலியு மிளகுத் தூளும்
 பலமான இலையிளைப்பிட் டவியில்வைத்து
நழுக்காமற் றிரிபொழுது வார்ப்பாயப்பா
 நாடிவந்த சலமாந்தம் நடுங்கிப் போமே. (8)

நடுங்கியதோர் பித்தமது கோபங் கொண்டு
 நல்லவா யுவைப்பற்றி யழுத்திக் கொள்ளும்
கடிந்திருந்த பிள்ளைக்குக்கதித்த சூடும்
 கனகனப்பும் எந்நேரங் கைவி டாது
ஒடுங்கியே வாயுலர்ந்து தண்ணீர் கேட்கும்
 உத்தமனே மலபேதி வழும்பாய் வீழும்
மடங்கியூன் கழிநீர்போ லபான வாசல்
 வழியாக எப்போதும் வருகும் பாரே. (9)

பாருநீ இக்குணத்தாற் கணங்க ளென்று
 பருவமாய் கண்டறிபுத் திரனே ஐயா
சாருதற்கு முள்வேருஞ் சித்தப் பாலை
 சார்ந்தெருக்கன் காந்திவேர் பொன்னப் பூவேர்
போராசன் மதிமயக்கம் பூண்ட வேரும்
 போதரவாய்ப் பட்டைவகை பலமே தூக்கி
வீராதோர் மெழுகதுபோ லெண்ணெய்யிற்றான்
 வெந்தபின்பு பீங்கானி லிறுத்து வையே (10)

இறுத்திட்ட வெண்ணெய்க்குப் பொடியைச் சொல்வேன்
ஏலஞ்சீ ரகமதுதான் பலமே வாங்கி
வறுத்திடித்துப் பொடித்திடுவாய் மாயினம்போல்
வாரியெண்ணெய் மேற்றாவி குலுக்கி வைத்து
நிறுத்துமொரு காசிடையாய் மூன்று நாள்தான்
நேராக முலைப்பாலிற் கலந்து வாரு
நிறுத்துமபா னத்துவழி சொரிந்த ரெத்தம்
நீர்த்தூளாய்க் சணங்களெலாந் துறந்து போமே. (11)

துறப்புமிகுங் கக்கலுடன் சுவாசந் தோற்றும்
தூக்கமதுபிடியாது தொங்கிக் காயும்
இறப்புடனே விக்கலொடு விலாவிற் பள்ளம்
ஏந்து கொங்கை குடியாது வீங்கிப் போகும்
வெறுப்பார்கள் சிறுவனைப்பார்த் தினியே தென்பார்
வேறேது மெண்ணிமனந் தவிக்க வேண்டாம்
உறப்பான விக்குணங்கள் தன்னைக் கண்டால்
ஓகோகோ சுழிமாந்த மென்று சொல்லே (12)

சொல்லுதற்குச் சாலைதூளாய் தொடருந் தும்பி
தொகைக்குமுட்டி பிலையுடனே குதிக்கு நாதா
வல்லியுடன் சிட்டியுமே ஐந்துங் கூட்டி
வாகான இலைகளெல்லாஞ் சாறு வாங்கிச்
செல்லுஞ்சா திக்காய்திப் பிலியுங் காயஞ்
செல்கடுகு ரோகணி ரோ சனையுங் கூட்டி
நல்லகம லாக்கினியில் மெழுக தாக்கி
நன்மையுறக் காசிடையாய் காட்டி டாயே (13)

காட்டியவுள் ளஸ்திதனிற் சூடு கொண்டு
நல்லுடம்பு குளிர்ந்துவிடச் சுரமுண் டாகும்
ஓட்டியதோர் சுவாசத்தா லனற் புடைக்கும்
உதடுவாய் வெடித்துப்புண் ணாகும் நெஞ்ச
மாட்டிலருந் தேம்பியழும் மயக்கங் கொள்ளும்
மஞ்சளல்ல வெண்மைநிறப் பேதியாகும்
வாட்டமப்போ அலறியழுந் துயரம் மெத்த
வருமிதற்கு நீர்மாந்த மென்று சொல்லே. (14)

மாக்தமிது கண்டவுடன் குமரி வேர்ச்சார்
வாங்கிநல் லெண்ணெயுஞ்சே ருள்ளிச் சாறும்
மேந்தறுகம் புல்துத்தி வேரை யாவும்
மெழுகதுபோல ரைத்துமொரு பலம தாக
வாய்ந்ததொரு பலவெந்த யத்தை நன்றாய்
வறுத்தரைத்து ஏகமதாய்க் கலக்கிக் கொண்டு
சாந்தமுறத் தியெரித்து மெழுகதாக்கிச்
சாதகமாய்ப் புண்வாய்க்குத் தாக்கிடாயே. (15)

தாக்கிடுவாய் முன்போல மூன்று நாள்தான்
தடவிவிடு புண்சூடு யாவுந் தீரும்
தூக்கிடுமே மலபேதி பச்சென் றேகீழ்
தோய்ந்ததயிர் போல் நிறமாய் வயிறு முப்பித்
தூக்கமிகும் பாலருந்திக கக்குங் காயுஞ்
சொருகிவிழி கைகால்கள் சில்லிட்டேறும்
ஏக்கமுறுந் தலைபிரட்டார் குணங்கள் கண்டால்
இவலான பிரகணையென் றியம்பு வாயே (16)

இயம்பாரைக் கணைப்பூடு சனகி வெள்ளை
இலவைதும்பை முருங்கைவேர் முசுமு சுக்கை
சுயமாக இலைகளெல்லாஞ் சாருவாங்கிச்
சூட்டதில்நல் லெண்ணெய்ச்சார் சமம தாக
வயல் முள்ளிக் கரியவனி ருஷிமூ லந்தான்
வகைகழஞ்சு சேர்த்திட்டுத் தீயை மூட்டி
நயம்பாகு முன்போல்கா சிடைசேர்த் தீய
நாள்மூன்றிற் பிரகணையும் நாடா தோடும். (17)

ஓமெய்யா வாயுவென்ற நாற்பத் தெட்டும்
உடலெங்குங் கனகனத்துச் சூடுண்டாகும்
நாமெய்யா கைகளெலாங் குலுக்கிக் கொட்டும்
நரம்புளையும் மூட்டுவிடும் நடுங்குந் தேகம்
தேடதென்பேர் சொல்லிலுள மாந்தை யாகும்
தேகமதில் வாதநீர் கலந்து கொண்டு
பாடுபடும் வாய்குழறும் உடம்பு காயும்
பாரிற்சிலோ மூதச்சன்னி கொடுமை பாரே. (18)

கொடுமையென்று சொல்லாதே வலிப்புக் கெல்லாம்
கோதைவிந்து நாருண்டின வேம்பின் பட்டை
கெடுமையிலாக் கார்த்திகையின் கிழங்கு முள்ளி
கெருடன் சிவமூலியொடு தவசிவேரும்
படுமையடர் கோழியண்டம் ரூசராண் டத்தின்
பதமான தைலமதைப் பலமே தூக்கு
கடுமையுள்ள குமுட்டிக்காய் சாறு நாழி
கனவேம்பின் கியாழமது நாழி கூட்டே. (19)

கூட்டிவெள்ளைச் சாரணைவேர் கொத்தான் வேரும்
கோதையரே வேருவகை யிரண்டி னோடு
வீட்டினு மணக்கெண்ணெய் நாழி சேர்த்து
விதயேலஞ் சீரகமுங் கடுகு ரோணி
வாட்டியிதைப் பலமிரண்டு பொடித்துப் போட்டுத்
வாகாகத் தனலெரித்து மெழுக தாக்கித்
காட்டுகோ சிடையிதனை வலியைங் துக்கும்
கனமான பத்தியகாள் நன்றே முற்றே. (20)

பால வாகடம் ௨௧

முற்றிற்று.

உ

பரமபதி துணை.

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

பூரணம் உ௱௫-க்கு

# சூஸ்திரச்சுருக்கம் உக.

கேளப்பா நவலோக மாரணந்தான்
கெடியான வயித்தியமா மிருநூற்றஞ்சில்
தேளப்பா கொட்டுதல்போ லிந்தச்சூஸ்த்ரம்
செப்புவே னிரும்புக்குத் தாரங்கெந்தி
வாளப்பா வெள்ளியிரு வங்கத்துக்கு
மால்தேவி வெடியுப்பு வெள்ளைச்சினம்
சூளப்பா செம்புக்குக் கெந்திவங்கம்
சூதமொடு துருசுவெள்ளை சாரமூன்றே (1)

ஏகமூலிகைக்குப் பூதமருந்து.

சாரமது நாகமதைத் தாக்கிக்கொல்லும்
சதாசிவமாந் தங்கமது கண்டால்நீறும்
காரமொடு அப்ரேகம் நிமிளைசாகும்
கண்டபடி பித்தளையைக் காட்டிக்கொல்லும்
பாரமடா வேகமூ லிகைக்குக் கேளு
பாஷாணம் நவச்சாரம் சினம் பூரம்
வீரமொடு புளுகுவெடி யுப்புக்காரம்
விதமான சூதமொடு பூநீர்கெந்தி. (2)

கெந்தியுடன் வகைவிதஞ் சமனாய்ச்சேர்த்து
கெடியான பழச்சாற்றி லாட்டிமைபோல்
பந்திவிட்டுச் செய்யாதே மருந்தைப்பூசி
பச்சிலையில் நீரும்மூன் பகர்ந்ததெல்லாம்
முந்தியிந்தக் குருசெய்தா லுறுதியாகும்
முறையான வைத்தியநூ லொன்றும்பொய்யா
வந்தியென்ற துருசுநீர் கூடச்சேரு
வாசான வயித்தியத்துக் காணிதானே. (3)

சவுரிவேர்த்தைலம்.

தாமென்ற தைலத்தின் மருந்தையெல்லாம்
சாற்றுவேன் சவுரிவேர்த் தைலத்துக்கு
காமென்ற மரமஞ்சள் விடையத்தோடு
கருஞ்சீரம் பலமரை தா னரைத்துக்கொண்டு
ஊமென்ற வெண்ணெய்யிலே கூடப்போடு
ஓகோகோ வில்லவேர்த் தைலத்துக்கு
நாமென்ற கடுக்காய் கஸ்தூரி மஞ்சள்
நலமான ஏலஞ்சந் தனமுமாமே (4)

ஆமப்பா வகைக்குக்காற் பலமரைத்து
அதைக்காய்ச்சு வேங்கையுட தைலத்துக்கு
காமப்பா மிளகுள்ளி யோடே நீயும்
நற்சீர விலாமிச்சம் வேருங்கூட
வாமப்பா வகைக்குபல மரைத்துப்போடு
வகையான வெட்டிவேர்த் தைலத்துக்குத்
காமப்பா கருஞ்சீரந் தேவதாரம்
கடுக்காய் அதிமதூரம் பலந்தான்போடே. (5)

வேம்புத்தைலத்துக்குப் போடு மருந்து.

போடப்பா வேம்பினுட தைலத்துக்குப்
புகழான ஏலமொடு யிலந்தைவேரும்
நாடப்பா பழம்பாசி அக்ராகாரம்
நலமாக வகைக்குப்பல மரைத்துப்போடு
பூடப்பா குறுந்தொட்டித் தைலத்துக்கு
பொங்கமுள்ள சுக்குலொன்று ஏலமொன்று
ஆடப்பா வகைக்குபல மரைத்துப்போடு
ஆகவே பதமாகக் காய்ச்சுகாய்ச்சே. (6)

காய்ச்சடா கொடிவேலித் தைலத்துக்கு
காணடா கருஞ்சீரம் நற்சீரந்தான்
தாச்சடா தாளிசப்பத் திரியுங்கூடத்
தாணிக்காய் வகைக்குப்பல மரைத்துப்போடு
வீச்சடா சீரகத்தின் தைலத்துக்கு
மிளகுகார் கோலரிசி நற்கற்கண்டு
ஆச்சடா கருவேம்பி னிலையின் தண்டு
அவைவகைக்குப் பலவித மரைத்துப்போடே (7)

அரைத்துமே சூரிவேர்த் தைலத்துக்கு
அப்பனே வேம்பினுட பிசினுஞ் சுக்கு
குரைத்துமே போகாமற் காடிகூட்டிக்
குணமாகத் தானரைத்துப் போடுபோடு
உரைத்துமே ஆச்சுசிவின் பிசினுங்கூட
ஓகோகோ வகைக்குப்பல மரைதான்போட்டு
நிரைத்துமே இத்தைலம் பாகமாக
நேர்மையுடன் றூனிருக்கும் முடித்துப்போடே (8)

போடப்பா கீழ்நெல்லித்தைலத்துக்குப்
போடுவேர்ப் பூமிச்சர்க் கரையுங்கூட
வேடப்பா பலமொன்று அரைத்துச்சேர்த்து
வேம்பினுட பிசினோடு கடுக்காய் கூடக்
காடப்பா பலமரைத்து மூன்றுங் கூட்டிக்
காடிவிட்டுத் தானரைத்துக் கலக்கியேதான்
நாடப்பாதைலமதைச் செய்து கொண்டு
நலமான சட்டிதனி லூற்றிப்போடே. (9)

போடப்பா சங்கவேர்த் தைலத்துக்குப்
புகழ் கருஞ்சீ ரகமேலம் மிளகினோடு
நாடப்பா மாச்சக்காய் வகைவகைக்கு
நவிலுமோர்பல விதம் நிறுத்துக்கொண்டு
பாடப்பா எண்ணெயிலே அரைத்துப்போடு
பதமாகப் பருவமுடன் காய்ச்சியேதான்
கூடப்பா சட்டிதனி விருத்துக் கொண்டு
கூடும்வரை காச்சலற ஆறவையே. (10)

காய்ச்சப்பா அமுக்கிராவேர்த் தையிலத்துக்கு
காடியுடன் பழச்சாறும் நொச்சிச்சாறும்
மேச்சப்பா எருக்கின்பூச் சாறுங்கூட
மேன்மையுட னூட்டியே வகைக்குத்தானும்
வாச்சப்பா ஒன்றுக்குக் கால்ப்படிசார்
வகையாகக் கிண்டியே கூட்டிக்காய்ச்சி
மாச்சப்பா தைலத்தின் பாகந்தன்னை
மற்றவர்க்குக் கிண்டுமுறை செப்பிடாதே. (11)

இண்டப்பா இஞ்சியுட தைலத்துக்குக்
கேள் நொச்சிச்சாறுடனே பசுவின்பாலும்
கண்டப்பா வகைக்கு அரைப் படியாய்விட்டுக்
கசடில்லா யெண்ணெயுடன் காய்ச்சிக்கொள்ளு
ஆண்டருக்குந் தெரியாது இந்தப்பாகம்
அப்பனே வெளியாகச் சொல்லிவிட்டேன்
கண்டுகொண்ட பேர்களுக்கு கிட்டுங்கிட்டும்
கணக்கறியா னித்தைலங் காய்ச்சுவானே. (12)

காச்சப்பா செம்முள்ளித் தைலத்துக்கு
கண்டகருஞ் சிரகங்கற் றாளைவேரும்
வாச்சப்பா கார்கோல அரிசிகூட
வகைக்கு அரைப்பலமளாத்துக் காய்ச்சிப்பாரு
நீச்சப்பா தைலத்தின் பாகந்தானும்
நேரான மெழுகுபதந் தெரிந்துகொண்டு
பாச்சப்பா பாண்டத்தில் வடிதான்கட்டிப்
பண்புடனே மாயவலை தன்னைத்தாண்டே (13)

தாண்டவே யிருவேலித் தைலக்துக்குத்
தாளிச்சார் பழச்சாறும் கையான்சாறும்
தீண்டவே வகைக்குக்காற் படிதான்சேர்த்துத்
திறமாய் நல்லெண்ணெய்யதிற் கலந்துகொண்டு
வேண்டியதோர் தீயதனைச் சிறுகெரித்து
மெழுகுபதங்கண்டறிந்து தைலந்தன்னை
ஆண்டவனைத் தோத்தரித்து இறக்கிவைத்து
அப்பனே காய்ச்சல்தனை ஆறவையே (14)

காச்சப்பா கற்கரிப்பான் தைலத்துக்கு
கற்றாளஞ் சாறுநெல்லிக்காயின்சாறு
நீச்சய்பா வகைக்குக் காற் படியெடுத்து
நீட்டியகஸ் தூரிமஞ்சள ரைப்பலந்தான்
ஏச்சப்பா சாதிக்கா யரைத்துப்போட்டு
எண்ணெயுடன் தான்கரைத்து வைத்துக்கொண்டு
வாச்சப்பா அடுப்பதனி லேற்றிநன்றாய்
வகையுடனே காய்ச்சிபதை யிறக்கிவையே (15)

காய்ச்சப்பா அகிற்கட்டைத் தைலத்துக்குக்
கனமான அதிமதுரங் தாணிக்காயும்
வீச்சப்பா வகைக்குபல மரைத்துப்போடு
வீரான அறுகம்வேர்த் தைலத்துக்கு
கூச்சப்பா கோரையுட கிழங்குதானும்
கூரான அமுக்கரா கூடக்கூட்டி
வாச்சப்பா பூமிசர்க் கரைக்கிழங்கு
வகைக்குக்காற் பலமாககிறைநிறுத்தே (19)

நிறுத்துநீ கல்வத்தி லாட்டிக்கொண்டு
நேராக வெண்ணையிலே அரைத்துப்போடு
சிறுத்துநீ போட்டிடுவா யப்பாகேளு
திறமான கொடுப்பையுட தைலத்துக்கு
மறுத்து கருஞ்சீரகமுங் கோஷ்டங்கூட
மதுராமுடன் செங்கழுநீர் ஆவின்பாலும்
உறுத்துமே வகைக்குபல மரைத்துப்போடு
உத்தமனே சென்னகரைப் பட்டைக்குக்கேள். (17)

கேளப்பா வேப்பெண்ணெய் படிதானென்று
கெடிவசம்பு வெள்ளுள்ளி பலந்தானென்று
சூளப்பா வெள்ளைவேர் பலந்தானென்று
சுருளமே கூட்டி நன்று யரைத்தெடுத்து
காளப்பா வெண்ணெயிலே சேர்த்துக்கொண்டு
நலம்பெறவே பதமாய்ப் பாண்டத்திலூற்றி
வாளப்பா அடுப்புதனிலேற்றிநீயும்
மைந்தனே சிறுதீயா லெரித்துக்காய்ச்சே. (18)

காச்சென்ன அபினியுட தைலத்துக்குக்
கண்மணியே சங்கிலைகற் றுளைரெண்டும்
பேச்சென்ன வகைக்குக்காற் படிவீதந்தான்
பெலமான தைலத்திவிட்டு மேதான்
காச்சென்ன யிருப்பவலின் தைலத்துக்கு
கறிமஞ்சள் கஸ்தூரி மஞ்சளாகும்
வாச்சதென்ன அடுப்பேற்றிச் சிறுதீயாலே
மைந்தனே மெழுகுபதத்துடனே தானும் (19)

மஞ்சளுடனிருவகையும் பலந்தான் கூட்டி
 மாண்புடனே அரைத்தெண்ணெய் யதனிற் சேர்த்துத்
தஞ்சமுட னெண்ணெய்தனைக் காய்ச்சி மூழ்கச்
 சகலபிணி தீர்ந்திடுவ தல்லால்வேறே
வஞ்சியரி னாசைதனைத் தள்ளவேனும்
 மகத்தான பெரியோரின் முறைமைத்தானே
எஞ்சலுடன் செய்துமவர் பிழைத்தாரப்பா
 என்மகனே நாமறிந்த விதந்தான்பாரே. (20)

நாமப்பா பற்பமுதல் தைலப்போக்கை
 நன்றாகக்கருக்கடையிற் பாகஞ்சொன்னேன்
தாமப்பா பூரணந்தா இருநூற்றஞ்சில்
 தவறாமற் செய்தாக்கா விதற்கிடாமோ
வாமப்பா சுருக்கமதை தெரிந்தோன்றானே
 வைத்தியத்தில் தேர்ச்சியென்று மதித்துக்கொள்ளே
நாமப்பா வெளியாகச் சொன்னேன்பாரு
 நற்சுருக்க மிருபத்து ஒன்றுமுற்றே. (21)

வேண்பா.

வங்கம்செம் பொன்னுக்காம் மாச்சியம் வெள்ளிக்காம்
சங்கும்லிங் கங்க ளிருப்புக்காம்—தங்கத்தைத்
தாரமே கொன்றுவிடும் தள்ளாத போகமதாம்
சேரும்செம் புக்குகெந்தி தேர்

அகஸ்தியர் வைத்திய சூஸ்திரச்சுருக்கம்

முற்றிற்று

பெரியகுளம் தென்கரை, கோபாலய்யர் குமாரர் வைத்தியம் திருவேங்கடராமானுஜஅய்யர் அவர்களிடமிருந்து வாங்கிய ஓலைப்பேட் டுப்பிரதியின்படி இந்த வைத்திய சாஸ்திரம் அச்சிடலானது.

உ

பரமபதி துணை.

## அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# திருமந்திரவிளக்கம் உயஉ.

காப்பு

கண்ணான உச்சிவெளி தாண்டி நின்று
 கணபதியு முமையவளு மூர்த்தியாகி
விண்ணொளியா மம்பாலும் அவ்வும் உவ்வும்
 விதித்தபர மொருவருக்கு மெட்டா தப்பா
பண்ணான உன்னுயிர்தான் சிவமே யாச்சு
 பாற்கடலிற் பள்ளி கொண்டான் விண்டுதானும்
கண்ணான கணபதிக்குங் காப்பதாச்சு
 கலந்துருகி யாடுதற்குப் பாடினேனே.

பாடினேன் தந்திரமந் திரமே கூடப்
 பரிபாஷை நாமமெல்லாம் வெளியதாக
ஊடினேன் திதிராசி நாளுஞ் சொன்னேன்
 உற்பனமாம் வேளையுட உறவுஞ் சொன்னேன்
நாடினேன் யீதெல்லாஞ் சத்தி மார்க்கம்
 நலம்பெரிய சிவமார்க்க விதியைச் சொல்வேன்
தேடினேன் அண்டபகி ரண்டத் தப்பால்
 சிதம்பரவா காயமதை பெதிரேகாணே (1)

எதிரில்லா அஞ்செழுத்தும் அஞ்சுமுக மாகி
 யேகமாய் ஒருநூறு மிருபத்தைந்தாய்
எதிரில்லா விஞ்சைகலை ஞான மாகி
 யிதமகித மிரண்டுக்கும் முன்னே நின்று
எதிரில்லா துதிப்பொடுக்கம் யேழுமாகி
 எதுவுமாய் வெவ்வேரு மியல்பு மாகி
எதிரில்லா அஞ்செழுத்தின் மகிமை தேறி
 இடைமாறி யைந்துமைந்தா யிருபத் தஞ்சே (2)

அஞ்சுமுகம் ஒவ்வொன்றுக் கிருபத் தஞ்சும்
அறுபத்து நான்கு சித்தும ஆடி நிற்கும்
பஞ்சமின்றி நிறைந்துளபூ ரணத்திற் சேர்க்கும்
பாராளும் வாளுளும் ஆறுதலம் பாயும்
துஞ்சாதொவ் வொருநாளும் வளர்ந்து தோன்றும்
சுத்தருக்கே யிந்தமுறை தொடர்ச்சியாகும்
பிஞ்சாகுங் காயாகுங் கனியு மாகும்
பேசரிய பலகோடி யண்ட மாமே (3)

ஆமப்பா அக்கரங்க ளஞ்சும் பின்னே
ஐம்பத்தோ ரக்கரமாய் விரிந்து நிற்கும்
ஓமப்பா பூவொன்றாய் வழுத்த வென்றால்
உறையேது நிறையேது உரைப்பா ராரே
வேமப்பா கருவுடனே சேர்ந்து தானால்
வேறேது தூரேது வெல்வா ராரே
நாமப்பா அறிந்துமட்டுஞ் சொல்வோங் கேளு
நாதக்கள் தவறாமற் பார்த்திட் டாரே. (4)

பார்த்திடவே தற்புருஷம் இருபத் தஞ்சு
பாடுகிறேன் நமசிவய அகோரமாகும்
சேர்த்திடவே ஜெபிக்கவுச்சா டனமதாகும்
சிவமான சவுமியத்தை செபிக்கக் கேளு
கீர்த்திடவே நங்சிவய நமவென் றாலோ
காதலித்த புத்திரரைக் கொடுக்குங் காணும்
வர்த்திடவே அங்சிவய நமவென் றாக்கால்
இயல்பாகத் தேகநோய் தீருங்காணே (5)

காணப்பா வங்சிவ நமவென் றாக்கால்
கடுகவே யோக சித்தி காணலாகும்
பூணப்பா அங்சிவய நமவென் றாலோ
பொன்றாது தேகமப்பா ஆயுள் விர்த்தி
ஊளப்பா ஓம்அங்சி வாய மென்றால்
ஒழியாத பூதங்க ளோடும் பாரு
தோணப்பா கிலிநமசி வாய மென்றால்
தொல்லுலகி லுள்ளோர்கள் வசியமாமே. (6)

ஆமடா மாயவச் சாத்தைக் கேளு
அப்பனே ஹ்ரீ நமசிவாயமென்றால்
காமடா எதைத்தானுங் கேட்டா னுந்தான்
நயமாகத் தருமப்பா நவிலக் கேளு
தாமடா ஐயும்நம சிவாயஞ் சொல்லில்
தயவாகப் புத்தி வித்தை யிரண்டு நல்கும்
போமடா வமுதமெனு மட்ச ரந்தான்
புகழான கிலியு நம சிவயமென்னே. (6)

நமசிவய மென்னிலது அமுத மாகும்
நாடிநீ நினைத்ததெல்லாம் நல்கு முண்மை
நமசிவய உங்நமசி வாய மென்றால்
நாட்டிலுள்ள வியாதிகளுஞ் சாமூக்தீரும்
நமசிவய சிங்வங் நம சிவய மென்னில்
நாகவிட மறுபத்து நாலுந் தீரும்
நமசிவய வங்கென்னிற் செயம தாகும்
நல்லதொரு பூமிகளை நல்கும் பாரே. (8)

பாரப்பா சவ்வுஞ்சி வாய மென்றால்
பரிவாகச் சந்தான முண்டாம் பாரு
ஆரப்பா காண்பவர்கள் சிங்றீங் கென்றால்
அப்பனே வேதாந்த ஞானி யாவார்
ஊரப்பா உங்றீம்சி வயநம வென்றால்
உரையுணர்வுக் கெட்டாத மோட்சம் நல்கும்
போமப்பா அங்கக் சி வாயநம வென்னிற்
புகழ்தேகச் சித்தியுண்டாம் புகழ்ந்து காணே. (9)

காணவே அவ்வுஞ் சிவாய நம வென்றால்
கயிலைவாழ் தேசிகனைக் காண லாகும்
பூணவே ஓம் நமசி வாயமென்றால்
புகழ்மிகுத்த காலனையும் வெல்ல லாகும்
தோணவே லங்ஸ்ரீறியுங் நமசிவய மென்றால்
தொல்லுலகிற் றனியங்கள் விளைவுண் டாகும்
காணவே ஓம்நமசி வாய மென்றால்
நலமான வாணிபங்கள் பலிக்குந்தானே. (10)

தானென்ற ஓம் ஆங் உங் சிவயநம வென்றால்
சாத்வீக குணமுண்டாம் வாழ்வு மேலாம்
தானென்ற ஓம் ஸ்ரீதீயும் சிவய நமவென்றால்
தனவான்க ளெல்லோரும் வசிய மாவார்
தானென்றஹ்ரூங்ஓம் நமசி வாயமென் னில்
தப்பாமற் சிரரோகம் மீளும்பாரு
தானென்ற ஓங் அங்சிவாயநம வென்றால்
தணலிலே பிரவேசம் பண்ண லாமே. (11)

ஆமப்பா தற்புருட மிருபத்தைந்தும்
அறைந்திட்டேன் அகோரத்தைச் சொல்லக் கேளு
வேமப்பா அகோரமென்றாலதனை யாரும்
விள்ளரிது வுத்தமர்க்கு விள்ளும் விள்ளும்
காமப்பா துங் நமசி வாய வென்றால்
கயமான வித்துவே டணமுமாகும்
போமப்பா ஓங் கங் சி வய வென்றால்
புகழ்மிகுந்த சத்தியருளுண்டாம் பாரே. (12)

உண்டாகும் ஓம் சிங் சி வாயநம வென்றால்
உயர்வரிய தம்பனங்கள் சித்தி யாகும்
பண்டாகும் ஓங் பங் சிவாயநம வென்றால்
பார்பிரம வச்சரத்தைப் பகரலாகும்
தண்டாகும் ஓங் யங் சிவாய நம வென்னில்
சங்கடங்கள் யாவையுமே தீர்க்கும்பாரு
வண்டாகும் ஓம் மாங் நமசிவாய மென்றால்
வருணஜெபம் செல்வமிக வளருந் தானே. (13)

வளருமடா ஓங் மங் சிவாயநம வென்றால்
வாருதிக ளேழையுமே வற்றச் செய்யும்
தளருமடா கெங் ஓம் நம சிவாய மென்றால்
தடையறவே யாவருந்தான் வசியமாவார்
களருமடா ஓங் மங் யங் சிவாய மென்னில்
கடுகவே விஷங்களெல்லாம் பறந்து போகும்
பளருமடா பிரமபஞ் சாட்ச ரத்தாற்
பாப்புடைய சமுத்திரத்தைக் கடக்கலாமே, (14)

கடக்கலாம் வானினுள்ள புதுமை யெல்லாம்
கற்றவர்க்குத் தெரியுமது மற்றோர் காணார்
அடக்கலாம் அங் ரங் ஓம் சிவாய மென்றால்
அப்பா சங் கிராமவட் சரமு மாகும்
நடக்கலாம் ஓம் அங் சிங் சிவாயநம வென்னில்
நற்றேவ கன்னியரைப் பார்க்க லாகும்
தொடக்கலாம் ஓங் வங் சிங் சிவாயநம வென்னில்
தொடர்ந்துவரும் முக்குணத்தை வெல்ல லாமே. (15)

வெல்லலாம் ஹ்ரீம் நமசி வாய மென்றால்
விஷம்போகுங் காணாத காக்ஷி யுண்டாம்
அல்லல்போம் ஐயுஞ்சி வாயநம வென்றால்
அறு சாஸ்திர நல்வேத மறிய லாகும்
சொல்லலாம் வங் சிங் ஓம் சிவாயா வென்னில்
தேவர்களின் தரிசிணையைக் காணலாகும்
வெல்லலாம் சங் சிவய நமவென் றக்கால்
விடத்தாலே மாண்டசவ மெழுப்பலாமே (16)

எழுப்பவே நினைத்ததெல்லாம் உருவாய் வந்து
என்மகனே முன்னிற்குந் திறமை கேளு
எழுப்பவே ஓம் துங்சி வாயநம வென்றால்
இயல்பான முத்தொழிலுஞ் செய்ய லாகும்
எழுப்பவே ஸ்ரீலம் ஹ்ரீம் ஓம் நமசி வாய மென்ன
இடம்பெரிய பூமிகளைக் கொடுக்குங்கண்டாய்
எழுப்பவே மரங்களைத்தான் வளையச்சொன்னால்
இதமாக வளையுங்காய் பறிக்கக் கேளே. (17)

கேளப்பா சிங் நமசி வாய மென்றால்
கிளர்ந்து நின்ற தென்னமரம் வளையுமப்பா
காளப்பா மங் மங் கென் றுருகா லோதில்
நமனுமே கிட்ட வந்து அணுகா னப்பா
வாளப்பா வங் சிவய நமவென் றாலோ
மழைதனிலே நனையாமற் சொல்லலாகும்
ஆளப்பா மழைநிற்க வேண்டு மென்றால்
ஆச்சரியம் சிவாய ஓம் ஸ்ரீயும் சொல்லே. (18)

சொல்லடா கிலியுங்சி வாய வென்று
சூட்டவே ஆறுதனில் வெள்ள மோடும்
சொல்லடா ஓம் சங் சிவ் வுங் சிவயவென்னில்
சிறப்பாக ஆழிதனி லோட லாகும்
நல்லடா நிறுத்தினால் நிற்கும் பின்னே
நலமான தண்ணீரில் நடக்கக் கேளு
வெல்லடா சங் யவ் சி மந வென்றோதில்
வெளியான மீது பஞ்சாட் சரந்தா னுச்சே. (19)

ஆச்சென்று மங் நங் சிங் சிவய வென்றால்
அப்பனே பிசாசுபேய் சரணஞ் செய்யும்
நீச்சென்று நிலைத்துப்பார் அகோரஞ் சொன்னோம்
நேரான வாமத்தை நிகழ்த்தக்கேளு
பேச்சென்று ஓம் புரோம் சிவாயமென்று
பேசிடவே அமுதமது பொசிக்க லாகும்
மூச்சென்று ஓம் ஐயும் சிவாயவென்றால்
மோனமுறும் முனிவர்களைக் காணலாமே. (20)

காணவே ஐயும் ஸ்ரீ சிவாய வென்றால்
ககனத்தில்விமா னம்வந்து கண்முன் தோன்றும்
பாணவே உங் தெங் ஓம் சிவாய வென்னில்
பஞ்சதரு வந்துநிதம் போற்றி நிற்கும்
தோணவே கங் உங் கிங் நசி ஓமென்றால்
சொற்காம தேனுவந்து சூழ லாகும்
ஊணவே சங்சிவய நம வென்றாக்கால்
உயர்ந்ததொரு தேவர்சபை தோணு மப்பா. (21)

சபை காணும் மங்சிவ ஓம் நமவென் றாக்கால்
தாயிச்சா சத்திவந்து தான்முன் னிற்பாள்
அபையஸ்தங் கொடுத்தென்றுங் காத்துக்கொள் வாள்
ஆச்சரியம் வாமமென்றால் தீர்த்த மாகும்
நபையுற்ற ஸ்ரீயுஞ்சி வாய சிவா வென்று சொல்லில்
நல்லதொரு விஷ்ணுவின்றன் மாய்கை தோணும்
கபையுற்ற சங் ஸ்ரீயும் அங்குசிவாயநம ஓதில்
கைலைவ்ளர் நாதனைநீ காண்பாய் முற்றே. (22)

திருமந்திர விளக்கம் உஉ முற்றிற்று

பரமபதி துணை

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய.

# நயன ஒட்டு வித்தை சூஸ்திரம் ௨௫.

ஏகபர வெளியாகி நாத மாகி
யெழுத்த சுழி முனையாகி யெங்கு மாகி
பாகமுறு மெல்லைதனி லாடி நின்று
பண்பு கொளும் ஊமையுரு வாகி யேதான்
நாகமென்ற சிரசஞ்சு கோண மாகி
நாட்டமென்ற ஓங்கார கம்பத் துச்சி
யோகமென்றுந் தவமறிந்து விந்தைக் காட்டும்
ஓங்காரக் கணபதியின் மூலங்காப்பே. (1)

காப்பென்ற சுழிநாடி வட்ட மீதிற்
கற்பூர திபம்போற் கதிர்தான் வீசும்
ஆப்பென்ற வழியறிந்து குறியைக் கண்டு
அண்ட பிண்டம் நடுவான மூலத் துள்ளே
வாப்பென்று வைத்திடுவாய் மனமே வாயு
வாசியென்ற ஊமையுட மகேந்திர ஜாலம்
ஏப்பென்ற புருவ நடு மூலத் துள்ளே
எம்பிரா னிருந்த சுழி பூட்டங் கேளே (2)

பூட்டக்கேள் குன்மவகை யெட்டுந் தீரப்
புகலுகிறேன் கன்மாந்திர வினைகள் தீர
நாட்டக்கேள் நாற்கோணம் வயிற்றி லொட்டு
நாற்பதுநாள் வைத்தேநீ நசிலும் என்று
மூட்டக்கேள் முகமதிலே பிறைநீ ஒட்டு
முனைகளிலே அம்மெனவே நாட்டு நாட்டு
ஆட்டக்கேள் நாற்பதுநா ளோதும் போது
அற்புதடா குன்மவலி யனைத்தும் பாரே. (3)

பாரடா தலையிடிக்கிந் தலைக் குத்துக்கும்
பாங்கான ஒருதலைநோய் கபால நோய்க்கும்
நேரடா அறுகோணஞ் சிரசி லொட்டு
நினைவாகச் சடாக்ஷரத்தி னெழுத்தை நாட்டு
ஏரடா வாமதே வாயா ஓம் ஓம்
என்று ஆயிரத் தெட்டு உருத்தா னோது
போரடா வென்றுதலை நோயெல்லாந்தான்
பொடிப்பொடியாய் நீருகப் போகுந்தானே. (4)

தானென்ற கண்ணில்வரும் வியாதிக் கெல்லாம்
தனியான வட்டமிட்டுப் பிறையுள் ளிட்டு
வானென்ற ஙகாரமிட்டு யிதழ்நா விட்டு
மகார மிட்டே கட்டிடுஓங் காரங் கொண்டு
கானென்ற நேத்ராயா ருத்ர தேவா
கருணையொளி வேஎன்று உருத்தான் நூறு
ஏனென்ற நாற்பதுநாள் ஜெபிக்க நீதான்
ஏகிடுமே நோயாளி சத்தம் பண்ணே. (5)

பண்ணவே செவியில்வரும் வியாதிக் கெல்லாம்
பாரெழுதிச் சதாசிவத்தைச் செபிக்க நீகேள்
கண்ணிலே அங் சதா சிவாயா வென்று
கனமாக லெட்சவுரு வேறச் சித்தி
நின்றதொரு நாசிதனி லந்த நோய்க்கு
நிருவாணி சிவநமலும் பிரிதீ யென்று
பண்ணவே நூறுசெய் மண்ட லந்தான்
பறக்குமடா நாசியின் நோய் வாங்கிப் போமே. (6)

வாங்கிப்போம் சென்னியுச்சி பிளவை யாதல்
மண்டையின்நோய் தலைவிரண விக்கத்துக்குத்
தாங்கித்தான் தலைதொட்டே வட்ட மிட்டுச்
சருவாணி சடாயாஓம் ஆம்ஆம் என்று
ஓங்கித்தான் கைநொடிப்பாய் உயரப் பார்த்து
ஓடிடவே யுள்ளபிணி யோடிப் போச்சு
நீங்கத்தான் கன்னேவு கன்னச் சூலை
நிதியளித்த கன்னமதிற் சிலந்தி தானே (7)

சிலந்திக்கு மகாரமிட்டு மசியென் றோது
தீருமடா லெட்சமுரு வேற்றும் போது
நலம்புகழுங் கண்டத்தின் பிணிநோய்க் கெல்லாம்
நசிநசியென் றோதவுரு லெட்சம் போடு
மலர்ந்திடபஞ் சாட்சரங்கொண் டர்ச்சிப் பாய்நீ
மகத்தான குருவருளாற் பிணிகள் போகும்
பலன்றருமே நிச்சயமாய் மனதி லெண்ணும்
பாரப்பா சாயமெல்லாம் பறக்கும் பாரே. (8)

பறக்குமடா மார்பாணி நெஞ்சி னாணி
பதைப்பாணி கழுத்தாணி கரத்தி னாணி
சிறக்குமடா யிந்தவகை நோய் களுக்குச்
செப்பிடுவாய் கீழ்க்கண்ட மந்திரத்தைத்
திறக்குமடா லெட்சவுரு வேறி லப்பா
திரமாய்ஸ்ரீ றீங்காரம் கூட்டிச் சொல்லு
அறுக்குமடா ஆணிகளை யறுத்துத் தள்ளும்
அப்பனே உந்தியினின் றெழுத்து நோயே. (6)

நோயான உந்திபதிர் பிணிக ளெல்லாம்
நூதனமாய்ச்சொல்ல வில்லை மாந்திரீகம்
வாயாலே சொன்னாலும் பாவம் பாவம்
மாரணசம் மாரணாய மசிநோ யென்று
தூயனாய்ச் சொல்பவனே பிணிகள் தீர்ப்பான்
தூம் தூம் தூம் சூ சூ சூ சூ சூ வென்று
சாயாமற் செபித்திடவே உந்தி நோய்கள்
தானொழியும் லெட்சமுறச் செபித்துத் தாக்கே (10)

தாக்குவாய் வில்லாணி புரை தன்னோடு
தடிச்சிலந்தி பருப்படுவன் மூலநோய்க்கு
வாக்கிலே படபடென்று லட்சஞ் சேவி
வரையறுத்துத் தள்ளிவிடும் வளமை கேளு
வீக்கமது வுருவேற்ற வாடும் வாடும்
வியாதியா யாவென்று ஏத்தி ஏத்தி
நோக்கிடுமுன் பறக்குமப் பாபிள்ளை யாணி
நொடிக்குள்ளே நோய்களெல்லா மோடிப் போமே. (11)

ஓடிப்போம் நம்முடைய யார்த்தி ரீகம்
உரைத்தோமென் னுயிரத்திற் சகலநோய்க்கும்
நாடிப்பார் வைத்தியர்க்கா யதனிற் கொஞ்சம்
நாம்தூண்டிக் காட்டிவிட்டோம் விபரமாக
வேடிக்கை வியாதிகட்டுச் சூட்டிப் பாரு
விளம்புமுன்னே பிணியறுக்கும் விநாயகர்க்குத்
தேடிப்போய் பலகாரம் படைநீயப்பா
தீருமடா நோய்களெலாந் தீருந்தானே. (12)

தீருமே முகங்கூப்பி வந்த நோய்க்குச்
செப்புகிறேன் மகேஸ்வரியைத் தியானஞ் செய்து
கூருமே லீ வீ வீ றீ றீ யென்று
கோளென்றும் வாராமற் செபி நீயப்பா
ஆருமே நாளெட்டில் வியாதி தீரும்
ஆக்கிரம வியாதிவகைக் கிதுவே வேணும்
சேருமே மந்திரமும் மருந்து மொன்றாய்ச்
செய்தாக்காற் பிணிக ளுண்டோ திறமாய்ச்சொல்லே (13)

சொல்லவையா கைச்சிலந்தி தோட் சிலந்தி
துயரமாய் புண்புடைத்தல் குழி ரணங்கள்
வல்லமையாய் வருநோய்கள் மாறிப்போகும்
மசி மசி வா வா வி வீ யா யா என்று
வெல்லவையா லட்சமுறு வேர வோது
விழித்தாரும் பார்த்திருக்க வீரபத்ரன்
வல்லமையாய் வருவதுவும் மற்ற தெய்வம்
வரவழைக்க மந்திரமு மிதுவே யாகும். (14)

இதுவிட்டு முழங்கைமணிக் கட்டின் மேலே
எழுந்த நோய் களுக்கெல்லா மின்னுங்கேளு
பதிவிட்டுப் போகுதற்கு சீ சவ் வென்று
படபடென்ன லெட்சவுரு வோப்பாரு
இதைவிட்டுக் கணபதியிதின் மூலங்கூட்டி
யேத்திடவே வியாதியறு மிதுவே சூட்சம்
பொது விட்டு வருபிணிக்கு இதுவே மந்திரம்
பூட்டியப்பா ரோயாமற் பூணு பூணே. (15)

பூணவேமுதுகில் வரும் வியாதிக் கெல்லாம்
புர புரபு சாரிபுரை யென்றே சேவி
காணவே தோளதின் மேற்பக்க நோய்க்கு
கங்கரி சங்கரி யெனவே வோது வோது
தோணவே பிடரிதனில் வருநோய்க் கெல்லாம்
துர்க்கை சே ரரிநமவோ மென்றே யோது
பேணவே கீழ்முதுகின் வியாதிக் கெல்லாம்
பிரணவமே துரி சுரியென் றேர்ந்து கூறே. (16)

கூறப்பா பின்முதுகு நடுத்தானத்திற்
குறியுடனே பிளவையது கூர்ந்துதித்தால்
ஆரப்பா அரி அரி சுவாகா வென்று
ஆயிரத்தெட் டுருவேறி பனுஷ்டிப் பாகப்
பேரப்பா பிரணவத்தை வளைத்து ஓட்டு
பேரரிய மாந்திரீக மிதுவே யப்பா
நீரப்பா வினையறுக்க அறுகோணத்தை
நிறுத்திடவே பிளவைநிர்த் தூளியாமே (17)

நிர்த்தூளியாஞ்சகுண நோய்கட் கெல்லாம்
நிஷ்பரமே நின்மலமே ஙா ஙா வென்று
சொற்றாலாய் யோதிடுவாய் உரு நூறப்பா
சுப்ரமண்யக்கிருபையினாற் றுலைந்து போகும்
காற்றாளாம் பவுத்திரத்தின் மூலத் துக்கு
கரிகரியென் றுறுதியெனக் கருதி நீயும்
நிர்த்தூளி நாளெட்டில் லெட்ச மோது
நிறுத்தியுடன் புண்ணாறும் மருந்தில் லாதே. (18

மருந்துப்புண் ணரையாப்பு ரெண்டு பக்கம்
வந்ததென்றால் அர அர றீ றீ றீ யென் று
இருந்துதான் நூற்றெட்டுச் சொல்லி யொட்ட
இளங்கோவைத் தண்டறுத்தாற் போலே வற்றும்
பொருந்துமே அண்டமதில் வந்த நோய்க்குப்
பூட்டிடு நீ மற மற ஈ றீ றீ யென்று
வருந்தியே ஆயிரத்தெட் டுருத்தா னோதை
வாங்குமே பொருமல்மந் திரத்தி னாலே. (19)

நாவினுட லிங்கத்தில் வந்த நோய்க்கு
நமையில்லாப் புத்து வகைச் சூலைக்கெல்லாம்
ஏதுகின்ற அணிசேர்ந்த பதிஒமென்று
ஏத்துவாய் உருமண்டலம் நூற்றெட்டு
கேலியென வெண்ணாதே சிகாரம் ஒட்டு
கேசரியாந் தியானமிருவேளை சொல்லு
போலியென ஓடிப்போம் சொன்னேனப்பா
பூரணமே அரைக்குங்கீழ் புகழு வேனே. (20)

புகலுவேன் துடைவாழை புருதி வீக்கம்
புரைசிலந்தி குழைச்சி யினுட் புண்களோடு
முகலுவேன் அஸ்திக்குள் கெண்டைக் காலுள்
முழங்காலிற் கணைக்காலிற் குதியின் காலிற்
பகருவேன் பாதசக்ரம் பிளவை சூலை
பரு படுவன் சிலந்திவகை எதுவானாலும்
நிகரரிய வீரபத்திரன் அனும மந்திரம்
நீயோது அனுமந்தா நசியென்றோதே. (21)

ஓதுவாய் ஓம்கமா அனும தேவா
உருமணியே நசியென்ன ஓமென்றோது
பாதுபுரி என்றவுடன் நோய்கள் யாவும்
பறந்திடுமே அனுமனுட வருளினாலே
யாதுவிதி பிணிக்கு மந்திரமிதுதானப்பா
யான் சொன்ன வியாதிகட்கு மாந்தி ரீகம்
யேது விதி சுத்திசெய்து மருந்தைப்பூட்டி
இந்ததிரு மந்திரத்தை யிறைஞ்சு வாயே. (22)

இறைஞ்சிடவே வாதத்தால் வந்த நோய்க்கு
இத்தருணம் பொங்கல் வைத்துத் தியான மோது
உறஞ்சிடவே பித்தத்தால் வந்த நோய்க்கு
உடையவர்க்கு மிந்திரர்க்கும் உற்ற பொங்கல்
விறைஞ்சிடவே சிலேற்பனத்தால் வந்த நோய்க்கு
மேதினியில் தெட்சணத்தை நோக்கிப் பொங்கல்
குறைந்திடவே குளிர்ச்சி செய்து மருந்தை யூட்டு
குணமாகுந் தீராத பிணிகள் போமே. (23)

நயண ஓட்வேித்தை உங முற்றிற்று.

உ

பரமபதி துணை.

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# வகாரச் சத்து உ௱௫௰.

பாரப்பா வூத்துமுறை வகையைக் கேளு
பக்குவமா யுருக்குமுறை தூறுத்தி யொன்று
சேரப்பா சத்துவகைத் துருத்தி நாலு
செயமான நீற்றினமோ ரெட்டு மைந்தாள்
தேரப்பா வர்ணவகை யுபசாரங்கள்
செய்மார்க்கங் குருமுன்னி லறிந்துகொண்டு
சேரப்பா குருமுடித்துச்சென்றூ ரித்து
சிவசிவா கேசரியைத் தினமும் நோக்கே. (1)

நோக்குறுமைப் பசிமுதலாய் மூன்று மாதம்
நுண்மையுட னுருக்கினத்துக் கால மாகும்
வாக்குறுதை முதலாக மூன்று மாதம்
மகத்தான செயநீரின் காலமாகும்
தாக்குறுசித் திரைமுதலாய் மூன்று மாதம்
சங்கையுடன் குருமுடிக்குங் கால மாகும்
ஆக்குறுநல் லாடிமுதல் மூன்று மாதம்
சுத்தமுடன் திராவகசெந் தூரஞ் செய்யே. (2)

செய்யப்பா நீற்றினத்தின் கருவைக் கேளு
சிவசிவா புழுகுரவி வீரம் பூரம்
மெய்யப்பா குருவண்டு சூதந் தாரம்
விதமாங் கார் முகிசவுக் காரம் யாவுஞ்
செய்யப்பா சற்குருவாமொன் பதினுமைந்தா
திருவான நவலோகம் நீறிப் போகும்
கைப்பாக முறையசக வறிந்தா யானுற்
கசடற்று வேத மூறை காணலாமே. (3)

காணவே வருக்கினத்துச் சரக்கைக் கேளு
    காரபஞ்சவ் வாதுவெடி சாரவுப்பு
பேணவே கண்டமால் தேவி வெள்ளை
    பிளமான சங்குடனு மணக்கங் குன்றி
தோணவே தேனுடனே புருவினெச்சம்
    தொகுத்தறிந்து கருமானங் கண்டா யானல்
ஊணவே நவலோக முருகிப் போகும்
    உத்தமனே கண்டறிந்தோ ரனேகங் காணே. (4)

காணவே நவலோக வுபசா ரங்கள்
    கடிதான பாஷாண வகைகட் கெல்லாம்
பேணவே செந்தூரஞ் செய்ய நல்ல
    பிரியமுறுஞ் சரக்குவகை சொல்லக் கேளு
தோணவே மனோசிலை கெந்திதாரம்
    சுத்தமுள்ள அப்ரேகங் கவுரி துத்தம்
பூணவே வெடியுப்பு யிதுவெல் லாந்தான்
    புத்தியுடன் செந்தூரக் குருவாம் பாரே. (5)

பாரப்பா வர்ணவகைச் சரக்கைக் கேளு.
    பரிவான தங்கமொடு நாதஞ் சூதம்
நேரப்பா நிமிளையொடு கெந்தி யுப்பு
    நேரறிந்து கைபாக முறையைப் பார்த்தால்
பேரப்பா யெடுத்ததொரு நவலோகந்தான்
    பிருவான வகாரவகைக் கிதுவே யாகும்
சாரப்பா சற்குருவின் பாதங் கண்டு
    சங்கையுடன் சௌமியசா கரத்தைப்பாரே. (6)

பாரடா சற்குருவின் கடாட்சத் தாலே
    பதிலாகக் காட்டியதோர் சூதந் தன்னில்
நேரடா காரீயஞ் சரியாய்க் கூட்டி
    நேர்மையுடன் நாலி லொன்று தங்கஞ் சேர்த்து
தீரடா கெந்தியுமே நாலி லொன்று
    செம்மையுடன் சூதமெட்டி லொன்ற தாகும்
சேரடா பொடியாக்கிக் குப்பிக் கேற்றி
    சிவசிவா வாலுகையின் மேலே யேற்றே. (7)

ஏற்றியே தீமூட்டி மைந்தா நீதான்
இன்பமுடன் பதம்பார்த்துச் செந்தூரித்து
போற்றியே நவலோகம் நூற்றுக் கொன்று
பூட்டடா பண்ணிரண்டு மாத்து மாகும்
பார்த்திபனே வேறுவகைச் சூதந் தானும்
பரிவாகப் பலமெட்டு எடுத்துக் கொண்டு
சாத்தியதோர் தங்கமொரு பலமுங் கூட்டிச்
சங்கையுடன் தெளிவாக வுருக்கிப் பாரே. (8)

பாரப்பா வுருக்கியதைப் பொடியாய்ச் செய்து
பக்குவமாய்ப் பதினறு பலந்தான் கெந்தி
நேரப்பா பொடிசெய்து கூட்டி நீயும்
நேர்மையுடன் குப்பியிலே நிறையச் சேர்த்துச்
சேரப்பா வாலுகையி லேற்றி மைந்தா
தீர்க்கமுடன் பதம்பார்த்துச் செந்தூரித்துக்
காரப்பா யிதை யெடுத்து நூற்றுக்கொன்று
காட்டவே நவலோகங் கனகமாமே. (9)

ஆமப்பா இதின்பேர்தான் வாலச் சந்திரன்
அதனைநீ குன்றிடையா யிருநேரந்தான்
காமப்பா மண்டலமே கொண்டாயானுற்
கலைமதிபோற் றேகமது காந்தி யாகும்
போமப்பா பட்டையது வுறிந்து போகும்
பூரணமாய் விழியிரண்டு மொளிவாய் நிற்கும்
தேமப்பா வுடம்பிறுகி வாலையாகும்
சுத்த முள்ள கற்பமடா விந்து மார்க்கம்
போமப்பா வுண்போர்க்குச் சோதி காணும்
பீடுபெரும் வேதாந்தச் சித்த ராமே. (10)

சித்தமுட னுபரசத்தின் சத்தைச் சொல்வேன்
ஜெயமான நவச்சாரம் விராகன் ரெண்டு
பத்தியுள்ள வீரமது விராகன் ரெண்டு
பதிவான வண்டத்தோல் பலமோ பத்து
புத்தியுட னண்டநீர் விட்டு ஆட்டிப்
பூரணமாய்க் குகையிலிட் டுருக்கச்சத்தாம்
வெற்றியுள்ள சத்துத்தா ரகத்தைப் போலே
வேகமுட னுருகுமதைக் கண்டுபாரே. (11)

பாரப்பா துத்தசத்து வேதை சொல்வேன்
பரிசமுதல் சந்தான தூப தீபம்
நேரப்பா சூதத்தைச் சமமதாக
நேர்மையுடன் கூட்டிநன்றா யுருக்கிப்பாரு
காரப்பா காலிலொன்று தங்கஞ் சேர்த்துக்
கருணையுட னுருக்கியதை மணியாய் வாங்கித்
தேரப்பா அவ்விடைக்குக் கெந்தி சேர்த்துச்
சிவசிவா பொடிசெய்து குப்பிக் கேற்றே (12)

ஏற்றிநன்றாய் வாலுகையி லங்கி பூட்டி
யெடுத்துநீ சிவப்பு நிறப் பதமும் பார்த்துப்
போற்றி நன்றாய் நவலோகம் நூற்றுக் கொன்று
பூட்டினாற் பதினாறு மாற்றதாகும்
மாற்றிநன்றாய் வீரமிட்டுச் செந்தூ ரித்து
மகத்தான சூதமிட்டரைத்துக் கொண்டு
தோற்றியதோர் தூசிலிட்டுத் திரித்துதானே
சுத்தமுள்ள நீர்தனிலே துவைத்திடாயே (13)

துவைத்ததொரு திரியெடுத்துத் தீப மேற்றிச்
சூழவே கடுதாசிக் கூடு கட்டிப்
பவித்ததொரு நவலோகத் தகடுதன்னிற்
பற்றியதோர் திரியவித்துத் தூபங் காட்டில்
தவித்ததொரு தகடெல்லாங் கறுத்துப் போகும்
தன்மையுடன் தனல்காட்டத் தங்க மாகும்
சிவத்ததொரு தாம்பிரகந் தங்கமாகும்
சிரேஷ்டமுள்ள மாணாக்கா கண்டு கொள்ளே. (14)

கண்டதொரு காந்தமது பலந்தா னென்று
கட்டியதோர் சாரமது பலந்தானைந்து
விண்டதொரு சவ்வீரம் பலந்தா னைந்து
வெற்றியுள்ள வெண்காரஞ் சமனாய்ப் போடு
கொண்டதொரு சிப்பிதனி லிட்டுத் தானும்
குறியாகத் தானுருட்டிக் குகையில் வைத்துப்
பண்டதொரு செப்பினிலிட் டுருக்கிப் பின்பு
பார்த்திடவே நாகம்போற் கத்தும் பாரே. (15)

பாரப்பா நாகம்போற் கத்து மானாற்
பதிவாகக் காய சித்தி யோக சித்தி
நேரப்பா சண்டிடைக்கு ரசமுங் கூட்டி
நிசமான ரசத்திடைக்குத் தங்கங் கூட்டிச்
சேரப்பா தானுருக்கி மணியாய்வாங்கித்
தீர்க்கமுள்ள கெந்தகமுஞ் சமனாய்ச் சேர்த்து
காரப்பா பொடிசெய்து குப்பிக் கேற்றிக்
கருணையுடன் வாலுகையிற் றீயை மூட்டே. (16)

மூட்டியதோர் செந்தூரப் பதத்தைப் பாரு
மோசங்கள் வாராமற் சலாகை போடு
நீட்டியதோர் சலாகைமுனைக் காப்புக் கண்டால்
நிலைத்ததொரு செந்தூரம் பதமாய்ச் செய்து
பூட்டியதோ ரீசான்யம் பூசை செய்து
புகழாகக் குழைந்தபின் னிறக்கிப்பாரு
ஆட்டியதோ ரருணனொளிபோல வாகும்
அந்திசந்தி யிரண்டுகுன்றி தின்னு தின்னே. (17)

தின்னடா மண்டலத்திற் காய சித்தி
சிவசிவா அருணனைப் போற் றேகமாகும்
கன்னடா சோதியது மிகுத்த லாகும்
கலகலத்த தந்தமெலா மிறுகிப் போகும்
என்னடா கோடான கோடி பேர்கள்
இதையறிந்து குருமுடிக்கத் திகைத்து நின்றார்
பொன்னடா பொன்னதனை காண வென்றாற்
பூட்டுகிற வகையதனைப் புகழக் கேளே. (18)

கேளடா காந்தசத்து நாக மொன்று
கெடியான தங்கமொன்று ரசந்தா னொன்று
நாளடா மூன்றுமொன்றாய் யுருக்கும் போது
நல்லதொரு நாகமது மூன்றுபோடு
தாளடா புகையமர்ந்து கட்டிப் போகும்
தன்மையுடன் நின்றுருகி மணியுமாகும்
ஆளடா இவ்விடைக்குக் கெந்தி கூட்டி
அப்பனே நாலுவித வைப்புஞ் சேரே. (19)

சோப்பா பொடித்துமே குப்பிக் கேற்றித்
திறமாக வாலுகையில் நீற்றிக் கொண்டு
நேரப்பா நவலோகம் நூற்றுக்கொன்று
நீட்டவே பனிரெண்டு மாற்றதாகும்.
தேரப்பா மயங்காதே பொன்னைப் பார்த்துத்
தீர்க்கமுடன் குழிக்கல்லி லரைத்ததின்பின்
சீரப்பா துருசுசத்து சமனாய்ச் சேர்த்து
நீற்றியதைப் பதமாக வெடுத்துப் பாரே (20)

பாரப்பா பூராகச் சத்து சொல்வேன்
பதிவாகப் பூமிவேர் தன்னைவாங்கிச்
சேரப்பா உலர்த்திநன்றாய்ப் பொடியே செய்து
செயமான சாரமதுயிடை கழஞ்சு
காரப்பா சவ்வீர மிடைகழஞ்சு
கட்டான வெங்கார மிடைகழஞ்சு
தேரப்பா யிதுவெல்லாஞ் செயநீர் தன்னால்
செம்மையுடன் வார்த்துருட்டிக் குகையில் வையே. (21)

வைத்துநன்றாய்ச் சில்லிட்டு வுருக்கிப் பாரு
மார்க்கமுடன் மணிமணியாய்ச் சத்து வீழும்
மெத்தநன்றாம் மணியெல்லா முருக்கிப் பார்க்க
மேலான வயிரம்போற் பளபளக்கும்
கைத்ததொரு பூராகச் சத்தைத்தானும்
கருணையுடன் காசிடைதா னுருட்டி மைந்தா
கைத்ததொரு நாகமைந் திடையே போட்டு
கல்லகரு விரண்டுமொன்றா யுருக்கும்பாரே. (22)

பாரப்பா அப்படியே உருக்கிப் பார்த்துப்
பதிவாக வோரிடைதா னாகமட்டும்
சாரப்பா கட்டியதோர் நாக மொன்று
சங்கையுள்ள சூதமொன்று தங்க மொன்று
நேரப்பா வுருக்கியதை வாங்கிக் கொண்டு
நேராகக்கெந்தகமுங் கூட்டி மைந்தா
தேரப்பா பொடியாக்கி குப்பிக் கேற்றி
செழுமையுடன்வாழுகையி லேற்றிடாயே. (23)

ஏற்றியல்லோ தீயெரித்துச் செந்தூரித்தால்
 என்ன சொல்வேன் நவலோகம் நூற்றுக் கொன்று
சாற்றியல்லோ தானுருக்கிப் பார்த்தால் மைந்தா
 சங்கையுடன் பதினாறு மாற்றுக் காணும்
கூற்றனைக் காண்பதற்கு அஞ்சு வான்பார்
 குருவருளாற் பராசத்தி பாதந் தன்னைப்
போற்றியே யாரெடுத்துப் பார்த்தாலுந்தான்
 புண்ணியர்க்கு ரசவாதப் புகழுண் டாமே. (24)

அகஸ்தியர் வகாரசத்து உச.

முற்றிற்று.

உ

பரமபதி துணை.

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# தண்டக சூஸ்திரம் உ௰௫.

காப்பு வெண்பா.

முச்சுடராய் முப்பொருளாய் மூவுலகாய் முன்னின்றே
இச்சையுட னெட்டிரண்டாய் ஏகமாய் — உச்சிநடு
வாகி வெளியொளியாய் ஆதியுயிர்க் குட்பொருளாம்
ஏக னுளக் களிறு மேறு:

ஏறுகின்ற மூலாதா ரத்தில் நின்ற
என் மகனே புலத்தியனே யிசைந்து கேளு
மாறுமிது மிடைபின்னாய் யிரண்டு மாறி
மகாரமது முப்பொருளாய் நின்ற சூட்சம்
வேறு துறை யேதுமில்லை மவுனத் தூட்டு
வேதாந்த சுழிமுனையின் நாட்ட மாகும்
தேறுமப்பா கற்பமது மவுனத் தாலே
ஜெகசாலச் சித்தருறை மவுனந்தானே. (1)

தானான மாந்திரிய மாயிரந்தான்
தனைக்குறிக்கி யொரு நூற்றிற் றெளிவாய்ச் சொன்னேன்
கோனான தண்டகமாம் நூறுஞ் சொன்னேன்
குறிப்பாக அதைக்குறுக்கி யிதுவுஞ் சொன்னேன்
தேனாறு பாயுமடா யிந்த நூல்தான்
செப்பினேன் சூட்சாதி சூட்ச மூலம்
வேனான எந்நூலோ யிருபத் தஞ்சில்
மெய்யுள்ள சூட்சத்தை வெளி விட்டேனே (2)

இட்டேனே அடிமுடியிற் றைலம் வாங்கி
யிட்டவுடன் கொல்லுமடா சூட்சா சூட்சம்
மாட்டேனே அமுரியுப்புத் தைலஞ் செய்து
மாய்க்குமரந் துறந்தசடங் கிடக்கும் போது
வெட்டியே யொருதுண்டு தைலம் வாங்கு
வேதாந்த மாகுமிதிற் சோடி வித்தை
அட்டியில்லை பூரணந்தான் சொல்லிவிட் டேன்
ஆதிதொடுத் தந்தம்வரை யறையக்கேளே. (3)

அறையக்கேள் பூரணசூத் திரத்தைப் பாரு
ஆதியிலே மறைத்து வைத்தேன் அபாயங் கண்டு
முறையுடனே யித்தைலஞ் சேர்ந்த தாலே
முடிவாகும் கருக்குருவாம் னூற்றுக் குள்ளே
பறையக்கேள் உயிர்வர்க்கத் தைலமொன்று
பார்த்திடத்தா னித்தோடே மஞ்சசூதம்
இறையளவு தப்பில்லை யிந்நூல் கிட்டா
திதைவிட்டா லறிகுறியு மோடா தெண்ணே. (4)

என்னவொரு தைலத்தை யுரைக்கக் கேளு
இத்தோடே சரியான சனுகமாச்சு
பின்னையொன்று மில்லையடா அண்ட மாச்சு
பேசாதே யிக்கருவைச் சனுசஞ் செய்து
சொன்னபடி தானெல்லாஞ் சேர்ந்து தானார்
சுருக்கடா வித்தைக்கு ஆறாதாரம்
மன்னவனே யிந்நூலை வெளிவிடாதே
மயக்கமுள்ள நூலாமென் றுகேளே. (5)

ஏனென்று விதிலேகருக் குருவுஞ் சொன்னேன்
யென்மகனே நூற்கோர்வை விபரஞ் சொன்னேன்
வேனென்ற சாபத்தின் நிவர்த்தி சொன்னேன்
வெட்ட வெளி மூச்சைமே லேற்றச் சொன்னேன்
பானென்ற மதியமுர்த முண்ணச் சொன்னேன்
பண்பான மௌனத்தின் பீசஞ் சொன்னேன்
நானென்ற சொல்லற்று நிற்கச் சொன்னேன்
நலமான வேதாந்த முறை சொன்னேனே (6)

சொன்னேனே பட்சனியின் மூலத்தோடு
சுருக்கான அஞ்சனமு மாற்றஞ் சொன்னேன்
பன்னேனே அஷ்டகர்ம மெட்டுஞ் சொன்னேன்
பக்குவத்தின் நூல்கொடுக்கும் பருவஞ் சொன்னேன்
இன்னேனே வாங்குகின்ற வகையுஞ் சொன்னேன்
இதைத்திருடி வைத்தோர்க்குச் சகாயஞ் சொன்னேன்
உன்னேனே பேயோட்டும் வகையைச் சொன்னேன்
உரைக்கிறேன் நூல்சேற்கு மொழுங்கு தானே. (7)

தானென்ற தத்துவமுந் நூறும் வேணும்
தப்பாமற் றீட்சையிரு நூறும் வேணும்
வேனென்ற பூஜையிரு நூறும் வேணும்
வேதாந்தம் மூந்நூறும் வேணும் வேணும்
நானென்ற பூர்ணமிரு நூறும் வேணும்
ஞானமது அறுநூறு வேணும் வேணும்
தேனென்ற ஆயிரத்தி ரண்டு நூறும்
சேர்த்திடுவாய் யொருகோர்வை பின்னுங்கேளே (8)

கேளப்பா கொங்கனரின் ஞானம் வேண்டும்
கெடியான வேதாந்த மிரண்டு நூறும்
வாளப்பா கடைக்காண்ட சூத்திரம் வேண்டும்
யுகத்தான தீட்சை யறுபத்தும் வேணும்
தாளப்பா மச்சரிரு நூறும் வேண்டும்
சட்டைமுனி ஞானமிருநூறும் வேண்டும்
நீளப்பா திருமூல ரைந்நூறும் வேண்டும்
கோரான தீட்சையிரு நூறுஞ் சேரே. (9)

சேரப்பா போக்கான மதுவாம் பூசை
சிற்பரைக்குச் செய்துசா பங்கள் தீர்த்து
வேரப்பா ஞானகிலே சூட்சங் காண
வேண்டில்மூ வாயிரத்து யொருநூற் பத்து
ஆரப்பா யொருகோர்வை யாகச் சேர்த்து
ஆயந்தெடுத்தால் சித்திமுத்தி யறிவான் சூட்சம்
சீரப்பா யிக்கோர்வை யில்லா மற்றான்
செப்புகிறேன் நூலாயி ரந்தான் காணே. (10)

காணப்பா அதைக்குறிக்கி யிருநூறாகக்
காட்டினே னதைக்குறுக்கி யிருபத் தைந்தாய்
பூணப்பா பூரண சூட் சத்தின் சூட்சம்
பூட்டினேன் வைத்தியம் நூற்றைம்பதுக்குள்
நீளப்பா அதில்விட்ட சூட்சங் தன்னை
நிலைகண்டு ஐம்பதுக்குள் நிகழ்த்தினேன் யான்
வீணப்பா சொன்னதல்ல நூலைச் சேர்க்க
வினையமிகப் போய்த்தேடித் திரிந்து வாங்கே. (11)

திரியாமற் சூஸ்திரத்தி லநேக மாற்றம்
செப்புகிறேன் நியக்குவதன் விபரங் கேளு
விரிவாகக் கருவூரார் மூன்றூருக்குள்
வேண்டியதோர் மூலிவர்க்கம் நன்றாய்ச் சொன்னார்
அரிவாய்நந் தண் டகமாமூன்றைப் பார்த்து
அப்பனே மூலருந்தண் டகமுஞ் சொன்னார்
தெரிவாயே அதைப்பார்த்துப் போக ருந்தான்
தெளிவாகச் சொன்னாரிவ் வாறுபாரே. (12)

ஆறுகுங் கருவூரா ரோடே யேழாம்
அப்பனே கோரக்க ரோடே யெட்டாம்
சீறுக நந்திசொன்ன தண்டகத்தைச்
சேர்த்துக்கோ பூரணசூஸ் திரத்தி னோடே
வேறுகு மிதனரியின் குறிப்பே மாற்றம்
விதித்தபடி நியக்கதின் கருக்க ளெல்லாம்
மாறுட்ட மில்லாம லொன்றாய்ச் சேர்த்து
மாமூலி சிவசெந்து கூறாய்ச் சேரே. (13)

கூறுக வகைவகைக்குக் கழஞ்சு சேரு
கூறுகிறேன் நிலவேரின் புளிப்புஞ் சேரு
வேறான பேரண்டம் அமுரி யுப்பு
விதமான அகுசியுடன் ஞானி விந்தும்
நூறான கோழிமுட்டை பொறித்த தோலும்
நுட்பமா யிதுவகைக்குக் கழஞ்சி கூட்டு
மாறுட்ட மில்லைமுன் தைலத் தோடு
மைந்தனே யின்னமொன்று வகையாய்க்கேளே. (14)

கேளப்பா யேரண்டத் தெண்ணெய் யோடு
கெடியான ஆவி நெய் சரியாய்ச் சேர்த்து
வாளப்பா முன்தைலங் கூடச் சேர்த்து
மைந்தனே யாவையுமே கலக்கி வைத்து
காளப்பா ரவிதனிலே காய்ந்த பின்பு
நன்ருய்முந் நூல்வர்க்க மெல்லாஞ் சேர்த்துத்
தாளப்பா அச்சூதம் செம்பு சேலை
தன்னிலே தூள்பரம்பித் திரித்துக் கொண்டு
வேளப்பா திரியைப்பே ரண்டத் திட்டு
மேலேபே ரண்டத்தால் மூடிப்போடே. (15)

மூடியே காளியுட கோவிற் குள்ளே
முக்கியமாய் கொண்டு போம் ஆடு கோழி
தேடியே பன்றியுடன் மூன்றுந் தானுந்
திடமாகக் காளிக்குப் பலியுமிட்டுப்
பாடியே தாம்பூலம் வஸ்து சுத்தி
பதினெட்டுக்கறியும் பால்பலமுந் தேங்காய்
மூடியே பச்சரிசிப் பொங்கள் வைத்து
முனிவருட சாபமது தீர வோதே. (16)

ஓதப்பா நசி நசி யென் றனந்தஞ் சொல்ல
ஓகோகோ சாபமெல்லா மோடிப் போகும்
ஏதப்பா உருவோ ஆயிரத்தெட்டாக
என்மகனே ஓதிவிட்டுப் பின்பு கேளு
சாதகமாய்ச் சனுக்ம்வைத்த அண்டத் திற்குச்
சாம்பிராணி யகிற்புகையுங் காட்டிப்பின்பு
ஆதரவாய் வைப்பதற்கு மேலுங் கீலும்
ஆனைக்கண் சட்டிக்குல் கபாலம் வையே. (17)

வைத்தபின்பு கற்பூரத் தீப மேற்றி
மைந்தனே மூன்றுதரம் வலமாய் வந்து
மத்தியிலே தான்வைத்துச் சுழினை மேவி
மகிழ்வாகக் கற்பூர தீபத் தாலே
அத்திரியி லேற்றிடுவாய் தீபந் தானும்
அமைதியா பெரியையிலே சிவாவென் றோதி
சத்தியுட வருளால்வங் கினியி ரங்குந்
தானெடுத்துப் பொற்சிமிழி லடைத்துக் காணே. (18)

காணவே வங்கினியின் துவிற்கு ழைத்துக்
கரும்புள்ளி புருவ நடுவிற் காற்போட
ஊணவே உன்பீகம் உனக்கு மற்றோர்
உறவினர்க்குஞ் சரியாயி கண்டு கொள்ளு
மாணவே உன்பீகம் சரியவென்றால்
மங்கமங் சென்றேறாற் றெட்டேவோது
கோணமற் செபித்தமுரி யாற்கழுவக்
குப்பெனவே கல்பீகந் தெரியுந் தானே. (19)

தாணன வங்கினிமுன் சனுகத் தேதான்
தான்குழைத்து வெற்றிலையி லோர்ப் பொட்டிட்டுக்
கோணமல் முன்சனுகம் தீபமேற்றிக்
குறிப்பாகப் பெல்லாட்டம் பார்க்கும்போது
தோணாத விடமெல்லாந் தோண வைக்கும்
தொகுப்புடனே பூமிபொரு ளெல்லாந் தோணும்
காணாத அதிசயங்க ளெல்லாங் காணும்
கன்னிமுதற் காசிவரை தெரியுந் தானே. (20)

தானென்ற வங்கினியி லனேக வித்தை
தாரணியிற் பேய்பூத கணங்கள் வந்து
மானென்ற பெண்ணைப் பிடித்துக் கொண்டால்
மைந்தனே யவள்பேரை யேட்டிற்கீறி
கோனென்ற முக்கோண மதிலே போடு
கோணத்துள் சிங்கென்று கிறித்துப் போட்டு
வேனென்ற வங்கினியை யதின்மேற் பூசி
விளக்கனலிற் காட்டிடவே வீறிட் டோடும். (21)

ஓடுமப்பா பேய்பூத மெல்லாம் போகும்
ஓகோகோ யின்னமுமொன் றுரைக்கக் கேளு
ஆடுமே அஷ்டகர்ம முழுது மப்பா
அந்தந்த பீஜத்தை யேட்டிற் கீறி
நாடியவன் நாமத்தை யதிற்கிறித்து
நலமாக வங்கினியை யதன்மேற் பூசி
சாடியதைத் தீபத்திற் காய்ச்சினக் கால்
சார்நோய்கள் தீர்ந்திடு மிக் நூலாற் றானே. (22)

இன்னூலைக் கொடுக்கவென்றால் முறையொன் றுண்டு
இகமதிலே சீடர்களோ கோடி யுண்டு
அன்னவர்கள் மனதிலொன்று வாக்கி லொன்று
அப்பனே நினைத்தவர்கள் நூலைக் கேட்பார்
என்னசொல்லப் போராயோ தெரிய வில்லை
இயல்பாக அவர்களைநீ வரவொட்டாதே
பொன்னதனைக் கொடுத்தாலுங் கொடுக்க வேண்டாங்
புண்ணியநூல் தந்தாலு மீயா தென்னே. (23)

என்னப்பா புலத்தியனே சொல்லக் கேளு
இயல்பாக நூல்கொடுக்க மனமிசைந்தால்
நன்னயமாயுட லுயிருந் தத்தம் வாங்கி
நலமான சீடனா யிருக்க வைத்துச்
சொன்னபடி நடக்கு முறை வழிதெரிந்து
சுகமாக யிதிற்கண்ட முறையைச் சொல்லி
பின்னமது வாராமற் செய்வா யென்று
பேணியே நூல்கொடுத்து அனுப்பு வாயே. (24)

அனுப்பினபின் நூலீய்ந்தோன் மனது நொந்தால்
அழிந்திடுவான் நூல்பலித மாகாதப்பா
நினைப் பெல்லாம் புருவமையம் நெற்றி கண்ணில்
நில்லாட்டால் அனுதினமும் ஓம்மங் கென்று
செனித்தவிடம் மரித்தவிடம் ரெண்டு மங்கே
தெரிந்துகொள்வாய் சிவசித்தி சூட்ச மப்பா
அனித்தியமாய்ப் போகாதே நித்தம் நோக்கு
ஆதியாஞ் சுழிமுனையி லறிவை முற்றே. (25)

**அகஸ்தியர் தண்டக சூஸ்திரம்௨௫ முற்றிற்று**

உ

பரம பதிதுணை.

அகஸ்தியர் திருவாய்மலந்தருளிய.

# முப்பு சூஸ்திரம் ௨௬

ஆதிநடு மூலத்தின் வெளிக்குள் ளான
ஐங்கரனை யடிதொழுதே அரனைப் போற்றி
சோதிமணி வடிவான தேவி சொல்ல
சூஸ்திரந்தான் பதினாறுஞ் சுருக்கிச் சொன்னேன்
வேதமதா யிரத்திருநூ றான சூஸ்திரம்
விளங்கியதோர் சவுக்காரக் குருவா சூட்சம்
மூதுரையாம் அந்நூலுக் கிந்நூல் சூத்ரம்
முக்கியமாய்ப் பதினாறுந் திறவு கோலே. (1)

திறவுகோல் சவுக்காரஞ் செய்ய வேண்டிச்
செப்புகிறேன் புலத்தியனே திறமதாக
உறவுகோள் நெய்க்குருணி வரிவேர் வாங்கி
உடன்போடு அமுரிபடி தூணிக் குள்ளே
சறவுகொள் பூநீறு படிதான் நாலு
கற்சுண்ணம் படியிரண்டு வல்லை ஒன்று
புறவுகோள் கலக்கியொன்று பெறித்து வாங்கிப்
பொடிபண்ணிக் கண்டித்துச் சினஞ் சூடன். (2)

சூடனொடு நவச்சார லவணம் பூநீர்
துடியான வெடியுப்போ டெட்டுங் கொண்டு
கூடவே சிறுநீரிற் கலக்கிக் கொண்டு
உத்தமனே படிபெட்டுத் தெளிவை வாங்கு
சாடவே காய்ச்சியெடு ரவியிற் போடு
சாந்தமாய்த் திங்களொன்றில் வெண்மை யாகும்
வாடவே வேண்டாங்காண் வாதி சொன்னேன்
மகத்தான பெரியோருக் கெய்தும் பாரே. (3)

பாரப்பா சுந்தரா னந்த மூர்த்தி
பதிவான சூத்திரத்திற் பாக மாகச்
சேரப்பா உப்பெடுக்க நன்றாய்ச் சொன்னார்
திறமான பதினெண்பேர் சித்த ரெல்லாம்
ஏரப்பா முடிந்தவிடம் வழலை யென்றே
இயம்பினா ரல்லாம லென்னைப் போலே
ஆரப்பா சுத்திவகை சொன்னா ரில்லை
ஆச்சரிய மவர்சொன்ன முறையைப் பாரே (4)

பாருநீ களியுப்புச் செய்து வாங்கி
பாங்கான பீங்கானிற் போட்டு நன்றாய்
வாருநீ நிந்துவொரு நீதம் விட்டு
வளமான ரவிமுகத்தில் திங்கள் ரெண்டு
காருநீ யுலர்ந்தபின்பு சிவந்த வெண்மை
கணபதிக்குப் பூசைபண்ணு தேவிபூசை
சேருநீ களிப்பு மிகுதா னுச்சு
திறமான திக்குருவைப் பார்நூல் தோரே. (5)

நூல்தோறு ஒளித்துவைத்தார் சித்தர் தாமும்
நுகரக்கேள் களியினுப்பு நாமங் கேளு
கால்தோறும் மண்ணொன்றும் வழலை யென்றும்
கல்லுப்பா மூவர்ச்சார முப்பூ வென்றும்
பால்தோறும் வண்ணாத்தி கார சாரம்
பரமென்றுஞ் சிவமென்றும் ஆதி யென்றும்
மால்தோறும் ஐவரெனும் குசத்தி யென்றும்
வந்துவென்றும் நிந்தோடு நீத மென்னே. (6)

நீதமென்ற கற்சுண்ணம் நந்தி யென்றும்
நிலமான சாக்கென்றுங் கும்பி டானே
வேதமென்ற நாலென்றும் மூன்றே யென்றும்
விட்டுவந்த அடிமுடியென் றிணங்கி யென்றும்
பேதமென்ற குருவென்றுஞ் சிங்கி பச்சை
பேராண சுட்டகல்லுச் சுண்ணம் பென்றும்
காதமென்ற புகையூறற் புனிதா னென்றும்
கறியுப்பாம் பாரைக்கல் உப்பா மென்னே. (7)

உப்பான களிபினுட பேர்தா னுச்சு
உறவாகு மினஞ்சேர்த்து சுண்ண மானுல்
தப்பான சேதியல்ல இன்ன மொன்று
சவுக்கார மென்றும்பேர் அப்பாற் சொல்ல
ஒப்பான பேரெழுத வென்னுற் கூடா
தோகோகோ வெளியாகச் சொன்ன தாலே
செப்பான பந்துக்கு ளடக்கம் போலச்
சித்திரெல்லாங் கூடியே பேசி னுரே (8)

பேசியே கொண்டல்லோ யிந்த நூலைப்
பேணியே குகைக்குள்ளே ஒளித்துப் போட்டார்
வாசியே கொண்டுநீ மவுனமாகி
வளமான பெரியோர்கட் கெய்து மிந்நூல்
தேசியாய் ஆசைகொண்டே யிடும்பர்க் கிச்சூத்
திரமிருபத் தாறிணையுஞ் சொல்லொ ணுதே
மாசியேநீ கொண்டலைந்தே பித்தன்போலே
மயங்குகின்ற வாதிக்கும் நூலீயாதே (9)

நூலீய்ந்தால் நசித்திடுவாய் சொன்னேன் சொன்னேன்.
நுணுக்கமுள்ள விட்டகுறை யாலே யெய்தும்
மேலான கொங்கணர்ந்தாஞ் சூத்தி ரத்தில்
விண்டிட்டார் நாற்பதிலே மூப்பூச் சுண்ணம்
காலான மச்சமுனி சூத்தி ரந்தான்
கருவான வெண்பதிலே சொன்ணுர் பாரு
சேலான கைலாச மூர்த்தி தானுந்
திறந்திட்டார் சூத்திரந்தான் ஐம்ப துள்ளே. (10)

உள்ளான எடைபாகம் நூற்றி னுள்ளே
உறுதியாய் ஒளிப்பின்றிச் சொல்லிப் போட்டேன்
தள்ளான கல்லப்பா பிரம கற்பம்
சாதகமாய்ப் பன்னுறும் பன்னுன் கோடு
விள்ளான அறுபதுக்குள் கருவைச் சொன்னேன்
விரைந்தாட்டத் திராவகம் பொன் செயநீர்ப் போக்கு
தெள்ளான சூத்திரந்தான் பதினு றுக்குள்
செப்பினே னிந்நூலின் வகையைப் பாரே. (11)

பார்க்கையிலே யிந்நூல்கள் மனதில்வைத்துப்
　　பரிவாகச் சவுக்கார முடிக்கும்போது
சேர்க்கையிலே ஒருவருடன் பேசவேண்டாம்
　　திறந்துநீ சொல்லாதே நூலீயாதே
கார்க்கையிலே நூலீய்ந்தா லெமன்வந்துன்னைக்
　　கரையேற வொட்டாமல் நசிப்பான்சொன்னேன்
பார்க்கையிலே கிட்டினவர் வரங்கொடுப்பார்
　　பங்கயமா மாயிரத்தெட் டிதழ்தான்விடே. (12)

வீடென்ற பூரணத்தில் நடுவதாக
　　வெளியொளியாஞ் சிவசோதி வெளிக்குள்ளாகி
சாடென்ற மனமுருகி வாயுவீட்டிற்
　　சார்ந்துநிலை நின்றவர்க்கே மோட்சமுண்டு
வாடென்ற பசியுமில்லை உறக்கமில்லை
　　மாயையில்லை கனயோக ஞானியாவார்
பாடென்ற சொல்லில்லை வேதைகாணும்
　　பராபரையும் பச்சம்வைத்துப் பகருவாளே. (13)

பகருவாள் மூலிகையின் போக்குஞானம்
　　பண்பான சவுக்காரம் அட்டசித்தி
பகருவாள் குளிகைமுத லெல்லாஞ்சித்தி
　　பாராட்டாற் சித்தியில்லை பாவிகட்கே
பகருவாள் விட்டகுறை வேதாந்தங்கள்
　　பதினென்பேர் நூல்பார்த்தும் வகைதோணாது
பகருவாள் நிலைநின்று வாசியூதி
　　பலிக்குமடா சாத்திரங்கா ரணமாம்பாரே. (14)

காரணமா மூலகுரு தன்னைப்போற்றிக்
　　கடந்துநின்ற மூலவண்ணிக் கப்பால்நின்ற
பூரணமா மனோன்மணித்தாய் பாதம்போற்றி
　　புகழான வேதாந்தச் சுருக்கம்சொல்வேன்
தோரணமா மண்டரண்ட மாலைபூண்ட
　　சோதிசதா சிவனையென்றன் கருத்தில்வைத்து
சாரணையாங் குளிகையொடு வாதம்ஞானம்
　　சாற்றுகிறேன் வெளியாகச் சாற்றுவேனே. (15)

சாற்றுகிறேன் வாசியுடைக் கருவின்மார்க்கஞ்
சார்வாக மாணுக்கா நல்ருய்க்கேளு
ஆற்றுகிறேன் பனிரெண்டும் நாலுஞ்சேர்த்தே
ஆதியந்த மற்றிடத்தே யூணிநில்லு
மாற்றுகிறேன் தினமொன்றில் கால்தான்சேரு
வாகான அகாரமொடு உகாரந்தானும்
ஏற்றுகிறே னிப்படிசோ டசத்திற்சேர்த்தே
இபலான சமாதிக்கு ளிருந்திடாயே. (16)

இருக்கவே வாதமொடு ஞானஞ்சொன்னேன்
இறந்திறந்து பிறப்பதற்கோ வாதஞ்சொன்னேன்
அருந்தவத்து ரிஷிகள்சித்தர் பாதம் போற்றி
அறையுகிறே ஞதியாம் நகாரந்தன்னைப்
பொருந்தவே சனங்கள்பலர் ரிறந்துங்காணுர்
பொய்வாதி குளிகைசா ரணைதானென்பார்
மருந்திலே சிங்கிவைப்பு மவர்காணுர்கள்
மகத்தான வாதியென்ருல் வண்ணங்காண்பான் (17)

காணப்பா வுயிர்ச்சரக்கோ ஆண்பெண்ணுகும்
கனமான வழலையுடைச் சுண்ணமாகும்
தோணப்பா சூதமது கட்டிப்போகும்
தொடுகுறிபோ லம்மென்ற மத்தங்காயில்
ஆணப்பா முப்பதுடனிரண்டு தீட்சை
அப்பனே கடைசியிற்சா ரணைதானுச்சு
பூணப்பா தம்பனத்துக் குளிகைசொல்வேன்
புகழான வித்தினுடைத் தைலந்தானே. (18)

தைலமது பூப்புடத்தில் வாங்கிக்கொண்டு
சார்வாகக் காரமொன்று சுருக்குத்தீரு
தைலத்தால் குளிகையுந்தம் பனந்தானுச்சு
சார்வாக வாயில்வைத்து மவுனந்தாக்க
ஓயிலுடனே வாயிரத்தெட் டண்டந்தோணும்
உத்தமனே தேகமது வயிரம்போலாம்
ஒத்தையில்வா மீசனுமே நீயேயாவாய்
காணப்பா குருவருளாற் காணுகானே. (19)

காணப்பா அஷ்டபுரி பெட்டினாலே
காசினியில் மாண்பரல்லோ பிறந்தார்வீணே
ஊணப்பா புருவமையத் தொளியினாலே
யுலகமெல்லாம் நீயாக மனதிற் காண்பாய்
நாணப்பா நமன்வாயில் மண்ணைப்போட்டு
நாதவிந்து சூதமுண்டு நண்ணியேறு
தானப்பா இருக்கவென்றால் சூதந் தாக்கு
தவறாது தவறாது சடம்போகாதே. (20)

போகாம லிருக்கவென்று லாசான் றன்னைப்
பொற்பூவைச் சாத்தியல்லோ காக்கலேணும்
வேசாத காலையன்பாய் முன்னே கேளு
விளங்கியசா காத்தலைப்பை விரும்பிக் கேளு
வாகாக வகாரவித்தை கண்டோற் கையா
வலதுமுழந்தாளிலொரு மச்சந் தோணும்
ஆகமுடன் கண்டமது சாய்வு காணும்
அப்பனே யின்னமொரு அங்கங் கேளே (21)

கேளப்பா யிடமுதுகில் மச்சங் காணும்
கெடியான இடதுகையில் சங்கு சக்கரம்
நாளப்பா இதுகுறியை நன்றாய்ப் பாரு
நாடியிட நாசியிலே மருளைப் பாரு
வேளப்பா வலத்தோளில் மச்சம் பாரு
வேதாந்த வாதியென்றாற் குறியொப் பாது
ஆளப்பா இப்படியே படையா ளங்கள்
அறிந்தடிப்பார்க் கருள்மொழிகா ரவராவரே. (22)

காரான தேசிகரை யறிந்து கொண்டு
கனிந்த வரைப் பன்னிரெண்டு வருடங் காத்தாற்
சீராக வவர் மனது வந்த பின்பு
செப்புவார் வித்தையெல்லாந் திறமாய்த் தானே
ஆராறு மலைகடலைத் தாண்டிப் போக
அறிவாக்கி யக்கணமெய்த் தேவியாலே
பேரான வமிர்தரசந் தானுங் காட்டிப்
பெருமைமிக அவர்க்கவர்தா மீவார் பாரே. (23)

ஈந்ததுதா னேதாலே சொல்லக் கேளே
யியல்புகுரு பாதகாணிக்கை யாக
மாக்துமுடல் பொருளாவி மூன்றுந் தந்து
மகிழ்ந்திருப்பன் விட்டகுறை தொட்ட தாலே
சார்ந்தமிக யாமுமந்தப் படியே சார்ந்து
சண்முகவேல் பாதமது கெதியென் றெண்ணி
ஏந்திழையா ளருளாலே தொண்டு செய்தே
இருந்திட்டோம் பன்னிரெண்டு வருடந் தானே. (24)

தானென்ற வருளாலே சடாட்சரத்தைச்
சக்கரத்தி னியல்புடனே சார்வாய்ச் சொன்னார்
தேனென்ற மந்திரங்க ளெல்லாஞ் சொன்னார்
சிவன்மகனை யினப்படுத்தித் தெளிந்திட் டேனான்
பானென்ற பரங்கிவைப்புச் சொன்னார்வீரம்
பாடினார் போகரப்பா பரிந்துபாரு
ஏனென்ற வாதமப்பா வெவர்களுக்கும்
எளிதிலே யேறுதற்குத் துறையுமாமே. (25)

துறையோடே வீரமொரு கழஞ்சிதூக்கு
தூர்த்தருக்குச் சொல்லாதே யுனக்குச்சொன்னேன்
முறையோடே விந்துவென்ற சாரங்கூட்டி
மூர்க்கமா யைந்துசுண்ணக் குகையிலூது
குறையாம லருணனைப்போற் சிவப்புமாகும்
கூறிய நவலோகம் நூற்றுக் கொன்று
நிறையோடே யீந்திடவே மாற்றுமாகும்
நீதியுடன் ஞானத்தைக் காணுமுற்றே. (26)

அகஸ்தியர் முப்புசூஸ்திரம் உகூ.

முற்றிற்று

உ

பரமபதி துணை.

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# அதிசய சூஸ்திரம் உ௰௭.

ஓமென்ற பூரணமே அகண்டவீதி
உற்றபரஞ் சோதியுமை பாதம்போற்றி
வானென்ற திரிகோணம் நீந்துவட்டம்
மௌனமென்னும் மோகனத்தாய் வாலைபாதம்
நாமென்றும் பூசை செய்தமார்க்கந்தன்னை
நந்திகண்டு திருமூலர் தனக்குச்சொல்ல
ஆமென்று நீகண்டென் னிடத்திற்கேட்ட
அதிசயசூத் திரமதனை அறைந்திட்டேனே. (1)

அறைந்திட்டேன் சூட்சமமாய் வாதஞானம்
ஆதியந்த மூலமந்திரஞ் சாக்குவைப்பு
உறைந்திட்டே னனந்த லகிரிதானும்
உத்தமனே வெளியாகத் தெரியும்பாரு
பறைந்திட்டேன் தொந்தமுடன் குருவுஞ்சொல்வேன்
பாங்கான சிவசத்தி நடனங்காணும்
நிறைந்திட்டேன் தாய்பதத்தின் சித்துவித்தை
நேரான பொருளெல்லாங் கண்டேன்பாரே, (2)

கண்டதொரு சூத்திரசாத் திரமும் பாரு
கருவழியாய்ச் சொல்லார்க ளிந்நூல் போலே
பண்டதொரு கைலைமுனி தீட்சை யுப்பு
பாங்கான நீதமென்ற சிமிட்டு வித்தை
விண்டதொரு சூட்சமென்ன சூட்சா சூட்சம்
வேதாந்த மெய்ஞ்ஞானக் கமலத் துள்ளே
வண்டதொரு அமுதமுண்ட வாறு போலே
வளமான சாக்கினுட சித்தைக் கேளே. (3)

சித்தென்ன கருவிடையஞ் சொல்லே னப்பார்
செப்பரிது கைபாக மாகத் தானும்
பத்தென்ன பூரீரு நாலு சேரை
பாங்கான அமுரியிலே சுண்ணம் போட்டு
முத்தென்ன தெளிவிருத்துக் காய்ச்சு காய்ச்சு
முறைபோடே அஞ்சுதரங் காய்ச்சி வாங்கி
நித்தென்ன ரவிமுகத்தில் நன்றாய் வைத்து
நேர்த்தியாய்ப் பழச்சாறு விட்டு ஆட்டே (4)

ஆட்டுவது சாமமொன்று வழித்து வில்லை
ஆறவே காய்ந்தபின்பு ஒட்டில் வைத்து
மூட்டுவது பத்தெருவிற் புடந்தான் போடு
முக்கியமாஞ் சத்தியென்ற குருவீ தாகும்
சூட்டுவது சரக்குகளைக் கொல்ல லாச்சு
சொற்பெரிய நவலோகம் ஆதி யாகும்
காட்டுவது ஆகாது பாவி கட்குக்
கைபாகம் புடபாகத் தெரிந்து தானே. (5)

தானென்ற முறையென்று சொல்லக் கேளு
சமுசயங்க ளொன்றுமிலை வெளியாம் பாரு
வானென்ற சக்கரத்தை யரிந்து நாளும்
வளமான வைப்புவித்தை சூட்சா சூட்சம்
ஊனென்ற பாறையுப்புக் கொண்டு வந்து
உத்தமதா ளிச்சாற்றைப் பிழிந்து கொண்டு
கோனென்ற சாறைவிட்டு அரைத்து வில்லை
கூறியதோர் வெயில் முகத்திற் காயப்போடே. (6)

போட்டிடுவாய் நாள் மூன்று அதை யரைத்துப்
பொதிந்திடவே சீலைமண்ணும் வலுவாய்ச் செய்து
சூட்டிடுவாய் பத்தெருவிற் புடந்தான் போடு
சுகமான பற்பத்துக் குயிர் தானச்சு
நாட்டிடுவாய் சூட்சமதின் உண்மை சொன்னேன்
நலமான திதன்பெருமை சொல்லப் போமோ
வாட்டிடவே வேண்டாங்கா ணிந்நூல் பாரு
மகத்தான தொலிமுப்பா காணுங்காணே. (7)

காணவே பூநீரு கழஞ்சு மூன்று
கருதியதோர் பாறையுப்பு பலந்தா னென்று
பூணவே சூடன் நிறைகழஞ்சு கூட்டிப்
புகழான சாறுவிட்டு சாம மாட்டித்
தோணவே வில்லைசெய்து காய வைத்துச்
சுருதியொடு பத்தெருவிற் புடந்தான் போடு
ஊணவே கொடிய சுண்ண முப்பூவப்பா
ஒருத்தருக்கும் விள்ளாதே காட்சி யாமே; (8)

காட்சி யென்ன வெளியாகச் சொல்வேன்பாரு
கழறாதே எவருக்கு மிந்நூல் தன்னை
கூச்சமென்ன வாதவித்தை செய்வதற்குக்
கொடுங்காரம் முப்பூவின் சுண்ணம் வாய்த்தால்
தாட்சி யென்ன எதிராளி வகை சொல்லாட்டார்
சவங்கனெனத் தூரத்தே யகலத் தள்ளு
வாச்சுதென்ன சரக்கு அறு பத்து நாலில்
வலுவதனைத் தனித்தனியாய் மாட்டும்பாரே. (9)

மாட்டவிந்தக் குருவிலொரு கழஞ்சுவாங்கி
மகத்தான மிருதார சிங்கிக் கப்பி
கூட்ட விந்தை யென் சொல்வேன் மெத்த மெத்தக்
கோலமுட னகலிலிட்டு மண்ணுஞ் செய்து
வாட்டமெனுந் திரோதாயி மயக்கம் விட்டு
வளமாகப் பத்தெருவிற புடந்தான்போடு
தோட்டமென்ற துருசுக்குச் சிங்கிபூட்டி
சீலைமண் செய்துலர்த்தி யெரித்திடாயே (10)

எரிப்பென்ன சாமமொன்று ஓலைத் தீதான்
ஏங்காதே குருவப்பா சொன்னார் சித்தி
தருப்பென்ன யிதைவிட்டால் வாத முண்டோ
சாத்திரமும் சூத்திரமும் பாரு பாரு
நெருப்பான தவசழிந்தாற் பாவம் பாவம்
நேரான பூரணத்திற் சொக்கி நின்றால்
குறிப்பான திந்தமுறை தப்பா தப்பா
கூறுவே னின்னுமதைக் கூறு வேனே (11)

கூறுவேன் சவ்வீரங் கெந்தி லிங்கம்
குறியான அரிதார மிரதஞ் சாரம்
சேருவது பொறிகாரஞ் சீன மெல்லாம்
சிவசிவா தனித்தனியே யெல்லாங் கட்டும்
வேறுவிதஞ் செய்யாதே பாகம் விட்டு
விரிதோண யினங்காட்டுந் தொந்தம் பாரு
சாரமிதிற் சொல்வதைநீ மறந்தி டாதே
சகலவித நோய்களெல்லாம் போகும் பாரே. (12)

பாருநீ ஆதார மூல பீடம்
பரிவாக ஆறுமுக வேலர் போற்றும்
சாருநீ பிரணவத்தால் நாதன் றன்னைச்
சார்பாக நடுவணையி லாதியந்தம்
சேருநீ ஆயிரத்தெட் டுருவை யோதச்
சிவனோடு சத்தியங்கே நடனமாடும்
காருநீ பின்னொன்றும் நினைக்க வேண்டாம்
கருதியதோர் மாயைதன்னைப் பூசை பண்ணே (13)

பூசை யென்ன கணேசனொடு கும்பம் வைத்துப்
புகழாகச் சிவராத்ரி யன்றைக்குத்தான்
தோசை யண்ணம் பரமாங் கனிகள் தேங்காய்
சொற்பெரிய தூபதீபங் கொடுத்து
ஆசையென்ன தோத்தரித்து விபூதி தொட்டு
அருடாவென் றேநினைந்து திலதம் போடு
பாசையென்ன வொன்றுமில்லை யெல்லாம் சித்தி
பாரதனில் விள்ளாதே சொல்லக் கேளே. (14)

சொன்னதொரு வகையெல்லா முண்மை யுண்மை
சொல்லாதே நந்திகுரு பாதத்தானே
பின்னுமுறுங் கோடையிடி தலையில் வீழும்
பேசாதே குருவெல்லாம் வெளியாய்த் தோணும்
பன்னதொரு கற்பூர வைப்புச் சொல்வேன்
பாங்கான சூடனரைப் பலந்தான் வாங்கிக்
கன்னதொரு சாம்பிராணி நயமதாகக்
கார்பலந்தான் வெடியுப்புக் கழஞ்சலன்றே (15)

ஒன்றாகச் சேர்த்தரைப்பாய் அண்டநீரில்
ஓகோகோ வில்லைசெய்து ரவியிற்போடு
இன்றாகப் பீங்கானில்வைத்துக் கொண்டு
இருபானை யொன்றின்மே லொன்றுவைத்து
நன்றாக வெள்ளைக்கு திரிகம்பூசி
நாலுவிரற் பொடிமணலை யடிக்கிழிட்டு
அன்றாகச் சந்துவாய்ச் சீலைசெய்து
அதையுலர்த்தி ஆதியென்ற அனலைமூட்டே. (16)

மூட்டப்பா சாமமென்று கமலம்போல
முக்கியமாய் ஆதியென்ற மூலமோது
பூட்டப்பா திறந்துமே நூறுக்குள்ளே
புகழான பச்சைக் கற்பூரமாகும்
நீட்டப்பா வாசனைதா னென்னசொல்வேன்
நிகருண்டோ யிந்தவித்தை ஆருஞ்சொல்லார்
ஆட்டப்பா வேணமட்டுஞ் செய்துகொள்ளு
அதிசயந்தான் கோடான கோடிதானே. (17)

தானான காயவைப்புச் சொல்லக்கேளு
சதகோடி பொருளிதற்கு ஒவ்வாதப்பா
மானான சிவகாமி சொன்னாள்பாரு
வகைகதோண சிவமூலி பழச்சாறென்று
ஊனான வேம்பினொடு முருங்கையுள்ளி
உற்றதொரு சுக்குனுந்து கூட்டியாட்டு
வேனான பிரண்டைச்சார் கடுகுத்தூளும்
விதமறிந்து காய்ச்சியெடு வெண்ணெய்விட்டே. (18)

விட்டகடு கெண்ணெய்சது ரக்கள்ளிப்பால்
வீறாக வார்த்தரைத்து தோலிற்கட்டி
பட்டதொரு நெற்குவையின் நடுவேவைத்து
பாங்குநா ளாறுசென் றெடுத்துப்பாரு
தொட்டதொரு வாசமப்பா மேன்மையாகும்
சொல்லாதே குருவெல்லாஞ் சொன்னாற்றோசம்
கெட்டதோரு மனமானாற் செத்துப்போவாய்
கெடாதமன மானாலீ தன்மையாமே. (19)

உண்மையாய்க் கூறுகிறேன் நன்றாய்க்கேளு
ஓகோகோ இந்நூல்போ லெவருஞ்சொல்லார்
வண்மையா யெவர்காணப் போறுரையா
வையத்து மாந்தர்களோ காணப்போறூர்
தண்மையாயு ருக்கினத்துக் காதிகாரம்
சாற்றரிய குருவுக்கு வீரமாதி
எண்மையாஞ் செயநீர்க்கு சாரமாதி
இயல்பான களங்குக்குத் தாரமாமே. (20)

ஆமப்பா சிவப்புக்குக் கெந்தியாதி
அருளான பொன்னுக்குச் சூதமாதி
ஓமப்பா இனங்கண்டு தொர்தம்பாரு
ஒப்பில்லை நவலோக மெல்லாம்நீரும்
தாமப்பா ஆதிகுரு கண்டவர்க்குச்
சதாகோடி சங்கவரை தாண்டியோடும்
வாமப்பா லோபருக்கா காதுசொன்னேன்
மகத்தான ஆனந்த லகிரிகேளே. (21)

ஆனந்த லகிரிபொருள் தன்னைக்கேளு
அதிமதுரந் திரிகடுகு மாஞ்சியேலம்
தானந்த காமப்பூ அரத்தைநெல்லி
தாளிசமாங் கொத்தமல்லி அபின்கிராம்பு
சானந்த கசகசாகுந் தரிகஞ்சூரி
சமனுக மூதண்டம் நாவிலொன்று
கோணந்த சரக்குவகை மூலிரெட்டி
கூட்டிவறுத் தரைத்திடுவாய் தேன்நெய்யாமே. (22)

ஆமென்ற மிளகளவு கொண்டபோது
அண்டங்கள் தோற்றுமடா அறிவுண்டாகும்
தாமென்ற வினைபிணிகள் கன்மந்தீரும்
தசகோடி ஆனந்தச் சித்துண்டாகும்
ஓமென்ற மெய்ஞ்ஞான பீடந்தோற்றும்
உண்ணவே அமுர்தங்க ளூட்டும்பாரு.
தீமென்ன சவதவமாய் மோகனத்திற்
றேர்ந்ததோர் நிந்துவின்சக் கரமொன்றுமே. (23)

ஒன்றான வஸ்த்துவுந் தன்னுக்குள்ளே
உத்தமனே சிக்கமதாய் நிந்தில் நிற்கும்
கண்ணான நவக்கிரகந் தன்னுக்குள்ளே
பாங்காகத் திரிகோண வட்டமிட்டுக்
கண்ணான மெவான்றமுத லஞ்சவீடு
காட்டிடுவாய் நமசிவய மென்றுபோடு
விண்ணான நமன்வரினும் எதிர்க்கமாட்டான்
வேதாந்த சக்கரந்தான் சூட்சங்காணே. (24)

காணவே யின்னமோ ருண்மைதன்னைக்
காட்டுகிறேன் குருவென்ன மக்காள்மக்காள்
பூணவெகு சுருக்காங்கக் கிஷமாம்வித்தை
புகழான மூலமுதற் காரமிட்டுத்
தோணவே வீட்டிலட் சரங்கள்பாரு
தொடுமுன்னே பஞ்சில்வைத்த பொறிபோலாகும்
மாணவே மற்றதெல்லாங் கிரிகைமார்க்கம்
வழுத்தாதே யெவருக்கும் வகையாத்தானே (25)

வகையான வித்தையொன்று சொல்லக்கேளு
மார்க்கமென்ன அரிதாரங் கெந்திலிங்கம்
சிகையான கருஞ்சீரகங் கார்கோலம்
செப்பவெள் ளறுகிஞ்சி சிதரமூலம்
குகையான மனோசிலையும் பரங்கிப்பட்டை
கொஞ்சமது தானெடுத்தே யுரைத்துக்கொண்டு
துகையான படிவெண்ணெய் தன்னிற்காய்சி
சோராமல் வடித்திறுத்துக் கொள்ளுவாயே. (26)

வாயரன புண்புரைகள் கரப்பான்குட்டம்
மகத்தான கிரந்தியொடு பாங்கிதீரும்
தாயார்தன் வயிற்றிருந்து பிறந்தரூபம்
தப்பாது வசீகரமாஞ் சொனனேன்பாரு
சேயான யோகமது சித்தியாகும்
ஜெகமீதிற் புகழ்பெற்று முத்தனுவாய்
பாயான கூடுவிட்டு கூடுபாயும்
பாங்கான வதிசயசூத் திரந்தான்முற்றே (27)

அகஸ்தியர் அதிசய சூஸ்திரம் ௨௭. முற்றிற்று.

உ

பரமபதி துணை.

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# மூதுமொழி ஞானம் உஅ.

காப்பு.

ஆதியா மூல நாதன் அமைப்பிதைத் தெரிந்து கொண்டோர்
நீதியாம் வாலை பாதம்நித்தமும் பூசிப் பார்கள்
வேதிய ஞன வெங்கள் விமலன்ற னருளைப் பெற்று
சோதிதத் துவத்தைக் கண்டு சுகமுட னிருப்பார் காப்பே (1)

தத்துவந் தொண்ணூற் றாறில் தகவுறு வாயுப் பத்து
மெத்தென நாடி பத்து மெய்யுளே ஆறு தாரம்
சுத்தமாங் கரணம் நான்கும் தோன்றுமண் டலங்கள் மூன்று
மித்தனை யறிய வல்லா ரிறைவரா யிருப்பார் தாமே (2)

இருகதி ராக நின்று மியங்கிய பிராணன் றன்னை
வருகதி தடுத்து நேரே மனதிலே மறித்து வைத்தும்
ஒருகதி ராகப் பார்க்கில் உண்மையாம் பொருளுந் தோன்றும்
தருகதி மூல நாடி தனில்நிலைப் பாதல் நன்றே (3)

மூலத்தே கருத்தை வைத்து மூண்டெழு கனலைத் தூண்டி
மேலைத்தாண் வழியே சென்று விண்ணிலா மண்டபத்தில்
பாலைத்தா னுகர்ந்து கொண்டு பழுதிலா வறிவினாலே
காலைத்தா னுகர வல்லார் காலனைக் கட்டு வாரே. (4)

கட்டிய மூலா தாரக் கனலதை யெழுப்பிக் காலால்
முட்டிய மேரு தண்டு முழுத்துளை யதன்மேற் செல்ல
ஒட்டிய மேலை வாசல் ஒளிபெற நாட்டி யூடே
காட்டியே குறைக்க வல்லார் நற்றவம் புரிவோர் தாமே. (5)

தாங்கியே மூலாதாரந் தன்னில்மூ வளைய மாகி
ஓங்கிமேல் நோக்கி நின்றும் ஒண்சுட ரதனையு ணணி
ஆங்கதா தன்னைப் பற்றி அருளறி வாற் றாங்காமல்
தூங்கியே யிருக்க வல்லார் சுகத்தையார் சொல்லு வாரே. (6)

சொல்லன்றிப் பொருளு மன்றிச் சூழ்ந்ததோ ருருவ மன்றி
அல்லன்றிப் பகலு மன்றி அகண்டபூ ரணமதாகி
நல்லின்பச் சிவமதாகி நாட்டிரண் டற்று நிற்போர்
செல்லுநற் சிந்தை யோராஞ் சித்தராய் வாழுவாரே. (7)

வானுலாம்பொருளு முன்னும் மறையுலாம் பொருளு முள்ளாம்
தானுளாம் பொருளே யாகித் தற்பரந் தானாய் நிற்கில்
போனநாள் புகுந்த நாளாம் பொய்யெல்லா மெய்யே யாகும்
நானுமே யறிந்து கொண்டேன் நாதனு ரருளி னாலே (8)

அறிவினு லருளைப் பற்றி அமரந்ததோர் சிந்தை தன்னில்
செறியொளி மூலத் துள்ளாந் தீபத்தை மேலா வைத்துக்
குறியுறப் பார்த்து மூன்று கோணத்தின் மேலே நின்று
நெரியுமத் தூண்டி யேற்றில் நின்மல வடிவ னாமே. (9)

ஆம்பொருள் தானு மொன்றே அளிவொன்றே யறிவு பற்றித்
தேம்பெற அருளில் நின்றால் சிவமதாய்ப் பொருளு மென்றே
பாம்பதின் வாலி லேறிப் பார்க்கின்ற பொருளொன் றாக
நாம்பல நாளுஞ் சொன்னோம் நல்லறி வாளற் கன்றே (10)

நன்னிலஞ் சதுர மாகும் நாலிரு நாளிற் சோமன்
வன்னியு மூன்று கோணம்வாயுவு மாறுகோணம்
மின்னிய வெளியே வட்டம் மெய்யென்ப திதுவே யாகும்
தன்னுளே பிறந்து பின்னுந் தனக்குளே ஒடுங்குந் தானே (11)

தாணுவாய் வளர்ந்த மேரு தன்னுளே யெழுந்த சோதி
ஆணியாய் நின்று மேலே அக்கினி வடிவு தோன்றும்
சேணிலாப் பிறந்து திங்கள் செழுங்கதி ராகக் கண்டால்
வேணிய ருளே தோணும் மெய்கலப் பதுநீ ருப்பே. (12)

உப்பது நாழி தன்னில் ஒருநாழி நீருங் கூட்டில்
தப்பிலா நாழியான தன்மை போல் இரண்டு மொன்றாய்
மெய்பொருள் கலப்பிவ் வாறும் விரிவருள் சத்தியாகும்
யிப்பொருட்கூட்டமொன்றே இரண்டில்லை யெனலாங் கண்ணே. (13)

கண்ணுளே ஒளிய தாகும் கருத்துளே அறிவ தாகும்
ஒண்ணுமோங் காரத் துள்ளே உட்பொருள் தானாய் நிற்கும்.

எண்ணிலாப் பிறவியூடே யிருப்பவ ரறிய மாட்டார்
வெண்ணெய்கைவைத்துநெய்க்குவீணிலே யுழல்கின்றீரே.(14)

உந்தியி னுள்ளே அவ்வும் உவ்வுமாய் மவ்வுமாகி
விந்துவாய் நாத மாகி விளங்கிய சோதி தன்னைச்
சிந்தியி னுறவே நோக்கிச் செயலிழந் திருப்பாராகில்
வந்தது சிவமுமுள்ளே வடிவிலா வரவ தாமே (15)

வரவில்லை போக்கு மில்லை வடிவில்லை முடிவு மில்லை
இரவில்லை பகலு மில்லை யாவுமே தானாய் நிற்கும்
கரவில்லை மகிழ்சி யில்லை கண்டபின் காணு மின்பம்
தரவில்ல பொருளே யாகும் தற்பர மாயிற் றானே. (16)

தற்பரந் தானே தென்னில் தத்துவந் தானாய் நிற்றல்
உற்பவத் தத்துவந்தா னுளிர் சதாசிவ மாய் நிற்றல்
நிற்கின்ற சிவமே தென்னில் நின்மல வடிவ மாதல்
கற்கின்ற அறிவினாலே காணலாங் காட்டொ ணாதே. (17)

காண்பது தானே தென்னில்காட்டுமோர் பொருளின்செய்கை
ஆண்பெணு மலியு மாகி அனைத்துமாய் அதுவே நிற்கும்
சேண்பயில் சுடர்க ளாக்கித் திரிவது மதுவே மேருத்
தூண்பயில் சோதி போலச் சுழலுநெஞ் சுயிர்கள் தாமே. (18)

நெஞ்சுளே நினைவு தோன்றும் நினைவுளே அறிவு தோன்றும்
மிஞ்சிய அறிவு தானே மெய்ப்பொரு ளாகி நிற்கும்
பஞ்சுளே படும்பொ றிப்போல் பரந்துளே துரிய மாகும்
அஞ்சிலே துரிய மாகி யதனுள்ளே யாதியாமே. (19)

ஆதியா யனாதி யாகும் அவைகலந் தருள்வ தாகும்
நீதியாய் நிமலமாக நெஞ்சிடை நிலைய தாகும்
ஓதியு முணரா தாகும் ஒருபொரு ளாயிக் கோனும்
சோதியா மிரண்டுமொன்றாய்ச் சொன்னவர் சுவாமியாமே.(20)

சொன்னபின் மூலா தாரச் சுழிமுனை மேரு பற்றி
வன்னியை யெழுப்பிக் கல்லாமனம்வைத்தோராண்டு நோக்கப்
பொன்னதன் வடிவ மாகும் புறத்துரு மண்ணும் விண்ணும்
அன்னதன் வடிவ மாகும்அட்டமா சித்தி யாமே. (21)

சித்திர நாடி யூட்ட தெளிவுறு மனில மோடி
சூத்திர மாயை நீக்கி வன்னியைக் கொள்ளு மாயின்
நத்திரு மாலி னோடு நான்முக னுடிக் காணச்
சித்திரக் கூத்த னுடங் திருவடி காண லாமே. (22)

கண்டமாத் தொன்று தன்னிற் கண்ணெழுத் தஞ்சு பத்தை
மொண்டெழுத் தெடுத்துக்கொண்டுமுயங்கியேமயங்குவர்கள்
கொண்டெத் திரண்டு தன்னைக் குறிப்புறத் தந்த போது
செண்டெழுத் துணரத் தோன்றித் திருவடி சேரலாமே. (23)

எழிலொளி வட்டத் துள்ளே யியலுருத் தோன்றி னாற்போல்
அழிவதோர் சடலத் துள்ளே அழிவிலாப் பொருளுண் டென்னால்
கழிவதோர்நாளு மில்லை கண்டதே கண்டி ருந்தால்
முழுதுமா யுலக மெல்லாம் மூலமா மேனி யாமே. (24)

மூலமா மேனி யாகும் முடிலதோர் முடிவு மில்லை
காலமுங் கடந்து போகும் காயமுஞ் சித்தி யாகும்
கோலமும் நினைத்த வண்ணங் கொண்டதோர் வடிவ மாகும்
சீலமு நோன்பு மில்லை செனனமுந் தீருந் தானே. (25)

தீர்ந்திடுஞ் செனன மேழும் செய்வினை யீரண்டு மில்லை
காய்ந்திரும் புண்ட நீர்போல் காலெனச் சுவறி நிற்கும்
வாய்ந்ததன் தலையுங் காலும் வன்னியு மொன்றி நீர்போல்
ஏய்ந்துகொண் டிருப்பீ ராகில்இக்கினு மினிக்குமின்பே. (26)

இக்கினிலிரசம்போன்றும் எள்ளினுள்ளெண்ணெய்போன்றும்
மிக்கபூ மணமே போன்றும் விளக்கினி லொளியே போன்றும்
தொக்கினிற் பரிசம் போன்றும் சுசியினிற் சுத்தம் போன்றும்
அக்கினிக் கண்டங் கீசன் அருளையே அடைவர் தாமே. (27)

அருளியி ரடைவே தென்னில் ஆவிணெய் திரியு மற்றால்
இருளுறு மொளிய டங்கும் ஏற்கையே போல்வ தாகும்
மருளுறு மலங்க ளற்றால் மன்னுயிர் பரத்தி லொன்றும்
பொருள்தரு மிருபத் தெட்டிற் பூட்டிய ஞான முற்றே. (28)

அகஸ்தியர் முதுமொழி ஞானம் உஅ. முற்றிற்று.

——:(*):——

உ

பரமபதி துணை.

## அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய.

# வாசிக்குறி தீட்சை ௨௰௬.

காப்பு.

ஆதிய ஞதியு மந்தமு மானபெற்
சோதிச் சுடரொளித் தொந்தமாய் நின்றுமே
நீதிய தாக வெமக்குநேர் சொன்னதை
மேதினி யோர்க்குவி ளம்பிடக் காப்பதே.

ஏகவரை கண்டம் அவ்வரை யுணர்த்தல்
போகநெறி பேசும் புத்தியுள வானும்
தாகநெறி குறியுந் தான்கண்ட வேதன்
வாகநெறி யுடலம் வாழ்கருப் பாமே (1)

வாழ்கருப் போமென வளர்ந்திடுங் குயவனில்
தாழ்கருப் போஅயன் தானது உயிராம்
ஆழ்கருப் பென்று அனற்பட மேற் கொளப்
பாழ்கருப் போகால் பாவித்த காரமே (2)

பாவித்தநான்கும் பகர்ந்தது எட்டெனத்
தாவித்துச் சேர்க்கத் தனிப்பட வொன்றும்
வாவித்த ரவியும் வளர்மதி யுருப்படும்
காவித்து குயவனூர் காலடி பாரே (3)

காலடி நுணுக்கம் கண்ட வெழுத்து
நூலடி வரையில் நுகர்ந்திடு தீமென
சேலவுண் ணுக்கிற் சேர்த்து அடக்கிடப்
பாலடி நோக்கம் பரந்துண் ணு மமுதமே (4)

பரந்துணு மமுதம் பரவிய எழுத்தை
யிரந்துனே ராண்டு யிருக்குஞ் சமாதி
கிரந்துணு முயிர்பார் நெறிமூன்று காலம்
வரந்துணத் தேகம் வச்சிர தேகமே (5)

வச்சிரத் தேகமாய் வாழவொன் றெழுத்துள்ளே
உச்சிர மாகவுட் கமலத் தென்னுதி
நிச்சிரம் போலவே நிலைப்படு மனத்தால்
அச்சிர மமுதமுஞ் சமாதிக்கிக் கேளே (6)

சமாதியுந் தீட்சையுந் தானது வொன்றே
அமாதிக் கிழமுனம் அதிர்ந்திடும் பொருளதாம்
எமாதிப் பொருளென் றெவரெனக் காண்பர்
உமாதிக் காவெனும் ஊவெனு மிரண்டே (7)

ஊவெனு மிரண்டே உருப்பட் டறிந்தாற்
காவெனு முயிராங் கண்ட எழுத்துடன்
தாவெனு மிரண்டாய்த் தம்பன மாகும்
ஆவெனு வாசி அருள்பெற் றுடுக்குமே (8)

அருள்பெற் றுடுக்கும் அன்புகற் பொருளே
இருள்பெற் றுடுக்கும் இரவிவெண் மதியாம்
உருள்பெற் றுடுக்கும் உற்றதோர் பொருளெனக்
கருள்பெற் றேங்கும் கனத்த மயனமே (9)

மயனமென் றெண்ணி மாவுடற் பொருளே
அயனமென் றெண்ணி அவ்வாசிப்பார்த்திடு
கயனமென் றுன்னிக் கண்டிடும் வாசியை
வயனமென் றுன்னு வாசித்த காயமே (10)

வாசித்த காயம் வளர்கோடி பானுவாம்
நேசித்து ஒன்றாய் நிலைப்படுங் காரணம்
பேசித்து மீசனும் பெலப்படுஞ் சூதமாம்
ஆசித்துப் பாசம் அறுத்திடுங் காணவே (11)

அறுத்திடுங் கண்டத்தி லணைத்தூது சுண்ணமாம்
வெறுத்திடுஞ் சுண்ணமும் விமலியைக் கட்டிடும்
பொருத்திடு முந்தியிற் பொறியென வூதிட
வெறுத்திடு மாசை வீரனுக் கொக்குமே (12)

வீரனு மவனு மென்பார் சமாதியில்
தீரனு மவனுந் திரப்பட்ட யோகிகாண்
பூரனு மாலும் பொருந்திட மறியார்
கூரெனும் வேதாந்தங் குற்றெழுத் தப்பா (13)

குத்தெழுத் தானங் குறித்திட மறியார்
பத்தெழுத் தென்று பகர்ந்திடு மறியார்
வித்தெழுத் தேதான் மேவிடுஞ் சோதியை
உத்தெழுத் தென்றே உறைத்தவர் ஞானியே (14)

உரைத்தவர் பெரியோர் ஊவெனு மெழுத்தை
நிரைத்தவர் கண்டமாய் நிலைகண்ட சித்தர்
வரைத்தது வெழுத்தாம் வகாரக் கருப்பதாய்
நிறைத்தது வெழுத்து நேர் பதினாறே (15)

நேர்பதி னாறும் நிலைகண்ட வர்சிபார்
நேர்பதி னாறும்நின் றிடம் வீடுபார்
நேர்பதி னாறும் நிகழ்ந்திட யோகமாம்
நேர்பதி னாறுள் நின்றிடு மதியே (16)

நின்றிடு மதியை நிலையதைக் கண்டால்
துன்றிடு மதிதான் தோன்றிடும் ரவியும்
என்றிட மீருவ ரேகின தறியார்
கொன்றிட மாறிற் குவிர்ந்திடு முயிரே (17)

குவிர்ந்திடு முயிரைக் குறித்துநீ பாரு
அவிர்ந்திடு மோவினி அப்போ வெளிப்படும்
தவிர்ந்திடு முயிரே தானது கருப்பாம்
பவிர்ந்திடுஞ் சமாதி பருவத்தைக் கேளே (18)

பருவத்திற் குகைபது பார்த்துநீ கட்டிடு
திருவத்திற் குகைக்கு நேர்பதி பற்பமுந்
துருவத்திற் போட்டுத் தோன்றிடுஞ் சமாதி
அருவத்தில் நின்று அவ்விடம் பாரே (19)

அவ்விட மான ஆகாசப் பொருளை
துவ்விட மாகத் தோன்றிடு நிரும்பன்
கவ்விட மானகருப்பட் டிதுவை
எவ்விட மாக வெடுத்துண் ணுவீரே (20)

எடுத்துணு மிதுமுன் னெடுத்திடு சமாதி
அடுத்துணு கருப்பெலா மகன்றிடும் பாரு
தொடுத்துணத் தேகஞ் சோதி மயமாம்
கடுத்துண வாசி கரையிலைப் போக்கே (21)

கரையிலைப் போக்கைக் கண்டிடு சமாதி
விரையிலை யென்றது வித்தது பாரு
உரையிலக் காய முள்ளதப் பொருளே
நிரையிலை யென்று நிகழ்த்திடுஞ் சித்தரே (22)

நிகழ்த்திடுஞ் சித்தர் நிலையதைக் காணார்
பகழ்த்திடுஞ் சமாதி பாவென் றறியார்
உகழ்த்திடுஞ் சோதி யுள்ளுடம் பறியார்
அகழ்த்திடும் வாசி அக்கண்ட மறியார் (23)

அக்கண்டம் நின்று அணைத்தூது வாசியை
உக்கண்டம் பார்த்தே உணர்த்திடு கண்டத்தில்
நிக்கண்டம் போல நிலைத்த துன்சமாதி
விக்கண்ட மானது வெளிப்படுஞ் சோதியே (24)

வெளிப்படு நான்கும் மேவீடு மெட்டினிற்
சுளிப்படு மூர்த்தி சோதிப் பொருளதாம்
களிப்படும் வாசி கம்மென வுலவாம்
தெளிப்படு ஞானஞ் சித்திக்கும் பாரே (25)

சித்திக் கிருப்பிடம் தெளிவதைக் காணார்
பத்திக்கும் யோகிகள் பாவிகள் காணார்
வெத்திக்கும் பேசி விருதுகள் செய்வார்
முத்திக்குக் காலை முனையறி யாரே (26)

முனையை யறியார் மூடர்க்கு ஞானம்
தனையை யறியார் சண்டாள லோபர்
இனையை யறியார் இருமூன்று முண்ணூர்
அனையக் கண்ட மவ்விட மூதே (27)

அவ்விட மேது அவ்வென் றறிந்திடு
உவ்விட மான உற்பன மதுவாம்
பவ்விட மான பாருசற் குருவை
எவ்விட மென்று எடுத்திடுவ் குருவே (28)

பாவிக்குச் சமாதி பலனனுகிட்டா
தாவிக்கும் விட்ட குறைபதிற் றங்கும்
சேவிக்குங் காலம் நேர்படக் கிட்டும்
ஆவிக் கிருபத் தொன்பான் முடிந்ததே (29)

அகஸ்தியர் வாசிக் கூறி சமாதி முற்றிற்று.

உ

பரமபதி துணை,

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய.

# குருநூல் ஐம்பதுக்குச் சுருக்கம்நய.

### காப்பு கலித்துறை.

கூடவன் கடிக்கக் குளிர்வாடை வீசுங் குருமுகமே
மூடவன் துயரைத் துலைத்தருள் மூத்தர்கள் வெற்றிகொள்ளும்
நடன மெனக்கருள் வஞ்சமி லாதன்பு நாயகியை
தொடவுமென் னுளைச்சியைத் தோதக மாக்கும்நின் தும்பிக்கையே. (1)

மைந்நாக பர்வத மென்றுசொன் னார்சித்தர் மாறுபாடாய்
செய்ந்நாகந் துத்தநல் நாகமல் லால்த்துணைச் சீர்பெருக
மெய்ந்நாகபரி மாய்ப்பாஷைகை பாக விதமறியார்
செய்ந்நாக மாமிஞ்ச் சேயிழை மாதர்கள் சித்தமிதே (2)

சித்தத்திற் கண்ட பதஞ்சலி சித்தி செயமுமதாய்
சித்தத்திற் கண்டது நாதவிந் தேகப்பு சித்தியதில்
சித்தத்தில் நாகம் பலம்பத்து வாங்கிநின் சித்தம்வைத்து
சித்த முருகிய போது நிகழ்வித்து நாதமிதே. (3)

நாதவிந் தான பலமூன்று போதுமே நாயிக்கிச்
சேதம் வராமல் இருப்புக் கரண்டியிற் தேய்த்துவிட
வேதமுஞ் சொன்னது சாமமொன்றே மிகச்சீர்படுத்த
காதமல் லோவுதைக் கல்வத்திற் போட்டுக் கசடறவே. (4)

அறவே வரைத்தும் அனல்வாட்டி விட்டும் அமர்த்திவாத்
தறவே யினியதைச் சோடச சாரணை சார்த்தியபின்
இரவே யொருபுடம் போட்டுவிட் டேளெட்டு வாயிதனில்
ஒருவே தணியில் குருவென்ற தாச்சுவே யுத்தமனே. (5)

### வேறு

வேறென்று சொன்னதென்ன வெண்கா ரத்தை
விட்டாக்கா லுருகியது உகந்து நிற்கும்
மாறுபடா தின்னூலை மதித்துப் பாரு
மனம்பொருத்துப் பலத்துக்கோர் அரைக்களஞ்சி
வேறுவித மெண்ணாதே வெள்ளி யிட்டு
விருதாக இரண்டுருகு கொடுத்துப் பாரு
தாறுமாறாகயிதை விடவே வேண்டாம்
சுண்டாள ஊறல்போம் பொன்பொய்யாகே. (6)

ஜோ நீர்

பொய்யாதே யின்னமொரு களவு கேளு
புகலுவோம் மயிலாடுங் கிரய தொன்று
ஐயோநீ அறிவோடு மயில்துத் தத்தை
ஆராய்ந்து கண்டுகொளு பலமூன்றுக்கு
வையாளி விடுவாளோ நாககன்னி
வயணமதாய்ப் பலம்பத்து முருகும் போது
கையாலே தூள்தூவிக் கரண்டி கொண்டு
கடுகவே தேய்த்துவிடு சாம்ப லாமே (7)

ஆமேதான் நாதவிந்து சரியாய்ச் சேர்த்தும்
அரைத்துவிடு சாமமது களங்கு சேரு
பாமேதான் பனியில்வைக்கச் செலம தாகும்
பரிந்தெடுத்தும் அரைத்தனலில் வாட்டல் செய்பச்
சாமேதான் இத்துருசு காரத் தாலே
சலவைதனைச் செய்யுமென்று முன்னோர் சொன்னார்
காமேதான் செனிக்குமல்லாற் சோடசத்திற்
கசடறவே சாரணையும் பூட்டிப்போடே (8)

போடுவாய் கம்பிமலை யென்றேசொன்ன
புளுகெல்லாம் விள்ளுகிறேன் புனிதாகேளு
வாடவே வேண்டாங்காண் கருவங்கத்தை
வயணமாய் முன்செய்த நாகத்தொப்பு
தேடுவாய் திட்டவட்ட மைநாகம்போல்
சீராகச் செய்துகொண்டு திடமாய்நில்லு
ஊடுவாய் வெள்ளிசெம்பி சீய்க்குபாரு
உலோகவெட்டை சாக்குடனே சேருசேரே. (9)

சேருநீ கணக்காகச் சேர்த்துநீயும்
திரமாக அரைத்துருட்டி அனலில்வாட்டி
காருநீ காகரசம் சரியாயப்பா
கருதியே தாக்கிவிடு செயநீராலே
வாருநீ யரைத்தபின்பு வில்லைபண்ணி
வாமுடனே சாரணையுஞ் செய்துமேதான்
பாருநீபண்புடனே பதன மாயப்
பக்குவமாய் முறைபோடே செய்துபோடே (10)

போடவே சோடசமே போதுங்கண்டாய்
புத்திசித்த மொருமனதாய்ப் பூண்டுகேளு
வாடவே வேண்டாக்காண் வெள்ளிசெம்பில்
வபணமதா யெட்டுக்கு ஒன்றுபோடு
தேடவே யெட்டுக்கு இரண்டுபோடு
தீர்க்கமதா வொருஒடு ஊதிப்போடு
நாடவே வேட்டைகுரு வொன்றேபோதும்
நாதவிந்து தண்ணீரித் தனையுமாமே. (11)

கோடிவேலி விபரம்.

ஆமடா கருநீலக் கொடிவேலியென்றும்
அப்பனே மறைவாகச் சொன்னதெல்லாம்
நாமடா வெளியாகச் சொல்லக்கேளு
நயமான அன்னபேதி யென்றஉப்பு
போமடா நாகத்தை மடக்கிப்போடப்
பொல்லாத ஊறலேத்தான் கொன்றேபோடும்
வேமடா பலம்பத்து நாகத்துக்கு
விழுதாக மூன்றுபலம் உப்பைப்பூட்டே. (12)

பூட்டியே பொடிசெய்து கிராசஞ்செய்யப்
புகழான நாகமுமே பொடியாய்ப்போகும்
கூட்டியே கரண்டிகொண்டு தேய்த்துவாட்டு
குறையாமற் சாமட்டுங் குமரிவேகும்
காட்டியே கல்வத்தி வரைத்துப்போடு
நலமான பொற்கையான் சாற்றைவிட்டு
மாட்டியே சோடசமாஞ் சாரணைக்குள்
மாறும்வீள் ளாதேயெலி காரந்தானே. (13)

தானான செந்தூர மானபின்பு
தவறாமல் விருபலவெண் காரமிட்டு
மானான பொற்கையான் சாறேபோதும்
மாசற்ற குருவாச்சு மாட்டிப்போடு
வேனான வெள்ளியிலே யெட்டுக்கொன்று
விருதாக இரண்டெடைக்குக் குருவைத்தாக்கு
தேனான மாத்துகளைப் பார்த்துக்கொண்டு
செல்வனே செம்புகொஞ்சம் சேர்த்துக்கொள்ளே. (14)

### பூநீருச் சுண்ணம்.

சேர்த்தபின்னு பின்னமொரு கருவைக்கேளு
சேதமில்லை செந்தூர வைப்புக்கெல்லாம்
காத்துமெடு பூநீறு சுத்திசெய்து
கருணையாத் தீட்சைவைத்துத் தீர்ந்தஉப்பு
தோத்தாதே யிப்படித்தான் சுத்திசெய்யத்
துணிந்தல்லோ கருவாளி செய்வான்பாரு
பர்த்தவருக் கிவ்வுப்ப தொன்றேபோதும்
பரிகாரி பூவாத்தாள் யென்றுபேரே. (15)

### வேடியுப்புச் சுண்ணம்.

பேராலே யின்னமொரு மறைப்பைக்கேளு
பெருமையுள்ள வேந்தனுப்பு கம்பியுப்பு
யாராலே முடியுமப்பா சுண்ணம்பிட்டே
அவ்வெடைதான் உப்பிட்டுக் கரைத்துப்போடு
நீராலே கரைத்துநல்ல தெளிவுவாங்கில்
நிகரற்ற தீட்சைக்கு நிற்கும்உப்பு
சிராகக் கடைசியிற்சுண் ணம்புபோடு
திறமாக அரைத்துருட்டிப் பில்லைசெய்யே. (16)

பில்லையது புடம்போடச் சுண்ணம்பாகும்
பேசாதே பொடிசெய்து கரைத்துப்போடு
தொல்லையில்லை காய்ச்சியெடு தெளிவாய்க்காணும்
சுருதியிலே காட்டார்கள் சித்தர்தானும்
அல்லென்று விடாமலுப்புச் சுண்ணஞ்செய்தால்
ஆச்சரியஞ் சுண்ணம்புக் காடேயென்பார்
இல்லையென்று சொல்லாதே சரக்கையெல்லாம்
எளிதாகக் கொன்றுவிடும் எடுத்தும் ஆடே (17)

ஆடுவாய் இந்தஉப்பாம் ஒன்றினாலே
ஆடினேன் பொன்வித்தை வெள்ளிவித்தை
தேடுவாய் புத்தியிதை பெடைகள்கண்டால்
செகசாலவித்தையெல்லாம் வெல்வாய்போடா
கூடுவாய் கருவங்கம் அடிப்படைதான்
குலாவியிடுபலம்பத்து முருகும்போது
நாடுவாய் பூநீறு பலமுமூன்று
நாட்டியதைக் கரண்டிகொண்டு தேய்த்துப்பாரே. (18)

தேய்த்தபின்பு சாரணையுந் திட்சைசெய்து
சீராகக் கரைத்தரைத்துத் தெளிவுவாங்கி
சாய்ந்தபின்பு அதைப்போக்கிக் கம்பிச்சுண்ணம்
சத்தூட்டி மூன்றுபலஞ் சேருசேரு
காத்துவை அரைத்துருட்டிற் பன்மூன்றுச்சு
காட்டாதே யிப்படியே துத்தநாகம்
போத்துமடா தவசெபங்கள் பண்ணிக்கொள்ளப்
புண்ணியனே கிட்டிடுந்தே வியைநீகேளே. (19)

கேளுமே பூஜையிலே ஆத்தாள் சொல்வாள்
கெவிப்பாகச் செய்துகொண்டால் கிட்டும்கிட்டும்
ஆளுமே அட்டசத்தி அட்டதூக்கை
அந்தமட்டில் மாண்பரையும் அடக்கிக்கொள்வார்
மீளுமே தொழிலெல்லாந் தேவமாயை
மேதினியோர் திருடரப்பா விள்ளவேண்டாம்
தானுவாய் தேவிபதம் மெத்தநன்றும்
தவத்தொழிலைவெளிவிட்டுச் சொல்லொண்ணுதே. (20)

சொன்னதொரு செந்தூரக் காட்டுக்கெல்லாம்
சுளுவாகப் பூநீறு சொன்னேன்முன்னே
கன்னமிடுங் கன்னக்கோல் துத்தநாகம்
களவரியார் நாகமணி பீசமென்பார்
அன்னமிடுந் தாயாருக் கரையில்நாகம்
ஆத்தாளாய்ப் பிரிந்திட்ட ஆடைபாரு
சொன்னபொருள் தப்பாது செய்துபாரு
துறையாகச் சிவவல்லி தந்தாள்பாரே (21)

தந்தாளே வல்லியவ ளெடுத்தமார்க்கம்
சதிபதியாஞ் சித்தர்சவுக் காரமென்பார்
முந்தியுரை கருவங்க முறையைப்போலே
மூதண்டங் கிளித்தாடும் மோசமில்லை
சொந்தநீல கண்ட ரிப்படியே செய்த
துறையெல்லாம் இரண்டுக்காம்ஆணும்பெண்ணும்
தந்திரமாய்ப் பாராதே தவளம்பண்ணி
தமிழதிந்து வெண்காரம் பிறகுசேரே. (22)

திருசாசம்

சேரவே யின்னமொரு கருவைக்கேளு
 செகத்திலே ஒருவருக்குந் தெரியாதப்பா
பூரவே திருசுகொண்டு மடக்கச்சொன்னூர்
 புகழ்பெரிய சூதத்தைக் கட்டுவாய்நீ
தீரவே மயில்துத்தம் சூதமொன்று
 சேர்த்தரைத்தே அனல்வாட்டி யிட்டுக்கொண்டு
பாரமோ சோடசந்தான் வாய்நீராலே
 பதரும லரைத்துருட்டி வில்லைபண்ணே (23)

பண்ணியே அனல்வாட்டித் தீர்தாற்கேளு
 பழிகாரத் திருசினது காரத்தாலே
கண்ணியே பராசத்தி ஓட்டமெல்லாம்
 கசடற்று வெள்ளைநிறந் தவளமாச்சு
எண்ணியே வெங்காரம் பொறித்துப்போடே
 யிடையதுவு மரைப்பலந்தான் போதுங்கண்டாய்
சண்ணிவிடும் வெள்ளிசெம்பில் வேதைபாரு
 சலியாதே திருசல்லோ வேதைகாட்டே (24)

காட்டுமே பெட்டரைதான் கண்டுகொள்ளு
 கலங்காதே யித்தொழிலைக் கருதிப்பாரு
பூட்டுமே நான்சொன்ன நாககன்னி
 பொல்லாத பெண்ணப்பா மோகமெத்த
தாட்டிகமாய்ப் பலம்பத்து நாகத்துக்குத்
 தயவான புருஷனப்பா நீலகண்டன்
ஓட்டிவிட மாட்டான்காண் சரியேபோடு
 ஓகோகோ பொடித்தரைதநுத் தேவைதூவே. (25)

தேவையே உருகையிலே கரண்டிகொண்டு
 தேய்த்துவிடு தவளமாய் நீறிநிற்கும்
ஆவியே யெல்லாந்தான் கலந்துகொண்டால்
 அரைக்கணமும் பிரியாது கட்டிக்கொள்ளும்
சாவியில்லை யிப்படிச்சோ டசமுந்தீர்ந்தாள்
 சண்டாள ஊறலெல்லாம் பறந்துபோகும்
மேவியே சலவைசெய்ய வெள்ளையாச்சு
 வெங்காரம் தனைப்பொரித்துப் போடுபோடே (26)

போடுவா யெடைகண் டெட்டுக்கொன்று
பூட்டியரை மெழுகாகும் சாமமட்டும்
தேடுவாய் மாத்திரையை ரவியிற்போடு
செல்வனே மூன்றுநா ளுரைந்தபின்பு
நாடுவாய் வெள்ளிசெம்பில் எட்டுக்கொன்று
நாட்டிவிடு குருவப்பா வேதைகாணும்
சூடுவாய் ஒருஓடு ஊதிப்போடு
துறையறிந்து கருவங்க மிதுபோல்செய்யே. (27)

செய்திடவுஞ் சோடசஞ்சா ரணையேதீரு
சுளுவாகத் தவளமாய் வைத்துக்கொண்டு
கொய்திடவு முறையதனைச் சொல்லக்கேளு
குணங்காதே தவளமொன்று லிங்கமொன்று
எய்திடவே யிரண்டுமொன்று யரைத்துக்கூட்டி
யிலையாதே மாத்திரையைக் குப்பிக்கேற்று
வைதிடவே யெரித்துவிடு கட்டிப்போச்சு
வளமான வெள்ளியிலே தாக்கிடாயே. (28)

தாக்குவா யின்னமொரு முறையைக் கேளு
தமிநீறுங் கம்பியுப்புச் சுண்ணமொன்று
போக்குவாய் சாமமது நவச்சாரத்தைப்
புகட்டியரை யவ்வெடைக்குப் பூட்டிக்கொண்டே
யாக்குவாய் செம்பதுவும் பலமஞ்சுக்கொன்
றுனபலங் குருமூன்று தாக்குவாய்நீ
வாக்குப்போல் பின்பெடுத்துக் கருவங்கத்தவ்ளம்
மன்னுமந்த எடைதாக்கு பிறகூதிப்போடே. (29)

ஊதினாற் களங்கத்துச் செம்புசுத்தி
ஒருவருக்குந் தோணவில்லை செய்துபாரு
பூதியணி வெள்ளியிலே யேழு போதும்
பூட்டிவிடி லிச்செம்பு மூன்று மப்பா
பாதிநிறைபிரையணிந்த ஈசன் மெச்சிப்
பழம்பொன்னு மிதுவல்லோ வென்றார் கேளு
நீதியிலே செய்துவைத்த குருவொன் றிட்டால்!
நிலைக்குமடா தங்கமது நிற்கும் பாரே. (30)

அகஸ்தியர் குருநூல் ஐம்பதுக்குச் சுருக்கம் ௩௰. முற்றிற்று

உ

பரமபதிதுணை

அகஸ்தியர் திருவாய்மலர்ந்தருளிய.

# செயநீர்க் குருநூல் ௩௰௧.

ஆதியாம் பராபரத்தி னிடத்தில் மேவும்
அம்பரையா மவுனசத்தி பாதம்காப்பு
சோதியாய் நின்றிலங்கும் வாணிபாதம்
சூட்சாதி மூலமெனுஞ் சுடரே காப்பு
காதலுடன் செந்தமிழ் மா முனிவ னோதும்
காவியமா மாயிரத்தின் கமலங் காப்பு
ஆதியந்த மில்லாத நந்திகாப்பு
ஆதார நிராதாரத் தம்மைகாப்பே. (1)

காப்பான சரஸ்வதியுங் கந்தன் தானும்
கமலத்தில் வீற்றிருந்த பிரமன் றானும்
மூப்பான பிர்மாவும் விஷ்ணு வாலே
முழங்க வந்த பரப்பரம ரூபங் காட்டித்
தாப்பான யிஸ்பரியு மென்னைப் பெற்றாள்
தாயாகு மவள்பாதந் தலைமேற் கொண்டு
சேப்பான மூலநிந்தை வணங்கி நின்று
செப்புகிறேன் கருக்குருவா மிந்தநூலே, (2)

இந்தநூல் முப்பத்தொன் றெடுத்துப்பாடி
என்மகனே புலத்தியனே யேகாந்தத்தில்
வந்தனமாய் வந்தார்கள் சித்தர் கூடி
வணங்கியவ ரேதுசொல்வார் வண்மையாக
இந்தநூ லுலகத்தி லீய்ந்தா யானால்
இயல்பான வாதமது வெளிதா மென்றார்
சிந்தைமகிழ்ந் திந்த நூ லாருக் கென்றால்
சிவயோகிக் காகுமென்றேன் தெளிந் திட்டாரே (3)

தெளிந்திட்ட இந்நூல் தான் சித்தர்க் காகும்
    செகத்திலே மானிடர்கட் கீந்தோர் தாமும்
அளிந்திட்ட வாகிகெட்டு மனதுங் கெட்டே
    அவருடலைப் பேணமல் லலைவா ரப்பா
இளிந்திட்ட நரகத்தி லழுந்து வார்கள்
    என்குருவின் சாபத்தைப் பொருளாக் காமல்
பளிந்திட்ட மானிடர்க்கு மீந்தா யானுற்
    படியென்று தலைதெரிக்கும் பகர்ந்திட்டேனே. (4)

பகர்ந்திட்டேன் காவியந்தா னுயிரத்திற்
    பாலகனே புலத்தியனே இராச யோகி
மகிழ்ந்திட்டேன் சக்கரங்கள் மந்தி ரங்கள்
    வளமான சக்கரங்கள் சரக்கு வைப்பு
திகழ்ந்திட்டேன் கலைக்ஞானங் குருநூ லாக
    நிகழ்த்தினேன் பனிரெண்டு நூற்றுக் குள்ளே
புகழ்ந்திட்டேன் அறுபத்து நாலு சித்தும்
    புரிவாகத் தையிலமுட னின்னங் கேளே (5)

கேளப்பா மெழுகுடன் செந் தூரப் போக்கும்
    கெடியான சவுக்காரம் வைக்கும் பாகம்
வாளப்பா தீட்சையது வழலைக்குந் தான்
    வளமான முப்பூவு மனந்தஞ் சொன்னேம்
தேளப்பா கொட்டுதல் போற் பூமி நாதம்
    தெளிந்திடவே நான் சொன்னேன் ஞானத் தோடு
தாளப்பா சவுமியசா கரத்திற் றூனும்
    சகலசித்தும் வசனித்தேன் தயவாய்த் தானே. (6)

தானென்ற சதுர்காண்டம் நாலுஞ் சொன்னேன்
    தன்மையுள்ள வயித்தியமும் வாத மாகத்
தேனென்ற புலத்தியனே யிந்திர சாலம்
    திறமான மாந்திரியம் வெகுவாய்ச் சொன்னேன்
கோனென்ற ஆறுமுகச் சத்த காண்டம்
    கூறினேன். சகலதொழில் குடோரி யாகத்
தாரனென்ற இக்காண்டம் மூன்றுஞ் சொன்னேன்
    சாற்றியே காட்சாத்தைச் சாற்றி னேனே (7)

சாற்றினேன் மகிழ்ந்தேகாட் சாத்தைத் தானும்
 தாண்டவஞ்செய் யாயிரத்தெட் டெழுத்துஞ் சொன் (னேன்
தேற்றினேன் மந்திரமும் அட்ட சித்தும்
 தெளிவாக யிந்நூலிற் றெளிந்து பாரு
மாற்றுயர்வைத் தோடுகின்ற வாதி யானல்
 மவுனத்தி லாறுதலந் தெரிசிப்பாய் மேல்
தோற்றுத தொன்றுமில்லை யெல்லாந் தோற்றும்
 தொல்லுலகி லட்டசித்து மாட்டிப்பாரே. (8)

பாரப்பா கேசரமாம் வித்தை நன்றாய்ப்
 பார்ப்பதற்கு நூறதிலே பலன்கள் தோன்றும்
நேரப்பா யெண்ணூறி லெக்ய காண்டம்
 நிலைத்துதடா திராவகந்தான் நேர்மையாலே
காரப்பா அறுநூறிற் கற்பஞ் சொன்னேன்
 கருவான பரிபாஷை யைந்நூ றுக்குள்
தேரப்பா கட்டுவகை திறமாய்ச் சொன்னேன்
 திடவான்நீ வழலையினுர் கட்டுகெட்டே. (9)

கட்டுதற்கு வழலைவிட்டுக் கட்டா தப்பா
 கைலாசச் சட்டைமுனி யிருநூற் றைத்தான்
முட்டுதற்குத் திருமூலர் கிழித்த தாலே
 முறையோடே சுந்தரந்தான் நூற்றுப் பத்தில்
தொட்டுவிடச் சொன்னபடி வழலை செய்து
 தொடுகுறிபோற் சரக்குகள் கட்டி னூர்கள்
மட்டுவிடா சானூற்றில் மெழுகைச் சொன்னேன்
 வயித்தியபூ ரணமாக வழுத்தினேனே. (10)

வழுத்தினேன் வயித்தியபூ ரணத்திற் ருனும்
 வளமான பற்பங்கள் செந்தூ ரங்கள்
அழுத்தினேன் கிருதங்கள் ரசாய ணங்கள்
 அரிதான மாத்திரைகள் லேகி யங்கள்
விழுத்தினேன் கியாழங்கள் சூர்ணப் போக்கு
 விரிவாகக் குருமுறையும் தானே சொன்னேன்
கொழுத்தினேன் தத்துவமுந் நூறும் பாரு
 குணந்தோணும் வகாரசூத் திரத்தைக் கேளே, (11)

கேளப்பா முந்நூறு கர்ம காண்டம்
 கெடியாகச் சொன்னதொரு ரசபற் பந்தான்
வாளப்பா திராவகத்தில் வெண்மை யாகும்
 வகையான கெந்தகத்தின் திரீ ராலே
கேளப்பா முந்நூறு செந்தூ ரந்தான்
 கெடியாகத் திட் சைவிதி யிருநூறு ள்ளே
வாளப்பா இருநூறிற் பற்பஞ் சொன்னேன்
 வழிலையைநான் மறந்துவிட்டேன் வகையாய்ப் பாரே (12)

இருநூறக்குக்குரு

பாரப்பா மச்சமுனி வெண்ணூ றுள்ளே
 பத்மினியின் நாதத்தின் பருவஞ் சொன்னார்
தேரப்பா நாதத்தைச் செயநீர் செய்து
 தெளிவான பூநீறை யரைத்துக் கொண்டு
வாரப்பா வில்லைசெய்து அஞ்சு சுண்ணம்
 வாகான குகையில்வைத்து புடத்தைப் போட்டு
நேரப்பா சுண்ணம் பண விடைதான் கூட்டில்
 நிலைத்துதடா இருநூறிற் பற்பங் காணே. (13)

காணப்பா நூறுநூ றுறஞ் சொன்னேன்
 கருவான மூலிகையுங் கற்பப் போக்கும்
தோணப்பா கட்டுவகை நூறுஞ் சொன்னேன்
 தொடுகுறிபோல் நூற்றினிலே முப்பூச் சொன்னேன்
வேளப்பா என்பதிலே முப்பூ வோடு
 வெளியாக லோகமா ரணமுஞ் சொன்னேன்
மாணப்பா அறுபதிலே வாத முப்பூ
 மதியான கருக்கவெல்லாங் கருதி னேனே (14)

கருதினேன் ஐம்பதிலே ஆறுஞ் சொன்னேன்
 கலைக்கியானச் சுருக்கமது ஒன்ப துண்டு
திருதிபெற முப்பூவும் வழலை மார்க்கம்
 திடம்பெற்ற ஞான மொடு தீட்சை சொன்னேன்
பருதிமதி தோனுமடா காற்பத் தெட்டிற்
 பாடினே னுட்கருவும் வெளியாய்ச் சொன்னேன்
கிருதிபெனும் பற்பமுறை முப்பத் தஞ்சில்
 நிகழ்த்தினேன் பூபதியை நிசமாய்த் தானே. (15)

தானான முப்பதிலே அஞ்சு சொன்னேன்
தப்பாமல் வாதமுப் பதுவுஞ் சொன்னேன்
தேன்போலே யிந்தநூல் மூப்பத் தொன்றை
செகத்தோர்க்குத் காட்டாதே பதனம் பண்ணு
மான்மழுவை யேந்துமான் பாகம் நின்ற
மனோன்மணித்தாய் வரம்பெற்று வழுத்தி னேன்பான்
தேனான புலத்தியனே மச்ச கேந்திரன்
திறமாகும் நாதநீர் தெளிந்து காணே (16)

மூப்பூக்கருவிபரம்

காணப்பா மூப்பூவின் குருவைக் கேளு
கருணைபெற முப்பதென் றசனிகை யாகும்
வேணப்பா சிவந்தநிறச் சனிகை யானால்
வெகுகடினம் வெகுகடினம் விள்ள வேண்டாம்
பூணப்பா மான்நீதம் வாய்த்து தென்றால்
பூரமொடு கருநாவி கொளஞ்சி வண்டு
காணப்பா உரமோடு வீரஞ் சாரம்
கலக்கியே பனியில்வைக்கச் செயநீர் பாரே: (17)

பாரப்பா செயநீரைக் குப்பி தன்னிற்
பதனமாய் வைத்துநீ சொல்லக் கேளு
காரப்பா கடுங்காரச் சுண்ணம் போட்டுக்
கருவாக கலக்கியே வைத்தா யானல்
சீரப்பா சிவந்தநிறச் செயநீ ராகும்
சிவாயகுரு அனுவகையின் செயநீ ரென்பார்
வேரப்பா வேடியுப்புச் செயநீ ரென்பார்
விளங்கியதோர் மூலத்தின் செயநீர் தானே. (18)

தானான செயநீரா லனந்தம் வேதை
தயவாகு முப்பூவுஞ் சுண்ண மாகும்
தேனான நீலகண்டர் வெளுத்துப் போவார்
திறமான ஆதிவிந்து திரண்டு போகும்
கோனான மால்தேவி கட்டிப் போகும்
குறும்பருக்குச் சொல்லாதே குருவைப் போற்று
மானான பாஷாண பற்பங் கேளு
மகத்தான அண்டநீர் குகைபோற் பண்ணே (19)

பாஷண பற்பம்

பண்ணியே பாஷாணக் கட்டி வைத்துப்
பாலகனே நீதநீர் நிரம்ப விட்டுக்
கண்ணியமாய்ச் சில்லிட்டுச் சீலை செய்தால்
கனிவாகப் பத்தெருவிற் றவளம் போலாம்
உண்ணிலைவாழ் மனோன்மணியின் கருணை யாலே
யுரமாக ரசஞ்சேர்த்துப் புடத்தைப் போடு
ஒண்ணும்பின் முன்போலே புடத்தைப் போடு
உறுதியாம் பாஷாண பற்பந் தானே. (20)

பற்பமிது பணயெடைதான் தேனிற் கொண்டால்
பாலகனே மண்டலத்திற் சட்டை தள்ளும்
கற்பமென்றால் கோடிவரை யிருந்து பாரு
கனகமதா முன்தேகங் கற்போ லாகும்
சொற்பமதாய் பணவிடைதான் பற்பத் தாலே
துலக்கமதாம் வெள்ளீயம் நீரைக் கக்கும்
அற்பமென்றே உலகத்திற் சொன்ன யானால்
ஆகரா உனதுசிரம் வெடிக்குந் தானே (21)

முப்பூக்குரு

போமப்பர் முப்பூவை முப்ப துக்குள்
புகலுகிறேன் கொடியவெள்ளைக் காரியொன்று
நாமப்பா நடுவான\பாசம் ஒன்று
நலம்பெரிய ரவிபீசம் ஞலி லொன்று
காமப்பா விட்டசெய்நீ ராலே யாட்டு
கருவாக வில்லைசெய்து புடத்தைப் போடு
நாமப்பா அஞ்சுதரம் புடமே போட்டால்
நலமான சுண்ணமது நன்மை தானே. (22)

தானென்ற முப்பூவாற் சகலதொழி லாடும்
தயவாகப் பணஎடைதா னெதுக்கும் போடு
தேனென்ற செந்தூர பற்பத் துக்கும்
திடமாக மெழுகுக்கு முப்பூ வேணும்
மானென்ற உருக்கினத்துக் கானல் மைந்தா
மகத்தான சவ்வாது கூட்டி யாடு
தேனென்ற முப்பூவுஞ் சேர்ந்து தானற்
சிவசிவா உறுதியது திடந்தான் பாரே (23)

அண்டச்சுண்ணம்

பாரப்பா அண்டயென்ற கல்லை வாங்கிப்
பரிவான உவர்மண்ணார் சுத்தி செய்து
நேரப்பா பலம்பத்து நிறுத்துக் கொண்டு
நிலைத்தசிப்பி அண்டநீர் களஞ்சி நாலு
வாரப்பா சாரமொடு வீரங் காரம்
மால்தேவீ மனோசிலையுங் கெந்தி சீனம்
கூரப்பா களஞ்சி ரெண்டு நிறுத்துவாங்கி
குணமாக அங்நீரா லரைத்தும் அப்பே, (24)

அண்டவுப்பு

அப்பியே காயவைத்தாற் புடத்தில் நீறும்
அரகரா கெசபுடந்தா னாறிற் றாகில்
உப்பெடுக்க வகைகேளு பீங்கான் தன்னில்
ஊற்றுவாய் சுத்தகெங்கை படிநா லுக்குள்
துப்புரவா யண்டத்தைப் போட்டா யானால்
சுண்ணம்போல் கொதித்தங்கே வெளுத்து நீறும்
குப்பிற்காற் றேறாமற் றவறா மற்றான்
கொண்டுகலக் கியுமடைத்து வைத்துப் போற்றே (25)

போற்றுவாய் மண்டலத்தில் மூப்பூப் பூக்கும்
புலத்தியனே பதனை மேலாய் வழித்துக் கொண்டு
நாற்றிசையு மெச்சுகின்ற ஊசி நீரால்
நலமாகக் கரைத்துநீ தெளிவை வாங்கித்
தேற்றியே ஐந்துதிரம் ரவியிற் காய்ச்சு
தேசிகனே பாறையென்ற உப்பு மாகும்
ஆற்றலுள்ள கல்லுப்பு மிதுதா னாச்சு
அரகரா அண்டமென்ற விந்து வாலே (26)

விந்துவினால் விளைகிறது கல்லுப் பாகும்
நேரான நாதஉப்புச் சத்தி யாச்சு
விந்துவினா லல்லாத உலக முண்டோ
நிலைத்திருந்தார் பரப்பிரமம் விந்து வாலே
வந்தனமாய் விந்துநிலை தன்னைக் கண்டால்
மகத்தான பாறையுப்பு வளமாய்க் காணும்
சிந்தைமகிழ்ந் திந்தநூல் முப்பத் தொன்றுள்
செயமான கல்லுப்பைச் சொன்னேன் பாரே. (27)

சொன்னேனான் சிவனாணை உலகத்துள்ளே
சொல்லாதே பாவம்வருந் தூஷணிப் பார்
முன்னேனு னுயிரத்திற் சொன்ன சூட்சம்
மோசமில்லை யதையறிந்தே யிதனைச் செய்வாய்
பின்னேநீ வேறுவழி புகுந்தா யானால்
பெலமில்லை கல்லுப்புப் பிசகிப் போகும்
வின்னமது வாராமல் நூலைக் காத்து
வேதமிந்தச் சாத்திரத்தை வெளி விடாதே. (28)

விட்டதினு லாவதென்ன வென்று மீறி
விழிகெட்ட குருடரைப்போல் வெளியில் விட்டால்
அட்டதுட்டர் சென்னியிலே புத்து மேவும்
ஆயிரத்தெட் டுக்கோடி நரகில் வீழ்வார்
மட்டியவர் புத்திகளை விட்டு நீயும்
மகத்தான சூத்திரத்தை வணங்கிக் காப்பாய்
கட்டினேன் வாதம் பன்னிரண்டு நூறு
கருதினேன் சகலகலைக் கியானம் பாரே. (29)

பாரப்பா சகலகலை சேதி யெல்லாம்
பாடினே னதைச்சுருக்கி மூன்று நூறு
நூறப்பா ஆயிரத்தை நாலு சூத்திரம்
நூற்றியிரு பதுசொன்னே னதைக் குறுக்கிப்
பாரப்பா அறுபதிலே பாதி யாகப்
பாடினதா லிந்நூலிற் பலன்கள் தோணும்
நேரப்பா இதைக்குறுக்கிப் பத்து மூன்றும்
நிகழ்த்தினேன் எட்டுரெண்டும் பாட்டாய்த்தானே (30)

பாட்டாலே ஒரெழுத்தைச் சொல்லக் கேளு
பண்பாக அதன்விபரம் யாருஞ் சொல்லார்
எட்டிலே கிரண்டிற் சுழிதா னிட்டால்
இதன்பெருமை யாவருமே யறிய மாட்டார்
தாட்டிகமா யதைப்பூசை செய்து வந்தாற்
சகலருக்குந் தாயகமாம் அதுதா னப்பா
மேட்டிமையா யிதனாலே, பவிழ்தம் உண்டார்
மிகவேதான் நிஷ்டைசெய்வாய் நூல்தான் முற்றே. (31)

அகஸ்தியர் செயநீர்குருநூல் ௩௧. முற்றிற்று

உ

பரமபதி துணை

அகஸ்தியர் திருவாய்மலர்ந்தருளிய.

# சூட்சமுப்பு ௩௰௨.

ஆதியந்தங் கடந்து நின்ற சோதி பாதம்
அம்பரத்தில் அகண்டவெளி அரனார் பாதம்
வேதமுனி பதினெண்பேர் சித்தர் பாதம்
விளங்கிநின்ற வடுகனொடு கணேசர் பாதம்
சோதியருள் உமைபாதம் போற்றிசெய்து
சொல்லுகிறேன் ஞானவெளி துலங்குகின்ற
ஆதிமுனி பதினெண்பேர் முப்பு தன்னை
அறைகிறே னறிவுடைய பிள்ளை கட்கே (1)

பிள்ளையெனும் பிள்ளைகளே சொல்லக்கேளீர்
பெருவெளியாய்ச் சாத்திரத்தில் புலம்ப வேண்டாம்
எள்ளளவுந் தப்பில்லை மறைபோ யில்லை
இருநூற்றிலுரை சுண்ண மிதிலே சொல்வேன்
கள்ளமென்று பிள்ளைகட்கு நூலீயாதே
காரணமாங் குருவருளை மறந்து போவாய்
உள்ளபடி யிதிற்சொன்னே னுழைத்துப்பாரு
ஓகோகோ சிவன்பாதம் போற்றிசெய்யே (2)

செய்யப்பா பூசைஜெபவோமந் தர்ப்பணமாம்
சீக்கிரமாய் லட்சயத்தில் நிறுத்த வேணும்
பையப்பா ரேசகபூரகமும் பண்ணு
பரப்பிர்மந் தனையறிந்து பணிந்து போற்றி
கைமுறையைத் தவறாதே செய்து பாரு
கண்கண்ட வித்தையடா யாருஞ் சொல்லார்
பொய்யுரையாய்ச் சொல்லவில்லை யிந்நூல் மைந்தா
பூசைக்கும் பெரியோர்க்கும் வணக்கஞ்செய்யே (3)

செய்தபின்பு தானெழுந்து பதினெண் பேரைச்
சிந்தைதனிற் றியானித்து வேண்டிக்கொள்ளு
கைதமல ரானநீர் தன்னில் மூழ்கி
கங்கை மனோன்மணித்தாயே யென்று போற்றி
வையங்கள் தானரிய ஆற்றில் வந்து
வழங்குகின்ற மந்திரத்தைச் சொல்லுகின்றேன்
மெய்யாக மங் கங் அங் சிங் வங்கென் றோதி
மெய்நிறைந்த விதியினால் நூற்றெட் டோதே (4)

ஓதியபின் கரையேறி நடந்து சென்று
ஓம்நமசி வயமென்று உருவைச் சொல்லி
அடர்ந்துநின்ற ஆகாசந் தன்னைப் பார்த்து
ஆயிரத்தெட் டுருவோதி யப்பாற் சென்று
நடந்து அந்தத் தலந்தனிலே போய்நின் றேநீ
தைமாசி பங்குனி தர்ப்பணமே செய்து
முடங்கலொன்று மிலாப் பூர்வ பட்சந் தன்னில்
முதல்நாள்ரெண் டாந்திதியி லமுதங்கொள்ளே. (5)

கொள்ளவே இரவுநடுச் சாமந் தன்னிற்
குறித்துமயே ஸ்வரிதனக்குப் பூசைசெய்து
எள்ளளவுங் குறையாதே பொய்சொல் லாதே
ஏமமென்ற வித்தையது கைக்குட் கொண்டு
கள்ளமனந் தான்நீக்கிச் சாபந் தீர்த்துக்
கைகுவித்து பராபரத்தைத் தொழுது போற்றி
வள்ளல்குரு பராபரமே யெனக்குமிப்போ
வரந்தருக வேணுமென்று பணிந்து நில்லே. (6)

நின்றுகொண்டு பராபரத்தை வணங்கும்போது
நேமமதாய் அந்திரசல மிரங்கும் பாரு
குன்றலிலாச் சல்லாவை விரித்துப்போட்டு
குறிவைத்த மெழுகதனுற் காய்ச்சித்தேய்க்க
வென்றவிலன்ற அந்திரசலம் நிற்கு மப்போ
வேதைசெய்ய வேணுமென்றால் குப்பி தன்னிற்
குன்றலிலா மனதாலே பதனம் பண்ணிக்
கைமுறையாய்க் கொண்டுவந்து பதனஞ் செய்யே. (7)

செய்தெடுத்த ஜெயநீர்க்குப் பேரைக் கேளு
ஜெலக்கோடி செயநீர்க்கு அதிகப் பேராம்
சைதவராய் அந்திரசெய நீமரன றும்பேர்
களங்கமற்ற சாஸ்திரத்தி லநேகம் பேராம்
கொய்தமலர் பிரமநீரென் றும் பேராம்
கொள்கையற்ற மதிபீஜ மென்றும் பேராம்
சைனகமுனி சலநீறு என்றுமின்னுஞ்
சாஸ்திரத்தி லநேகம்பே ருண்டு சாற்றே. (8)

சாற்றியதோர் ஜெயநீரில் வீரம் பூரம்
சத்தில்லா லிங்கமுடன் வெடியுப் போடு
கூற்றனென்ற செயநீரா லாட்டும்போது
கொள்கையற்ற மெழுகாகும் யிருகிப் போகும்
மாற்றிதனை வட்டுப்போற் செய்து கொண்டு
வைததிடுவாய் ரவிமுகத்தில் மூன்று நாள்தான்
ஆற்றியதை அகல்வைத்து மேலேமூடி
அப்பனே சீலையது பேழுமெத்தே (9)

ஏத்தியே கதிர்முகத்திற் காயவைத்து
இயல்பான வெய்யவனைத் தொழு திறைஞ்சி
பாத்திரத்தில் மணலிட்டு அதின்மேல் வைத்துப்
பன்னிரண்டு சாமமட்டும் வன்னிமூட்டிக்
கோத்திரத்தில் விளங்குகின்ற வடுகன் தன்னைக்
கும்பிட்டு தீபமொடு தூபங் காட்டி
ஏத்தியே யிறக்கிடுவாய் பாத்திரத்தை
என்ன சொல்வேன் முருங்கம்பூ யிதுக்சொவ் வாதே (10)

ஒவ்வாது ஒவ்வுமடா மனம்பே யானல்
ஒக்கவதை நிறுத்துமடா யிச்செந் தூரம்
கவ்வாக ஒருவருக்குங் காண்பி யாதே
கனத்தபுத்தி அறிவதனுற் கண்டுகொள்ளு
மூவ்வாத ஐந்துமூன் றெட்டேயாகும்
மூடருக்குச் சொன்னதினுல் மனம்பேயாகும்
நவ்வாத நவலோகந் தன்னி லிட்டால்
நாடிப்பார் மாற்றதிகஞ் சொல்லப்போகா. (11)

போகாத பொருளுண்டோ யின்னு மைந்தா
புத்தியுடன் திரிகடுகிற் கொண்டா யானல்
போகாது காயமதி யிரும்புத் தூணும்
பொய்யென்ற நமன்தள்ளி மெய்யில் நின்று
வேகாத கால்கண்டு பரனைப் போற்றி
வெகுகோடி காலமட்டு மிருந்துவாழ்வாய்
ஆகாச மானசிவன் தன்னைக் கண்டு
அடையலாஞ் சாயுஜ்ய மடையலாமே. (12)

அடைய வென்று லின்னுமொரு வித்தை கேளு
அம்பரத்தைத் தொழுதிறைஞ்சி அருளிச் செய்வோம்
மடைதிறந்த செல்வமப்பா தடாகந் தன்னில்
வளர்ந்து நிற்கும் முப்பூவின் வண்மை கேளு
படைதிறந்து போனாலும் பாழ்போ காது
பார்த்தவர்க்குக் கொஞ்சமப்பா பார்நூல் சூட்சம்
விடைவிழுந்து தவழ்ந்தாலும் நூல்கொடாதே
விவேகியென்றால் நூல்கொடுத்து விடலாம்பாரே. (13)

விடல்நிறைந்த யேரியின்கீழ் வயல்சப்பாறை
விதமுனைத்தி ருக்குமதைக் கண்டு கொண்டு
வடல்நிறைந்த விரண்டான சாமந் தன்னில்
வசீகரத்தை வாவென்று நூற்றெட் டோதி
படல் நிறைந்த வெப்போடு கையிற் கொண்டு
பாத்திரத்தை கரமெடுத்துப் பணிந்து போற்றி
நடைபுகுந்து அவ்விடத்தி லெடுக்கும் போது
நான்சொல்வே னதினுடைய வாறு கேளே (14)

கேளப்பா பாத்திரத்தை யருகில் வைத்து
கெவனமதாய் கிறீம்றீம் றம்மென் றுதானே
கோளப்பா வாராமல் நூற்றெட் டோதி
கொடுமையென்ற பூநீற்றின் குறிப்பைக் கேளு
சூளப்பா பூமியிது பொங்கி மேலே
சுண்ணும்பு போலிருக்குஞ் சுருக்காம் மெத்த
ஆளப்பா கையினாற் ஜெட்டி டாதே
அப்பனே கையுங் கொப் பளமு தாமே (15)

தாமென்ற வெப்போலே தன்னி ஞலே
    தான்வாரிப் பாத்திரத்தி லிட்டுக் கொண்டு
போமென்ற மனைக்குத்தான் சென்றே அங்கு
    பூரணத்தைத் தொழுதிறைஞ்சிப் புனிதமாக
ஆமென்ற பொருள் நமக்குக் கிடைத்த தென்று
    ஆத்தாளைத் தொழுதிறைஞ்சி அன்பு கொண்டு
பூமென்ற பூநீற்றின் விபரங் கேளு
    புண்ணியனே நீபிழைக்கச் சொல்லுவேனே. (16)

சொல்லியதோர் பூநீற்றின் பெயரேதென்னில்
    சுருக்கான ரவிபீஜமென்றும் பேராம்
அல்லியதோர் பூகாசம் பூமிகாதம்
    ஆனதொரு சிவனுப்பு வெண்ணீரென்றும்
மல்லிகா தேவியுட மூலமென்றும்
    வாகாக முப்பூவுவென் றிதற்கும்பேராம்
சல்லியதோர் வாரத்துகரு வென்றுபேராம்
    சவுக்காரக் குருவென்று மிதுக்குப்பேரே. (17)

போரான பிரமனுப் பென்றுபேரே
    பெரிதான முதற்சரக் கென்றும்பேரு
காரான உப்பேகரு நாகமொன்று
    கருவான வழலைகடுங் காரமென்றும்
வாரான பிரமகற் சுண்ண மென்றும்
    வடுகனுப் பென்றும்பே ரனந்தங் கோடி
ஓராமல் யானறிந்த பேரிம் மாத்திரம்
    ஓகோகோ பாடினு ரனந்தம்பேரே. (18)

போரான பெரியோர்கள் வளப்பாய்ச்சொன்னர்
    பெருமையென்ற உப்பதனைச் சொல்லப்போமோ
ஊரான சுத்தஜல மதிலேவிட்டு
    ஊறவிட்டுக் கரைத்திறுத்தே அடுப்பிலேற்றி
ஆராமல் தீயெறிப்பாய் வற்றுமட்டும்
    அப்பனே யிறக்கிவைத்து வழித்துக்கொண்டு
ஏராமல் சுத்தஜலந் தன்னிலிட்டு
    இப்படியே மூன்றுதரம் விட்டுக்காய்ச்சே. (19)

காச்சியதோ ருப்பதில்முன் ஜெயநீர்விட்டு
கடுங்காரச் சுண்ணமதா யாட்டுஆட்டு
பூச்சியதோர் வட்டுபண்ணி ரவியிற்போடு
புதுவோட்டில் வைத்துமறு ஒடுமூடி
ஆச்சென்று ஒரொருவிற் புடத்தைப்போடு
ஆச்சரியம் சுண்ணமது யென்னசொல்வேன்
போச்சென்று யென்னாதே மகிழ்ந்திடாதே
பூசிக்கும் பெரியோர்க்குப் பூசைசெய்யே. (20)

செய்ததொரு சுண்ணமதைச் செம்பிலீயச்
செகசோதி மாற்றதுவும் ஐந்நூறுகும்
கொய்ததொரு குடவனிலே யீந்தாயாகிற்
கொள்கையிலா மாற்றதுவும் பதினாறுகும்
வையகத்தில் நவலோகந் தன்னிலீய
மாற்றுண்டோ வளமுண்டோ வணங்கிப்பாரு
ஐயனே மாற்றதிகமென்று சொல்லி
ஆறுவத்தாற் பேசாதே அடங்கிப்பாரே. (21)

அடங்கிப்பார் சித்தருக்கா யிரத்தெட்டாகும்
அன்புடைய முனிவருக்கோ ஐந்நூறுகும்
மூடங்களிலா தபோதனர்க்கு முப்பத்தாறும்
மூதண்ட வாதிக்கோ பத்தாமப்பா
சடம்போகா திருக்கவென்றார் சுண்ணங்கொள்ளு
சகசோதி தனைக்காண்பாய் சிவம்நீயாகும்
சடம்புகுந்து பெண்மாயை கொண்டயாகில்
சண்டாளா உனக்காமோ தவிர்ந்துபோமே. (22)

போகாத சுண்ணமது விராகன்ரெண்டும்
புனிதமுள்ள வாய்நீரால் துருசுகப்பி
வேகாதே வேகுமடா ரவிமுகத்தில்
வெந்துசுண்ணங் கடுங்கார மாகிநிற்கும்
கோகாத துருசுதனில் அனந்தம்வேதை
நறுக்கமற்ற பேரின்பத் தூணிப்பாரு
நேராகச் சுண்ணமதை யெடுத்துக்கொண்டு
நீநன்றாய்ச் சவுக்காரத் தப்பிப்போடே. (23)

போட்டாக்காற் சவுக்காரம் மலர்ந்த பூவாம்
பொல்லாத கடுங்காரம் வேதைகோடி
சாட்டாகும் கோய்க்குஅரைக் குன்றியீந்தால்
கண்கொள்ளா விபாதியெல்லாங் கலங்கிப்போகும்
பாட்டாக ஓடிவிடும் சரக்குக்கெல்லாம்
பண்பாக விராகனிடை பூசிப்போடு
ஒட்டாதே கட்டிவிடுஞ் சுண்ணமாகும்
ஒருகோடி வாதத்தி லனந்தங்கோடி
கூட்டாத செயநீர்கள் திராவகங்கள்
கொடிதான ஜெயநீர்க்கு விராகன்போடே (24)

போடாத யிச்சுண்ண மொன்று போடு
பொல்லாத காக்கையின்கண் ஆந்தைக் கண்ணும்
ஆடாத அரவினுட பித்துங் கூட்டி
அப்பனே வால்நீண்ட குருவிப் பித்தும்
கூடாத யிவையெல்லா மொன்றாய்க் கூட்டி
கொரோசனையும் முதற்பிடியல் கூடக் கூட்டி
வாடாத கல்வத்திற் போட்டு ஆட்டு
மைந்தனே மைபோலே யாகும் பாரே. (25)

மையெடுத்து மாருகத்திற் திரட்டிக் கொண்டு
வாகாக ஆவின்நெய் விளக்கில் வார்த்து
மெய்யான தாமரைநூல் அதனிற் போட்டு
விளக்கேற்றிக் காராமை யோட்டால் மூடி
பையவே மைவாங்கிப் பரணி சேர்த்துப்
பராபரத்தைத் தொழுதிறைஞ்சிப் பண்பாய்க் கேளு
கையாலே மையெடுத்துக் கண்ணிற் தீட்டு
கடுகிலையு மதிற்பாதி கண்டு கொள்ளே. (26)

கொள்ளவே மதிதனிலே நடக்கும் போது
கொடுஞ்சுருக்கா மைவேக மென்ன சொல்வேன்
விள்ளவே பேய்களொடு பிசாசு பூதம்
வெளிகண்டா லோடுமடா வெகுதூ ரத்திற்
கிள்ளவே தனமெலாங்கை வசமே யாகும்
கெடுசூனி யங்கள் முறைப் பாடுமோடும்
அள்ளவே யிக்கருவை வெளியிற் போட்டால்
அரனுனே உன்சிரசு தெரித்துப் போமே. (27)

தெரித்துபோ மின்னமொன்று சொல்லக் கேளு
 தெரிசனத்தி லெம்பெருமான் வந்து நிற்பார்
வரித்தவர்க்குப் புஷ்பவர்ச் சனைகள்செய்து
 வணங்கியே உன்பாதந் தாவென் ருக்கால்
சிரித்துமன மகிழ்ந்து சுகக் காக்ஷி தந்து
 சேயனே அப்படியே ஆகுமென்பார்
உரித்ததாய்ப் பின்னும் வெளி கடந்து நின்ற
 தோர்பாமாய் நின்றிலங்கி வாழ்வார் தாமே. (28)

தாமென்ற வங்கினியொன் றுரையக் கேளு
 தனைக்காணு வஞ்சினியாம் வித்தையப்பா
போமென்ற சுண்ணத்திற் குகைதான் செய்து
 புனிதமுள்ள சூதமதில் வைத்து மூடி
ஆமென்ற உப்பில்வைத் தெரிப்பாய் சாமம்
 அப்பவல்லோ மணியாகுத் திரண்டே போகும்
காமென்ற துருசுஞ் சாரணையுங் கூட்டி
 கட்டிபோல் மணியாக்கி வாயிற் போடே. (29)

போட்டல்லோ மேருவெல்லாந் தாண்டியோடிப்
 போதமுற்ற சித்தரையும் கண்டு சேவி
ஆட்டெல்லா மிதனுட்டம் வேறென் றில்லை
 அப்பவல்லோ சித்தனென்று மெச்சு வேனுன்
பூட்டெல்லா மிதின்பூட்டு வேறென் றில்லை
 பொல்லாத பிள்ளைகட்குக் காட்ட வேண்டாம்
சூட்டடுப்பி லிருந்ததொரு பூனை போலே
 சுட்டுமோ ளாதேசுடு வாதி யாமே. (30)

வாதியென்று சொன்னுக்காற் பூசை வேணும்
 மகத்தான ஜெபம்வேணும் போகம் வேணும்
பூதமுள்ள தாய்மாது யிரக்கம் வேணும்
 புத்தியுடன் நல்லோரை வணங்க வேணும்
வேதையொடு வைத்தியமும் அஷ்ட சித்தம்
 விரைந்துநன்றாய்ப் பார்த்தல் லோ அறிய வேணும்
போதமென்ற பிள்ளைகளே வெளியாய்ச் சொன்னேன்
 புத்தியுட னிந்நூலைப் புகழ்ந்து பாரே. (31)

பாரப்பா முப்பூயின் நூலுக் குள்ளே
        பாடிவைததேன் கருக்கமொடு விண்டு சொன்னேன்
ஆரப்பா அறிவார்முப் பத்திரெண்டு
        ஆச்சரியங் கோடியுண்டு வர்ணத் தாலே
வேரப்பா நூலதனைக் கொடுத்தா யானால்
        விளம்பியதோர் சாபங்கள் பொய்யா தப்பா
வீரப்பா பிழைப்பதற்கு நன்றாய்ச் சொன்னேன்
        விளக்கமுள்ள முப்பத்தி ரெண்டும் முற்றே (32)

அகத்தியர். சூட்சமுப்பு ௩௨. முற்றிற்று

உ

பாமபதி துணே.

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# மெய்ஞ்ஞான சூஸ்திரம் ௩௩.

(*)

காப்பு

கம்பத் தெழுத்தோ கடையெ ழுத்தோ
    கால மெல்லாங் கடந்தெழுத்தோ
உம்பர்க் குரிய உயிரெ ழுத்தோ
    ஒருக்கா விருக்கா வுயிரெ ழுத்தோ
செம்பொற் கிரியைச் சேர்ந்தெ ழுத்தோ
    சேர்ந்தோர்க் கென்றும் அருள்புரியும்
ஐம்பத்தோ ரட்சரத்தை யையா
    அகர முதலவ் வெழுத் தென்றார் (1)

நூல்

அகாமுத லவ்வெழுத்தும் ஆதியாகும்
    அளிந்தோர்க்கு இதிலேதான் வெளிய தாகும்
உகாமுதல் உயிரெழுத்தும் உண்மை யாகும்
    உற்றதொரு யிரண்டுக்குள் சோதியாகும்
நகரமுதல் மவ்வெழுத்தும் மந்திர மாகும்
    நமசிவய வென்றெழுத்து உயிரேயாகும்
மகாமுதல் மூன்றெழுத்தும் சிவமேயாகும்
    மற்றெழுத்துந் தெரிந்துகொள்ளு மெய்யாய்த்தானே (2)

மெய்யான குருபரனைப் பூசை பண்ணு
    வித்தைதந்த சற்குருவை நிதமும் போற்று
கையார மனமார ஞானஞ் சொல்லு
    காரணமாங் குருபதத்தைக் கருதிப் பாரு
வையமெல்லாங் கொண்டாடக் கருவைச் சொல்வேன்
    மதிகெட்டு விள்ளாதே மகிழ்ந் திடாதே
பொய்யாத வுபதேச குருவைப் போற்றிப்
    புகழாகப் பணிரெண்டு வருடங்காரே. (3)

சார்த்தாக்கால் ஓரெழுத்து வழியைச் சொல்வார்
கருச்சொல்வார் குருச்சொல்லார் களங்க மற்று
பார்த்தாக்கால் சித்திமுத்தி யிரண்டுஞ் சொல்வார்
பரிபாடை வாலைமூன் றெழுத்துஞ் சொல்வார்
சேர்த்தாக்ஷர லெட்டோடே யிரண்டுஞ் சொல்வார்
திறஞ்சொல்வார் நால்வகைக்கும் யிடமுஞ் சொல்வார்
பூத்தாக்கால் ஆயிரத்தெட் டிதழின் வாசி
பூங்கமலத் திருவடியைப் பூசை பண்ணே. (4)

பூசையென்ன மானதமாம் பூசையாகும்
புருவமையத் தொளிகண்டா லதுவே போதம்
ஆசையென்ற தற்றவிடங் கடந்த ஞானம்
அம்பரத்தைச் சேருவது பூசையாகும்
ஓசையென்ன வாசிவைத்து மூலத்தூணி
வுயர்ந்துநின்ற சிலம்பொலியே ஆசையாச்சு
பாசையென்ன பலவகையும் உற்றுப் பார்த்தால்
பகட்டாச்சு குருபதத்தைப் பணிய நன்றே (5)

நன்றான ரேசகத்தை முன்னே கேளு
நலமான பூரகத்தை வணங்கிக் கேளு
ஒன்றான கும்பகத்தை உற்றுக் கேளு
உண்மைசொன்ன விடங்கேளு உறுதிகேளு
இன்றாகம் பழகுவதின் கடிகை கேளு
இதஞ்சொன்னல் மூவருக்கும் வடிவங் கேளு
குன்றான குறிகுணங்கள் மூன்றுஞ் சொன்னல்
குருவுக்கு உடலுயிர்பொன் தத்தம் பண்ணே. (6)

பண்ணிநின்ற உடலாரு உயிர்தானரு
பகருகின்ற பொருளாரு உற்றாராரு
கண்ணிநின்ற குருவாரு பரந்தானரு
நலமான ஆதார மாறும்பாரு
கண்ணில்நின்ற ஒளிபாரு வெளியைப் பாரு
காலடங்கி யாடுகின்ற கருவைப்பாரு
விண்ணில் நின்று பொருள்சொன்ன 'குருவைப்போற்றி
வேதாந்தஞ் சித்தாந்த மிரண்டும் பாரே. (7)

வேதாந்தஞ் சித்தாந்தம் இரண்டு மென்ன
மேன்மையுள்ள பெரியோர்க்கு யெல்லா மொன்று
நாதாந்த நடனவொளி கண்ட பேர்க்கு
நானென்ற அகமோடு யெல்லாம் போச்சு
போதாந்தப் பொக்கிஷமாம் வாம பூசை
பூசித்து கும்பித்து உள்ளே ரேசி
கீதாந்த வொளியெழும்பி நாதங் கேட்கும்
கிருபைதரும் உண்டறிய மனதைக் கட்டே. (8)

மனந்தானே புத்தியாங் காரஞ் சித்தம்
மதியிரவி அண்டபிண்ட மான வாறும்
மனந்தானே சத்தி சிவமான ஞானம்
வாசிபர தேசிபர பிரமம் யாவும்
மனந்தானே நாதவிந்து ரூபா ரூபம்
வழிகனல்விண் புனல்மண்ண தானவாறும்
மனந்தானே உதித்தொடுங்கு மிடமிரண்டும்
வகைசொல்லச் சற்குருவா லெழுத்தைக் கேளே. (9)

கேளப்பா சிங்கென்று உள்ளே பூரி
கிருபையாய் வங்கென்று உள்ளே ரேசி
ஆளப்பா அங்கென்று உள்ளே கும்பி
ஐம் ஓம் சிம் வம்மென்று தியானஞ் செய்வாய்
சூளப்பா சுழிமுனைகண் சுழியி லெத்தச்
சொல்லுகிறேன் அம் உம் சிம் வம்ஓ மென்று
வாளப்பா ஓம்ஐயும் கிலியும் சௌவும்
வாசிவா உம் பரையே சிவாவா வென்றே (10)

என்னவே ரேசகமுப் பத்திரெண்டு
இயல்பான பூரகந்தான் பதினறுகும்
உண்ணவே கும்பகந்தா னெட்டெட்டாகும்
உயர்ந்து நின்ற பிராணயம் குறிசொற்கேட்டு
தினந்தச நாடிதா ரணையேயானல்
திரமறிந்து சையோக நிலையைப்பற்றி
கண்ணில்நின்ற யிடமறிந்து வாம பூசை
கருவான சிவயோகங் காண லாமே. (11)

ஆமென்றும் ஓமென்றும் பூசை யாச்சு
அறிவான புரியட்டத் திருந்து கொண்டு
நாமென்ற பிங்கலையில் தியான மந்திரம்
நங்மங்சிங் வங்யங்ஓம் யவசிமநவென்றும்
தாமென்ற மவுனத்தால் தியானஞ் செய்து
சதாசிவமாஞ் சுழிமுனையிற் றானும் நின்று
காமென்ற பரவெளியி னொளியைக்கண்டு
கருத்துடனே வாலையவள் பூசை பாரே. (12)

பார்க்கையிலே பவளஒளி பச்சை நீலம்
பருவான பொன்பசுமை வெண்மை அஞ்சும்
சேர்க்கையிலே சூரியனு ருதையம் போலே
செகசோதி பூரணத்தின் காந்தி காணும்
ஆக்கையிலே கொடுத்தபொருள் வாங்கு மாபோல்
அஞ்சுருவும் ஒன்றான அடியே தோணும்
காக்கையிலே திருவடியைச் சரண மென்று
காத்தவர்க்குத் தீங்கில்லை கருணை தானே. (13)

கருணைதரும் அக்கினியா தித்தன்சந்திரன்
கலந்தொன்றாய் நின்றதுபூரணமேயாகும்
பொருள்நயமா யறிபவனே புண்யவானும்
புகழ்சொன்ன சற்குருவே ஆசானுகும்
அருள்கிரண சோதியதா யுதிக்கு மேலே
ஆயிரத்தெட் டிதழ்மேலே அமுத கற்பம்
திருவறிந்து உண்டவனே சிவயோகி யாகும்
சிவசிவா காலறிந்தோன் சாகா னென்றே. (14)

சாகாத காலைநன்றாய்க் காண வேணும்
தணல்வேகாத் தலையறிந்து கூட வேணும்
போகாத புனலறிந்து உண்ண வேணும்
பொருளறிந்த சற்குருவைப் போற்ற வேணும்
வாகான மூன்றையுந்தான் தன்னுக் குள்ளே
வகைதெரிய வட்சபத்தை வணங்கிக் கேளு
ஆகாத தொன்றுமில்லை யெல்லா மாகும்
அறிவையறி பொருளாகுஞ் சித்தி யாமே. (15)

சித்தென்ன சிற்றின்பம் பேரின்ப மென்ன
        செல்காலம் நிகழ்காலம் வருங்கால மென்ன
சத்தென்ன சித்தென்ன ஆனந்த மென்ன
        சடமென்ன பொருளென்ன உயிர்தா னென்ன
வித்தென்ன மரமென்ன வேர்தானென்ன
        வெள்ளி யென்ன தங்கமென்ன லோகமென்ன
பத்தென்ன யெட்டென்ன ரெண்டுமென்ன
        பரிவான சிவமான விந்தைப்பாரே (16)

விந்துவட்டஞ் சுழிமுனைகண் ணொளியைப்பாரு
        வெளிரேகை சுளிரேகை நன்றாய்ப் பாரு
நந்திவட்டக் குண்டலியின் எழுத்தைப் பாரு
        நற்பரமாம் ஓரெழுத்தின் அறிவைப்பாரு
அந்தவட்டத் தோங்காரத் தணலைப் பாரு
        அஞ்சுபஞ்சாட் சரமாங்குஞ் சரத்தைப் பாரு
சிந்துவிட்டுப் போகாதே நிந்தைக் கட்டு
        நிலையாக வேதாந்தக் கயிற்றார் கட்டே. (17)

கட்டுவது மூன்றோடே அஞ்சைச்சேரு
        கலந்தெட்டு அதனோடே ரெண்டைச் சேரு
ஒட்டுவது பத்துடனே ரெண்டைச் சேரு
        உறுதியாய்ச் சேர்த்தபின்பு ஒக்கச்சேரு
முட்டுவது துவாதசமு மடங்கித்தானால்
        முனைசுழியாய் ஓரறிவுந் தோன்றுந் தோன்றும்
சட்டமுடன் சிவதீட்சை நன்றாய்க்கேளு
        சார்பரியப் பூரணநூல் தன்னைப் பாரே. (18)

நூல்பாரு கொர்ங்கணர்தன் கடைக்காண் டத்தில்
        நுணுக்கமெலா மதிற்றோன் றும் பூசை தீட்சை
பால்சீனி பழந்தேன்கற் கண்டோடைந்தைப்
        பாகமாய்த் திரட்டியுண்ட ருசிபோற் காணும்
மூலகுரு மந்திரமூ வாயி ரத்தில்
        மூட்டினார் நியாயவகை யெல்லாஞ் சொன்னார்
கால்பார்த்துத் தலைபார்த்து புனலைப்பார்த்துக்
        கண்காது மூக்குவாய் கண்டவாரே. (19)

கண்டத்தில் நின்றசித் தறிவைப்பாரு
　　கண்புருவத் திடைவெளியி னொளியைப்பாரு
தண்டுத்த நாசிநுனி வழியே யேறி
　　சண்முகமா முத்திரையைத் தாக்கிப்பாரு
அண்டத்தி லொளி தோற்றும் நடுவே நின்று
　　அங்குமிங்கு மெங்கி நின்ற அடவைப்பாரு
கண்டத்தின் முனைபார்குண் டலியைப்பாரு
　　கருவான மூலவா தாரம் பாரே. (20)

ஆதார மூலவட்டத் தசைவேவாசி
　　அபான குண்டலியைப்பார் பதமாயேறி
மீதான அனலெழுப்பி வெளிச்சம்பாரு
　　வெட்டவெளி ஓங்காரக் கம்பந் தோன்றும்
சூதான முச்சுடருமங்கே பாரு
　　துரிதுரியாதீதகண பதியைக் காண
பாதரா மேலெ கதியாய் ஓமென் றானு
　　பதியிலே அங் சங் கென் றெழுத்தை நாட்டே (21)

நாட்டம்பார் பவளவொளி பசும் பொன் பச்சை
　　நாடியிடை பிங்கலையின் சுழியைச் சுத்தும்
ஓட்டம்பார் நந்திகம்பத் தொளியை ப்பாரு
　　ஓங்கார முக்கோணம் சிம் வம் மென்று
ஆட்டம்பார் ஐங்கோணம் மேலே வட்டம்
　　அதன்மேலே நாலிதழின் யெழுத்தைப்போட்டு
தேட்டமுடன் பரவெளியைக் கண்டுகொள்ளச்
　　சிவசிவா மேல்வாசல் முட்டிப்பாரே. (22)

மூட்டியே வாசிவைத்துப் பிராணா யஞ்செய்
　　மூலகண பதியொடுவல் லபையுஞ்சித்தி
சூட்டியே அத்திமுடி மூலங் கண்டால்
　　சொல்வதென்ன சகலசித்தா மதின்மே லப்பா
பூட்டியே பிருதிவியாம் சுவாதிஷ்டானம்
　　பொன்னிறமாய் நாற்கோண மிதழா றக்கும்
தாட்டிகமாய்வாசிவைத் தோம்நம்வம் மென்று
　　சாதகமாய்ப் பிராணாயந் தாக்கக் கண்டே (23)

கண்டதொருபிரமன்கலை மகளுங் காணும்
கருத்திலே சர்வநிஷ்டை நினைக்கலாகும்
அண்டர் தொழும் நடனமிடும் வாலைபூசை
அந்திசந்தி உச்சியிலு மடைவாய்ச்செய்து
மண்டமணி பூரகமும் பிறைபோல் நிற்கும்
வட்டத்தில் பத்திதழாம் மாயனாரும்
சண்டாளர்க் குரையாதே யிந்தவித்தை
தாரணியில் மாயமதாய்ச் சாற்றுவீரே. (24)

மாயனும் பூரகந்தான் படிங்குவர்ணம்
மகராசி லட்சிமியும் மாலும்பாரு
ஆயனும் பச்சைமரகத மாமேனி
அம்மனே அருணனொளி காந்தியாகும்
தூயமாம் புரியட்டம் வாசிதேசி
சுகமான தேய்வுக்குச் சிவம் பொசிப்பாம்
ஞாயமாம் ஓம் மம் வம் மென்றுநாளும்
நாட்டமாய்ப் பிராணுபம் வரிசைசெய்யே. (25)

வரிசையாய்ச் சக்கரத்தின் முன்னேநின்று
வாசிசித்துங் கெவுனசித்தும் வரவே செய்வார்
பரிசையாய்நினைத்த தெல்லாஞ் சித்தியாகும்
பத்திமுத்தி யாய்மனத்துள் செபிக்கவேணும்
உரிசையா யண்டர்பதி யதற்குமேலே
உருத்திரன்றன் முக்கோண வட்டமேலே
சரிதையாய் பனிரெண்டு யிதலாய் நிற்கும்
சத்தியுடன் ருத்திரனுர் தன்னைப்போற்றே. (26)

தன்னைத்தான் காணஅம்உம் ஓம்ஆம்மென்று
சார்பாக வாசியெட்டு ரேசியாதே
உன்னைத்தா னறிவிக்குஞ் சம்மாரகர்த்தன்
உருக்காட்டிச் சூரியனும் பசுமைரூபம்
அன்னைத்தா னிருக்குமாஞ் சுழித்து விட்டு
அறிவான நினைவுக்குள் லிங்கபீடம்
பின்னைத்தா னதுவன்றி வேறேயுண்டோ
பிரிதிசொல்லக் கூடாது சின்மயமாமென்னே. (27)

சின்மயத்தின் செயலறிவார் சித்தர்முத்தர்
தேவர்களாந் தவமுனிவ ரிஷிகளாகும்
பொன்மயத்தின் செயலறிவார் வாதிசமுசாரி
புவிராஜ ரறிவாரோ வாதயோகம்
மின்மயத்தின் விசுத்தியறுகோண நிறங்கருப்பு
மேல்வட்ட மீரெட்டு யிதமேயாகும்
தன்மயத்தின் திரோபலம கேஷ்பரியும்
தாயான அம்பிகையாள் ரூபங்கேளே. (28)

அம்பிகையாள் அம்உம்ஓம் வம்யம்மென்று
அழகான காலடக்கியோகஞ் செய்யத்
தம்பிகையாம் பதினென்கோடி யீசன்காந்தி
தரய்ரூபம் அருணனொளி கோடிக்கொப்பாம்
நம்பினபேர்க் கென்ன அழி யாதசித்தி
நவகோடி நாதாக்கள் காக்ஷிதோற்றும்
உம்பரொடு விளையாடுங் ககனசித்தும்
உத்தமனே மௌனசித்தும் உறுதியாமே. (29)

உறுதியா மாக்கினையாம் சக்ரவட்டம்
உன்னிரண்டு யிதழாறு மேற்கறுப்பாம்
பொறுதியா மாகாச மனுக்கிரகமாகும்
புகழங்கே அம்உம்ஓம் அம்மென்றுந்தான்
நிருதியால் ரேசகத்தால் யோகஞ்செய்து
நிச்சயமாய்ச் சிவத்தைதரி சித்துப்பாரு
ஆறுதியாய் மனோன்மணியாமம்மை சத்தி
ஆயிரத்தெண் மதிரவிபோல் ஒளியாங்காணே. (30)

ஒளிகாண விழிரெண்டும் ஒன்றாய்ச்சேரும்
உற்றுப்பார் புருவத்திலூன்றிப் பாரு
அழியாத சோதியப்பா நடனம்பாரு
அவ்விடந்தான் சகலசித்துக் காதிபீடம்
வெளிகாணச் சதாசிவந்தான் விண்ணிவீடு
வெளிச்சமது கண்கூசும் பார்க்கப்போகா
வழிகான முத்தியிந்தத் துவாதசாந்தம்
மகாசொர்க்க முத்தியதா மட்டசித்தே. (31)

அட்டசித்து மெட்டெட்டுஞ் சித்தியாச்சு
அடிமுடியா மிரண்டுக்கும் வழிதானப்பா
விட்டெழுத்துந் தொட்டெழுத்துந் தொடாதெழுத்தும்
வேதாந்த சற்குருவை வணங்கிக்கேளு
சட்டமிட்ட ஆதார வட்டமாச்சு
சண்முகமே ஆதாரக் கருணைக்கேளு
திட்டமுடன் மனதைவெல்லுஞ் சினத்தைவெல்லும்
திருச்சிற்றம் பலம்போற்ற ஞானமுற்றே. (32)

திருச்சிற்றம் பலமென்ற உண்மை ஞானம்
சித்தர்முத்தர் பத்தர்பர தேசி வாதி
அருச்சிற்றம் பலமறிந்தால் கண்டசோதி
அம்பரையும் உம்பரனும் அங்கே தோன்றும்
பொருச்சிற்றம் பலங்காட்டிப் புதுமை காட்டிப்
புருவமையத் தொளிகாட்டி வெளியுங்காட்டி
ஒருசிற்றம் பலங்காட்டி யுயிருங்காட்டி
ஒருக்காலும் அழியாத முத்தியாமே. (33)

அகஸ்தியர் மெய்ஞ்ஞான சூஸ்திரம் ௩௩ முற்றிற்று.

உ

பரமபதிதுணை

அகஸ்தியர் திருவாய்மலர்ந்தருளிய.

# ஞான விளக்கம் நடச.

——:(*):——

பூரணமாய் மும்மூர்த்தி தந்த வாறும்
பூமியென்றுந் திகிரியென்றும் படைத்த வாறும்
காரணமாய் தேவியருள் நிறைந்த வாறும்
கற்பமுண்டு ருஷிகள்சித்தர் சாகா வாறும்
வாரணமாம் பறைவையொடு நாற்கால் ஜென்மம்
மானிடர்கள் கூறுகின்ற குலத்தின் வாறும்
பாரணமாய் நால்வேதம் வந்த வாறும்
பகருதற்கு கணேசனுட பாதங் காப்பே. (1)

பாரப்பா பூரணத்தில் மனதை போட்டிப்
பரப்பிரம நாதமதைச் சிவத்திற் சேர்த்து
தேரப்பா சத்தியையுஞ் சாம்ப லாக்கி
சிவசிவா வென்று பொருள் கைக்குள் ளாக்கி
போரப்பா நால்வேத மயக்கத் தோடு
பூமியிலே மானிடரை மோச மாக்கி
வேரப்பா சித்தர்களும் பூர ணத்தை
வேடிக்கை போற் கட்டி விடுத்தார் தானே (2)

விடுத்தார்கள் சித்தர்பதி னெட்டுப் பேரும்
வெவ்வேறாய் நூல்சொன்னார் அனந்தங் கோடி
கொடுத்தானே கொங்கணவன் ஞானந் தன்னைக்
குறிபோலே இருநூறு குறுக்கிச் சொன்னான்
எடுப்பாய்நாம் பஞ்சகா வியத்திற் சொன்னோம்
என்சொல்வே னதன்பெருமை சொல்லப் போமோ
கடுப்பாகப் பலநூலை யூன்றிப் பார்க்கக்
கடுமை யாய்க் கட்டிவிட்டான் கலங்கத் தானே (3)

கட்டினான் யென்சிஷ்யன் சுந்த ரன்றான்
கலைக்ஞானம் பார்த்திருந்தும் வெளிய தாகக்
கொட்டினான் பலநூலைப் பாடிப் போட்டான்
குறிப்பறிந்து மச்சமுனி வெளியாய்ச் சொன்னான்
கட்டியதோர் கோரக்கன் சொன்ன நூலோ
கஞ்சாவின் மயக்கத்தாற் கபடில் லாமல்
எட்டினான் தேரையனுஞ் சொன்னான் ஞானம்
எட்டி லொன்று திட்டமதா யியம் பினானே (4)

இயம்பினேன் வஸ்துநிலை யறிந்து முன்னம்
என்னுடைய சுந்தரனுஞ் சொல்ல வில்லை
நயம்பெறவே நந்திசர் கபடில் லாமல்
ஞானமது கோடிசொன்னான் நன்மை யாகச்
சுயம்பாக போகருந்தான் சுருக்கிச் சொன்னார்
சுகமாகப் பதினெண்பேர் சித்தர் சொன்னார்
பயம்புடைய பர்ம்பாட்டிச் சித்த ருந்தான்
பதினெட்டுப் பேர்களுக்கு மேலா மாச்சே (5)

ஆச்சப்பா புலத்தியனே நன்றாய்க் கேளு
ஆறுலட் சங் கிரந்தமதை யருளிச் செய்தேன்
பேச்சப்பா பூரணத்தில் மூன்று லட்சம்
பேசினே னாயிரத்துள் ளடக்கிப் போட்டேன்
காச்சப்பா வாயிரத்தை ஐந்நூறுக்குக்
கட்டினேன் ஐந்நூற்றை நூற்றுக் குள்ளே
மூச்சப்பா நூறதுவை ஐம்ப தாக்கி
முடித்திட்டேன் முப்பதுக்குள் முகில் போற் றானே (6)

முகிலாகச் செய்துவிட்டேன் மைந்தா மைந்தா
மும்பதுக்கு ளடக்கி விட்டேன் முன்னூல்பார்த்து
அகிலமதில் விரித்து விட்டே னிந்தநூலை
யார்தானு மெந்தனைப் ப்பா லறையமாட்டார்
பகிரதியாம் கலைமகளாம் வாணி தானும்
பார்பதியும் அறுமுகனும் பலபேர்தானும்
சகியாதமூர்த்திகளா மிவர்கள் தானும்
சத்திசிவ னிருப்பிடமோ சாற்றுவீரே (7)

சாற்றுதற்கு யிதின்ஞாயந் தெரியக்கேளு
தந்திமுக ஞரென்றும் அயனு ரென்றும்
தேற்றுதற்கு வுலகமதின் மயக்கமப்பா
தேவர்கள் முப் பத்து முக் கோடி யோரும்
வேற்றுருவோ வுருத்திரனே டைந்து பேரும்
வேதாந்த விருப்பிடத்தின் வெளிச்ச மாகும்
காற்றிருப்பா ரிவர்களுட திரத்தை நாடிக்
கருவூரா ரிப்படியே கருதி ஞரே (8)

கருதினு ரிப்படியே சொன்னேன் சொன்னேன்
கயிலாய விடமெங்கே கருவூரெங்கே
பருதியடா வுலகமது பனியின் வாழ்வு
பராபரனு ராறுசயம் பகர்ந்தசோதி
ஒருவருமே நிகராற்ற வஸ்து வப்பா
ஓகோகோ மயங்காதே யூன்றிப்பார்த்துத்
திரிபொருளை யறிவினு லறிந்துபார்த்துத்
தெரிசிப்பாய் நெறிபத்துந் தீட்சை செய்யே (9)

தீட்சையது யேதென்றுற் சொல்லக்கேளு
செய்யதிரு குருவளைத் தேடியோடி
ஆச்சதனு லங்கமதைச் சுத்தஞ்செய்து
அருள்வெளியாய்ப் பரவெளியி லாசையோடி
வாச்சுதென்றே பரப்பிரம மொன்றைப்போற்றி
வகையுடனே பூரணத்தை நாடிக்கொண்டு
கார்ச்சுதென்ற பராபரையின்பூசைசெய்து
கண்டுகொள்வாய் சங்கதிகள் யாவுந்தானே (10)

சங்கமதிற் பரப்பிர்ம மொன்றைப்போற்றி
சகலபவந் தீர்த்தநன்மை தனையேபோற்றி
துங்கமுறு லிங்கமென்றும் பூசைசெய்து
சுனைகெட்ட மாடப்பா சாம்பற்பூசி
எங்கினும்போய் சிவசிவா வென்றலைந்தே
ஏங்கியெரி நரகமதில் விழுவாரப்பா
பொங்குதிரைக் கடல்மூழ்கித் தீட்சைபெற்றுல்
புகழ்கிரியாங் கைலாசம் போகலாமே. (11)

போகவொரு தடையுண்டோ அந்தநாட்டிற்
போவதற்குப் பொய்கைதனில் முழுகவேண்டாம்
சாருதற்குத் தலைகீழாய் நிற்கவேண்டாம்
சத்தலிங்கந் தனக்குமலர் சாத்தவேண்டாம்
தாகமுடன் தீவளர்த்துக் குதிக்கவேண்டாம்
தாரணியிற் பலதெய்வந்தொழவேவேண்டாம்
ஏகமென்ற பிரமாவை நாடவேண்டாம்
இந்தநூல் பார்த்தறிவீ ரின்பந்தானே (12)

இன்பமாய் நால்வேதம் வந்தவாறும்
எழுதினர் வியாசமுனி ரத்தினம் போல்
அன்பாகப் பலவிதத்திற் கட்டிப்போட்டார்
அதினாலே மானிடர்கள் கெட்டுப்போனார்
முன்போலச் சித்தரெல்லாங் கொஞ்சங்கொஞ்சம்
மூடினதைத் திறந்துவிட்டார் முடுகிநானும்
அன்பாகத் திறந்துவிட்டேன் வெளிச்சமாக
அரனார்தா னுரைத்தபடி யறிவித்தேனே. (13)

அறிவித்தே னென்றுசொன்ன வார்த்தைகேட்டு
ஐயையோ வுலகத்தி லனேகம் பேர்கள்
பொறியான அறிவுமிக வழிந்துபோனார்
புலத்தியனே நினைத்துப்பார் பொய்யோமெய்யோ
நெறியான பூசைதினஞ் செய்திட்டாலும்
நிமலர்பதங் காண்பாரோ நிசமதாக
அறிவான தழிந்துவிட்டா ரப்பாவப்பா
அலகைவச மாவதுவு மறிக்கைதானே (14)

அலகையது தேவனுக்குச் சரியாய்நின்று
ஆங்காரந் தானெடுத்து அகந்தையாலே
நிலைகுலைந்து பாதாளக் குழிக்குள்நின்று
நித்தியமும் மானிடரை மோசம் போக்கி
பலகலையு முணரறிவை மயங்கித்தங்கள்
பாதாள வீட்டிலே பதுங்கச்செய்யும்
நிலையதுவை யறியாமற் போனார்போனார்
நினைத்துப்பார் புலத்தியனேநிசமாய்த்தானே (15)

நிசமான நால்வேதம் ஆறுசாஸ்திரம்
நினைவதுவை மறைத்துவைக்கும் பூர்ணசாஸ்திரம்
வசமான நால்மதத்தில் வந்தசாஸ்திரம்
மற்றமற்ற சாஸ்திரத்தின் வசமீதெல்லாம்
குசமசக்குக் குசமசக்கு அப்பாஅப்பா
கூறுகிறேன் சுயவேத சாஸ்திரந்தன்னை
நிசமாய்நம் பினபேர்க்கி டேற்றமுண்டு
நிலைஞானக் கண்ணொளியும் நிற்குந்தானே. (16)

கண்ணீரை விட்டுள்ள கசட்டைப்போக்கி
காரணசற் குருதன்னாற் சுத்தமாக்கி
வெண்ணீறாய் வேதாந்தத் திருவினுள்ளே
வீடேக வேணுமென்னில் விரும்பிக்கேளு
தண்ணீரை யுருவேற்றித் தியானஞ்செய்து
சட்கோணந் தன்னையுமே சரணஞ்செய்து
கண்ணீர்விட் டமுதுதருந்திச் சட்டைபோக்கி
கரையேற வேணுமிதைக் கைக்கொள்வீரே. (17)

கைக்கொள்ள வேணுமென்றால் பின்னம்வேறே
கற்பனையு முண்டதனைக் கருத்தில்வைத்தே
பைக்கொண்ட பிதாமாதா பாதம்போற்றி
பழியேதா னுண்டுசெய்யும் பாவைமாரை
திக்கென்ன நினையாமல் திருட்டைப்போக்கிச்
சிவம்வேணு மென்றுதினம் செபத்தைச்செய்து
மெய்க்கொண்டே யிருந்திடுவாய் சொல்லிப்போட்டேன்
வேதாந்த வேதத்தின் வெளிச்சமாமே (18)

வேதாந்த சஸ்திரத்தின் மார்க்கந்தன்னை
விரித்துனக்குச் சொல்லுகிறேன் வியந்துகேளு
நாதரென்று மும்மூர்த்தி வந்தேதானும்
நாகுதனிற் பலபலதந் திரங்கள்பண்ணி
காதகமாய்ப் பாசவலைக் குள்ளேயாக்கி
காசிகெங்கை யென்று சொல்லிக் காட்டிவிட்டு
பாதகமாய்ப் போவதற்குச் செய்துவிட்டார்
பண்பாக நீதானும் பகுத்துப்பாரே (19)

பாரப்பா யிப்படியே தெளிவில்லாமல்
பராபரத்தை யறியாமல் மோசம்போனுர்
ஆரப்பா எதிர்ப்பார்கள் யென்னோடேதான்
அஞ்ஞான மூடர்கள்தா னதையென்னுமல்
வேரப்பா சிவலிங்கம் விட்ணுலிங்கம்
வேதாந்த லிங்கமதை விரித்துப்பார்த்தால்
சேரப்பா ஒன்றுமே யில்லையில்லை
சிவம்வேணு மென்றுதினஞ் செபத்தைச்செய்யே (20)

செபத்தையே செய்வதற்குச் சீவன்வேணும்
செபஞ்செய்யத் திருச்சித்தந் தேடவேணும்
பவத்தையே யொழிப்பதற்குத் தண்ணீர்வேணும்
பரமபத மடைவதற்குத் தபசுவேணும்
அவத்தமாய்ப் பலதானம் பண்ணவேண்டாம்
ஆறுகுளந் தனில்மூழ்கி யலையவேண்டாம்
சிவன்பேரி லாணையிது சொல்லிவிட்டேன்
தீட்சைபெறச் சிவன்பாதந் தெரிசிப்பாயே (21)

தெரிசிப்பாய் புலத்தியனே நன்றாய்க்கேளு
செப்பினதோர் நூல்களெல்லாந் தள்ளிப்போட்டு
அரிதியா யோர்வழுமெய்ஞ் ஞானப்பாதை
அடைவதற்கு அடையாள மொன்றுசொல்வேன்
பரிசிப்பாய் ஞானமொழி கையிற்கொண்டு
பரப்பிரம மொன்றையே நாடிக்கண்டு
வரிசிப்பாய் நிலைதவறு மார்க்கந்தேடி
வணங்குமந்த மறைபுகுந்து வாழுவாயே (22)

வணங்கியே செகசோதி யொருவனுகி
மானிலத்தை யொருநொடியில் வகுத்தேமண்ணில்
குணமான மனிதரையும் படைத்தபின்பு
குவலயத்திற் ருனுதித்துக் குருவாய்வந்து
பணமான சமுசார மொன்றில்லாமற்
பரதேசி போலிருந்து தவத்தைக்காட்டி
தணமான சித்தர்களை யிறுத்திப்போட்டு
தவஞ்செய்த பெரியோரையண்வோயே (23)

அண்டாம லிருப்பதென்ன வென்றுகேட்டால்
ஐயையோ சிவன்பார்த்து அகஸ்தியாவென்றும்
ஒன்றான மார்க்கமதை விரித்துக்காட்டி
உலகமதி லிந்நூலை விரிக்கச்செய்து
தண்டாமற் பொதியமா மலையிலென்னைத்
தாபித்துத் தயங்காம லிருக்கச்சொல்லி
ஒன்றான பரப்பிரமஞ் சொன்னார்சொன்னார்
ஓகோகோ புலத்தியனே வுரைத்திட்டேனே (24)

உரைத்திட்டே னென்றுசொல்லிச் சித்தரெல்லாம்
ஓட்டார மாகவென்னைக் கோபித்தார்கள்
மறைத்திட்ட பெரியோரும் உலகத்தோரும்
மயங்குவார் வேறொன்றுந் தெரியாமற்றான்
விரைத்திட்டே யுரைத்தவிந்த நூலைத்தானும்
மேன்மையென்று அறியாமற் கிழிக்கப்பார்ப்பார்
அரைந்திட்டேன் புலத்தியனே சமயம்பார்த்து
அவர்களுக்குப் புத்திசொல்லி யறிவிப்பாயே. (25)

அறியாத காரியங்க ளனைத்துங்கேளு
ஆசைமுறை தானடக்கி யறிவோடேநீ
பொறியகந்தை தானடக்கிப் பொசிப்பொடுக்கிப்
பூரணத்து ஞானமதைப் பிரசங்கித்துச்
சரியாக ஆத்துமத்தின் கசட்டைதீர்க்கும்
சற்குருவைத் தேடிப்போய்ச் சரணஞ்செய்தால்
அரிபாதங் காண்பிப்பா ரனேகருண்டு
அம்புவியில் அவர்களைநீ தேடுவாயே (26)

தேடுவாய் புலத்தியனே நன்றாய்க்கேளு
தீக்கிடங்கைத் தேடாதே தெளியச்சொன்னேன்
பாடுவார் பதினெட்டுப் புராணத்தோடு
பாரதமும் பகட்டாகப் பாடிவிட்டார்
நாடுதனி லுலகோர்கள் பிழைக்கவேண்டி
நவநீதம் போலவுமே சொன்னாரப்பா
ஓடுவாய் வாலைபதம் பூசைசெய்து
உத்தமனே கண்ணீராற் கழுவுவாயே (27)

கழுவியே ஆத்துமத்தைப் படிகஞ்செய்யக்
கருவிகளைத் தெட்சணையாய் வைத்துக்கொண்டு
மெழுகுவா யிருதயத்தைக் கண்ணீராலே
மெழுகினபின் தெய்வத்தின் பக்திவைத்துத்
தொழுகுவாய் தவஞான தீபமேத்தித்
தோத்தரிப்பாய் சகலநன்மை சொரூபங்காண்பாய்
முழுகுவாய் சிறுபொய்கைக் குள்ளேநீயும்
மூர்த்திபர னருகேமுச் சுடராய்த்தானே (28)

முச்சுடரு மொன்றும்மும் மூர்த்தியல்லால்
மூவருமே யாளுருவ மொன்றேயாகும்
அச்சுதனா யிவர்களுமே ஆண்பெண்ணல்ல
அரனுமல்ல லிங்கமல்ல வனாதியான
சச்சிதா னந்தனையே வணக்கஞ்செய்து
சற்குருவைத் தெரிசித்துச் சரணம்பண்ணி
எச்சரிக்கை கொண்டுநட வப்பாஅப்பா
எண்ணில்லா முத்திவழி யோடுவாயே. (29)

ஓடுகின்ற வகைகளெல்லாம் உரைத்துப்போட்டேன்
உலகுதனில் மார்க்கமெல்லா முவந்துசொன்னேன்
தேடுகின்ற புராணமதின் கருத்துச்சொன்னேன்
சிவன்பிர்மா விஷ்ணுவெல்லா மறியச்சொன்னேன்
ஆடுகின்ற தீர்த்தமெல்லாம் அசத்தவென்றேன்
அஞ்ஞானம் பண்ணுவது அகந்தையென்றேன்
பாடுகின்ற யெக்நூலில் வெளியாய்த்தோற்றும்
பார்த்துநீ காமப்பா லறிந்திடாயே. (30)

காமப்பா லெட்டாகி யிரண்டுமான
கானற்பா லறிந்துகொள்ளு சித்தனுவாய்
காமப்பா னந்திகுரு சுழுனைதன்னில்
நாட்டினேம நிந்துகிலே பத்திக்கொண்டு
சோமப்பா லுண்டுயெட்டிற் சார்ந்தசூட்சம்
சொல்லார்கள் நாதாக்கள் சுயம்பாய்த்தானும்
ஏமப்பா யெட்டறிந்து அதனுள்மேவி
இயல்பாகத் திரிகோணத் திருந்திட்டேனே. (31)

இருந்திட்ட சூட்சமரி தாரம்வாரம்
    ஏழேழு மேழதிலே மனந்தான்சொக்கி
இருந்திட்டேன் மேல்மூல கணேசன்மூலம்
    இரண்டுக்கு மெட்டாத அறிவின்மூலம்
தெரிந்திட்டோம் மெய்ஞ்ஞான தீபமான
    சிவக்கொழுந்தா மறிவாக அதனுட்சென்று
இருந்திட்ட உள்மூல மாதிசூட்சம்
    இருதயத்தி லறிந்தறிவா யோதுவோமே. (32)

ஓதுவதுக் கறிவுகுரு நாமேசொன்னோம்
    உற்றமொழி நான்சொன்ன தண்டகத்தில்
ஓதுதற்குச் சித்தித்த பொருளைச்சொல்லி
    உற்பனமாய் மெய்ஞ்ஞானக் கிரிகைசொன்னோம்
மாதுதர்க்கஞ் செய்துழலை மாயைமூட்டும்
    மாயைதனைத் தவிப்பதற்கு வகையுஞ்சொன்னேன்
பாதகர்க்குக் கிட்டாது பயனைக்காணான்
    பத்திவைத்து விட்டகுறை பார்த்துத்தேரே. (33)

பார்க்கையிலே அறிவுகுரு தன்னைப்பாரு
    பட்சனியில் நாம்சொன்ன கருவைப்பாரு
ஏர்க்கையிலே யறிந்துகொள்ளத் தப்போயில்லை
    யீசனுமே நீயாவாய் மேலுங்கேளு
மார்க்கமது அம்மாளுக் குகந்த பிள்ளை
    மாசற்ற நாதாக்க ளுன்னை மெச்சச்
சேர்க்கையிலே சேர்ந்துகுரு பாதத்துள்ளே
    சேர்ந்து நவ கோடிசித்து மாடலாமே. (34)

ஆடலாம் நினைத்தபடி சித்தியாகும்
    ஆதிசிவ சத்திகுரு அமைப்புத் தோணும்
நாடெலாம் வணங்குமெய்ஞ் ஞானி யாவாய்
    நாதாந்த வேதாந்த மெல்லாஞ் சித்தி
காடெலாந் திரிந்தலைந்து வீணே சும்மா
    கருக்குழிவீ ளாதேமா ளாதேஐயா
தேடாத தேட்டமதுதான் ஞானத்தேட்டு
    செப்பினோம் உற்றமொழி அறிந்து கொள்ளே. (35)

**அகஸ்தியர் திருவாய்மலர்ந்தருளிய ஞானவிளக்கம் ௱ச. முற்றிற்று**

உ

பரமபதி துணை.

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய.

# பரிபூரண ஞானம் நூறு

---

வெண்பா.

சொல்லுமறிவாய்த் துலங்குமுப்பத் தைந்தும்
அல்லும்பகலும் அறிவுணர்வீர்—நல்ல
குணபதியாம் பூரணத்திற் கூடியென்றும் வாழுங்
கணபதியின் சிததியென்றுங் காப்பு

சித்தியென்றாற் குருபதத்தில் நிற்கவேணும்
திறமாக வாலைபதம் பணியவேணும்
புத்தியுடன் சுழிமுனையை யறியவேணும்
புதுமைகண்டு வாசியினா லுறையவேணும்
பத்தியுடன் வாதவித்தை காணவேணும்
பற்பஞ் செந்தூரமுண்டு தேரவேணும்
முத்தியென்றார் கண்டத்தைக் காணவேணும்
முந்தவொன்று மில்லாத பொருளைப்பாரே (1)

பாரப்பா ஒன்றுமற்ற பொருளென்றென்னப்
பட்டதுவே யொன்றாச்சு பரமாய்நின்று
நேரப்பா அதுகூல ரூபமாச்சு
நேராகப் பராபரையுந் தோணலாச்சு
சீரப்பா சதாசிவன்றான் வெளியாய்த்தோன்றிச்
சேர்ந்தவெளி யதனிற்கால் வன்னிதோன்றி
நீரப்பா அதனுள்ளே மனந்தான் தோன்றி
நின்றதனா லண்டபிண்டம் நேர்ந்துகாணே. (2)

காணுதற்குச் சரியையொடு கிரியையோகம்
சண்டதொரு ஞானமடா நாலுங்கேளு
மாணுதற்கு லோகத்தோர் வீடுகட்டி
மகிழ்வாகக் கல்மரத்தைச் செம்பை நாட்டித்
தாணுவெனப் புகழ்ந்தாக்காற் சரியையாகும்
தகட்டிற்செய் சக்கரங்கள் கிரியையாகும்
ஊணுதற்கு வாசிகொண்டு உடலிலூத
உத்தமனே யோகமென்று உரைத்திட்டேனே. (3)

உரையான தனைக்கண்டால் ஞானமப்பா
உத்தமனே புலஸ்தியனே உண்மைகேளு
நிறையான ரூபமடா சத்தி சத்தி
நேர்ந்தசபை சிவமாக நின்றுதையா
மறையாத கணபதிகுண் டலியோங்காரம்
மண்பிரமன் மால்நீராம் வன்னிருத்ரன்
குறையாத கால்மயே சுரன்விண் ணப்பா
கூரான சதாசிவனும் குறையைந்தாச்சே. (4)

ஐந்தான பூதமல்லோ பிண்டத்துக்கு
அதுவாச்சு ஆனதினாலையா மெய்யால்
வந்தானு லவனியிலே அமர்வாயப்பா
மாருட்ட மானுக்கால் ஞானம்போச்சு
முந்தாள பரம்பரமா் முன்னைப்பாரு
மோசமில்லை லோகமென்ன தேகமென்ன
மைந்தர்களே நீருமொரு பிடியில்நில்லு
மானிடரே தானவனும் வழிகண்டாலே. (5)

தானவனு யிருப்பதற்கு ஞானம்பாரு
தடையறவே தத்துவத்தைத் தாக்கிப்பாரு
தேனவனைக் குருக்காணத் திட்சைபாரு
தேவிசிவ பூசைதன்னைத் தெரிந்துபாரு
கோனவனு யிருக்கச்செந் தூரம்பாரு
கொள்கையாய்ப் பற்பகற்பக் கூரைப்பாரு
ஏனவனுப் வாதவித்தை யெந்நூல்பாரு
யீசனு யிருப்பாரின் நூலைப்பாரே. (6)

பார்த்தாக்கால் வாலைதனைப் பார்க்கவேணும்
　　புத்தியினு லவன்பதத்தை பற்கவேணும்
சேர்த்தாக்கால் மனமறிவிற் சேர்க்கவேணும்
　　தீபவொளி வொளிகாணத் தெளிவுவேணும்
நூத்தாக்கா லம்பரநூல் நூற்கவேணும்
　　கோவென்ற வுயிரெல்லாம் கொறுக்கவேணும்
மூத்தாக்கா லிந்நூலில் வைக்கவேணும்
　　முனைமீதி லகத்தியமா மூர்த்தியாமே (7)

ஆமப்பா மூர்த்தியென்ற தேதினலே
　　அறிவாலே அகத்தியனும் கர்த்தியாகி
காமப்பா யில்லாட்டா லுலகமில்லை
　　நாதனெனக் கிவ்வாறு அருளிச்செய்தார்
ஏமப்பா காமேச்சாய்ப் பிறந்ததென்ன
　　யீனத்தில் யோகிகளே யென்பாரப்பா
ஓமப்பா வோசாண்டு செபிக்கச்சித்தி
　　உண்மையுட னிந்தநூலை வுகந்துபாரே. (8)

பாரப்பா வுலகத்தோர் புதுமை தன்னைப்
　　பாங்குபல தந்தைதாய் பாட்டனாலே
ஆரப்பா குருக்களென்று தேடியோடி
　　அலைந்துலகைத் தேடியுண்ணு மாடித்தாசன்
வாரப்பா போய்க்காத்துத் தனத்தை யீய்ந்து
　　உடலெங்குஞ் சூடுபட்டு யிட்டுக்கெட்ட
போப்பா கோடான கோடாகோடி
　　பேச்சென்ன துலையாத பெயர்கள்தானே (9)

தானென்ற ஞானமது ஆயிரந்தான்
　　தனைக்குளுக்கி யொருநூற்றி லறிவுசொன்னேன்
தானென்ற தத்துவமுந் நூறுஞ்சொன்னேன்
　　தானென்ற குருவாகும் தேவிபூசை
தானென்ற தற்பரத்தின் சூட்சஞ் சொன்னேன்
　　தற்பரத்தின் பூசையுடன் சாந்தஞ்சொன்னேன்
தானென்ற இருநூற்றிற் சரியையோடு
　　தயவான கிரியையோ கங்கள்காணே (10)

காணவே ஞானமொடு காலுந்தோணக்
கண்ணமரக் கசடருக்குங் காணச் சொன்னேன்
காணவே வாதமது லட்சங்காப்பு
சுருவெல்லா மாயிரத்தி ரெண்டுநூறு
மாணவே அதைக்குறுக்கி ரெண்டுநூற்றிற்
காசினியெல் லாம்வாத மாகச்சொன்னேன்
காணவே வயித்தியத்தி லிரண்டுலட்சம்
கற்பனையுந் தெளிந்துமுந் நூறுசொன்னேன் (11)

சொன்னபடி யென்ன வென்றால் புலத்தியனேயையா
சொல்லுகிறேன் பிங்கலையான் ரூபமாகும்
உன்னவே யிடகலைபெண் ரூபமாகும்
உத்தமனே ஓங்காரம் நடுவேநிற்கும்
மின்னியரைப் புருஷனங்கே சேரும்போது
விட்டகுறை நிந்துவினால் ஞானியாவான்
என்னவென்று பெண்ணும லெண்ணிப்பாரு
இதனாலே யொக்கவரும் நோயகற்றே (12)

நோயகற்ற பற்பகற்பஞ் செந்தூரத்தால்
நுழைந்தாக்கால் முந்நூற்றிற் கருவுந்தோணும்
நோயகற்றக் கற்பங்கள் கொண்டாயானால்
நொந்து நொந்து மாள்வதல்லால் ஒன்றுமில்லை
நோயகற்றும் வாதியென்று லவனேஞானி
நூல்பார்த்தால் வாய்ப்பேச்சோ ஞானமப்பா
நோயகற்றி மவுனகற்பங் கொண்டுதேறும்
நூலாலே கரையேற யிந்நூல்பாரே (13)

நூல்படிப்பார் ஞானியென்பார் சித்தரென்பார்
நோக்கமுற்ற பெண்காலில் நுழைந்துகொண்டு
கால்பிடிப்பார் கைபிடிப்பார் மானந்தன்னைக்
காட்டினால் நாய்போலே கடிப்பார் மட்டை
மால்பிடிப்பார் மவுனமென்று அறியமாட்டார்
வஞ்சகரே உன்னுடலைப் பேணியீசன்
சேல்பிடித்தாற் பத்திமுத்தி பெணைப்போலாகும்
திடஞ்சொல்லா ரெக்குருவுந் தேர்ந்துகொள்ளே. (14)

கொள்ளவே யின்னூலைப் பாடியானும்
 கொண்டுபோய்க் கணபதிகுண் டலிக்குச்சொல்ல
உள்ளபடி அயன்முன்பு சொல்லுமென்றார்
 உற்றபடி வாணியுமாற் குரையுமென்ன
தெள்ளவே யிலகுகண்ணி ருத்ரன்முன்பு
 செப்புவா யெனருத்திரி தனக்குச்சொல்ல
விள்ளவே மயேசுரன்று னுமைக்குச்சொல்ல
 வெளியான சதாசிவற்கு விளம்பென்றாரே. (15)

விளம்பிடவே மனிதனக்குச் சொல்லுமென்ன
 விரைந்துமணி பரந்தனக்குச் சொல்லுமென்ன
உளம்பெறவே பரந்தனக்குச் சொல்லுமென்ன
 உற்றவரும் வலியவற்கு உரையுமென்ன
வளம்பெறவே ஊமையர்க்குச் சொல்லுமென்ன
 வாழ்த்துதற்குத் தோற்றறியா சறியிமென்ன
நிளம்பெறவே அவருலகுக் கீயுமென்ன
 நோக வையகத்தில் நிறைத்திட்டேனே. (16)

நிறைத்திட்டே னுலகத்தி லென்பேர்கேட்டால்
 நிச்சயமாய் நேரதற்கு மனம்பேசாது
உரைத்திட்டேன் வையமெல்லாம் நானேநானுய்
 உத்தமற்கு உண்மையா யூணிநிற்கும்
மறைத்ததினு லறியார்க ளெந்தன் சாபம்
 மந்திரத்தாற் றீர்த்தாக்கால் வணங்குந்திட்சை
முறைத்திட்டந் தப்பாமற் பூசைசெய்து
 முக்காலும் வாலைகண்டு சுற்பமுண்ணே (17)

உண்ணுமற் கஞ்சாவு மெருக்கம்பாலும்
 ஓகோகோ யெட்டிபல தலைவேர்ப்பட்டை
தின்னுலே யாவதென்ன நோய்தான் மிஞ்சித்
 திடமாகும் பித்தமுதற் சிலேற்பனங்கள்
பண்ணுத வாதமது உடலிற்கட்டும்
 பாழான நிந்தெல்லாம் பாழாய்ப்போகும்
மண்ணுரே மயக்கமென்ன பலநூற்பாரு
 வாழாமல் வாழுமிடம் மருந்தைப் பூரே. (18)

மருந்தென்றால் மதியமுத முண்ணவேணும்
வழிவிட்டாற் கிடையாது வருத்தங்காணும்
விருந்தென்றாலெங்களுக்கு அமுதமப்பா
விந்தாலே விளையுமிது விண்ணுக்குள்ளே
பொருந்துமே பாங்கண்டா லீவாரப்பா
பொங்கவிட்டாற் கிடையாது பூட்டிப்பாரு
அருந்தென்றார் சிவன்தா னச்சமில்லை
அறிவறிந்து அமுதங்கொள் ளன்புகொண்டே (19)

கொண்டுகொண்டு அகம்பெலத்தே யென்னைப்போலே
குவலயத்தில் மக்களென்ற பேருங்காணேன்
கண்டுகண்டு தெளிந்தெனைப்போல் ஞானிகாணேன்
காரணத்தி லென்னைப்போலே சித்தர்காணேன்
பண்டுபண்டு சொன்னதொரு முறையைப்பாரு
பாரேவல் பத்தியுள்ளே யெனைபோற்காணேன்
விண்டுவிண்டு யென்னைப்போலே சொல்வார்காணேன்
வெட்டவெளி நாதனென்பேர் விழிமூன்றோர்க்கே (20)

மூன்றான விழியேது விபரங்கேளு
விழிதனக்கு வழிபார்வை யொளியாய்நிற்கும்
தூன்றாகச் செபிதனக்கும் ருஷிக்கும்நாதம்
தோன்றுவது நாலுக்குஞ் சமனாய்நிற்கும்
தேன்றாரே அறிவதிலே மனஞ்சென்றாக்கால்
திரிமூர்த்தி ஐம்பூதம் செனிக்குமப்பா
ஊன்றாம லூன்றமிந்த நூலைப்பாரு
உறங்கொண்ட ஞானியென், றுரைசெய்தேனே. (21)

செய்தபடி தப்பாகொங் கணர்சொற்காண்டம்
தீர்க்கமாய்ச் செப்பினார் தெளிந்துபாரு
கைதவமாஞ் சட்டைமுனி நூலைப்பாரு
கருவாரும் மச்சமுனி தீட்சைஞானம்
மெய்தும்விழி யொளிகாணும் புருவமையம்
விளைந்ததப்பா வொளிப்பென்கள விண்ணுமண்ணும்
பொய்தவறி மெய்ப்பிடிக்க மதிதான் கோடி
புகழ்வண்ணி ரவிகோடி யொளியுமாமே. (22)

ஆம்டா பராபரமாய் நின்றஞானி
அவனிதனில் வெளிதனையு மறிந்தயோகி
தாமடா வுலகத்தி லிருந்துகொண்டு
தாரணியோர் தங்களுடன் சமுசாரத்தில்
மாமடா அன்னைதந்தை மக்கள்பெண்டீர்
மைத்துனருஞ் சூழ்ந்தசன மற்றுமுள்ளோர்
ஆமடா யிருந்தாலென் றலைந்தாலென்ன
அடிதெரியாப் பாவிகளே அறிந்துகேளே (23)

கேளப்பா குன்றுமணி குப்பைதன்னிற்
கிடந்தாக்கால் ஒளிமழுங்கிக் கெட்டுப்போமோ
சூளப்பா அரவின்வாய் மணிதான்சாலச்
சுடர்மங்கிக் கண்டதுண்டோ சுத்தஞானி
வாளப்பா விழியாள்தன் முலைமேல்நெஞ்சம்
வைத்திருந்து அணைந்தாலும் மறவான்சிந்தை
நீளப்பா பராபரத்தில் நின்றுலாடும்
நேரறிந்தோர் யெங்கிருந்தும் நிலைதப்பாரே. (24)

நிலையேறத் தெரியாத உலகமாண்பர்
நெடுந்தூரங் குருதேடிக் கெங்கைதேடி
மலையேறிச் சடைவளர்த்துச் சித்தரங்கே
வாழுமிட மென்றுலகில் வந்துநெஞ்சந்
தலைகெட்ட நூல்போலே பின்னலாகித்
தனிப்பார்கள் சித்தர்கண்டு நகைப்பாரப்பா
அலையாதே பெருங்கோயில் புகுந்தோர்முன்பு
அரனுமையுந் தேவர்களு மாடினாரே. (25)

ஆடியதோர் அரனுடனே வாலையாட
அண்டரண்டந் தேவர்முதல் முனிவர்சூழப்
பாடியதோர் சங்கொலிசே கண்டிநாதம்
பருமணியுந் தீபவொளி பளிச்சென்றோங்கத்
தேடியதோர் சிலம்பினொலி கலகலென்னத்
தேவர்பணி.யும்பரா பாத்தையென்றும்
நாடியவே தாந்திசித் தாந்தியாவார்
ஞமறியார்க் கேதுபுலத் தியனேநீகேள். (26)

நீயென்று சொல்லற்று நிலையுமற்று
நினைப்பென்ன தானுக நீறுமற்று
மாயென்ற காலத்துப் பளிங்கமற்று
வளியோடும் பொறியற்றுப் புவனமற்று
தோயென்ற தாளற்று வள்ளியற்றுச்
சுடரொளியிற் மனமறிவிற் சொக்கிப்போனல்
வாயென்று லமுதமது மதியில்வீழும்
மாளாமற் சேர்க்குமிடந் துலங்குவாரே. (27)

துலங்குமே யின்னூலைப் பார்த்தாயானுற்
சொல்லறிவு மறியார்க்கு யீயவேண்டாம்
கலங்காமற் பூரகத்தே சொல்லச்சொல்லு
கைமுறையால் ஞானமென்ற கருவைக்கேளு
தியங்காணக் குருநின்ற நிலையைக்கேளு
நிற்குணமாஞ் சத்திசிவ நிலையைக்கேளு
மயங்காமற் சொன்னுக்கால் நூலையீயும்
மாருட்ட மானுக்கால் மடையர்தானே (28)

மடையனென்றுற் சண்டைவிட்டோர் தனக்கியாதே
மதியோகி தனக்குமப்பா கேளுகேளு
அடையாள முள்ளசிவன் மேலேஅம்மை
அப்பனே அச்சமற்று அறிவோன்யோகி
கடையீனர் கிரியையென்ற மாந்தரப்பா
கருவின்ன தென்றறியத் தெரியாகாய்கள்
உடையவரே யிருவினைக்குட் சிக்கிக்கொண்டு
ஊழ்விதியி தென்பார்க ளுலுத்தர்காணே. (29)

காணப்பா கடிகையென்பார் வாசமென்பார்
கைமுறைபோல் மாதமென்பார் வருஷமென்பார்
நீணப்பா யுகமென்பார் யுகாந்தமென்பார்
நின்றநிலை மதியிதௌக் காணமாட்டார்
தோணப்பா ஒன்றுச்சு வெளியாய்போச்சு
துலங்கவே வஸ்துவொளி தோய்ந்துபாரு
வீணப்பா வுலகத்தோர் சொல்வதெல்லாம்
விழிதிறக்கும் வித்தையெல்லாம் வெளிவிட்டேனே (30)

விட்டகுறை அறிவோடே மூன்றுஞ்சொன்னேன்
மெய்யாகப் பூதமென்ற விழியுஞ்சொன்னேன்
தொட்டவிடம் சத்திசிவம் ரெண்டுஞ்சொன்னேன்
சொல்முறைநூல் தப்பாமற் பார்க்கச்சொன்னேன்
நெட்டையென்ற பத்திமுத்தி சித்திசொன்னேன்
நோக நிலைக்கவென்று உண்மைசொன்னேன்
அட்டியொன்று மில்லாத அறிவினாலே
அப்பனே அமுதவிழி செபஞ்சொன்னேனே (31)

சொன்னேனா றென்றுவிட்டு ஒன்றுமில்லை
துலங்கவே காணுமென்று குருவைச்சொன்னேன்
என்னவோ வென்றுவிட்டா லொன்றுமில்லை
இருக்குதென்று பரத்தென்ன யெல்லாங்காணும்
உன்னவே உன்னஉன்ன யெல்லாங்காணும்
உலகமெல்லாம் நானென்ற வுறுதியாலே
பன்னவே பலகலையுந் தெளிந்துகாணும்
பராபரமாய் நின்றதற்குப் பயன்சொல்வோமே. (32)

சொல்லவொண்ணா தரியவொரு பொருளுமாகித்
துலங்கவே பூமையாய் அலியுமாகி
அல்லுபக லிரண்டுமெத்தப் பொருளுமாகி
அப்பனே பராபரமும் பரையுமாகி
நில்லெனவே ஐந்தாகி ஐந்துபேர்க்கும்
நிற்குணமாய்க் கணபதியாய் நின்றசத்தி
எல்லவரும் பிறப்பிடமு மறிந்துசொன்னேன்
இப்படித்தா னெவர்சொல்வா ரென்னைப்போலே. (33)

என்னைப்போ லாவமென்று லிதுவேபாதை
இயம்பினேன் னிந்நூல்தா னெவர்க்குங்காணும்
பொன்னைப்போ லின்னூலைத் தேடிக்கண்டாற்
பொன்னாகும் உலகெல்லாம் விளக்கந்தோணும்
முன்னைப்போ லிந்நூலைப் பார்த்தாயானால்
முன்னாகு மூல்கெல்லா மூனுநிற்கும்
தன்னைப்போ லிந்நூலைப் பார்த்தாயானால்
சதாசிவனும் லோகமெல்லாந் தானேதானே. (34)

தானென்ற கருகுருவுந் தன்னைக்காணத்
தப்பாம லிந்நூலை வைத்துநீயே
ஏனென்று பார்த்தாக்கா லிந்நூல்கிட்டும்
எங்கையோ யென்றவர்க்கு மிடுக்காய்நிற்கும்
தேனென்று கண்டுபரன் மெச்சிக்கொண்டு
திடமென்றார் நானுமிது தீர்க்கமென்று
கோனென்ற இந்நூலை யுலகில்விட்டேன்
குறிப்பறிய நூல்முப்பத் தைந்துமுற்றே. (35)

அகஸ்தியர் பரிபூரண ஞானம் ௩௰௫.

முற்றிற்று.

---

உ

பரமபதி துணை.

அகஸ்யர் திருவாய் மலர்ந்தருளிய

# செந்தூரம் நாக்கு சூஸ்திரம் ௩௪.

பாரப்பா செம்பினுட வெள்ளைகேளு
பதிவான தாமிரத்தைக் குகையில்வைத்து
சேரப்பா பதினாறு பலமேபோடு
சேர்ந்துருகும் போதினிலே மருந்துகேளு
காரப்பா அண்டமது பலமேரெண்டு
கட்டுவெச் சாரமது பலமேரெண்டு
சீரப்பா கல்வத்திற் றாளதாக்கிச்
சிறந்தபொடி மேற்கார மரைதான்போடே. (1)

போட்டதனைப் பொடித்துநன்றாய்ப் பொடியைத்தூவி
புகழான செம்பினுட வூறல்போகும்
சாட்டிசமா யுப்பெடுத்து வங்கங்குத்தி
தனிபோட்டி லூதிவிடு களங்குபோலாம்
மாட்டிதனைக் குகையிலொரு புடம்போடப்பா
வாகாகக் கண்விட்டு வுருகும்போது
நாட்டியசுண் ணத்திற்றுளகத்தை வைத்து
கலமாகப் பதினைந்து தரமுநீற்றே (2)

நீற்றினபின் வாங்கியதை யெடுத்துக்கொண்டு
நிறுத்திடுவாய் பலமொன்று காரங்கால்தான்
போட்டிதைப் பழச்சாற்று லரைத்துக்கொண்டு
புகழாகப் பயிறளவு வுண்டைசெய்து
சேர்த்தியதாய்க் கொடுக்கையிலே சத்துவாங்கும்
நேரான செம்பதுவெங் கலம்போலாகும்
மாற்றியிதை யரைப்பலந்தான் கல்வத்திட்டு
மாட்டியே பொடித்திடுவாய் தூளாய்க்காணே. (3)

காணப்பா அவ்விடைக்கு வீரம்போடு
கருத்துடனே சாமமொன்று அரைத்தாயானால்
தோணப்பா சலமுண்டா மெழுகுபோலாக்
துடியான சூதமரைப் பலந்தான்போடு
ஆணப்பா செம்பிடைக்குச் சூடன்போகும்
அரைக்கும்போ தினில்வெள்ளை யரைக்கால்போடு
நீணப்பா சூடனிடை பூரம்போடு
நிலைத்திடவே யரைத்து நன்றாய்வில்லைதட்டே. (4)

வில்லைதனை யுலர்த்தியபின் குகைக்குள்வைத்து
மேல்மூடிச் சீலைசெய்து புடத்திற்போடு
வில்லையது கசபுடத்தில் வெண்மையாகும்
விளங்கியதோர் தாமிரத்தின் வெள்ளையையா
வெள்ளையதைப் பதனமாய் வைத்துக்கொண்டால்
மேகமொடு பதினெட்டுக் குஷ்டந்தீரும்
வில்லையினால் வாயுவொடு பித்தம்யாவும்
வீசுபனி கதிர்கண்ட வாறுபோலாம் (5)

போமப்பா வனுப்பான மறிந்துகொண்டாற்
புகழான பற்பத்திற் கிணையொன்றில்லை
ஏமப்பா வியாதியெல்லா மிறந்தேபோகும்
என்சொல்வேன் செம்பினுட வெள்ளைவேகங்
காமப்பா ஆவின்பால் காய்ச்சிக்கொண்டு
கருப்பட்டி சேர்த்தன்னம் புசிக்கச்சொல்லு
ஆமப்பா கருமத்தைத் தீர்ப்பதற்காய்
அறிவித்தேன் நாகத்தின் வெள்ளைகேளே. (6)

கேளப்பா சாரமொடு சுண்ணாங்கூட்டி
கெடியாக அமுரிவிட்டுத் தண்ணீராக்கி
வாளப்பா நாலுபல மதற்குள்ளேதான்
மைந்தனே நாகமதை யுருக்கிச்சாய்ப்பாய்
வேளப்பா ரெண்டுபத்து விசைமேசாய்ப்பாய்
வீறான நாகத்தி னூறல்போமே
வாளப்பா பழச்சாற்றிற் சாய்த்துப்பார்க்க
மைந்தனே நாகமது சுத்தியாச்சே. (7)

ஆச்சப்பா ஈரைந்து தரமேசாய்ப்பாய்
அப்பனே குகையிலிட் டுருக்கியன்யாய்
வாச்சப்பா சுத்திசெய்த தாளகந்தான்
வரிசையாய் கழஞ்சுஒன்று காரங்கால்தான்
நீச்சப்பா பழச்சாறுவிட் டரைத்துக்கொண்டு
நேசமுடன் குன்றியிடை யுண்டைசெய்து
காச்சப்பா ரவிமுகத்தி லுலர்ந்தபின்பு
கணக்காக நாகமொரு பலத்திற்றாக்கே. (8)

தாக்கப்பா தாளகத்தி னுண்டைதன்னைப்
தயவாக வொவ்வொன்றாய் கொடுத்தபின்பு
வாக்கப்பா நாகமது தெரிக்கும்பாரு
மைந்தனே யிந்நாகம் பலந்தானென்று
நீக்கப்பா கல்வத்திற் பொடிக்கற்றாளாம்
நேராக வீரமெடை கால்தான்போடு
தூக்கப்பா சூதமெடை கால்தான்போடு
துடியான வுவருப்பு அரைக்கால்போடே. (9)

போட்டப்பா நவச்சார மரைக்கால்போடு
புகழ்ந்திட்ட மருந்திடைக்குச் சூடன்போடு
ஆட்டப்பா வெண்கருவில் எருக்கம்பால்வார்த்
தரைத்திடுவாய் யிருசாமம் வில்லைதட்டி
சூட்டப்பா வுலர்ந்த பின்புசுண்ணச்சிலை
சுற்றியே சுண்ணும்புக் குள்ளேவைத்து
சாட்டப்பா கெஜபுடமாய்த் தீயைப்போடு
தவளநிற மாகுமிது வெள்ளையாமே. (10)

வெள்ளையாய் நாகமது விரிந்ததப்பா
வியாதிகளுக் கனுப்பான மறிந்துபோடு
பிள்ளைகளாஞ் சிறுவருக்குக் குன்றிபோடு
பேரான வாதமென்ற யென்பதுந்தான்
கொள்ளையடா பித்தமது நாற்பதும்போம்
கூறுகிறேன் சேத்துமங்கள் தொண்ணூற்றாறும்
கள்ளரைப்போற் பயந்தோடும் நாகங்கண்டால்
கருத்துள்ள வாதிகளே கண்டிடீரே. (11)

கண்டாயே யின்னுமொரு வைத்தியந்தான்
கண்கெட்ட வாதிகளே கருதக்கேட்கும்
உண்டான சேதியிது மகத்தாம்பற்பம்
உத்தமனே பூநீறு பலந்தானென்று
சண்டான சாரமது பலந்தானென்று
சாமமொன் றரைத்ததைப்பிங் கானிலிட்டு
பண்டான வழுரியுப்பு பலங்கால்போட்டு
பதருமற் பனியில்வைக்கச் செயநீராமே. (12)

செயநீரி லரைத்திடவே மருந்துகேளு
திடமாகக் காரமொன்று சாரமொன்று
செயநீரின் தாரமொன்று வீரமொன்று
செப்புகிறேன் சூடனென்று ஐந்துகூடிச்
செயநீரி லரைத்திடவே சாமமொன்று
திரண்டல்லோ மெழுகாகு மூன்றுபங்காய்
அயப்பொடியைப் பழச்சாற்றி லூறப்போட்டு
அதையெடுப்பாய் நாலாநாள் கழுவிவாங்கே. (13)

வாங்கியிந்த அரைபொடிதா னென்றுகூட்டி
மைந்தனே பங்குமொரு மருந்துங்கூட்டி
ஓங்கியே பிசைந்தொன்றாய்க் குகைக்குள்ளிட்டு
வுத்தமனே மேல்மூடிச் சீலைசெய்து
நீங்காமற் குகைசிவக்க நன்றாயூது
நிலைத்துவொரு மணியாக நிற்கும்பாரு
சாங்கமாய் நொருங்குமிந்த மணிதானப்பா
தயவாக யின்னுமொரு பங்குகூட்டே. (14)

கூட்டியே யூதிடுவாய் மற்றொருக்கால்
குன்றாமற் கைமுறையாய்த் திரியங்கூது
நாட்டியே பின்பெடுத்து வுருக்கும்போது
நலமான தங்கம்போல் கண்விட்டாடுக்
தாட்டிகமா யிம்மணியைக் கல்வத்திட்டுச்
சவ்வீரஞ் சரியிடையா யரைக்கும்போது
ஊட்டிடுவாய் அவ்வெடைக்குப் பாதிசூதம்
உறவான சாரங்கால் சூடனென்றே. (15)

சூடனென்று மருந்தைந்து முறவாயாட்டச்
சுகமாக வெள்ளையு மொன்றுபோடு
நாடவே மெழுகாமே வில்லைதட்டு
ரவிமுகத்தி லுலர்ந்தபின்பு சுண்ணச்சீலை
ஊடவே செய்துசுண் ணாம்பில்வைத்து
உத்தமனே கசபுடமாய்க் கனலைமூட்டு
வாட்டவே வேண்டாங்காண் வாதிமாரே
மகத்தான தவளநிற மாகும்பாரே. (16)

பாரப்பா லோகம்வெள்ளை வேகமெத்த
பாய்ச்சலா மனுப்பான மறிந்துபோடு
சேரப்பா பாண்டுவகை யெல்லாம்போகும்
செகமறிய மேகமென்ற தெல்லாம்போகும்
காரப்பா சூலையென்ற தெல்லாம்போகும்
காமாலை சோகையொடு ஈளைபோகும்
வீரப்பா பித்தத்தின் கோபம்போகும்
விளங்குகின்ற சேத்துமங்கள் பறந்துபோமே. (17)

பறந்துபோம் காந்தமுமிப் படியேசெய்யிற்
பரிவான காந்தமது வெள்ளையாகும்
இறந்துமோம் நோயெல்லாந் தடையொன்றில்லை
யெழுந்திட்ட காந்தவெள்ளை வேகமெத்த
மறந்துபோ காதேஇம் முறைதானப்பா
வளமான லோகசெந் தூரங்கேளு
அறந்தழைக்கச் சுத்திசெய்த லோகந்தன்னை
அப்பனே பலமொன்று கல்வத்தாட்டே. (18)

ஆட்டுதற்குச் சுத்திசெய்த கெந்திதன்னை
அப்பனே பலமொன்று கூடப்போடு
ஆட்டுதற்குப் பழச்சாற்றிற் சாமமொன்று
அரைத்திடுவாய் வில்லைதட்டி யுலரப்போடு
ஆட்டுதற்கு முப்பதெருக் குள்ளேபோட்டு
அயலோகச் செந்தூர மாமேகண்டீர்
ஆட்டுதற்குச் செந்தூர மவ்விடைக்கு
அப்பனே கெந்தகத்தைத் தூக்குதூக்கே. (19)

தூக்கியே பழச்சாற்றால் சாமமொன்று
துவளவரைப் பூநீறு காலுங்கூட்டித்
தாக்கியே யரைத்தபின்பு வில்லைசெய்து
சாதகமா யுலர்ந்தபின்பு புடத்தைப்போடு
வாக்கிலே செந்தூர லோகமப்பா
மைந்தனே யரைப்பணந்தா னனுப்பானத்தில்
ஆக்கியே கொடுயெந்த வியாதிக்குந்தான்
அனுப்பான மறிந்துகொண்டு மாட்டுமோட்டே, (20)

மாட்டவே வாயுநோய் பித்தம் போகும்
மயக்கமொடு சிலேற்பனநோய் எல்லாம்போகும்
ஊட்டவே யிம்மருந்து எளிதா மப்பா
உரைப்பார்கள் நாதாக்கள் சுளுவீ தென்று
நாட்டவே லோகசெந் தூரந் தன்னில்
நலமாக வொருகழஞ்சு யெடுத்துக் கொண்டு
நீட்டவே லிங்கமொரு கழஞ்சு கூட்டி
நிலையான வீரமொரு காலுங் கூட்டே (21)

கூட்டியே பழச்சாற்றி லரைக்கும் போது
கொடியதொரு கெந்தகந்தான் கழஞ்சு போடு
நாட்டியே சாமமொன்று அரைப்பா யப்பா
நலமாக வில்லைசெய்து வுலர்த்திக் கொண்டு
வாட்டவே யிரண்டெருவிற் புடத்தைப் போடு
வளமாக ஆறினபின் னெடுத்துப் பாரு
காட்டிலே யிருந்தசித்தர் மெச்சு வார்கள்
கனத்ததொரு செந்தூரங் கண்கொள்ளாதே. (22)

கொள்ளாதே செந்தூரந் தனக்குப்பாதி
கூட்டுவாய் லிங்கமதை மூலைப்பால்தன்னில்
விள்ளாம லொருசாம மரைத்துப்பின்பு
விரல்நீளம் உண்டைசெய்து வுலர்த்திப்போடு
தள்ளாத சன்னிவகை யெல்லாம்போகும்
தாதுவிர்த்தி யுண்டாமே சாதிலிங்கம்
உள்ளபடி வாதிகளே சொல்லக்கேளு
உதிரத்தில் வாதபித்த மொழிந்துபோமே. (23)

ஒழிந்துபோங் காந்தத்தை யிதுபோற்செய்யில்
ஒப்பார்சொல் லுலகத்தி லவனேயீசன்
ஒழிந்துபோங் காந்தசெந் தூரமாகில்
உத்தமனே சாதிலிங்க மொக்கச்சேரில்
ஒழிந்துபோம் பாண்டுகா மாலைரோகம்
உள்மூலம் புறமூலம் உலகத்தோர்க்கு
ஒழிந்துபோம் வாதபித்த சிலேற்பனந்தான்
உயர்த்தியப்பா காந்தத்தின் சிவப்புத்தானே (24)

தானென்ற யேமமது வெள்ளையாகச்
சாற்றுகிறேன் தங்கமொரு பலத்தகட்டில்
வேனென்ற நாகத்தின் வெள்ளைதானும்
விளங்கவே காற்பலந்தான் நிறுத்துக்கொண்டு
வானென்ற வீரமொரு கழஞ்சு கூட்டி
மைந்தனே புழுகுமரைக் கழஞ்சுகூட்டிக்
கானென்ற வெண்கருவா லரைத்துக்கொண்டு
கனக்கவே பூசிடுவாய்த் தகட்டின்மேலே. (25)

மேலிட்ட மருந்துள்ளுந் தங்கந்தன்னை
விருப்பமா யண்டநீர் கீழ்மேலிட்டு
பாலிட்ட வெள்ளையைப்போற் றங்கம்நீறும்
பரிவாக கசபுடந்தான் தீயைமூட்டு
மேலிட்ட தங்கமது நொருங்கிநிற்கும்
மேன்மக்கள் கல்வத்தி லரைக்கத்தூளாம்
மாலிட்ட தங்கத்தூள் தன்னிற்பாதி
மாட்டுவாய் வீரமது பூரங்காலே. (26)

பூரத்தி னிடைபோடு புழுகுதன்னைப்
பொற்புமிகு வண்டரிசி அவ்விடைதான்
பூரத்தி னிடைபோடு சூதந்தன்னைப்
புகழாக விவ்வளவுங் கூட்டியாட்டு
வீரத்தாற் றங்கமது வெள்ளையாகும்
வீணல்ல கசபுடத்திற் போடுபோடு
சீரொத்த வண்டநீர் கீழ்மேலிட்டுத்
தீப்போடத் தங்கமது தவளமாமே. (72)

தவளமென்ற யேமத்திற் சரியாம்லிங்கஞ்
சாரித்து முலைப்பால்விட் டரைத்துக்கொண்டு
தவளமாய் வில்லைசெய்து உணர்ந்தபின்பு
சூதகமாயோரெருவிற் புடமுந்தீர்ந்தால்
தவளமென்ற தங்கஞ்செந் தூரமாகும்
சன்னியென்ற ரோகமெல்லாம் பறந்துபோகும்
தவளமென்ற தங்கத்தின் செந்தூரத்தைச்
சாதகமாம் வாதிகளே செய்துபாரே. (28)

பாரையா சந்திரோதயந் தானிந்தப்
பரியில்வெள்ளை லிங்கத்தைச் சேர்த்தபோதே
பாரையா பூபதிக ளிதற்கீ டாமோ
பலபலசெந் தூரவகை யிதற்கீடாமோ
பாரையாஇதையெடுத்து வெள்ளி செம்பிற்
பத்திலொன்று கொடுத்துருக்க மாற்றேழாகும்
பாரையா குன்றிளடை யனுப்பானத்திற்
பண்பாகக் கொடுக்கநோய் பறந்துபோமே. (29)

போமடாசடத்திலுறு நோய்க ளெல்லாம்
பூபதியின் மருந்தொன்று சொல்லக்கேளு
நாமடாவொளித் தறியோம் தங்கவெள்ளை
நாகவெள்ளை லோகவெள்ளை காந்தவெள்ளை
தாமடா செம்புவெள்ளை யைந்துமொன்றாய்ச்
சரியிடையாய்க் கழஞ்சுரெண்டு வீதந்தூக்கி
காமப்பால் விட்டரைத்துக் கழஞ்சுபத்து
கல்வமிட்டு யரைக்கையிலே முத்துப் போடே. (30)

போட்டா வயிரமொடு பவளம்போடு
புட்பராகங்கோமே தகமும் பச்சை
போட்டா சிவந்தமணி ரத்னம்போடு
புகழாக வகையொன்றுக் கரைக்கழஞ்சு
தேட்டா கெந்தகமோ கழஞ்சுநாலு
திறமான லிங்கமது கழஞ்சுயெட்டு
ஊட்டா சூதமது கழஞ்சுயெட்டு
வுத்தமனே தாளகந்தான் கழஞ்சியொன்றே. (31)

ஒன்றிடுவாய் மனோசிலையும் வெள்ளையொன்று
உறவான துருசதுவும் நிறையொன்றாகும்
நன்றிடுவாய் சாரமொன்று சீனமொன்று
நலமான வீரமொன்று பூரமொன்று
சென்றதொரு பொற்றலையின் சாற்றாலாட்டி
திறமாகச் சர்மமொன் றரைத்தபின்பு
துன்றிடவே அமுரிவிட்டுச் சாமமொன்று
சுருக்காகச் சம்பழச்சார் சாமமொன்றே. (32)

சாமமொன்று அரைத்திடுவா யுப்புநீரால்
சாதகமா யரைத்தபின்பு வில்லைசெய்து
நாமென்று புதுக்கலசத் துள்ளேவைத்து
நலமாக மேல்மூடிச் சீலைசெய்து
ஓமமென்ற ஐம்பதெருப் புடத்திற்போடு
ஒன்றுமங்கே புகையாமற் கட்டநீறுஞ்
சேமமென்று புடமாறி யெடுத்துப்பாரு
செந்தூர மருணநிற மாகும்பாரே. (33)

பாரப்பா செந்தூர நிறைதப்பாமல்
பாதிலிங்கங் கூட்டிமுலைப் பாலாலாட்டி
நேரப்பா விரல்நீளங் கயிர்போசற்செய்து
நிர்ணயமா யுலர்த்தியதைப் பதனம்பண்ணு
காரப்பா குருபதத்தைப் போற்றிசெய்து
கைலாச வைரவனைப் பூசைபண்ணு
சீரப்பா தேவிதனைத் தியானஞ்செய்து
சேர்க்குமிர்தப் பூபதிக்கு செபமும்பண்ணே, (34)

சிவமான பூபதியை யனுப்பா னத்தில்
திறமாக அரிசியிடை கொடுத்தாற்கேளு
சவமாகப் போனாலுந் தாதுவுண்டாஞ்
சாதுரியப் பிராணன்வரும் விழித்துபார்ப்பான்
அவமான பிரமலபி யம்மட்டாகில்
அவனெழுந்து பேசியபின் னடங்குவான்பார்
தவமான பூபதியைச் சொன்னேன்பாரு
சாதித்து வைத்தியஞ்செய் தர்மமாமே (35)

ஆமடா இம்முறைவைத் தியத்தைப்பாரு
அஷ்டதிசை பெச்சுபுக ழுடைவாய்நீயும்
நாமடா வைத்தியர்க்காய் மருந்தெல்லாந்தான்
நலமாக குறுக்கிவைத்தேன் முப்பத்தாறிற்
வாமப்பா யிந்தவகை மருந்தைச்செய்தால்
வாயக்குமடா வுந்தனுக்கு மருந்தின்பாகம்
தாமப்பா எட்டிரண்டு மிருபத்தைந்து
தடையறவே யுருவேறச் சித்தியாமே. (36)

அகஸ்தியர் செந்தூரம் ௩௱௫.க்கு சூஸ்திரம் ௩௱௬

முற்றிற்று.

---



உ

பரமபதி துணை.

அகஸ்யர் திருவாய் மலர்ந்தருளிய

# பஞ்சாட்சரம் ௱௰௫.

ஆதியென்ற அட்சரமே பிரமமூலம்
　　அருள்பெருகும் மூலமதில் மறந்துநின்ற
நீதியென்ற அக்கினியே சோதியான
　　நிலையறிந்து ஆதாரம் நன்றாய்ப்பார்த்து
சோதிபஞ்சாட் சரச்சுருக்கம் நேர்மையாகத்
　　துலங்குகுண்டி மூலர்கா லாங்கிநாதர்
ஆதிமுத லானகுரு போகநாதர்
　　அசுவனியாங் கொங்கணவர் பாதங்காப்பே; (1)

பாதமென்ற அடிமுடியே ஆதிபந்தம்
　　பதியான அகாரமுட னுகாரம்ரெண்டும்
பேதமன்றி யொன்றாக நின்றபோது
　　பெருகிநின்ற அட்சரமே பஞ்சபூதம்
நீதமென்ற பூதமதுக் குயிராய்நின்ற
　　நிசமான ஓங்காரம் வாசிமூலம்
நாதமென்ற ஓங்காரம் கணேசன்மூலம்
　　நடுவான சடாட்சரத்தை நயந்துபாரே. (2)

பாரடா மனங்குவிந்து நயந்துபார்க்கப்
　　பதிவான நமசிவய மைந்துமாச்சு
நேரடா அஞ்சிலோங் காரஞ்சேர்த்தால்
　　நிசமான சடாக்ஷரமா றெழுத்துமாச்சு
சூரடா ஆறிலஞ்சு சூலமாச்சு
　　சூட்சமாய் நின்றஅஞ்சைச் சொல்லக்கேளு
பேரடா ஆறறிந்து கூடப்போனர்
　　பிரியமுடன் ஆதார பிலத்தைக்கேளே. (3)

பிலமான சூட்சபஞ்சாட் சரத்தைக்கேளு
பேர்பெரிய கொங்கணவர் பாதம்போற்றி
நலமான அகாரமுட னுகாரங்கூட்டி
நாடிநின்ற மகாரமடா மவுனஞ்சேர்த்துத்
தலமான சிகாரமுடன் வகாரம்ரெண்டும்
தான்பிறக்க அஞ்செழுத்து மஞ்சமூலம்
குலமான அஞ்சிலோங் காரஞ்சேர்த்து
கூர்மையுடன் தான்சுருக்கிக் குணமாய்வில்லே. (4)

குணமாகத் தான் சுருக்கிச் செபமேசெய்து
கூடுறுதி யாகவொரு கருவைக்கேளு
மணமான மூலமல்லோ ஓமென்றாணி
மார்க்கமுட னுதையிலு காரங்கூட்டிக்
கனமான கண்டத்தி லங்சென்றாணி
கடாக்ஷமுடன் புருவமையத் தமரில்நின்று
இனமாக ஓம்வசி வசிவாவென்று
இன்பமுடன் நூற்றெட்டு உருத்தான்செய்யே. (5)

உருவறிந்து உருவேத்தி நயனசூட்சம்
உருதியுடன் பார்க்கையிலேசோதிகாணும்
திருவிருந்த சோதியைநா னென்னசொல்வேன்
தீர்க்கமுடன் சூரியன்போல் வட்டங்காணும்
குருவிருந்த வட்டமதி லுள்ளேபார்த்தால்
குளிர்ந்தமதி பூரணசந் திரனுங்காணும்
திருவிருந்த பூரணசந் திரனுக்குள்ளே
காணுமடா கற்பூரத் தீபந்தானே. (6)

தானான கற்பூரத் தீபந்தன்னைத்
தடையறவே ஓர்முகமாய்ப் பார்க்கும்போது
கோனான அத்தீப வெளிச்சத்தாலே
குருவிருந்த பரவெளியைக் கண்டேனப்பா
வானான பரவெளியைக் கண்டால்மைந்தா
மகிமைநா னென்னசொல்வேன் நீநாளுச்சு
ஊனான உலகமெல்லாம் நீநாளுச்சு
ஒடுங்கிநின்ற சிலம்பொலியைக் கண்டேன்பாரே. (7)

சாரப்பா கண்டுகொண்டு நிலையில்வந்தேன்
　　பதியறிந்து அகாரமடா சிவமுமாச்சு
நேரப்பா உகாரமடா சத்தியாச்சு
　　நிசமான மகாரமடா வாலையாச்சு
சாரப்பா சிகாரமுடன் வகாரம்ரெண்டும்
　　தன்னுறவாய் நின்றதொரு வாசியாச்சு
காரப்பா கிரியைநீ அறிவின்கண்ணாற்
　　கலந்துநின்ற காரணத்தைக் கருவாய்க்கேளே. (8)

கருவான சூட்சமடா சொன்னேன்சொன்னேன்
　　காரணபஞ் சாட்சரத்தைக் கருவாய்க்கேளு
உருவான அகாரமுட னுகாரங்கூட்டி
　　உரிமையுடன் ஓங்காரஞ் சத்திகூட்டித்
திருவான ததின்கீழே மகார மிட்டுத்
　　தீர்க்கமுடன் மகாரத்தின் நடுவிலேறிக்
குருவான அகார நீங் காரமிட்டுக்
　　கும்பமென்ற சுழிமுனையிற் சூலம்போடே (9)

சூலமிட்டு ஆதியந்தஞ் சிங்குவங்கு
　　சூர்யகலை சந்திரகலை வாசிபூட்டி
ஆலவட்ட மானஅடி முடியொன்றாக
　　அமர்ந்தொன்றாய் நின்றதுவே காரணந்தான்
தூலமிட்டுச் சூட்சமிடத் தூலசூட்சம்
　　துலங்கிநின்ற காரணந்தா னநேகமாச்சு
மூலவட்ட மானகுரு பேதமான
　　மூன்றெழுத்தும் இரண்டெழுத்து மஞ்சுமாச்சே. (10)

அஞ்சுபஞ்சாட் சரச்சுருக்க மார்தான்காண்பார்
　　அரிதரிது சொல்லுகிறேன் அறிவாய்க்கேளு
அஞ்சுமொன்றாய் நின்றதொரு நாதவிந்து
　　அடங்கியுருத் திரண்டுமொரு மணியுமாச்சு
அஞ்சுமுக மானமணி ஓங்காரத்தால்
　　ஆறுமுக மானசடாட் சரமுமாச்சு
அஞ்செழுத்து மாறெழுத்து மொன்றேசூட்சம்
　　அருமையுள்ள சொரூபமணி யானவாறே. (11)

வாஞன சொரூபமணி யானவிந்து
மதிகதிரு மொன்ருன மணிக்குமைந்தா
பேருன சத்திசிவ பாதந்தன்னைப்
பெருகிநின்ற மணிதனக்குத் தானேயூட்ட
நேராகச் சொரூபமணி கமலி யாச்சு
நிறைந்துநின்ற கமலிமணி தனக்குமைந்தா
பேரான வாலைரசந் தானேயூட்டப்
பெருகிநின்ற அட்டசித்து மணியுமாச்சே. (12)

ஆச்சப்பா அட்டசித்து மணிக்குமைந்தா
அரகரா பஞ்சகண தீட்சையூட்டு
மூச்சப்பா அசையாமல் நிலைநின்றுடும்
முத்தியுள்ள மூக்குளிகை சித்தைக்கேளு
நீச்சப்பா சத்திசிவ பூசையாலே
நிசமான வாய்வேக மணியுமாச்சு
காச்சப்பா வாய்வேக மணிக்குமைந்தா
கருணையுள்ள வாலைரச மூட்டிப்பாரே: (13)

பாரப்பா வாலைரச மூட்டும்போது
பதிவான மனவேக மென்றும்பேரு
நேரப்பா மனவேக மணிக்குமைந்தா
நேர்மையுடன் பஞ்சகண தீட்சையோதக்
காரப்பா கெவுனரச குளிகையாச்சு
கனகமணிக் குளிகையா தாரமாச்சு
சாரப்பா ஆதாரச் சொரூபமைந்தா
சகலகலை சொரூபமணி யென்றும்பேரே. (14)

போரான சொரூபமணி தன்னைமைந்தா
பேருலகிற் கோடியிலே ஒருவன்கண்டு
நேராகக் கண்டமணி தான்தானென்று
நிசமான சற்குருவாற் கடாக்ஷம்பெற்றுக்
கூராகச் சத்திசிவ கலையையூட்டிக்
கூர்மையுள்ள வாலைரசந் தன்னையூட்டி
மாராத பஞ்சகண தீட்சையாலே
மகத்தான சொரூபமணி சித்தியாச்சே. (15)

சித்திமுறை யறியாத உலகத்தோர்கள்
தீனியின்மே லாசைகொண்டு கெருவமாகி
வித்தான சத்திசிவன் தனைமறந்து
வேதாந்த அமுதரச மறியா மற்றான்
பத்தாசை விட்டவன்போற் பேசிக்கொண்டு
பலருசியின் மனமிருந்து பாவிமாரே
செத்தாலும் மோட்சமுண்டோ உங்களுக்குச்
சிவசத்தி வாலைரசந் தெளிந்துகொள்ளே. (16)

தெளிந்துகொண்டு பஞ்சகண தீட்சைதன்னிற்
சிவசிவா சதாகாலம் மனதைநாட்டி
தெளிந்துமனம் போகாம லுருவேசெய்தால்
நீடூழி காலம்வரை நிலைநின்றாடும்
குளிர்ந்தபஞ்சாட் சரச்சுருக்கங் குறியாய்நிற்கும்
குருவருளா லனுதினமுங் கடாட்சம்பெற்று
வளிந்தொழுகும் மதுரரச பானந்தன்னை
மதிகதிருஞ் சுழிதிறக்க வகையாயூட்டே (17)

ஊட்டிமிக வொன்றான சத்தைவாங்கி
ஓம்நமசி வாயமென்று உள்ளேகொள்ள
வாட்டமென்ன அறுபான்நால் சித்தியாகும்
வரிசையுள்ள சொரூபமணி மங்காதையா
நாட்டமுள்ள கேசரியே நாமென்றெண்ணி
நாதாந்தச் சின்மயமாய் வாசியேறித்
தாட்டிகமா யில்லத்தி லிருந்துகொண்டு
தடையாலே சுண்டிவிடு ஆடுந்தானே. (18)

ஆடாமற் சாடுகிற வேலைபார்த்து
அகாரமுட னுங்கார மழுத்தியூது
வாடாமல் மனங்குவிந்து ஊதினக்கால்
வாய்வேக லகிரியினால் நிலைநின்றாடும்
கூடான லகிரிதனைச் சூட்டிப்பாரு
சுழிதிறந்து அமுதமது அங்கேபாயும்
வீடான பில்லத்திற் பாய்ந்துதானால்
வேதமென்ற மனவேகக் குளிகையாச்சே. (19)

ஆச்சப்பா குளிகையிலே யறியாமற்றான்
அறுசுவைமே லாசைகொண்டு அமர்ந்துபோனல்
மூச்சப்பா தானசந்து போகாமற்றான்
முத்தியுள்ள மணிதனக்கு லகிரியூட்டிக்
காச்சப்பா மூலமென்ற வன்னிதன்னாற்
காய்ச்சியே அத்தேகங் கசடுநீங்கும்
போச்சப்பா கசடதுதான் நீங்கிப்போனாற்
போதமென்ற ஞானநெறி புனிதமாமே. (20)

ஆமப்பா புனிதமுட னிருந்துகொண்டு
ஆதார நிலமதனை அங்கேபார்த்து
காமப்பால் கொண்டுமனக் கசடுபோக்கிக்
கருவான கானற்பால் கலையையூட்டி
வாமப்பால் கொண்டுபிர ணவத்தைநாட்டி
மனங்கனிய சத்திசிவ வாலைபூசி
தாமப்பா பென்றுமன துறுதிகொண்டு
தங்கமென்ற அங்கமதிற் சேர்திபாரே. (21)

சோதிபஞ்சாட் சரச்சுருக்க மூலம்பார்க்கச்
சொல்லவொன்னு ஓரெழுத்து மங்கேகண்டேன்
ஆதியென்ற ஆறெழுத்து மங்கேகண்டேன்
அங்கமடா முப்பத்தி ரண்டேஅங்கம்
சாதியென்ற அங்கமடா சத்தியாச்சு
தன்னுருவாய் நின்றசிவம் வாசியாச்சு
நீதியுடன் வாசிமலர் தானேசூட்டி
நேசமுடன் வாசனைக ளகலத்தள்ளே. (22)

தள்ளுவது பென்னவென்று பெண்ணவேண்டாம்
தன்னுறவு பில்லாத சமையத்தோரே
உள்ளுணர்வு பில்லாத உருப்பேய்தன்னை
உறுதியுள்ள வாசியிலே யறியார்தன்னைக்
கள்ளுடனே அபினுறக்கங் கொண்டுமோகக்
கால்பதறி வாய்புலம்புங் கசடர்தன்னை
எள்ளளவு மனந்தனிலே நினைக்கவேண்டாம்
எள்ளுடனே மீனிறைச்சி தள்ளுந்தானே. (23)

தள்ளூடா சத்துருவாய் நின்றதெல்லாம
தன்மனமே சாட்சியதாய்த் தள்ளுதள்ளு
அள்ளடா தள்ளுகிற தேதென்றாக்கால்
அப்பனே அபமிருத்து அகன்றுபோகும்
தெள்ளடா அவமிருத்து தனிந்துதானாற்
சிவசிவா சிவயோக சித்தியாகும்
உள்ளடா உள்ளுணர்வாய்த் தன்னைப்பார்த்து
உத்தவெளி யாமதிலே ஒடுங்கிநில்லே. (24)

நில்லடா நிலையறிந்து மனக்கண்ணாடி
நிலையான நாமத்தி னூடேகூடிச்
சொல்லடா ஓம்அம்உம் என்றுமேதான்
சொன்னபின்பு அம்உம்மம் என்றேயோது
அல்லடா அஷ்டசித்தும் நானேநின்று
அஞ்செழுத்துந் துஞ்சாம லங்கென்றாதும்
நில்லடா யிந்தஅஞ்சி லோங்காரந்தான்
நிலைத்துதடா யிடமதுதான் திட்டம்பாரே. (25

திட்டமுடன் ஓம்றீங்அங் கிழியும்சிவாவென்று
தீர்க்கமுடன் பூரணமாய்ப் புருவத்தேகி
இட்டமுடன் தனித்திருந்து உருநூற்றெட்டு
ஏகாந்த மாயிருந்து செபிததாயானால்
அட்டாங்க யோகமது திட்டமாகும்
அன்புவைத்து அனுபதியைக் கடாக்ஷித்தாக்கால்
சட்டமுட னின்றதொரு பீடையெல்லாம்
தான்பயந்து தலையழிந்து போகும்பாரே. (26)

பாரப்பா இடகலையில் வங்கென்றாணிப்
பரிவான பிங்கலையிற் சிங்கென்றாணி
நேரப்பா சுழிதனிலே மங்கென்றாணி
நிசமாக ஓம்றீங்அங் கிலிசிவாவென்று
சாரப்பா சிவயோகத் திருந்தாயானாற்
சந்திரனுஞ் சூரியனு மொன்றாய்நிற்கும்
காரப்பா யிருகலையு மொன்றாய்நிற்கிற்
கைலாச வாசிசிவ யோகியாச்சே. (27)

ஆச்சப்டா மூலமது அகாரபீடம்
அடங்கிநின்ற வாயுவுணிர் மலமேயாச்சு
காச்சப்பா அஞ்சையுமே ஒழுங்காய்க்கூட்டக்
கருவான பஞ்சகண தீட்சையாச்சு
வாச்சப்பா ஓங்கார முரைத்துஊட்ட
வல்லஅவ்வும் உவ்வுமொன்றாய் வலுத்தப்போச்சு
நீச்சப்பா யகாரமென்ற தீட்சைதன்னில்
நிர்மலனார் நின்றுநட மாடாலாச்சே. (28)

ஆச்சப்பா பிருதிவியும் அப்புங்கூட்டி
அடங்கிநின்ற வச்சிரமாங் குகையில்வைத்து
மூச்சப்பா தானடக்கி யூதும்போது
முத்தியுள்ள அப்பும்உப்பும் உருகும்பாரு
காச்சப்பா அப்புமுப்பும் உருகும்போது
கதிர்மதியும் மதியுமொன்றாய்க் கலந்துகூடி
பேச்சங்பா தானடங்கும் ஊதிப்பாரு
பிலமான பஞ்சகர்த்தாள் குருவுமாச்சே. (29)

குருவான களங்கதனை யெடுத்துக்கொண்டு
கூர்மையுட னதற்குநிகர் கெந்திசேர்த்துத்
திருவான கல்வத்திற் பொடித்துமைந்தா
திரமான பொற்றலையின் சாற்றாலாட்டி
உருவான காரோட்டிற் பதனம்பண்ணி
உத்தமனே புடம்போட்டு எடுத்துப்பாரு
கருவான செந்தூரங்காரம்மெத்தக்
கருவறிந்து செந்தூரங் கொண்டபோரே. (30)

பாரப்பா செந்தூர மறிந்துகொண்டாற்.
பருதிமதி சுடர்மூன்றும் பதிவாய்க்காணும்
நேரப்பா கண்குளிரக் கண்டாலப்பா
நின்றபரப் பிரம்மடா நீதான்பாரு
சாரப்பா சகலமுமே பிரமமாகத்
தன்னுறவாய்த் தனித்திருந்து தான்தானாகிச்
சேரப்பா அகண்டவெளி பூரணமேயென்று
சிவசிவா பரவெளியிற் சேர்க்குந்தானே. (31)

தானாகி நின்றதுவே பிரமரூபம்
சகலகலை அமுதரச பரமானந்தம்
வானாகி நின்றபிர்மம் வெளிதானுச்சு
மந்திரபஞ் சாட்சரமும் வெளிதானுச்சு
கானாகிக் கடலாகிக் காணுக்கண்காட்சி
கற்பூரத் தீபவொளி வெளிதானுச்சு
கோனான குருபதமும் வெளிதானுச்சு
குருவானபூ ரணமெய்ஞ்ஞானமாச்சே. (32)

பூரணமாம் மெய்ஞ்ஞானங்கடந்த மூலம்
பொருளான ஆதியடா சுழினைவீதி
வாரணமாம் அம்பரத்திற் கருத்தை வைத்து
வளமான சோதியுட மகிமை யாலே
தாரணமாம் பூரணத்தின் முடிவு காண்பாய்
தற்பரையின் சிற்சொருபந் தானே காண்பாய்
ஆரணமாம் ஆகாச வட்டந் தன்னில்
ஆடிநின்ற ஐங்கரன்றன் அருளைப்போற்றே. (33)

போற்றிநின்ற சின்மயத்தைப் புகலக்கேளு
புகழ்பெரிய பிருதிவி மண்நவ்வெழுத்தாம்
மாற்றியதோர் அப்பெழுத்து நீர்தான் மவ்வாம்
மைந்தனே சிவ்வெழுத்து தேய்வுதீயாம்
கோற்றிநின்ற வவ்வெழுத்து வாயுகறுப்பாகும்
கொண்டவெளி அவ்வெழுத்தே பஞ்சவுருவாகி
சாற்றரியாத் தூலவுடல் தன்னிலாகித்
தன்னுச்சிவழி கடந்து ஓம்பாரே. (34)

பாரேநீ பரவெளிதான் சத்திமுத்தி
பாங்கான நாதமென்றும் விந்துவென்றும்
காரேநீ கதிரென்றும் முடிதானென்றும்
கற்பூர தீபமென்றுங் காளி யென்றும்
மாரேநீ வேகாத தலைதா னென்றும்
மாட்டினர் சாகாத கால்தானென்றும்
வேரேநீயெண்ணாதே வாலை பூசை
விண்ணினொளி கண்ணளவாய் நிற்குங் கேளே. (35)

கேளப்பா சாக்கரத்தின் கோட்டைக் குள்ளே
கெடியான முக்கோண வட்டந் தன்னிற்
சூளப்பா வன்னிமலைச் சன்னி திக்குள்
சூழ்ந்திருப்பார் நவகோடிசித்தர் தானும்
வாளப்பா குகையறிந்து பதியைப் பாரு
மலைமீதி லேறிவிளை யாடுவார்பார்
ஆளப்பா ஒருமனதம் பரமே முத்தி
ஆகாச வட்டமடா அறிந்து கொள்ளே. (36)

அறிந்துகொள்ளு சித்தருட மறப்பையெல்லாம்
அகாரமுடி தனிலேறி உகாரந்தொட்டுச்
செறிந்துபார் இராசலிங்க சுரூபந் தன்னை
சிகாரத்தின் நடுவேறி மகாரத் துள்ளே
கருவறிந்து கைலைமலை யேறி னுக்காற்
காணுமடா சின்மயந்தான் கார்மேகம்போல்
புருவநடு முனையாகிச் சுழியு மாகிப்
புகுந்தனடா பரவெளியில் ஞானமுற்றே. (37)

அகஸ்தியர் பஞ்சாட்சரம் ௩௭. முற்றிற்று

உ

பரமபதி துணை

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# குருக்கிடை சூஸ்திரம் ௧௰௮.

பூரணமாய் நிறைந்ததொரு தோதிபாதம்
        புகழ்பெற்ற நாதக்கள்ரிஷிகள்பாதம்
காரணமா யுதித்தெழுந்த வாணிபாதம்
        கருக்குருவாய் வந்ததொரு கந்தன்பாதம்
ஆரணமா யாவுமாய் வெளியாய்நின்ற
        அம்மைசிவ காமிமகி ழீசன்பாதம்
வாரணமா முகமான கணநாதன்றன்
        மலர்ப்பாத மாதியாய் வணங்குவோமே. (1)

ஆதியாய்ச் சிற்பரையாய் மேருவான
        அனவரத கலியாணி சமைந்தநாதம்
சோதிரச தாரமொடு காரசாரம்
        துலங்குகின்ற சிலைசினம் சாதிலிங்கம்
நீதியுட னெழுசாக்கும் நாதத்திட்டு
        நேர்மையாய் ரவியில்வைத்துக் கல்வத்தாட்டி
வேதிபெற வில்லைசெய்து புடத்தைப்போடு
        வில்லைமதியாச் செந்தூரம் செம்புபாரே. (2)

தாம்பிரக கற்பம்

பாரப்பா செம்பினுட வெள்ளைகேளு
        பரிவான தாம்பிரகங் குகையில்வைத்துச்
சேரப்பா மதியுப்பு பலமேபோடு
        சேர்த்துருகும் போததனின் மருந்துகேளு
காரப்பா பலமிரண்டு அண்டம்போடு
        கனத்தநவச் சாரமதி லிரண்டுபோடு
சீரப்பா கல்வத்திற் றூளதாக்கிச்
        சிறந்ததொரு வெங்கார மரைதான்போடே, (3)

போட்டதனைப் பொடித்துநன்றாய்ப் பொடியைத்தூவு
புகழான செம்பினுட வூறல்போகும்
தாட்டிகமாய்ப் பின்பெடுத்து வங்கங்குத்தி
தனியோட்டி லூதிடவே களிம்புபோகும்
மாட்டதனைக் குகையிலொரு பலம்போடப்பா
வளமாகக் கண்விட்டே வுருகும்போது
நாட்டியசுண் ணத்திற் றூளகழும்வைத்து
நலமாகப் பதினைந்து தரமேநீற்றே. (4)

நீற்றியதைக் கழுவியே யெடுத்துக்கொண்டு
நிறுத்திடுவாய் பலமொன்று சாரங்கால்தான்
போற்றியிதைப் பழச்சாற்றாலரைத்துக்கொண்டு
புகழாகப் பயறளவே யுண்டைசெய்து
கேத்தியாய்க் கொடுக்கையிலே சத்தைவாங்கும்
நிறமாஞ்செம் பதுவும்வெங் கலம்போலாகும்
மாத்தியதை யரைப்பலந்தான் கல்வத்திட்டு
மாட்டியிதைப் பொடித்திடுவாய் தூளாய்க்காணே. (5)

காணப்பா யிந்திடைக்கு வீரம்போடு
கடுகவே சாமமொன்று அரைத்தாயானால்
தோணப்பா ஜலம்வற்றி மெழுகுபோலாம்
துடியான சூதமரைப் பலமேபோடு
ஆணப்பா செம்பிடைக்குச் சூடன்போடு
அரைக்கும்போ ததில்வெள்ளை யரைக்கால்போடு
நீணப்பா சூடனிடை வுரமும்போடு
நிலைக்கவே யரைத்துநன்றாய் வில்லைதட்டே (6)

வில்லைதனை யுலர்த்தியபின் குகைக்குள்வைத்து
மேல்மூடிச் சீலைசெய்து புடத்தைப்போடு
வில்லையது கெஜபுடத்தில் வெள்ளையாகும்
விளங்கியதோர் தாம்பிரக வெள்ளையப்பா
வில்லையதைப் பதனமாய் வைத்துக்கொண்டால்
மேகமொடு பதினெட்டுக் குஷ்டந்தீரும்
வில்லையினால் வாயுவெல்லாம் ஒழிந்துபோகும்
விளங்கியதோர் பித்தமெல்லாம்பறந்துபோமே (7)

பறந்துபோம் அனுப்பான மறிந்துகொண்டால்
பற்பத்திற் குறைவொன்று மில்லையப்பா
இறந்துபோம் வியாதியெல்லா மென்னசொல்வேன்
எடுத்திட்ட செம்பினுட வெள்ளைவேகம்
கறந்தபால் சாதத்திற் கூட்டச்சொல்லு
கருப்புக்க ட்டியைப்போட்டுக் காய்ச்சிக்கொள்ளு
அறந்தானே அவனியோர்க் காகச்சொன்னேன்
அப்பனே நாகத்தின் வெள்ளைகேளே. (8)

கேளப்பா சுண்ணமொடு சாரஞ்சேர்த்துக்
கெடியான அமுரிவிட்டுத் தண்ணீராக்கி
வாளப்பா நாலுபல நாகத்தைத்தான்
மைந்தனே நீயுருக்கிச் சாய்ப்பாயப்பா
வேளப்பா யிரண்டுபத்து விசைபேசாய்ப்பாய்
மீறுகின்ற நாகமதி னூறல்போகும்
மாளப்பா யெடுத்துபழச் சாற்றிற்சாய்ப்பாய்
மைந்தனே நாகமது சுத்தியாச்சே (9)

ஆச்சப்பா யீரைந்து தரமேசாய்ப்பாய்
அப்பனே குகையிலிட்டு உருக்கிப்பின்பு
வாச்சப்பாசுத்திசெய்த தாளகந்தான்
வரிசையாய்ப் பலமொன்று மெடுத்துக்கொண்டு
நீச்சப்பா பழச்சாற்று லரைத்துக்கொண்டு
நேசமுடன் குன்றியள வாயுருட்டிக்
காச்சப்ப ரவிமுகத்தி னுலர்ந்தபின்பு
கணக்காக நாகமொரு பலத்திற்றூக்கே. (10)

தாக்கப்பா தாளகத்தி னுண்டைதன்னை
தபவாக ஒவ்வொன்றாய்க் கொடுத்தபின்பு
வாக்கப்பா நாகமது தெரிக்கும்பாரு
மைந்தனே யிந்நாகம் பலமதொன்று
நீக்கப்பா கல்வத்திற் பொடிக்கத்தூளாம்
நோகக வீரமதிற் பாதிபோடு
தூக்கப்பா சூதமதிற் கால்தான்போடு
துடியான உவருப்பு அரைக்கால்போட்டே. (11)

போடப்பா நவச்சாரம் அரைக்கால்போடு
புகழ்ந்ததொரு மருந்திடைக்குச் சூடன்போடு
ஆடப்பா கலம்பால்வெண் கருவுங்கூட்டி
யரைத்திடுவா யிருசாமம் வில்லைதட்டிப்
போடப்பா உலர்ந்தபின்பு சுண்ணச்சீலை
போத்தியே சுண்ணாம்புக் குள்ளேவைத்து
தாடப்பா கெஜபுடமாய்த் தீயைப்போடு
தவளநிற மாகவெந்து வெள்ளையாமே, (12)

வெள்ளையடா ஆகுமது விரிந்ததப்பா
வியாதிக்கு அனுப்பான மறிந்துபோடு
பிள்ளையடா பெறக்குன்றி யிடையும்போடு
பேரான வாதமென்ற தெண்பதுக்கும்
கொள்ளையடா பித்தமது நாற்பதும்போம்
கூறுவேன் சேத்துமரோய் தொண்ணூற்றாறும்
கள்ளரைப்போற் பறந்தோடும் நாகங்கண்டால்
கருத்துள்ள வைத்தியரே கண்டிடீரே. (13)

கண்டான தின்னமொரு ஜெயநீர்சொல்வேன்
கண்கெட்ட வாதிகளே கருதிக்கேளு
உண்டான சேதியிது செயநீர்செய்ய
உத்தமனே பூநீறு பலந்தானென்று
சண்டான சாரமது பலந்தானென்று
சாமமொன்று அரைத்துப்பிங் கானிலிட்டு
பண்டான அமுரியுப்பு பலங்கால்போட்டுப்
பதனமற் பனியில்வைக்கச் செயநீராமே. (14)

செயநீரா லரைத்திடவே மருந்துகேளு
திடமாகக் காரமொன்று சாரமொன்று
செயநீராந் தாரமொன்று வீரமொன்று
செப்புகிறேன் கற்பூர மொன்றுகூட்டி
செயநீரா லரைத்திடவே சாமமொன்று
திரண்டுமெழு காகுமூன்று பங்குசெய்து
தயவாயரைப் பொடியைபழச் சாற்றிலிட்டுத்
தனையெடுப்பாய் நாளாநாள் கழுவிவாங்கே. (15)

லோகவெள்ளை

வாங்கியிந்த அரைபொடிதா னென்றுசெய்து
மைந்தனே யொருபங்கு மருந்துகூட்டி
ஓங்கியே பிசைந்தொன்றாய்க் குகையிலிட்டு
உத்தமனே மேல்மூடி சீலைசெய்து
நீங்காமற் குகையழுக நன்றாயூது
நிலைத்துருகி மணியாக நிற்கும்பாரு
சாங்கமாய் நெருங்குமிந்த மணிதானையா
தயவாகப் பின்னுமொருபங்குதீட்டே. (16)

தீட்டியே ஊதிடுவாய் மருக்காலுந்தான்
சிதறாமற் கைமுறையா யுருக்கிப்பின்பு
நாட்டியே பின்மருந்தோ டுருக்கும்போது
நலமான தங்கம்போற் கண்விட்டாடும்
தாட்டிகமா யம்மணியைக் கல்வத்திட்டுச்
சவ்வீரஞ் சரியிடைசேர்த் தரைக்கும்போது
ஊட்டியே கண்டிடைக்குப் பாதிசூதம்
உறவாஞ்சா ரங்காரஞ் சூடனென்றே. (17)

சூடனொடு மருந்தைந்து முறவாயாட்டச்
சுகமான வெள்ளையுட னுரமும்போடு
நாடவே மெழுகாகும் வில்லைதட்டு
ரவிமுகத்தி லுலர்ந்தபின்பு சுண்ணச்சீலை
ஊடவே சுத்தியுஞ்சுண் ணாம்பில்வைத்தே
உத்தமனே கெஜபுடமாய்க் கனலைமூட்டு
வாடவே வேண்டாங்காண் வைத்தியோரே
மகத்தான தவளநிற மாகும்பாரே. (18)

பாரப்பா லோகவெள்ளை வேகம்மெத்த
பாச்சப்பா அனுப்பான மறிந்துபோடு
சேரப்பா பாண்டுவகை யெல்லாம்போகும்
செகமறிய மேகமென்றதெல்லாம்போகும்
காரப்பா கவிசையொடு குன்மம்போகும்
காமாலை சோகையொடு விழலாய்ப்போகும்
வேரப்பா பித்தத்தின் கோபம்போகும்
விளங்குகின்ற சேத்துமந்தான் பறந்துபோமே. (19)

காந்தபற்பம்

பறந்துவிடுங் காந்தமிப் படியேசெய்யிற்
பரிவாகக் காந்தமது வெள்ளையாகும்
இறந்துவிடும் நோய்களெல்லா மேங்கிப்போகும்
எடுத்திட்டாற் காந்தவெள்ளை வேகம்மெத்த
மறந்துபோ காதேதை முறைதானப்பா
வளமாம்லோ கத்தின்செந் தூரங்கேளு
அறந்தழைக்கச் சுத்திசெய்த லோகந்தன்னை
அப்பனே பலமொன்று கல்வத்தாட்டே. (20)

ஆட்டுதற்குச் சித்திசெய்த கெந்திதன்னை
அப்பனே பலமொன்றுகூடப்போட்டு
ஆட்டுதற்குப் பழச்சாற்றுற் சாமமொன்று
அரைத்திடுவாய் வில்லைதட்டி யுலரப்போடு
ஆட்டுதற்கு முப்பதெருக் குள்ளேபோடு
வளமான லோகசெந்தூரமாகும்
ஆட்டுதற்குச் செந்தூரங் கண்டிடைக்கு
அப்பனே கெந்தகத்தைத் தூக்குதூக்கே. (21)

தூக்கியே பழச்சாற்றுற் சாமமொன்று
துவளவரை பூநீறு காலுஞ்சேர்த்துத்
தாக்கியே யரைத்தபின்பு வில்லைசெய்து
சாதகமாயுலர்ந்ததின்பின் புடத்திற்போடு
வாக்கிலே செந்தூரம் லோகமப்பா
மைந்தஅரைப் பணவிடைதானனுப்பானத்தில்
ஆக்கியே அந்தந்த வியாதிக்குத்தான்
அனுப்பானந் தனையறிந்து லோகம்போடே. (22)

போடவே வாயுவொடு பித்தரோகம்
புகழான சேத்துமத்தால் வந்தநோயும்
ஓடவே செய்யுமிதி லெளிதாய்மைந்தா
உரையார்கள் நாதாக்கள் சுளுவிதென்று
நாடவே லோகசெந் தூரந்தன்னில்
நலமாக வொருகழஞ்சி யெடுத்துக்கொண்டு
நீடவே லிங்கமொரு களஞ்சிகூட்டி
நிலையான வீரமொரு களஞ்சிகூட்டே. (23)

கூட்டியே பழச்சாற்று லரைக்கும்போது
கொடியதொரு கெர்தகந்தான் களஞ்சிபோடு
வாட்டியே யீரண்டெருவிற் புடத்தைப்போடு
வளமாக ஆறினபின் னெடுத்துப்பாரு
காட்டிலே யிருந்தசித்தர் மெய்ப்பாரப்பா
கருத்தான செந்தூரங் கண்கொள்ளாது
வீட்டிலே யிருந்தவர்க்குக் கொடுக்கநன்று
வெளியிலே யிருந்தவருங் கொள்ளநன்றே (24)

கொள்ளாத செந்தூரந் தனக்குப்பாதி
கூட்டுவாய்லிங்கத்தை முலைப்பாலாலே
விள்ளாம லொருசாம மரைத்துப்பின்பு
விரல்நீள மாயுருட்டி யரைத்துப்போடு
தள்ளாத சன்னிவகை யெல்லாம்போகும்
தாதுவிர்த்தி யுண்டாகுஞ் சாதிலிங்கம்
உள்ளபடி வாதிகளே சொன்னேன்கேளு
உண்மையாய் வாதமெல்லாம் ஒழிந்து போமே. (25)

ஒழிந்துபோங் காந்தமிப் படியேசெய்யில்
உனக்கொப்பார் வைத்தியத்தி லீசனெப்பாம்
ஒழிந்துபோங் காந்தஞ் செந்தூரமாகில்
உத்தமனே சாதிலிங்கங் கூடச்சேரில்
ஒழிந்துபோம் பாண்டுகாமாலை ரோகம்
உள்மூல மொன்பதுவும் பறந்துபோகும்
ஒழிந்துபோம் வாதபித்தம் ஐயந்தானும்
உயர்ச்சியப்பா காந்தத்தின் சிகப்புத்தானே. (26)

தங்க வெள்ளை

தானென்ற பேமமது வெள்ளையாகக்
சாற்றுகிறேன் தங்கமொரு பலத்தகட்டில்
வேனென்ற நாகத்தின் வெள்ளைதானும்
விளங்கவே காற்பலந்தா னிறுத்துக்கொண்டு
வானென்ற வீரமொரு களஞ்சிகூட்டி
மைந்தனே புளுகுமரைக் களஞ்சிகூட்டி
கானென்ற வெண்கருவா லரைத்துக்கொண்டு
கனமாகப் பூசுபரித் தகட்டின்மேலே. (27)

மேலிட்ட மருந்துகளுந் தங்கந்தன்னை
விருப்பமா யண்டநீர்கிழ்மேலிட்டுப்
பாலிட்ட வெள்ளையைப்போல் தங்கம்நீறும்
பரிவாகக் கெஜபுடமாய்த் தீயைமூட்ட
ஏலிட்ட யேமமது நொருங்கிநிற்கும்
என்மக்காள் கல்வத்தி லரைக்கத்தூளாகும்
மாலிட்ட தங்கமது தனக்குப்பாதி
மாட்டுவாய் பூரமது பலமுங்காலே. (28)

பூரத்தி னிடையோடு புனுகுதன்னைப்
புகழாக வேயெரியும் புனுகுவேகம்
பூரத்தி னிடைபோடு சூதந்தன்னைப்
போதத்தா லிவ்வளவுஞ் சேர்த்துப்போடு
வீரத்தால் தங்கமது வெள்ளையாகும்
வீணல்ல கெஜபுடத்திற் போடுயோடு
தீரத்தா லண்டநீர் கிழ்மேலிட்டுத்
தீப்போடு தங்கமது தவளமாமே. (29)

தவளமென்ற யேமத்திற் சரியாய்லிங்கம்
சாரித்து முலைப்பாலா லரைத்துக்கொண்டு
தவனமது வில்லைசெய்து உலரப்போடு
சாந்தமா யோரெருவிற் புடத்தைப்போடு
தவளமென்ற பரியஞ்செந் தூரமாகும்
சன்னியென்ற மூலமெல்லா பறந்துபோகும்
தவளமென்ற தங்கத்தின் செந்தூரத்தைச்
சாதகமாய் வாதிகளே செய்துபாரே. (30)

பாரப்பா சந்திரோ தயந்தானிந்தப்
பரிவெள்ளை லிங்கத்திற் சேர்ந்தபோதே
பாரப்பா பூபதிதா னிதற்குயீடோ
பலபலசெந் தூரமது யிதற்குயீடோ
பாரப்பா யிதையெடுத்து வெள்ளிசெம்மிற்
பத்திலொன்று கொடுத்திடவே யேழுமாகும்
பாரப்பாகுன் றியிடை யனுப்பானத்திற்
பண்பாகக் கொடுத்திடநோய் பறந்துபோமே. (31)

பேரமப்பா ஜெகந்தனிலே நோய்கள்போகப்
பூபதிக்கு மருந்தொன்று சொல்லக்கேளு
நாமப்பா வொளிக்கறியோங் தங்கவெள்ளை
நாகவெள்ளை லோகவெள்ளை காந்தவெள்ளை
சாமப்பா செமபுவெள்ளை யஞ்சமொக்கச்
சரியிடையாய்க் களஞ்சிரண்டு விதந்தூக்கிக்
காமப்பால் விட்டரைப்பாய் களஞ்சிபத்து
காட்டப்பா வறுக்கையிலே முத்துப்போடே. (32)

போடப்பா பவளமொடு வயிரம்போடு
புட்பரா கம்போடு பச்சைபோடு
நாடப்பா சிவந்தமணி ரத்னம்போடு
நலமாக வகைக்குஅரைக் களஞ்சிபோடு
தேடப்பா கெந்தகமோ கலஞ்சிநாலு
செயமான முப்பூவுங் களஞ்சிநாலு
ஊடப்பா சூதமது களஞ்சியெட்டு
உத்தமனே தாளகந்தான் களஞ்சியொன்றே, (33)

ஒன்றெனவே மனோசிலைதான் வெள்ளையொன்று
உறவான துரிசொன்று துத்தமொன்று
நன்றெனவே சினமொன்று சாரமொன்று
நலமான வீரமொன்று பூரமொன்று
குன்றெனவே பொற்றலையின் சாற்றாலாட்டிக்
குணமாகச் சாமமொன்று அரைத்துக்கொண்டு
தன்றெனவே அமுரிவிட்டுச் சுருக்குத்தாக்கத்
தம்பழத்தின் சாற்றாலே சாமமாட்டே' (34)

சாமமொன்று அரைத்திடுவாய் சாற்றைவிட்டுச்
சாதனையா யரைத்தபின்பு வில்லைசெய்து
நாமமென்ற புதுக்கலசத் துள்ளேவைத்து
நலமாக மேல்மூடி சீலைசெய்து
ஓமமென்ற தைம்பதெரு புடத்தைப்போடு
ஒன்றுமங்கே; புகையாமற் கட்டிநீறும்
க்ஷேமமென்ற புடமாறி யெடுத்துப்பாரு
செந்தூரம் அருணநிற மாகும்பாரே' (35)

பாருநீ செந்தூரங் கண்டிடைக்குப்
    பாதிலிங்கம் முலைப்பாலா லாட்டியேதான்
பாருநீ விரல்நீளங் கம்பிசெய்து
    பரிவாக வுலர்த்தியதைப் பதனமாய்வை
காருநீ குருபதத்தை மூலம்பாரு
    கைலைவாழ் வயிரவனைப் பூசைபண்ணித்
தேருநீ தேவியைத்தான் தியானம்பண்ணு
    சிறக்குமிந்தப் பூபதிக்குச் சிவமொப்பென்னே (36)

சிவமான பூபதியை யனுப்பானத்திற்
    றிரமாக அரிசியிடை கொடுத்தாற்கேளு
சவமாகப் போனாலுந் தாதுவுண்டாய்ச்
    சாதுரியப் பிராணன்வரும் விழித்துப்பார்ப்பன்
உவகை பிர்மலபியுமிவ் வளவேபாகில்
    யோசித்துப் பேசிவிட்டு மரணமாவன்
தவவாதி களுக்குப் பூபதியைச்சொன்னேன்
    சாஸ்திரத்தின் படிசெய்யத் தருமமாமே' (37)

ஆமப்பா வயித்தியமிப் படியேபாரு
    அஷ்டதிசை மெய்க்கவுன்னை வாழ்த்தும்லோகம்
நாமப்பா வைத்தியத்தின் மருந்தையெல்லாம்
    நலமாகக் குருக்கிவைத்தேன் முப்பத்தெட்டில்
வாமப்பா யிந்தமருந் தெல்லாம்வைத்தால்
    வாய்க்குமப்பா வுந்தனக்கு யிந்தப்பாகம்
தாமப்பா யெட்டிரண்டு மிருபத்தைந்துந்
    தடையறவே யுருவேறச் சித்தியாமே. (38)

அகஸ்தியர் குருக்கிடை ௨௮ முற்றிற்று.

உ

பரமபதிதுணை

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய.

# பாலக்கிரஹதோஷநிவர்த்திநுசு.

——:(*):——

சித்தரியா யுட்சுழியாய்ச் சிகார ம கித்
    தேவியுட அட்சாமே ஆ ஊ வாகி
மூத்தான நீங்காரங் கிலியு மாகி
    மூன்றெழுத்தே வாலையுமாய் முடிவு மாகிப்
பத்தாகி யெட்டாகி யிரண்டு மாகிப்
    பராபரமாய் பரையாகி யருளுண்டாகிச்
சித்தரெலாம் இந்தெழுத்தை அறியார்பாரு
    செப்புகிறே னிசனுடைய சிகாரந்தானே, (1)

தானென்ற சுழியல்லோ பிர்மமாச்சு
    தாண்டவமாம் ஆதியந்தஞ் சமைந்ததாச்சு
ஊனென்ற உதிரமல்லோ உகாரமாச்சு
    உத்தமனே உயிரல்லோ சிகாரமாச்சு
நானென்ற ஆண்மைகொண்டா லெல்லாம்போச்சு
    நலமான மூன்றெழுத்தால் முத்தியாச்சு
மானென்ற உமையவளைப் பூசைபண்ணி
    மருவிகிற்பாய் செங்கிரந்தி மார்க்கஞ்கேளே, (2)

வெண்பா

செங்கிரந்தி தேகம் சிவப்பாங் கருங்கிரந்தி
பொங்கு மிடறுகட்டிப் போகுமே—நங்காய்கேள்
பேய்போலச் சீறியழும் பிள்ளைபட்சியின்தோஷம்
ஆய்பறவை தோஷத்தினூர். (3)

ஆராய்த் திருக்கிடுமே அன்றடைந்த புள்தோஷம்
வாராய்க் கழியும் வெண் வட்டுபோல்—நோய்
அளிதோஷங் கால்பின்னும் ஆகுமது வாந்தி
குளிதோஷ மாமென்று கூறு. (4)

கூறுமது தேரைக குணங்தேகங் தான்வற்றும்
மூறிமுட்டுத் தோஷம் முலைமறக்கும்—வீறுடனே
பெண்தோஷந் தான்மயக்கும் பேராகு மெட்டுமே
கண்பாகும் உதகமதை நாடு. (5)

வேறு

உதகமாய்க் கழிவ தன்றி வாந்தியு மிசவுண் டாகி
இதமொடு தலையெ டாமல் இருகண்ணிற் பீளை கட்டி
விதவித மாகமேனி வெதும்பியே பேய்போற் சீறும்
பதமிது பெருகப்பேசும் பட்சியின் தோஷந்தானே. (6)

பெருகி வயிறு தான்போகும் பேதம் உடம்பு கண்குழியும்
பெருதங் கழுத்து முகஞ்சிறுக்கும் பேயின் குரல்போற் சீறிபழும்
அருவிமுலையும் உண்ணாது அலறுந் தண்ணீர் குடியாது
பருவவிடையோன் தானறியப் பகரும் பட்சி தோஷமிதே. (7)

பச்சியின் தோஷந் தீரப் பனையின்வேர் குளிச மாடி
உச்சித மணித்தக் காளி உகந்திடும் வேரோ டுள்ளி
பிச்சியின் வேரோ டெண்ணெய் பிசைகதிர்ப் புடமே செய்து
உச்சியி லிட்டுப் பின்னும் உள்ளுக்குங் கொடுத்தி டாயே (8)

குஞ்சியின் உடம்பு நொந்து குடல்தனிற் பால்தங் காது
நெஞ்சையுஞ் சுழியாய் வாங்கும் நெற்றியும் வலிப்புண் டாகும்
துஞ்சிடும் போது சற்றே துணக்கெண வலித்துச் சீறும்
கொஞ்சிடும் பறவை தோஷங் குடித்தபால்கக்குந்தானே. (9)

குடித்தபா லெதிரெ டுக்குங் குழிந்திடுந் தலையுங் கண்கள்
அடிக்கடி திடுக்கிட் டேங்கும் அகமதிற் றுகமாகும்
எடுத்திடக் கையிற் றங்கா தெதிரிளைப் பெடுக்கும் பிள்ளை
கடுத்துடன் வயிறு போகுங் கருதுநீ பறவை தோஷம். (10)

பறவையின் தோஷந் தீரப் பயனுரைத் திடுவே னிந்த
துரையைநீ கேளாய் ஆலின் துளிர்தனைக் குளிச மாடித்
திறமைசி ரகமீ ருள்ளி திகழ்வரப் பூலா வேரும்
உறமதாய்க் காய்ச்சி யேதாள் உருத்தேயுங் குழவிக் கீயே, (11)

தேயுமுடம்பு மிக்காறும் முலைப்பால் மறந்திருக்கும்
தா[illegible] கண்டா லொவ்வாது சற்றே வயிறு தானொழுகும்

சேயும் புலிபோற் பதறியழும் சிலரைக் கண்டாற் பார்த்திருக்கும்
பாயும் எச்சித் தோஷமிது பாரா விடில்வித் தாருமிதே (12)

வித்தாந் தேக மிகநாறும் மெள்ள முலைப்பா லருவருப்பாம்
சத்தே வயிறு தான்கழியும் சண்டா ளம்போற் சுரங்காயும்
'தத்துந் தாயைக் கண்டாலே தவன துவாய்ச் சீறியழும்
மத்துங் கண்ணைப் பிசைந்தழுகும் மருந்துட் கொண்டா லுடன்போமே. (13)

போமேதான் எச்சிகுண தோஷங் கேளு
பேராண உதிரத்திற் சூடு கொண்டு
வாமேதான் மயக்குவித்துத் தலையெடாமல்
வாண்டுமே கண்பீளை கட்டிமூடும்
காமேதா னுடல்வற்றிக் கனலேமீறும்
கர்மாதி வினையிதுதான் சிசுகட்கெல்லாம்
ஆமேதான் விதவிதமாய் மேனிவற்றும்
அதுஎச்சி தோஷ குணமறிவாய்தானே. (14)

வேறு

தானே சுங்கன் வாரமதிற் றனித்த அசுவ கெந்தியைத்தான்
யானே காப்புத் தான்கட்டி மநசி வயவென் றுருவேற்றிப்
பானே நூற்றெட் டுருவோதிப் பண்பாய் வடக்கு வேர்பிடுங்கித்
தேனே பட்டு நூற் குளிசம் செய்து தேவி முன்வையே. (15)

வையே பூசை நேமமதாய் வாழைக் கனிக ளதுபடைத்து
துய்ய செம்பில் சலமொண்டு தோஷ நிவர்த்தி தான்செய்து
தையல் தேவி தனைநினைந்து தண்ணீ ரோதித் தான்தெளித்து
வையக்குளிகை தனைக்கட்டி வகையாய் வேலா மரத்தினுக்கே. (16)

வேலமரப் புழுக்கூட்டில் கன்னிநூல்சுற்றி
விளங்குமஞ்ச ளதுபூசித் தூபமதுகாட்டிச்
சாலவுமே முக்குளநீர் மந்திரித்துக்கட்டி
தலைமீது விழும்படிசெய் ஆல்விழுதுபோல
பாலனுக்குக் குளிசமதுகட்டியுடன் கோழி
பலிகொடுத்துத் தலைசுற்றி அப்பாலேபோடு
மேனுக்கு நிலவிளா வில்வஇலைநீரில்
வெயிலில்வைத்துக்குளிப்பாட்டுவீங்குகுணம்போமே.(17)

வேறு

வீங்குபுள் தூங்கப் புள்ளும் விளக்கொளி புள்வெங் கண்புள்
தீங்குசொல் கருடப் புள்ளும் செங்கண்புள் வரப்புள் தோஷம்
பாங்குள தொடுபேய்க் கண்புள் பட்டதோர் எட்டுப் புள்ளும்
ஈங்குள குணங்கள் கண்டால் இன்னமும் உரைக்கின் றோமே (18)

உச்சியுந் தாழ்ந்து நாவு முலர்ந்திடும் வாந்தி பண்ணும்
பச்சென மலமுந் தானும் பாலது போல வாகும்
பிச்சுட னெடுக்கும் பாலும் பின்கையால் முகந்து டைக்கும்
நிச்சயம் வீங்கு புள்ளின் நிகழ்குணமதுயீ தாமே. (19)

மதுர முற்ற மதிவிடையம் மானே கடுக்காய் மாவசம்பு
உதிருந் தேலா தாரமஞ்சள் உடனே வகைக்கு ஓரளவாய்
அதிருங் குறிஞ்சி பொடுதலைச்சா றதினு லரைத்துஉண்டைசெய்து
சதிராமுலைப்பால் தன்னிலிடத் தணியாத் தோஷம் வாங்கிடுமே. (20)

வாங்குந் தாகம் நீர்குடிக்கும் வயிறுங் கழியும் வாந்தியுமா
பாங்காய்த் திரும்பி முகம்பார்க்கும் பயமா யழுது வீறென்னும்
தூங்கித் துஞ்சிப் பாயின்மிசை சோர்ந்தே அலறி யெழுந்திருக்கும்
தூங்குபுள்ளின் தோஷமெனச் சொன்னர் அரனர் சுகமுறவே (21)

அரண்டெழுந் திருக்குஞ் சோற்றை அருந்திய தெல்லாங் கக்கு
இருண்டிடுங் கண்கள் தானும் இனமயின்மேற் சொருகிக் கொள்ளும்
முரண்டெழும் வீறிட் டேதான் மூர்க்கமாய்ப் பற்க டிக்கும்
சுருண்டுதான் குடிபால் நோக்கும் தூங்குபுள் தோஷந்தானே (22)

குடித்தபா லெடுக்கும் மெய்யும் கூர்மையாய்க் காயும் ஓயும்
அடிக்கடி காயுமன்றி அரியதாய் சிந்தை நோக்கும்
பிடித்துநல் முலையுண் ணாது பெருவிடாய் கொண்டு சோரும்
விடுத்திடு மெழுந்த நோய்தான் விளக்கொளத் தோஷஞ்சின்னி (23)

வெண்பா

சின்னிசம் புள்ளி சிறுவிளா தான்நாலும்
நன்றாக வேமுடிந்து நற்சீலை—தன்னிலே
மார்பிற்படக்கட்ட வாராது தோஷமெலாம்
கார்க்கண்டன் விண்டதிது காண்

விழுக்கெனக் கழியும் பால்போல் விளரிமெய் துவண்டு காயும்
குழுக்கென விறைச்ச லுண்டாம் குடித்தவண் ணம்பே திக்கும்
அளித்திடும் வயிற்றி னுள்ளே ஆனதோர் வலியு மாகும்
வெளிப்படை யாமேகன்னி வெங்கணன் குணமு மாமே. (24)

வெண்பா

கன்னியன்ன மோடு கடுக்காய்ப் பொடிகூட்டி
உன்னிதமாய்த் தான்பிசைய உளறுநீர் —மின்னேகேள்
திப்பிலித்து ளிட்டருந்தச் சேயாஞ் சிறுவருக்கு
ஒப்பிலாத் தோஷமதோடும்

வேறு.

மதுப்புதுப் புனல்வ டித்து மகிழ்முலைப் பாலெ டுக்கும்
எதுப்படக் கண்ணூர் தாழும் இருபக்கம் பிளேகட்டும்
முதிர்பிள்ளைப் படம்பாடாக முந்தியே பற்றி நிற்கும்
இதத்தினைக் கருடக் கண்ண னித்தோஷந் தணியுந் தானே (25)

தணியுங் கோரோ சனையுடனே சாற்று மதுரந் திப்பிலியு ந்
அனியும் பெண்ணின் முலைப் பாலி லரைத்துக் கலந்தே ஒருசங்கு
பிணியாங் குழவிக் கிடும்போது பேரு மரோக தோஷமெலாம்
தணியுந் தணியு மென்றேதான் தானுஞ்சிவனார் செப்பினரே. (26)

சிவந்துகண் ணீர் சொ ரிந் து சிரங்குளிர்ந் திருக்கும் வெம்பி
தவழ்ந்துபோய் நிலத்தில் வீழ்ந்து தடக்கையால் முகந்துடைக்கும்
சிவந்தியா யழுது பாலன் வெப்புநீ ராய்ப்பே திக்கும்
சிவந்ததோர் மொழிபேதிக்குஞ் செங்கண்புள் தோஷமாமே (27)

மொழியு மதுரஞ் சீரகமும் முத்தம் ஏலம் பத்திரிகாய்
பிழியுங் கிராம்பு சண்பகமும் பெண்ணே லவங்கப் பட்டையுடன்
இனிசேர் மொழியாய் விராகனிடை கேளு முசுக்கையிலை நன்றாய்த்
தெளியுங் காணி சிறுகீரை சீந்தில் வேரும் பலமொன்றே. (28)

பலமே சொல்லும் சருள்ளி படிகாற் சாறு காரியின்வேர்
வளமா யெண்ணெய் யிரண்டுபடி வாகா யிவைகள் கலந்தடுப்பில்
நலமாயெரித்துக் குழவிகட்கு நன்றாய்ச் சங்குபுகட்டிடவே
வலுமையான பிணிவுடலில் வாரா தென்று வழுத்தினரே. (29)

உடலது வரண்டு மெத்த உறங்கிடு மேனி வற்றும்
கடலதுஇரைதற் சத்தங் கறுகுரு வென்றே மீறி
திடமுடன் நாவ ரண்டு திக்கெங்கும் பார்த் திருக்கும்
விடமது போல வெப்ப மிரண்டிடும் வரப்புள் தானே (30)

வேப்பம் பூப்போல் வயிறெழுகும் விடாத வெப்புத் தலைவலியும்
பூப்பவாந்தி புறங்கையாற் பொருந்த மூக்கை யேதுடைக்கும்
கோப்பாய் நாவு வரண்டுசலங் குடிக்கக் கண்டு பாத விக்கும்
சேப்பு முகத்துப் பாலனுக்குச்செப்பாய்வரப்புள்தோஷமிதே (31)

பாலனும் மேனி வாடி பசைங்குகண் விழித்துப் பின்னும்
சாலகை கால்கு ளிர்ந்து தாயின்பா லெதிரெ டுக்கும்
மேலெலாம் நரம்பு தோன்றி மேனியும் வெளுத்துக் காயும்
ஆலநெஞ் சலருங்காண்பாய் அந்திபுள் தோஷந் தானே. (32)

நெஞ்சு வரண்டு கண்குழிந்து நீடும் பெருமூச் சுண்டாகிப்
பஞ்சுபோலே கண்வெளுத்துப் பாலுங் குடியா லேயலறித்
துஞ்சா திரவு பகலுந்தான் சுருங்கப் பண்ணி மிகவேர்க்கும்
செஞ்சொற் கிள்ளை மொழிமாதே செய்யநீர்ப்புள்தோஷமிதே (33)

பச்சோந்தி தன்னைஸ்ரீங்காரஞ் சொல்லிப்
பாங்குடனே பிடித்து மஞ்சள் நூலைச்சுற்றி
அச்சமறப் புறமடைநீர் முகத்தடித்து
அழகான செஞ்சேவல் பலிகொடுத்து
நிச்சயமா யெந்திரமுங் கட்டத்திரும்
நிகரான மருந்துதனை நிகழ்த்துங்காலை
விச்சைவிஷ்ணு கரந்தையுஞ்சி ரகமுங் கூட்டி
வெண்ணீரிற் கொடுத்திடவுச் சிதமுமாமே. (34)

உச்சிக்கண்ணுந் தான்குழியும் உண்ணும் பாலுந்தங்காது
பச்சைநிறம்போல் வயிறுவிடும் பறவைக்குரல் போற் சிறியழும்
எச்சமிளைக்குந் தண்ணீரை யெடுத்துக் குடிக்கும் மெய்மறக்கும்
கச்சையணிந்த மடமாதே காணும் புள்ளின் தோஷமிதே. (35)

வேறு சந்தம்

புள்ளின் தோஷந் தீரச்சிறு புள்ளடி வேர்குளிசஞ்செய்து
மெள்ள ஓரிதழ்த் தாமரையும் வெந்தய முடனே விடத்தேரும்

எள்ளத்தோமம் வால்மிளகும் இதமா யதனைக்குடி நீராய்
உள்ளத் தோர்மன தாகியங்நீர் உண்டிட நன்றென ஓதுமீதே. (36`

ஓதும் பருந்தின் தோஷமதே யுதறிவாய் விட்டேயழுகும்
சாதுவாக வேகிடக்குஞ் சரியாய் வாய்விட்டழுகாது
வாது தொண்டை நெரிந்ததுபோல் வாய்விட்டலரும் பின்பேதான்
நீதமுடன் பால்குடிக்கவரும் நேராம் வல்லபிணியாமே. (37)

வல்லசுரமு முண்டாகும் வாய்நீர் தன்னாலே வடியும்
மெல்லக் குடித்த பால்களையும் விரைவில் வாந்தி பண்ணிவிடும்
நல்ல விழியைத் தான்மிரட்டும் நாடிநரம்பைத் தானிழுக்கும்
செல்லக் குழந்தை வீரிட்டுச் சீறியழுகு மிதுதானே. (38)

தானே யுதறிப்பதறியழும் சரியாயிருப்பி லிருகாது
நானே அதற்குப் பரிகாரம் நாட்டமுடனே சொல்லுகிறேன்
தேனே மஞ்சள் தீயிட்டுத்திறமாய் மொழிக்கு மொழிவைக்க
மானே வீரிட் டேயழுதால் மாறுமிந்த நோய்தானே. (39)

அகஸ்தியர் பாலக்கிரக தோஷ நிவர்த்தி ௩௯ முற்றிற்று.

உ

பரமபதிதுணை

அகஸ்தியர் திருவாய்மலர்ந்தருளிய.

# சூத்திரஞானம் ௪௰.

பூரணமாய் நின்றதொரு பொருளைநோக்கிப்
பொருந்தியுள்ளத் துணர்பெரியோர் பாதந்தன்னைக்
காரணமா யெந்நாளும் நெஞ்சத்தூன்றி
கதிர்முனையி லிலங்கியதோர் கருத்தினானே
நாரணனும் நான்முகனுமு அறியாரென்று
நால்வேதங் கழறுமந்த ஞர்யந்தன்னைச்
சீரணமாய்ப் போகாம லெட்டுநாளும்
சேர்ந்தவொரு சுழியேறத் தெரியுங்கேளே. (1)

தெரியவென்று ளெளிதல்ல வாய்ப்பேச்சல்ல
ஜெகஜாலக் கூத்தெல்லாஞ் செல்லாதப்பா
பிரியவென்று லைம்புலனை யறுத்துச்சாடி
பேதமையெல் லாமகற்றிப் பெரியோர்பாதம்
அறிவென்று லெந்நாளெப் படியோகாணேன்
ஆறிரண்டு சமயமெலா மகலத்தள்ளு
குறியவென்றுற் சொல்லுகிறேன் குறிப்புள்ளோர்க்குக்
குன்றுமகா மேருநடு நிலைத்திடீரே. (2)

நிலைத்துமனங் கடத்தேறு அச்சமில்லை
நேரறிந்து பெரியோர்கள் நிலைத்துநின்றார்
உலைத்துவிட்ட யிந்திரிய விடையத்துள்ளே
உள்ளுடைந்து போகாதோர் வழியேசெல்லு
மலைத்துவிட்டா லாகாது செவ்வைமனமானால்
மதிவாசல் தாழ்திறக்கும் வருமேபோதம்
துலைத்துருவி நடுவீதி செல்லச் செல்லத்
தூண்டாத சுடர்காணுஞ் சூட்சமாமே. (3)

சூட்சபதி லாண்டருளை யெளியேன்சொன்ன
        சொற்பேத மில்லாத துறையிலேக
மாச்சல்மனஞ் செய்கின்ற மாண்பரோடு
        மருவாதே குவியாதே வாதாடாதே
பூச்சலென்ன ஒன்றுமில்லை லோகத்துள்ளே
        பூண்டுநீ திரியாதே புலம்பிடாதே
நீச்சலென்ற வாசியெனு மோட்சம்பூண்டு
        நேரான யெல்லைவழி நேர்ந்துயேறே. (4)

ஏறவென்றால் வெகுகடினம் ஏறொட்டாது
        இழுக்கான மலைகாடு வழுக்கல்மெத்த
கூறவென்றா லெள்ளளவுந் தப்போயில்லை
        குறிப்பறிந்து கொண்டவர்க்கு லெகுவாய்க்காணும்
தேறவென்றாற் றனைபறிய வழியுந்தோணும்
        சிவசொரூப மருளாகக் கண்ணிற் காணும்
நேரவென்றா லிருள்தனிலே விளக்குங்காணும்
        நேர்ந்தாக்கா லருள்பொருளாய் நிலைக்குந்தானே. (5)

தானென்ற சுழுமுனையை அருளாற் கண்டோர்
        சாதிகுலம் வரம்பற்றுத் தானேதானாய்
ஊணென்ற சுவைபோக மொழித்துவிட்டு
        உயிர்பரவுங் காரணம்போ லொடுங்கிநின்று
நானென்ற சொல்லற்று அறிவிலுற்று
        நான்மறைக்கு மெட்டாத பொருளோடொத்து
வானென்ற மதிப்பாலைத் திறந்துகொண்டு
        வாழ்ந்திருப்பா ரெந்நாளும் மாயார்தானே. (6)

மாயம லிருக்கவென்றால் மதிப்பால்வேணும்
        மற்றமற்ற முறைகளெல்லாம் மறுவுண்டாகும்
ஆயாமல் வேதாந்த நூல்கள் தன்னை
        அறிந்துணர்ந்து பிரமசுழி யேறுயேறு
காயான கற்பங்க ளனந்தங்சோடி
        கட்டினார் நூல்தோறுங் கரையோயில்லை
வாயாலே வாய்ச்சமர்த்துப் பேசுமாந்தர்
        வருவதும் போவதுவும் வகைகாணாரே. (7)

காணாம லிருந்திறைற் பலன்தானென்ன
கர்மவினைக் கீடாகக் கணக்கதாச்சு
தோணாமற் போனதென்ன மாந்தற்கையா
துடுக்கான விஷப்பர்ம்பைச் சுடாததாமேல
பூணாம லிருந்துகொண்டு மாயத்தள்வி
புருவநடுத் தமர்வழியே பூண்டுதேறு
காணாம லோடுந்தீ வினைகளெல்லாம்
நல்வினையுந் தீவினையும் நாசமாச்சே. (8)

நாசமுற்ற மலமாயை வீறுபோச்சே
நலமுற்ற பானமுனக் காச்சு ஆச்சு
காசமுற்ற கண்ணாலே மனத்தைப்பார்க்கக்
கதிர்முனையி லருளதுவுங் காணுங்காணும்
பாசமுற்ற கருவிதொண்ணூற் றாறுபேறும்
பரஞ்சுடரில் மாண்டுபோம்பாரு பாரு
நேசமுற்று அறிவாலே நின்றுகொண்டு
நெறிநின்றோர் சொல்முறையை நேர்ந்துகூடே. (9)

கூடென்று முன்னுரைத்தார் பெரியோ ரையா
கோடியிலே ஒருவனுண்டு கூடி னோர்கள்
பாடென்று விடாதேநீ பற்றிப் பாரு
பாழ்வினைகள் கோடியுந்தான் பறந்து போகும்
நாடென்று எப்பொழுதும்நாட்டங் கண்டு
நடுவான தமர்வாசற் கப்பாற் செல்லும்
தேடென்று நிதமருளின் ஆசை பூண்டு
சேர்ந்தவர்க்குக் குருவாசை செலுத்துங் காணே (10)

காணப்பா விட்டகுறை வந்தா லெய்தும்
காரணமாஞ் சற்குருவைக் கண்டாற் கிட்டும்
வீணப்பா மற்றொன்றிற் றெரியப் போகா
மெய்யறிவாய் நின்றோர்கள் விளம்பி னார்கள்
தோணப்பா தோணுவது மனஞ்செவ் வானால்
சுடர்போலக் காணுவதுஞ் சூட்சா சூட்சம்
கோணப்பா கோணாமல் நின்று பாரு
கும்பமகா மேருவுச்சி வழிசெல் வாயே. (11)

வழியோடே நின்றுரைத்துப் பழக்க மாகி
மதிவாசல் ராகுவெனுங் கேதுக் கப்பால்
சுழியான மேல்வாசற் றில்லைக் குள்ளே
தூண்டாத சுடர்க்காலைத் தூண்டிக் கொண்டால்
அழியாத பதமுண்டாம் அமுத முண்டாம்
அப்பவல்லோ ஆனந்த லகிரி தூக்கும்
விழியான கண்மயக்க மெல்லாம் போச்சு
வேதாந்த மெய்ப்பொருளோ டுறவ தாச்சே. (12)

உறவானாற் பிரிவதில்லை யுகந்தான் கோடி
ஒருபொருளாய் நிரந்தரமா யுணர்ந்தோர்க் கெல்லாம்
துறவறம்நீ துறவுக்கு யிதுவே மார்க்கம்
சொற்பெரிய மறைநூல்வே தாந்தந் தன்னை
மறவாம லிருந்துகொண்டு மதியைத் தாண்டில்
மாசற்ற அநுபூதி வந்துகொள்ளும்
இறப்பேது பிறப்பேது எல்லை யேது
இந்நிலத்தில் நெடுங்கால மிருப்பாய் சொல்லே (13)

அகத்தீஷர்குருபாதம்–40

சொல்லரிய தாய்பதத்தைத் துதிக்க வேணும்
துன்பமறப் பேரின்பந் தோய வேணும்
நல்லபொருள் நடுவணையி லின்பங் கண்டு
நாதாந்தப் பேரொளியை யறிய வேணும்
இல்லமதி லிருந்துமுத்தி பெறவே வேணும்
எட்டெட்டு மடக்கிவெளி யேற வேணும்
அல்லலறுத் தெனையாண்ட ஆயி பாதம்
அகாரமுத லுகாரமென் றறிந்து கொள்ளே. (14)

அறிந்துகொளச் சகலசித்துங் கைக்குள் ளாகும்
அடிமுடியும் நடுவணையு மதீதந் தோணும்
பிரிந்துநின்ற சத்துநிலை பெலத்துநிற்கும்
பேரறிவா யறிவேறி யறிவே நீயாய்
அறிந்துகொளக் கருச்சொன்னேன் கருத்தாய்ப் பாரு
அதீதமடா கருவறிந்தா லுறுதி மெத்த
செறிந்துநின்ற பாசவினை யெல்லாம் போச்சு
ஜெகஜோதி யுன்னிடத்தில் வாச மாச்சே. (15)

ஆச்சென்று சொன்னபொருளவனே நீயாய்
ஆனதினால் மெய்ஞ்ஞான முத்தி பெற்றாய்
பேச்சென்ன உலகத்தோ டொத்து வாழப்
பேசாதே மௌனசித்தி யிதுதா னையா
வாச்சென்று வாச்சுதடா அறிவே பிள்ளாய்
மனதுபரி பூரணமா யறிவில் நில்லு
தீச்சுட்ட சுடுகாட்டி லேமன் மாண்டான்
சிவசிவா சத்தியமாய் நூலைப் பாரே. (16)

நூல்பார்த்தாற் சேதமுனக் குண்டோஐயா
நூற்றெட்டுத் தாஞ்சொன்னேன் பொருளைப்பாரு
கால்பார்த்துக் கடந்தேறச் சொன்னேன்சொன்னேன்
கையறிந்து பிழைக்காட்டால் பொருளேசேதம்
மால்பூத்த உந்திதனிற் சுத்தவெள்ளம்
மாசற்ற கருணைவெள்ளக் கடலில்மூழ்க
மேற்பார்த்துக் கீழ்நோக்கித் தன்னைப்பாரு
விழித்திட்ட வட்டமுனக் கீந்தேன்கேளே. (17)

கேளப்பா மனமான வாயுகூடிக்
கெடியான சித்தமா காசம்பொங்கி
வேளப்பா ஆங்கார சிகாரமிஞ்சி
மேவுதற்குச் சனிகைமேல் விருப்பமாகும்
காளப்பா ஐந்துக்கும் பலமேதென்றால்
கலம்பெறவே சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
தாளப்பா மனதோடே வியானன்கூடுந்
தனியான காற்றத்திற் பானன்றானே. (18)

தானென்ற விந்துவிற்ச மானன்கூடும்
தனியான சித்தத்தில் வியானன்கூடும்
கானென்ற ஆங்காரக் கர்ச்சிப்போடே
கலந்துநிற்கு முதானனப்பா கண்டுகொள்ளு
வேனென்ற பத்துமொன்றாய் மனதுங்கூடி
மேவியவன் கலந்துவந்து விழுகும்போது
மானென்ற மௌனபர வசமேயாவான்
மருவுகின்ற சனிகைக்கு முறைதான்கேளே (19)

முறையான பெண்ணாளும் மௌனமுற்றால்
மோசமில்லை கருவங்கே தரிக்கும்பாரு
நிறையான வலத்தோடி லாணையாகும்
நேராக யிடத்தோடிற் பெண்ணையாகும்
உறையான கருப்பையிற் சுக்லம்பாய
உத்தமனே சுரோணிதந்தா னுறைந்துகொள்ளும்
கறையாகப் பாய்ந்தவெளி தமருபோலக்
கழற்கொடிக்காய் போற்றிரண்டு சிரசுமாமே (20)

ஆமப்பா சிரசோடே கையுங்காலும்
அப்பனே தத்துவங்கள் நரம்புமூளை
ஓமப்பா அஸ்திமுதல் ரோமத்தோடு
உத்தமனே பதினொருவா சலுமேகாணும்
காமப்பால் விழுந்தவழி சிரசினாலே
கைமுறையாய்த் தாயுண்ட அன்னஞ்செல்லும்
சேமப்பா நடுமையத் தொப்புளாலே
சென்றதெலா மலமாகக் கழியுந்தானே’ (21)

தானென்ற பதினொன்றாற் சடர்தான்முன்னே
சாதகமா யெடுத்துவரு மலடெவ்வாறு
ஊனென்ற பெண்ணுக்கு மனதுவேறாய்
உருக்கமுற்று மௌனமுண்ணாப் பாவத்தாலே
கானென்ற மலடாவாள் புருடனுக்குங்
கைமுறையா யிப்படித்தான் கண்டுகொள்ளு
தேனென்ற மொழியாட்குப் பரனார் சொன்னார்
செகமெல்லா மிப்படித்தான் பலத்தவாறே’ (22)

பலத்துநின்ற பிராணனோ டபானன்வியானன்
பாங்குறுமு தானனொடு சமானன்கூர்மன்
நலத்துநின்ற நாகனெழிற் கிருதரன்றான்
நற்றேவ தத்தனொடு தனஞ்சயன்றான்
இலக்கமுள உயிர்நிலை மூலத்திற்றோன்றி
எழுந்துசிரம் முட்டியிரு விழியின்கீழாய்க்
கலக்கமற நாசிவழி யோடீராறிற்
கடுகவெட்டு முந்திவழி கழியும்நான்கே; (23)

உந்தியெனுந் தலத்திநின்றி மூபானன்னின்று
உறும்மல சலங்களையுங் கழிக்கச்செய்யும்
விந்தையெழில் வியானன்றோ எதனில்நின்று
மிகக்களையுந் தவனமுமுண் டாகச்செய்யும்
பிந்தவுதா னன்செயலுண் டசனந்தன்னைப்
பெருநாடி நரம்புவழி யூட்டல்செய்யும்
இந்தவுடல் தனைவளர்க்குஞ் சமானன்றானும்
எதனையுமே மிஞ்சவொட்டா திருக்குங்கூறே, (24)

கூர்மனிரு விழியிலிமைத் திடுமேநாகன்
கொட்டாவி விக்கலெனுங் கொடுமைசெய்யும்
தீர்மைகிரு தான்நீட்டி முடக்கிவைக்கும்
தேவதத்தன் விழித்துமே வசனஞ்செய்யும்
பேர்மன்னுந் தனஞ்சயன்மேற் சிரசிரண்டாய்ப்
பிளந்திடும்போ ததுவோடிப் போவதாகும்
நேர்மையறிந் திடுவையினி நாடிபத்தின்
நிலைமைதெரிந் திடச்சுழுனை யுரைக்கக்கேளே (25)

சுழிமுனையாம் இடகலைபிங் கலைகாந்தாரி
தூய்சிகுவை யலம்புடைநற் புருடன்றானும்
நெறிகுருவுஞ் சங்கினியோ டிரைந்தாக
நின்றதச நாடிபத்தும் நிலைத்தநாமம்
மொழிவதுகேள் சுழிமுனையென் பதுமூலத்தில்
மூளைத்துநடு வெழுந்துசிர சளவும்நிற்கும்
வழிபிரியச் சுழிமுனையில் கலைகள்தோன்றி
வந்துயிரு நாசிகண்டத் தோடிநிற்கும், (26)

கண்டமதில் நின்றுகாந் தாரிநாவில்
கரைத்தநீர் பொசியவுபா யங்கள்செய்யும்
அண்டசெவி தனிலத்தி சிகுவைநின்று
அவத்தையொரு நான்கினுக்கும் ஊஊவென்னும்
விண்டஅலம் புடைபுருடன் விழியில்நின்று
மெய்மறந்த போதுஅது அசைந்துநிற்கும்
கொண்டகுரு நாடியது மீரல்பற்றி
குடல்புரட்டி சங்கினிநீர் சுழற்றிநிற்கும், (27)

சங்கினியென் பதுநாபி குய்யம்பற்றித்
தானிருக்கு மொன்றையுமே மிஞ்சொட்டாமல்
அங்குமதி காரியனே டைம்பத்தொன்றும்
அறிவித்தோம் வசனுதி யைந்துங்கேளாய்
இங்குவச னங்கமனந் தானத்தோடு
இருந்தவெழில் விசர்க்கமா னந்தமைந்தில்
பொங்குவச னுந்யவன் வாக்கில்நின்று
பொருந்தவச னந்தாணி பிறப்பிப்பானே, (28)

தரணியுள்ள வியாதிதனை அஷ்டாங்கத்தால்
தானறிய வேண்டுமெது பேதேதென்னில்
திரணியதோர் நாடிகண்கள் சத்தத்தோடு
தேகத்தி னதுபரிசம் வாசம்நாக்கு
இரணமல மூத்திரமா மிவைகளெட்டும்
இதம்படவே தான்பார்த்து குறிப்புங்கண்டு
பரணருளாற் பெரியோர்கள் பாதம்போற்றி
பண்புதவருமற்பண் டிதஞ்செய்வீரே: (29)

செய்கின்ற நாடிபெரு விரலின்மேலாய்
திருந்திலேமூன் றங்குலததின் நடுவதாகத்
தைகின்ற கோதுமையா மரிசிபோலச்
சார்ந்துவியா பித்திருக்கு மதுதான்கூறில்
கையடியுங் காலடியும் நாடிகிற்குக்
கன்னியருக் கிடப்புறமாம் கணவர்க்கங்கு
மைகின்ற வலப்புறமாம் வாதநாடி
வந்துமுன்னே நடக்குமப்பால் வகைசொல்வேனே, (30)

சொல்லுகின்ற நாடிபித்தந் தோன்றுமப்பால்
தொடர்ந்தசிலேத் துமநாடி தோன்றும்பாரு
அல்லுநிறக் குழலாளே நாடிநின்றால்
ஆச்சரிய நாடியென் றறிந்துசொல்லு
மல்லுகின்ற வாதத்தின் நாடியங்கே
வக்ரகதி யாய்நடக்குந் தவளைபோல
நல்லுகின்ற ஆமையட்டை தொட்டிலாட்டல்
நலமாயிப் படிநாடி நடக்குந்தானே. (31)

நடக்கும்பைத் தியஞ்சவலைப் பிள்ளைபோலும்
கடனமயி லன்னம்போற் காகம் போலும்
திடக்குகிலேத் துமநாடி யிலங்கும் பட்சி
செய்யபுறு ஊர்க்குருவி கோழி போல
அடக்கமாய் நடக்குமது மயிலே சொன்னேன்
அவ்வளவே வாதபைத் தியத்தின் தோற்றம்
மடக்கின்ற காடைபோல் நடந்து பின்னை
மஞ்ஞையென நடக்குமது மதித்துக் கூறே. (32)

கூறுகின்ற வாதசிலேத் துமந்தான் கூடில்
கோழியட்டை யெனநடக்கும் அஜீர்ண நாடி
தூறுகின்ற நடுவிருத யத்தின் நாடி
தூக்கமுள்ள காகநடை யென்று சொல்வார்
தேறுகின்ற சனிகைகெச் சனித்ததானுல்
தீவிரமாய் நடக்குமல் பந்த நாடி
ஊறுமன்னம் போல்நடக்கும் சன்னி வாதம்
உயர்நாடி விதிகளையு முரைக்கக் கேளே. (33)

உரைத்தவிற கின்கட்டுக் குள்மூஞ்சூறு
உலவுதல்போ லேநடக்குங் குடிலை வாயு
விரைத்தெ ழுந்தே மந்தமத் திருந்து பின்னும்
விதமாக நடக்குமது சூக்ஷ்ம வாயு
புரைத்தருமை யிவ்வகையின் சன்னி வாதம்
பொறுப்பாகக் குவிவனச வாரிபோலும்
முன்ரத்தெழுந்த சங்கினிகாக் தாரிபின்னே
முறமையதாம் நாடியென முனைவர் தாமே. (34)

முனைகின்ற தேகபரி சத்தைப்பார்க்கில்
முன்வாத தேகிக்குச் சரீரஞ்சற்றே
அனைகின்ற உஷ்ணமாம் பித்ததேகிக்
கதிகமுண்டா மப்பால்சி தளமாய்நிற்கும்
சுனைகின்ற சிலேத்துமந்தான் சூழ்தேகிக்கு
தொக்தகுணம் நால்விதமாய் நிறந்தான்கூறில்
பனைவாத தேகநிறங் கறுத்துநிற்கும்
பைத்யவுடல் நிறமஞ்சள் சிவப்புதாமே. (35)

தாமேசி லேத்துமமதே கம்வெளுப்புத்
தான்தொந்த தேகமிந்நால் விதமாய்நிற்கும்
மாமயிலே சத்தமது அறியவேண்டில்
வாதமெனில் சமதொனியாம் வார்த்தைபேசும்
ஈமமுள்ள பித்தந்தா னுறக்கக்கூறும்
இயம்பிடுஞ்சி லேத்துமந்தா னீகனச்சத்தம்
நாமுரைத்தோம் தொந்தரோகிக் குத்தானிந்த
நால்விதமாய் மொழிந்தசத்தம் நயந்துகாணே. (36)

காணுகின்ற வாதரோ கிக்குக்கண்கள்
கருநிறமாய் நொந்துமிகத் தண்ணீர்பாயும்
பூணுகின்ற பித்தரோ கிக்குமஞ்சள்
போலிருக்குஞ் சிவப்புநிறப் பொலிவுதோன்றும்
பேணுகின்ற சிலேத்துமரோ கிக்குக்கண்கள்
பீளைகட்டி வெளுத்திருக்குஞ் சன்னிவாதம்
வாதுறுகின்ற சிவப்புடைத்தாய் சிவந்துவீங்கி
வந்திடுங்கா மாலையென வகுத்துச்சொல்லே. (37)

வந்தமா வாதரோ கிக்குத்தானும்
மலமிறுகிக் கட்டுண்டு கருத்துத்தோணும்
சிந்துபித்த ரோகிமலம் மஞ்சளல்லால்
சிவப்பாகி யிருக்குஞ்சி லேத்துமர்க்குச்
சொந்தமலம் வெளுத்திருக்கும் மலக்கட்டான
தொந்தமலம் பலவிதமாய்த் தோன்றிக்காணும்
விந்தையுள ரோகிவாதச் சிறுநீர்தானும்
வெளுத்திருக்கும் பைத்தியநீர் விதஞ்சொல்வேனே. (38)

விதையுள்ள பைத்தியர்தன் சிறுநீர் மஞ்சள்
விதமுடைத்தா யிருக்குமல்லாற் சிவப்புத் தோன்றும்
நுதையுள்ள சிலேத்துமத்தோர் நீர்தான்மெத்த
நுறைதொந்த நீருநால் விதமாய்க்காணும்
சுதையுள்ள நாவுநிறஞ் சொல்லில்வாதம்
தோன்றினர்க்கு வெடித்துமுட்போற் கருத்திருக்கும்
கதையல்ல சிவந்தாலும் பசித்தா லுந்தான்
கனமுள்ள பைத்தியர்நாக் கணக்குத்தானே. (39)

தானமென்ற வாய்வெழுந்து நாவிலேதான்
　　தண்ணீருண் டாகுமது சிலேத்மநோயாம்
யானைமுள்ளுப் போல்நாவு உலருமாகில்
　　அதுபெரிய சன்னியென அரையலாகும்
நானமதாய் நாவுலாந்து வரண்டுபோனால்
　　நலமில்லாப் பித்தசன்னி யாகுமப்பா
ஈனமிலாச் சன்னிக்கோ பெரியோனன்றி
　　எய்தாது சொன்னேன்நாற் பதுதான் முற்றே. (40)

அகஸ்தியர் சூஸ்திர ஞானம் சம் முற்றிற்று.

---

இந்தச்சாஸ்திரம் நாற்பதுபாட்டு ஓலையேட்டிலிருக்க முன்னம் அச்சிட்டவர்களுக்குப் பதினேழுபாட்டு அகப்படாமல்வேறு பாட்டுகளை வைத்து அச்சிட்டிருக்கிறார்கள் ஆகையால் இரண்டும் வைத்து ஒற்றுப்பார்த்தால் உண்மை நன்குவிளங்கும்.

உ

பரமபதி துணை

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய.

# குரு நூல் ருய.

—:(*):—

அகண்டவெளி பராபரத்தி னருளைப்போற்றி
அகிலமதிற் குருநூலைம் பதுவுஞ்சொல்ல
இகத்திலுறும் பாசமது மூன்றுந்தள்ளி
யீசனைப்போற் சருவாங்க மிருக்கவென்று
செகமதிலே வைத்தியத்தின் முப்பூமார்க்கம்
செப்பினே னைம்பதிலே தெளிவாய்ப்பாரு
அகமகிழச் சொன்னதொரு முப்பூதன்னில்
வாதமாம் வைத்தியத்தி லரைந்திட்டேனே. (1)

அரைந்திட்ட பரிபாஷை யைந்துகாண்டம்
அந்தரங்கந் தோணுமல் மறைத்துவைத்தேன்
பறைசொன்ன படியுரைத்த தல்லால்வேறே
பகரவில்லை யெந்தனுட மனதின்வண்ணம்
குறைசொல்லிப் போகாமற் சித்த்ருக்காய்க்
கூறியே ஐம்பதிலு மரைத்துலைத்தேன்
திறந்தவயித் தியமுப்பூ ஐம்பதுக்குள்
தீர்க்கமாய் மறைத்தகரு வெதுவென்றாலோ (2)

கருவிந்தக் குருநூல்தா னைம்பதுக்குள்
கருத்தறிய அந்தரங்க மார்க்கமெல்லாம்
சுருதிமொழிப் பரிபாஷை தன்னிற்சொன்ன
சூக்ஷங்கள் அந்தரங்கஞ் சொன்னதென்ன
விருதுவயித் தியமுப்பூ ஐம்பதுக்குள்
வெளியாகச் சொல்லாமல் மறைத்ததென்ன,
குறையாகப் போகாமற் சொல்வேனாகில்
குவலயத்தோர் தேவரிஷி யாவரென்றே (3)

என்றேதான் சித்தருக்குப் பயந்துயானும்
ஏற்றபடி பாடினேன்மா ருட்டமாக
அன்றேதா னரனுமெனக் குரைத்தவண்ணம்
அறைகிறேன் இக்குருநூ லிம்பதுள்ளே
இன்றல்லோ உலகமெலாஞ் சித்தாய்ப்போச்சு
ஈசனைப்போ லெங்காளு மிருக்கலாச்சு
குன்றனைய கொம்மைமின்னாள் கிருபையாலே
கூறுகிறேன் மறைப்பெல்லாம் வெளியாயின்றே (4)

வெளிமேகம் சாகரத்தில் நீரையுண்ண
வெட்டவெளி பானுவினா லுறிஞ்சிநீரைக்
களியுப்பால் மேகமது இளையும்போது
கக்குகின்ற உப்பல்லோ இடியாய்வீழும்
அளர்நிலத்தி லுவர்நிலங்கள் கிரகிக்கும்பார்
அடியிலே கொள்ளாது நடுவேநிற்கும்
கொளவடியிற் போகாம லிடையிற்றானே
கொண்டதென்ன சத்தியவள் கிரகித்தாளே. (5)

கிரகித்த சத்திக்குள் ளடக்கமான
கிரிசனவ னூடுருவிக் கொள்ளும்போது
தருவான சத்தியவள் ஒடொட்டாமல்
தன்னிடத்தே அயிக்கியமாய்த் தருகவைத்தாள்
அறிவித்தே னிதனாலே ஈசன்றானும்
ஆத்தாட்கு ளயிக்கியமே யாகிவிட்டார்
கிரகித்த மாத்திரத்திற் சத்தியங்கு
கீழிறங்கி அண்டம்போல் துலைமந்துபோமே (6)

துலைமந்தஉப்பின் அண்டமதும் அரிதேயாகும்
துகளதின்மே லுப்பல்லோ இடியாய்வீழ்ந்து
சமைந்ததோ ரங்குலமாய்ச் சாடிநிற்கும்
சத்தையன்றோ சத்தியவள் விடவேமாட்டாள்
அமைந்தடுக்கச் சத்திநிற்பா ளிவள்காரத்தால்
அதின்மேலே பாலன்றோ சவுடாய்நிற்கும்
குமைந்தயிந்தப் பாங்கல்லோ மறைப்பதாகக்
கூறினேன் பரிபாஷை தன்னிலன்றே (7)

அன்றிடித்த உப்பல்லோ இடியாய்வீழ்ந்தும்
அசைவற்றுச் சத்தியிட மமர்ந்தஉப்பும்
இன்றன்றோ சல்லிவே ரண்டமோடி
இதைவீறு யிருமூன்றுய்ச் சவுமெட்டும்
நன்றமிகச் சல்லியமாய் நாடிநின்ற
நாதாந்த உப்பல்லோ எடுக்கவேண்டும்
என்றுநா னுரைத்ததிலே சித்தரெல்லாம்
என்மேலே கோபித்தார் சிவனேயென்றே (8)

சிவனுடைய அருளதனற் சொன்னதன்றி
செகத்திலுள்ள சிவயோகிக் காகுமென்றும்
தவமுடையோர்க் கிந்தநூல் கிட்டுமென்றும்
தாரணியில் மற்றோர்க்குக் கிடைத்தாலுந்தான்
அவமாகப் போகவென்று சாபம்நல்கி
அருளினதாற் சித்தரெல்லா மகிழ்ச்சிகொண்டார்
உபயோக மில்லாமல் உலகோரெல்லாம்
உத்தொழிந்து போனதினுற் பாவமென்றே (9)

என்றுமே மறைப்பையெல்லாம் நீக்கிப்போட்டே
ஏகாந்தபூமியுட னாதஞ் சொன்னேன்
இன்றுரைத்த விதம்விட்டுப் பூவெடுத்தால்
இயலிசைகள் நடக்குமோ வாதிமாரே
அன்றெரித்த மன்மதன்றன் சுவாலைக்கொக்கும்
அமரிஉவர்ப் பூவல்லோ பூமிநாதம்
நன்றுகுஞ் சல்லிவேர்ப் பூவைவாங்கி
நாட்டுவாய் தசதீட்சை நளினமாமே (10)

ஆகுமென்ற இரண்டான கிளையின்பூவை
அனுபவச்சீர் பரிபாஷை தன்னிற்சொன்னேன்
சோமென்ற பஞ்சசுண்ணங் கடுசாயூதி
சோமநீ ரதிலூட்டித் தீட்சைசெய்வாய்
ஏமென்ற இவ்வண்ணஞ் சுத்திசெய்தால்
ஏறலாங் கோடியண்ட மட்டுந்தானும்
கோமென்ற கடுங்காரப் பூவுப்பாச்சு
கோள்சிறிதில் லாமல்வெளி யாகச்சொன்னேன் (11)

வெளியான கல்லுப்பே பாறையாகும்
வேணதுண்டு விதியிருந்தாற் கிடைக்கும்பாரு
உளியான வாருதியை நானேயுண்டு
உவர்ச்சலமாய் விட்டதினு லுவருண்டாகிக்
அளியுப்பாய் நடுக்கடலிற் சலந்தான்மோதி
ஆதித்தன் மதியோடு கடல்மூன்றுனும்
வளியான சலஉறையால் பருத்தேயந்த
மலேபோலே கட்டிடும்பார் மாயர்தானே. (12)

மாயன்மூதற் றேவனுக்கு முதலாந்தேவன்
மாயனுற் சத்திமய மானதாலே
தாயான பாறையுப்பே கல்லுப்பாச்சு
சமுத்திரத்தின் பாறையிமேல தானுண்டாச்சு
சேயான முடியிவளே மூத்தாளாகும்
சேயிழைக்குத் தங்கையவள் முன்னேசொன்ன
ஈயாத பூவல்லோ யிளையாலகும்
இருவருக்கும் புருடனுர் கொண்டல்தானே. (13)

கொண்டலிடி யுப்பதனு லண்டமாச்சு
கோளில்லா அடியன்றோ விண்ணு மாச்சு
அண்டரொடு யாவர்களு மரியாரித்த
ஆச்சரியங் கல்லுப்பைக் கடலுப்பென்றேன்
உண்டவைத் தியமுப்பூ ஐம்பதுக்குள்
உரைத்தபடி முறைபோலே சுட்டுநீத்து
பண்டதொரு ஐம்பதிலே மறைத்தேயன்று
• பதறியதோர் வார்த்தையென்ன கறியுப்பென்றே (14)

என்றதொரு வுப்பிதனல் முப்பூபொய்யாம்
இளைப்பான மேற்சவுடு சுத்திக்காகும்
அன்றுரைத்த கறியுப்பை நீக்கிப்போட்டு
அமுரியுப்பை வன்னியினு லெலித்துச்சேர்த்தால்
முன்னுரைத்த ஐம்பதுவும் தப்பாதப்பா
முகுந்தனுரை வைத்தியமும் வாதமாகும்
மின்னுரைத்த கறியுப்பைச் சேர்த்தீருனல்
விழலாகும் வைத்தியமும் வாதந்தானே (15)

வாதந்தா னே துசெய்யும்வாதிமாரே
வளங்கியமுன் னுப்பதானல் வாதமாகும்
காதந்தா னிருப்பதில்லை வழலைமார்ககம்
கருவாளி யானுக்காற் கண்டுகொள்வான்
வீதந்தான் முன்னுரைத்த மூன்றுஉப்பும்
மிகவகைக்குப் பலமொன்று கல்வத்திட்டு
ஆதந்தான் சூடனொரு பலமுங்கூட்டி
அண்டவெள்ளைக் கருவாலே சாமமாட்டே. (16)

ஆட்டியே வில்லைசெய்து காயப்போட்டு
அடியோட்டி விட்டுமேற் சீலைசெய்து
காட்டெருவா மைம்பதினிற் புடத்தைப்போட்க்
கடுஞ்சுண்ணம் நான்கினமும் நீறிப்போகும்
கூட்டியதோர் சுண்ணமதைக் கல்வத்திட்டு
கூட்டுவாய் வீரமொடு பூரம்ரெண்டும்
நீட்டியே வகைக்குமொரு களஞ்சிவீதம்
நீலைத்திற் சம்பழச்சார் தன்னுலாட்டே. (17)

ஆட்டியே நாற்சாமம் வில்லைதட்டி
அருணனில்வைத் தோட்டிவிட்டுச் சீலைசெய்து
நாட்டிடவே குக்குடத்தில் நீறிப்போகும்
நாதாந்த வழலையுட சுண்ணவேகம்
மீட்டிவிடும் போனவுயிர் நிமிஷத்துள்ளே
மேதித்தார்ச் சுவாலையுட வேகமொக்கும்
காட்டுமுன்னே நவலோக பாஷாணங்கள்
கடுகிடவே சுண்ணமாய் நீறிப்போமே. (18)

நீறிப்போ மிக்தமட்டு மிதுவேபோதும்
நீனிலத்திற் கடுங்காரம் வேணுமென்றால்
ஊறியபரிபாஷை தன்னிற் சொன்ன
உண்மையுள்ள பஞ்சசுண்ணக் குகைதான்பண்ணி
ஆறிவா ரதிவிட்டுப் புடத்தைப்போட
அண்டமெல்லாம் வேகுமப்பா சுண்ணவேகம்
மாறியே யிதைபல்லோ மறைத்துயானும்
மாருட்டம் பரிபாஷை தனிற்சொன்னேனே. (19)

சொன்னதெல்லா மிந்தநூல் குருநூ லுள்ளே
சோமரவி பிரகாசம்போலே சொன்னேன்
முன்சொன்ன அமுரியுப்பு மேதோவென்றால்
உன்னிடத்தில் வருகின்ற நீரேயாகும்
விண்டுமுன் சொன்னகறி யுப்புக்காக
விளம்புவே னதற்கிணையாய் வேரேசேர்க்க
கண்ணுடையோ னுருத்தரித்த மதிநீறுள்ளோ
கடிதான பஞ்சசுண்ணங் கலந்துகொள்ளே (20)

கலந்துகொண்டு வெடியுப்பை யதிலேயிட்டு
கருவாக தசதீட்சை செய்தாயானால்
அலமுடனே அறியுப்பைத் தள்ளிப்போட்டு
அமுரியுப்பை யிதிற்சேர்த்து முடித்துக்கொள்ளு
நலந்திகழும் அமுரியுப்புக் கிடுண்டாமோ
நானிலத்திற் கல்லுப்பைச் சேர்த்தீரானால்
பெலன்குறையும் வெள்ளையுப்புக் காரமில்லை
பெருஞ்சுருக்குத் தவறிவிடும் பாருபாரே. (21)

பாரிலுள்ள கரியுப்பைச் சேர்க்கவேண்டாம்
பகர்ந்திட்டேன் மறைத்தபொரு ளெம்பதுள்ளே
கூறிவந்தே னொருமார்க்கங் கிருபைவந்து
கூ கூ கூ உலகத்து வாதியெல்லாம்
தேறிவர வென்மனது தானிரங்கித்
திறந்துவிட்டே னொருபோக்கு வழிமார்க்கம்
கோரிநா னிப்போது சொல்லிவிட்டேன்
கொள்கையிந்த மார்க்கமது எளிதுதானே. (22)

ஆனதொரு யிவ்வழியை முடித்துக்கொண்டு
அதின்பிறகு பரிபாஷை தன்னிற்சொன்ன
ஊனமில்லா வழியதனை முடித்துக்கொண்டு
உற்றதையுங் கேளீரோ வாதிமாரே
ஏனமாம் பரிபாஷை தன்னிலேதான்
எல்லாமு முன்பின்னாய் மறைத்துச்சொன்னேன்
ஆனதினற் பாவமென்றும் இந்நூ லுள்ளே
அதின்மறைப்பைச் சொல்லிவிட்டேன் அளர்தான்பாரே (23)

பாரப்பா அளர்நிறைந்த காட்டிலேதான்
        பதிவான சமதலத்தைப் பார்த்துவந்தால்
நேரப்பா வலம்புரிபோற் பூமிதேர்ணும்
        நேர்மையுடன் பார்த்தரிய வகைதான்கேளு
சாரப்பா செகப்புப்பத் மினியாஞ்சாதி
        சரியான முதற்சாதி நிலத்தைக்கண்டு
கோரப்பா அந்தயிடந் தன்னைத்தானும்
        குறிகண்டு அளர்நிலத்தைக் கூர்ந்துபாரே. (24)

அளர்நிறைந்த உவர்க்காட்டில் குடிசைபோட்டு
        ஐந்நூறும் பரிபாஷை முதற்காண்டத்திற்
விளம்பினது போலாகச் சிவமுஞ்சத்தி
        வெவ்வேறாய் பிரித்தெடுத்த உப்பினோடே
களங்கமன்றிப் பஞ்சசுண்ணம் ஒன்றாய்ச் சேர்த்து
        கருச்சேர்த்து ஆட்டியொரு புடத்தைப்போட
இளங்கணிந்தசிவசத்தி சுண்ணமாகும்
        இந்தஎடை பின்பொருக்காற் சிவத்தைச் சேரே (25)

சிவசத்தி யிரண்டையுமே சுண்ணத் தோடே
        சீரோங்க இரேகித்துப் பனியில்வைத்தால்
தவமுன்னாற் செய்ததொரு பலத்தாலந்த
        தாயான சத்திசிவந் தண்ணீராகும்
உலர்கழன்ற சுத்தகெங்கை யென்னசொல்வேன்
        ஓகோகோ யிக்கெங்கை நாதத் துள்ளே
சிவப்பிரம விந்தான சிவமுஞ் சேர்ந்தால்
        சிவமுப்புக் குருவாச்சு சேர்த்துப்பாரே. (26)

சேர்க்குகின்ற வகையேது வென்றாற்கேளு
        சீர்பெறுநல் லுப்பினுட மார்க்கமெல்லாம்
ஆர்க்கும்வெளி யாகாமல் முன்னேசொன்னேன்
        அந்தஉப்பைப் பரிபாஷை தன்னிற்றானுங்
கூர்ந்தரெண்டாங் காண்டத்திற் கூறிவந்த
        கூறறிய நிலைஉப்பின் கூட்டம்பார்த்து
பாரளறிற் படியுப்பை எடுத்துக்கொண்டு
        பாங்காகக் குருமுடிக்கும் பாகங்கேளே (27)

பாகமென்ன பூரசுத்த கெங்கைக்குள்ளே
பரிபாஷை வன்னியுப்புப் பாதிசேர்த்து
சோகமென்ன ரவியில்வைக்க ஆடைகட்டும்
சொல்லாம லெடுத்துவிட்டு ரவியில்வைத்தால்
நாகவிஷங் கடுங்காரம் மெத்தவுண்டாம்
நாளொந்தி லுப்பாகும் நாடிப்பாரீர்
தோகைமயி லேறிவரு மெந்தைசெவ்வேள்
தொகுத்துரைக்க நான்விண்டே னுப்புமார்க்கம் (28)

மார்க்கமென்ற உப்பைஎடுத் தரைத்துப்பார்த்தால்
மதிபோலே வயிரமா மார்க்கந்தோனும்
ஆர்க்குமே கிடைக்காதே யிந்தஉப்பு
அஞ்சுசுண்ணக் குகையிலிட்டுப் புடத்தைப்போட்டுப்
பார்க்கஅப்போ சுண்ணமாய் நீறிப்போகும்
பரைசுண்ணம் சிவசுண்ணம் வழலைச்சுண்ணம்
சேர்க்கவே கடுகளவு லோகத்திட்டால்
சீக்கிரத்தில் லோகமெல்லாம் நீறும்பாரே. (29)

நீறுகின்ற சுண்ணமனு வளவுதொட்டு
நீட்டிற்பா ஷாணமறு பத்துநாலும்
கூறுகின்ற சுண்ணமதா யிருக்கும்பாரு
கொள்கைசுண்ணம் நூறுதொந்தம் சாக்குநீறும்
வீறுகொண்ட சுண்ணத்தின் வேகஞ்சொல்ல
மிக்கசிவ னாலுமெந்த னாலுமில்லை
கூறுநமன் றனையுதைத்தோன் மனங்கொள்நாளிற்
குண்டோதரற்கிச் சுண்ணங் கொடுத்தார்பாரே. (30)

கொடுத்ததினல் வேண்டியதோ ருணவுகொண்டான்
கொடுங்காரம் உகாந்தத்தி பனலுக்கொக்கும்
விடுத்தெடுத்தே அதன்பெருமை சொல்லுதற்கு
மிக்திரு மாலாலு மாகாதப்பா
அடுத்துமந்த விதத்தாலே அநேககாலம்
அருந்தவத்தோர் தனக்குமிது கிடைப்பதல்லால்
எடுத்துயான் பிரித்துமிகச் சொன்னதாலே
எல்லாருமென் மீதிற் கோபித்தாரே. (31)

ஆறணிந்த வேதியனார் சபைமுன்பாக
அண்டரொடு ரிஷிமுனிவர் கோபங்கொண்டு
வீறுடைய அகத்தியமாமுனியே ஐயா
விளம்பினது தகுமோவென் றென்னைக்கேட்டார்
சீருடைய உலகோர்க்குச் சொன்னதில்லை
சிவயோகிதனக்காகத் திறந்து சொன்னேன்
பாரிலுள்ளோர் பார்த்தாலும் பயன்கொள்ளாது
பன்னிரண்டுங் காத்தவர்க்குப் பலிக்குந்தானே (32)

என்றுசொல்லி யிருவர்க்குச் சாபமிட்டு
எழுந்திருந்து பொதிகைமலை தன்னில்வந்தேன்
அன்றேதான் சிவயோகியாவருந்தான்
ஐம்பதைப்போ லொருநூலு மில்லையென்றார்
ஒன்றான பரிபாஷை ஐந்நூருக்கும்
உயிராகு மிந்தநூ லைம்பதுந்தான்
கன்றுவைத்திய முப்பூ ஐம்பதுக்கும்
ராசநூல் குருநூலாம் பேணிப்பாரே. (33)

பேணி வைத்தியமுப்பூ ஐம்பதுக்குள்
பெலமில்லாக் கறியுப்பைத் தள்ளிப்போட்டு
பாணியா மிந்தநூல்தன்னிற் சொன்ன
படிசோத்து விமிஷத்திற் சுண்ணம்பண்ணு
தோணியாம் வைத்தியமும் வாதமாகும்
சொன்னமந்த லெகுமுப்பே கொடியகாரம்
காணியிடை யிருபத்தோர் பாகமாக்கி
கடுகளவு லோகத்தில் தேய்த்துப்பாரே (34)

தேய்த்துவிட்டுப் புடம்போட நீறிப்போகும்
தேய்க்காமற் சுண்ணமனு வளவுதூக்கி
ஆய்த்தபுகைச் சாக்குப்பாஷாணத்தூட்டி
அரைத்துமொரு புடம்போட அதீதசுண்ணம்
வாய்த்தமலர்ச் சுண்ணத்தி லணுவெடுத்து
வகையிருபத் தைந்துப்பில் வளமாய்ச்சேர்த்து
நீத்தவென்று புடம்போட நீறிப்போகும்
நீறுகின்ற சுண்ணத்திற் சுண்ணங்கோடி. (35)

சுண்ணத்தார் செயநீர்கள் கோடாகோடி
சூட்சமாங் கட்டினமு மெழுகுகோடி
சுண்ணத்தாற் செந்தூரங் கோடாகோடி
சூட்டியதோர் திராவகமுங் கோடாகோடி
சுண்ணத்தாற் களங்கமது கோடாகோடி
துறைகோடி முறைகோடி தொந்தங்கோடி
சுண்ணத்தால் வேதைமுகங் கோடாகோடி
சொல்லியதோர் லெகுமுப்பின் மார்க்கந்தானே. (36)

மார்க்கமிந்த உப்பல்லோ பாருளோர்க்கும்
வாதிக்கும் வைத்தியர்க்கும் வகுத்துச்சொன்னேன்
பார்க்கமுந்திச் சொரூபமுப்பூ முடிக்கச்சொன்னேன்
பாரிலுள்ள சிவயோகி யொருவன்றானும்
தீர்க்கமுடன் சொரூபமுப்பூ முடிப்பானாகில்
தினந்தினமும் நித்தியனாய் வாழலாகும்
ஏர்க்கவே சொன்னதோ ருப்பிரெண்டில்
எதுவேனு முடித்தவனே சித்தனாமே. (37)

சித்தான பரிபாஷை கடைக்காண்டத்தில்
சீரடியேன் சொல்லிவைத்த கருத்தாற்றானும்
கற்றவர்கள் யாவருக்குந் தேர்ணுதந்தக்
கருவழலை யிந்நூலில் முடிப்பேன்கேளு
சத்திசிவ மூப்போடு யிதற்குமுந்தி
சாகரத்தி லுதித்ததொரு ஆதியுப்பு
கொத்தோடே வெவ்வேறே பிரித்தெடுத்துக்
கூறினேன் முன்சுத்த கெங்கைக்குள்ளே. (38)

உள்ளான கடுங்கார நீரிலிந்த
உயிருள்ள மூன்றுப்புங் கரைத்துவைத்து
கள்ளங்க ளணுவேனும் வந்திடாமல்
கடுநீராந் தெளிவைநீ வாங்கிக்கொண்டு
கொள்ளையாய் ரவியில்வைக்க உப்பேயாகும்
கொடுங்கார மிந்தவுப்பு மற்றோர்காணார்
பிள்ளைகளே முன்சுத்த கெங்கைக்குள்ளே
பின்னிட்டுக் கரைத்துமே தெளிவைவாங்கே. (39)

வாங்கியதோ ரங்கீரை யேனத்தூற்றி
வாரமது ரவியிலிட உப்பேயாகும்
பாங்கிலிந்தப் படிபத்துத் தீட்சைசெய்தால்
பாராபரத்தோ டொப்பாகு மிந்தஉப்பு
தாங்குகின்ற வெள்ளையது சொல்லப்போமோ
சரியான இவ்வுப்பில் அணுவெடுத்து
காங்கைபா மரத்திலொரு துளையேபோட்டுச்
சார்உப்பைத் தாக்கிவைத்தால் வாரத்துள்ளே. (40)

வாரமது ஒன்றுக்குட் பட்டுப்போகும்
வாருசத்தி சிவப்பிரம மூன்றும்உப்பை
வீரமுடன் தீட்சையது செய்யும்போது
மேல்காற்று வீசுகின்ற காலந்தன்னில்
சோரமது பரிபாஷை கடைக்காண்டத்தில்
சொன்னபடிசெய்துகொண்டு அந்தஉப்பைச்
சாரமுள்ள பஞ்சசுண்ணக் குகையிலிட்டுச்
சரியாக வேதானும் புடத்தைப்போடே, (41)

போட்டவுடன் சுண்ணமாய் நீறிப்போகும்
புகழான சுண்ணத்தின் பெருமைசொல்லத்
தேட்டான தசதீட்சை பெற்றோரெல்லாம்
தியங்கினர் யான்சொன்னேன் வெளியதாகப்
பாட்டான பரிபாஷை ஐந்துகாண்டம்
பாறிய மூதற்காண்டத் திரண்டுக்குள்ளே
பூட்டான சிவமுப்புச் சொல்லிவைத்தேன்
புகலரிய இவ்வுப்பு அதீதந்தானே. (42)

அதீதமா மாயிரம்பங் கதிகமாக
அருளினேன் பின்மூன்று முப்புமொன்றாய்
சதிமோச மெள்ளளவு மறைப்போ இல்லை
சர்வாந்த காலத்தின் வேகம்போலே
புறாலமாய்க் கடுங்கார மூப்புச்சொன்னேன்
புலத்தியனே பரிபாஷைமறைப்பு நீக்கி
நதியணிந்தார் சத்திக்குச் சொல்லஅந்த
நற்சத்தி யென்தனுக்கு உரைத்திட்டாளே. (43)

உரைத்தநூ லைம்பதினி லந்தரங்கம்
உத்தமனே மறைத்தபொரு ளிதிலேசொன்னேன்
முரைத்ததொரு புலத்தியனே மறைத்துவைத்த
முப்பூவின் மார்க்கமெல்லா மிதிலேசொன்னேன்
திரையில்லா ரவிபோலே பிரகாசிக்குந்
தியங்குநதி அப்புசொன்னேன் நூல்கட்கெல்லாம்
அறைந்திட்டே னிதிற்சொன்ன முப்பூவாலே
ஆடலாந் தொழில்களவ் வளவுந்தானே. (44)

அவ்வண்ண மிதிற்சொன்ன முப்பூவாலே
அளவற்ற நூல்களெல்லாஞ் சரியாயாடும்
இவ்வண்ண மார்சொல்வா ரென்னைப்போலே
ஏழைகட்கா யிரங்கியே சொல்லிவிட்டேன்
கவ்வண்ணம் பரிபாஷை தன்னிற் சொன்ன
கருத்தெவர்க ளறியவோ போருரென்று
நவ்வண்ண மிந்நூலில் திறந்துவிட்டேன்
நாட்டிலுள்ள யோகிகளும் நயந்திட்டாரே. (45)

நயந்திந்த விதந்தன்னை நானறிந்து
நாட்டினே னறியாட்டா லென்னசெய்வேன்
பயம்பிடித்த சித்தர்களுக் கஞ்சியானும்
பரிவாக நூலெல்லா மறைத்துவைத்தேன்
தயங்காதே யான்சொன்ன நூல்கட்கெல்லாம்
சாற்றியதோ ரிம்முப்பூ கொண்டுசாடு
செயமாகு நூலெல்லா முப்பூவாலே
செயமுப்பூ விட்டுவிட்டா லெல்லாம் பொய்யே. (46)

பொய்யாகப் போகாம லிந்நூலுள்ளே
புகழ்ந்துரைத்தேன் உப்பினுட சேதியெல்லாம்
அய்யாகேள் புலத்தியனே அருமையிந்நூல்
ஐந்நூற்றை நன்றாக அறிந்துபாரு
கொய்யுமலர்ப் பூவினுட வாசம்போலே
கூறினேன் வாதத்தி லெட்சங்காப்பு
துய்யமதிப் பிரகாசம் போலேவைத்யம்
துறந்திட்டே னிரண்டு லெட்சங் காப்பதாமே. (47)

இரண்டுலெட்சம் போதாமற் சூத்திரத்தில்
இவ்வளவோ அவ்வளவோ கணக்கோயில்லை
திரட்டியதோர் நூலெல்லா முப்பேயல்லால்
தீவிரத்துன் முப்பைவிட்டால் தியங்கிப்போகும்
பரனுரையும் யான்கேட்டு மிந்நூ லுள்ளே
பகர்ந்திட்டே னுப்பினுட மார்க்கமெல்லாம்
திரமுடனே சொன்னதினாற் சித்தர் கூடித்
திரிமூர்த்தி தங்களிட மேகினாரே. (48)

ஏகியே யெந்தன்மேற் குற்றஞ்சொல்ல
ஈஸ்பரனு மாலயனு மிதனைக்கேட்டு
யோகிகட்கு அரசான குமரநாதன்
யோசனைதான் பண்ணாமற் பிரித்துரைத்தார்
சோகமென்ன சித்தர்களே இந்தநூலைச்
சோதித்துக் குகைக்குள்ளே வையுமென்று
நாகமது பூண்டோனுஞ் சொல்லிப்பின்பு
நல்லதவ முடையோர்க்கு நல்கென்றாரே. (49)

தவமுடைய பெரியோர்க்கே இந்தநூலைத்
தான்கொடுநீ யென்றீசன் றானேசொல்ல
நவநாத சித்தருமென் னிடத்தில்வந்து
நடந்ததையுந் தெரிவித்துப் பணிந்துதானும்
சிவமுப்புக் குருநூலைக் கொடுங்களென்று
திரமாக எந்தனையும் விரும்பிக்கேட்டார்
எவருக்குங் கொடாதகுரு நூலைத்தானும்
இயல்பாகச் சித்தரிடங் கொடுமென்றேனே. (50)

என்றுரைத்த இந்தநூல் குருநூலாகும்
ஏழைகட்கா யிரங்கியிவ் வைம்பதுள்ளே
நன்றென்ற முப்பூவை வெளியாய்ச்சொன்னேன்
நாடுவீ ரென்மக்காள் நாடீமென்று
வண்டுறைபூங் குழல்சத்தி கிருபையாலே
வகுத்துரைத்தேன் ஏழைகட்கா யறிந்தமட்டும்
இன்றல்லோ செகமெல்லாஞ் சித்தாய்ப்போச்சு
எந்தனுட குருநூலும் பதுவுமுற்றே. (51)

அகஸ்தியர் குருநூல் ௫௰ முற்றிற்று.

உ

பரமபதிதுணை

அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# வைத்தியக் குரு நூல் முப்பு.

——:(*):——

வெண்பா

வானும் புவியும் மதியுங் கதிரொளியுந்
தேனுந் தெளிந்த சிவகுருவே—தானுந்தான்
நான்மறையு மாராய்ந்து நன்னூலா மைம்பதையும்
தானருளுங் குஞ்சரத்தின் தாள்

மயமான முப்பூவின் மார்க்கந்தன்னை
வைத்தியத்துக் குறுதியதாய் விரித்துச்சொல்வேன்
செயமான கணபதியுங் கந்தன்றானுஞ்
சிவனோடு உமையாம்பார் வதியுங்காப்பு
நயமாக விப்போதென் முன்னேநின்று
நாடியதோர் முப்பூவை நயந்துகேட்டால்
வயமாகச் சொல்லுகிறேன் ஐம்பதுக்குள்
வாகுமிகும் புலத்தியனே வணங்கிக்கேளே (1)

வணங்குவது யாரையென்றாற் குருவின்பாதம்
வாலையொடு சிவன்பாதம வாணிபாதம்
வணங்குவது கணபதியின் பாதம்கந்தன்
வடிவுமிகும் பதமலரை எந்நாளுந்தான்
வணங்குவது முப்பூவைம் பதையுமப்பா
வாதமது செயவைத்தி யத்துக்காகும்
வணங்குவது ஐம்பதையும் வணங்கவேண்டும்
வைத்தியத்துக் கிதுஉயிர்காண் வாதிகட்கே. (2)

வாதியென்று லிந்தமுறை யறியவேண்டும்
வாதந்தான் செய்யவைத் தியத்துக்காகும்
ஆதியென்ற வயித்தியந்தான் பிர்மவித்தை
ஆத்மாவை ரட்சித்தோ னவனேசித்தன்
நீதியென்ற தர்மமதை நினைக்கவேண்டும்
நீணிலத்தி லுயிர்களுக்கு யிரங்கவேண்டும்
ஓதியதோர் கன்மத்திற் றர்மமாதி
உத்தமனே வைத்தியத்துக் குறுதிகாணே. (3)

உறுதியாம் ஒருநூற்றி யைம்பதுக்குள்
உரைத்ததொரு லோகமா ரணத்தைக்கேளு
உறுதியென்ற முப்பூவின் சுண்ணம்வேண்டும்
உதவாட்டா லொன்றுமில்லை யுடைந்துநீறும்
உறுதியென்ற ஐம்பதையும் விட்டபேர்க்கு
உலகத்தில் வைத்தியந்தா னுண்டோயில்லை
உறுதியென்ற முப்பூவை நீற்றிக்கொண்டு
ஓகோகோ லோகமெல்லா மொக்கநீற்றே (4)

நீற்றும்வகை தெரியில்லைவைத் தியனேயாகும்
நிலைத்ததொரு வாதியென்றால் நீற்றுவான்பார்
சாற்றும்வகை முப்பூவை யறியவேண்டும்
சாதகமாய்க் கைமுறைகள் தப்பாவண்ணம்
பார்த்துரைத்துச் சுத்திமுறை காணவேண்டும்
பருவமாய்க் குருமுடிக்கும் பாகம்வேண்டும்
சாத்திரத்தின் முறையறிந்து குருவைச்சேர்ந்தால்
தவறாது பொருளொன்றுஞ் சார்ந்துபாரே. (5)

பாரடா முன்னுரைத்த முப்பூவெல்லாம்
பரிவான சித்தருக்குஞ் சிவயோகிக்கும்
சேரடா வைம்பதிற்குட் சொன்னமுப்பூ
செகத்திலுள்ள மானிடர்கள் செய்யவேண்டி
ஊரடா வேறுகொண்ட உலுத்தருக்கு
உறுதியாய்த் தேகமது நலித்துப்போச்சு
ஆரடா வென்னைப்போற் சொல்லப்போறார்
ஆச்சரிய முப்பூவி னருமைபாரே. (6)

பாரென்ற உவருப்பைக் கொண்டுவந்து
பரிவாகச் சுத்தஜலந் தன்னிலிட்டுச்
சீருடனே கலக்கியே தெளியவைத்துத்
தெளிவதனைக் காய்ச்சியே வற்றினாலந்
நீரதிலே மறுபடியும் விட்டுக்கிண்டி
நிலையாகத் தெளியவைத்து இறுத்துக்கொண்டு
வாரமுடன் காய்ச்சியே வற்ற வைத்து
வாகாய விப்படியே காய்ச்சு காய்ச்சே (7)

காய்ச்சுமுறைக் கொளஞ்சுத்த சலமேவிட்டுக்
கலக்கியே தெளியவைத்துக் காய்ச்சுகாய்ச்சு
ஆச்சிந்தப் பூவதுதான் வெளுத்துப் போகும்
அப்புறத்தே வைத்துயினி யறையக்கேளு
வாச்சதொரு கறியுப்பை வாரிக்கொண்டு
மானிடர்கள் கூட்டுமுப்பில் மார்க்கங்கேளு
பாச்சிந்தப் படிசுத்த ஜலத்தைவிட்டுப்
பரிவாகத் தெளிவிறுத்துப் பத்துமுறைகாய்ச்சே. (8)

முறையாக நிலவுப்பைச் சொல்லக் கேளு
மூதண்டப் பிரமாவின் விந்துப் பிள்ளை
அறையான பூமியுட நாத மாச்சு
ஆதியுப்பு சிவமென்று இதற்கே பேரு
மறைவாக வொளித்துவைத்தார் நூல்க ளெல்லாம்
மார்க்கமதைச் சொல்லுகிறேன் வரிசை யாக
நிறையாகக் கல்லுப்பாய் வளர்ந்த தப்பா
நீற்றியே தின்பவர்க்குச் சுண்ணும் பாச்சே. (9)

சுண்ணமென்று லோகத்தோர் சுட்டு நீற்றிச்
சுகமாகத் தாம்பூலந் தின்பார் பாரு
சுண்ணும்புக் கல்லென்று மிதற்கே பேரு
சுத்தாவி பீஜமென்று மிதற்கே பேரு
எண்ணமுள்ள சுண்ண மப்பா காரச் சுண்ணம்
இயல்பான கல்லுப்புச் சுண்ண மாச்சு
தண்ணீரிற் போட்டவுடன் நீறிப் போச்சு
சவுக்காரக் குருவாச்சு சார்ந்து பாரே. (10)

சார்பாங்க மிதைமறைத்தார் சித்த ரெல்லாம்
சமுசயங்க ளில்லாமல் வெளியாய்ச் சொன்னேன்
சீர்பாகக் கல்லதுதான் சுத்த வெள்ளை
செகத்திலிந்தக் கல்லதுதான் மெத்த வுண்டு
நீர்பாகக் கல்லொன்று மாகா தப்பா
நிர்மலமாம் வெள்ளைக்கல் பிரமகற்பம்
ஆர்பாக அதையெடுத்து அமுரிக் குள்ளே
அப்பனே உவர்மண்ணைக் கரைத்துக் கொள்ளே, (11)

கொள்ளவே அதிலிந்தக் கல்லைப் போட்டு
குமுரவே காய்ச்சிவிடு கட்டிப் போகும்
வெள்ளையாஞ் சுண்ணக்கல் கட்டிப் போச்சு
வேதாந்த மூர்த்தியென்று பேரு மாச்சு
கள்ளமில்லாக் கல்லதனை அண்ட நீராற்
கருவாக அரைத்ததனை வில்லை யாக்கி
உள்ளபடி சொல்லுகிறேன் உலையி லூத
உத்தமனே சுண்ணாம்பா முறத்து வூதே- (12)

வூதிடவே சுண்ணமுமாஞ் சலத்தைவாரு
ஓகோகோ நீர்வற்றி நீறிப் போகும்
வாதிடவே பீங்கானி லக்கீரிட்டு
வளமாகச் சலம்மேலே நிறையவிட்டு
ஆதியா மண்டலமே வைத்தாயானல்
அதன்மேலே உப்புவந்து படரும்பாரு
சோதியா முப்பதனை வழித்துவாங்கிச்
சுகமாகப் பலமொன்று தூக்கிக்கொள்ளே. (13)

தூக்கியே வகையொன்று பலமொன்றுகச்
சுகமாகச் சூடனெரு பலமுங்கூட்டி
நோக்கியே அண்டநீர் விட்டுஆட்டி
நுணுக்கமாய் வில்லைசெய்து உலர வைத்துத்
தாக்கியே உலர்ந்தபின்।। வோடு மூடி
சாதகமாய்ச் சீலைமண்ணுஞ் சாத்திக் கொண்டு
பாக்கியே முப்புடத்தில் நீறிப் போகும்
பண்பாக அதையெடுத்துப் பகாக் கேளே. (14)

கேளப்பா வீரமொரு கழஞ்சுகூட்டி
கிருபையுள்ள புழுகதிலே கழஞ்சுகூட்டி
நாளப்பா பூரமொரு கழஞ்சுகூட்டி
நாட்டுச்சம் பழச்சாறு விட்டுஆட்டி
தாளப்பா வில்லைசெய்து ரவியிற்போடு
சாதகமாய் முழப்புடத்திற் போட்டுவாங்கு
வேளப்பா கடுங்காரச் சுண்ணமாச்சு
வெகுசுருக்குப் பூநீறு குருவிதென்றே. (15)

குருவேதோ முறையேதோ வென்பார்மாண்பர்
கூறியதோர் நூல்காணார் குருட்டுவாதி
தருவான முப்பூவைப் பாரார்மாந்தர்
தாரணியில் மனிதர்கலை மயக்குவார்பார்
உருவான கல்லுப்பை யறியமாட்டார்
உலுத்தருக்கு வாதமது உண்டோயில்லை
தெருவிலே அலைகிறதோர் நாயைப்போலே
சென்மித்த கசடருக்கு வாதமேதே (16)

ஏதென்று போகாமற் சொல்லக்கேளு
எடுத்ததொரு துறைக்கெல்லா மெளிதேயாகும்
வாதென்ற வாதியெல்லாம் மயங்கிப்போக
வைத்தியத்தின் திறவுகோல் மார்பிலாணி
தூதென்ற செந்தூர வைப்புக்கெல்லாம்
துடியாகப் பூரீறு சொல்லிப் போட்டேன்
காதென்ற உபதேசங் குருவார்சொல்வார்
கைகண்ட குருவாச்சு கருதிப்பாரே (17)

பாரப்பா யிதிலேயோர் சமூஞ்சுவாங்கிப்
பாய்ச்சியே லோகத்தை நீற்றிப்போடு
வாரப்பா வொருநூற்று ஐம்பதுக்குள்
வைத்ததொரு மர்மந்தான் முப்பூவாலே
சீரப்பா குருவைவிட்டுச் செந்தூரித்தால்
சிவக்காது எடையில்லை செயமாகாது
ஊரப்பா யிக்கருவை ஒளிக்கவில்லை
ஒருகோடி நூலுக்குள் ஒளித்தார்சித்தர் (18)

சித்தாக வேணுமென்று லிந்நூல்பாரு
செயமாகுங் குருவறியப் பொய்யேயில்லை
முத்தான முப்பூவுக்கிந்நூல்பாரு
மூதண்டவைத்தியத்துக் கிந்நூல்பாரு
பத்தாத வாதத்துக் கிந்நூல்பாரு
பாரிலுள்ளோர்க் கிந்நூலைப் பகரவேண்டாம்
ஒத்தாடுஞ் சீஷனுக்கு ஒளிக்கவேண்டாம்
உலகத்து மானிடர்க்கு முரைக்கலாகா (19)

ஆகாத வழியினைத்தா னடுக்கலாகா
    ஆருக்கு மிந்நூலைக் கொடுக்கலாகா
பாகான முப்பூவை விடுக்கலாகா
    பாவிகட்குச் செந்தூரம் பகரலாகா
வாகான பற்பங்கள் வழுத்தலாகா
    வையகத்து மாந்தர்நோய் வகையுங்கண்டு
போகாத கர்மத்தை நிவர்த்திசெய்து
    பூதலத்தில் வைத்தியஞ்செய்புண்யமாமே (20)

ஆமிந்த வகையெல்லாம் தெரியச்சொன்னோம்
    அப்பனே உருக்கினத்தைச் சொல்லவில்லை
நாமிந்த வகையெல்லாஞ் சொன்னோமப்பா
    நரசென்ம மானதெல்லா மதிகசென்மம்
ஓமிந்தச் சிவசெந்தைச் சிவனார்தேற்றி
    உலகத்தி லுண்டாக்கிச் சிருஷ்டிசெய்தார்
வாமிந்தச் சித்துகளின் நடக்கையாலே
    வந்ததடா நோய்களென்ற வறுமைதானே. (21)

தானென்ற நோய்களினாற் செத்துப்போனால்
    தாரணியில் மனிதருண்டோ தாயேசொல்வாள்
ஆனென்ற சிவனைக்கேள் மைந்தாவென்று
    ஆயிசொல்ல மாதாவே நீயேசொல்லு
தேனென்ற மனோன்மணியாள் சிவனைக்கேட்டு
    செகத்திலே மனிதரைநீர் சிருட்டிசெய்தால்
நோயென்ற வியாதிகளை யுடனேவிட்டு
    நுணுக்கமற்று மரணத்தா லுய்வதேதோ. (22)

உய்வதினால் வெகுபாவ மென்றுபோற்றி
    உமையவள்தா னரன்பாதம் பணிந்துகேட்கச்
செய்வதென்ன அவரவர்கள் கர்மத்தாலே
    தீவினைக ளாலெடுத்த சடலத்தோர்கள்
நைவினையா லுய்யாம லடியேனுக்கு
    நல்வாக்கு தந்தருளி நல்கவேணும்
மைவிழிசே ருமையாளே வுலகத்தோர்க்கும்
    வைத்தியர்க்கு மருந்தொன்று வகைசொல்வோமே. (23)

வகையான மூலிகையுங் காரசாரம்
வளமான உபரசமும் பாஷாணங்கள்
தகையான நவரத்னம் அஷ்டலோகம்
தனிச்சிவ செந்தூமுதல் தாணியோர்கள்
மிகையான நோய்களுக்கு மருந்தீதென்று
மீறியதோர் மேகமெல்லாம் மாண்டுபோகத்
தகையாமற் றுயெனக்கு உபதேசித்தாள்
சாற்றினேன் வைத்தியமிரு லக்ஷங்காணே. (24)

காணப்பா ஒருபத்தா யிரமுஞ் சொன்னேன்
கனமான ஆயிரத்தைந் நூறுவிண்டேன்
பூணப்பா அறுநூறு மிருநூறோடு
புகழாக மூல் றுபத்து ஐந்துமாகத்
தோணப்பா கர்மருத் திரமுந்நூறும்
துரையான வைம்பதுக்குட் சுருக்கிப்போட்டேன்
வீணப்பா மற்றதெல்லாம் மிந்நூல்விட்டால்
வேறுன முப்பூவின் விதிதானே. (25)

வீதியாய்ச் சொல்லிகிறே னுருக்கினத்தை
வெட்டவெளி யாகவுமே விபாமாக
ஆதியா முப்பூவிற் காரங்கூட்டி
அழகான காந்தமிடைக் கிடையேகூட்டி
பூதியாய் முலைப்பாலை விட்டு ஆட்டி
புகழான குகைக்குள்ளே வைத்து மூடி
ஊதியா யக்குகையி லுருக்கிப் பாரு
ஓகோகோ ஒருமணியா யுருகிப் போமே (26

போமென்ற இரும்பினுட பொடியைவாங்கிப்
புகழாக அவ்வி டைக்குக் குருவைப்போட்டு
தரமென்ற முலைப்பாலாற் சாமமாட்டிச்
சாதகமாய்க் குகைக்குள்ளே வைத்துமூடி
நாமென்ற தாக்குலையி லுருக்கிப்பாரு
நலமாக ஒருமணியாய் நிற்கும்பாரு
வாமென்ற அப்ரேக நவநீதத்தை
மாட்டியே எடைக்கெடைமுன் மருந்துகூட்டே. (

கூட்டியே முலைப்பாலாற் சாமமாட்டி
குகைக்குள்ளே வாரியிட்டு மூடிக்கொண்டு
நாட்டியதோர் சிலைசெய்து உருக்கித்திரு
நலமாக ஒருமணியாய் நிற்கும்பாரு
மூட்டோடே வாங்கிவைத்துப் பின்புகேளு
முனையான கெருடபச்சைக் கல்லுவாங்கி
ஆட்டியே குழிக்கல்லிற் பொடித்துக்கொண்டு
அழகாக அவ்விடைக்கு மருந்துகூட்டே. (28)

மருந்தென்ன கருவதனைக் கூட்டிக்கொண்டு
வளமான முலைப்பாலி லாட்டியாட்டி
குருந்தென்ன குகையிலிட்டுச் சில்லுப்போட்டு
கூராக வூதிடவே மணியுமாகும்
விருந்தென்ன கல்நாரை வாங்கியேதான்
மேலான குருகூட்டி விரைந்துஆட்டி
அருந்துகின்ற பாலாலே யாட்டித்திரு
அப்பனே உலையில்வைத்து மூட்டியூதே. (29)

மூட்டியே யுருக்கிடவே மணியுமாகும்
மூதண்ட சகஸ்திரமாம் வேதைகேளு
தாட்டியே ஏடைக்கெடைதான் குருவைச்சேர்த்து
சாதகமாய் முலைப்பாலி லாட்டித்திரு
ஆட்டியே குகையதனில் மாட்டியூது
அப்பனே ஒருமணியாய் நிற்கும்பாரு
தீட்டியே டங்கணத்தைச் சேர்த்துக்கொண்டு
திடமாக எடைக்கெடைதான் குருவைக்கூட்டே. (30)

குருவதனைக் கூட்டியே பொடித்துக்கொண்டு
கூசாமல் முலைப்பாலை விட்டுஆட்டித்
திருவான குகையில்வைத்து மூடிக்கொண்டு
திறமாக ஊதிவிட்டுத் திரளமட்டும்
பருவமுடன் வகைபார்த்துக் குகைக்குளிட்டு
பாங்காக மூன்றுமுறை குலுக்கியூது
மருவில்லா மணியாக வாங்கிக்கொண்டு
வளமான அண்டத்தோல் வாங்கிடாயே. (31)

வாங்கியே சவ்வுதனைத் தள்ளிப்போட்டு
மருந்தென்ற குருவெடையின் எடையேகூட்டி
வாங்கியே முலைப்பாலை விட்டுஆட்டி
வளமாகக் குகையில்வைத்து வாங்கியூது
ஏங்கியே மணியாக யிறங்கிப்போகும்
இன்னுமொரு சேதியுண்டு இயம்பக்கேளு
தூங்கியே திரியாதே சோம்பல்கொண்டு
துடியான சங்கதனைப் பொடியாய்த்தூக்கே. (32)

தூக்கியே எடைக்கெடைதான் குருவைக் கூட்டி
துலங்கவே முலைப்பாலை விட்டு ஆட்டு
ஆக்கியே குகையில்வைத் துருக்கித்திரு
அப்பனே ஒருமணியா யிருக்கும் பாரு
நோக்கியே சலாசத்துச் சொல்லக் கேளு
நுணுக்கியே எடைக்கெடைதான் குருவைப்போட்டு
தாக்கியே முலைப்பாலை விட்டு ஆட்டிச்
சாதகமாய்க் குகையில்வைத்துச் சார்பா யூதே. (33)

சார்பாக ஊதவொரு மணியாய் நிற்கும்
தருவான நவரத்னஞ் சொல்லக் கேளு
ஆர்வாக வொன்பதையும் வெவ்வேறாக
அந்தந்த எடைக்கெடைதான் குருவைக் கூட்டிப்
பேர்வாக வரைத்ததனைக் குகையில் வைத்துப்
பெருமையுற வூதிடவே மணியு மாகும்
கார்வாக மனிதருட அஸ்தி தன்னை
கலந்ததனைப் பொடியாக்கிக் குருவைக்காணே. (34)

காணந்த எடைக்கெடைதான் முலைப்பால்விட்டுக்
கலந்தரைத்துக் குகையில்வைத்துக் காடா யூதி
பூணந்தத் தாக்குலையி லுருக்கித் திரு
புகழாக வொருமணியாய் நிற்கும் பாரு
தோணந்தக் கலையினுட கொம்பை வாங்கிச்
சுகமாக சீவியதைத் தூக்கிக் கொண்டு
ஊணந்த எடைக்கெடைதான் குருவை விட்டு
உறப்பாக முலைப்பாலி லாட்டி,வாங்கே. (35)

வாங்கியே குகையில்வைத் துருக்கித் திரு
வளமாகக் குகையுள்ளே கண்விட் டாடும்
தேங்கியே ஆமையோ டதனை வாங்கித்
திறமாக பிடித்ததனை நொறுக்கிக் கொண்டு
தாங்கியே குருவதனைச் சமனாய்ச் சேர்த்துச்
சார்பாக முலைப்பாலா லதனை யாட்டி
நீங்கியே குகையிலிட்டு உருக ஊது
நேராக வூதினதோர் நீதி கேளே. (36)

நீதியா யுருக்கினத்தின் மணியை யெல்லாம்
நிசமாக எடைக்கெடைதான் கெந்தி கூட்டி
சேதிகேளுடைத்ததனைப் பொடியாய்ப் பண்ணி
திட்டமா யரைத்திடுவாய் நாலு சாமம்
ஆதியாய் வில்லைசெய்து வைத்துக் கொள்ளு
அழகான பழச்சாற்று லாட்டித் திரு
வாதியாய் வந்தவனை வெளியில் வைத்து
வரிசையாய் மூன்றுநா ளாட்டிப் போடே. (37)

போட்டதொரு வில்லைதனை யோட்டில் வைத்துப்
புகழாக மேலோடு கொண்டு மூடி
நாட்டமாய்ச் சீலைசெய்து கசபு டத்தில்
நன்றாகச் செந்தூர முருக்கம் பூப்போல்
பூட்டதே செப்பதனிற் பதனஞ் செய்து
புதுமையாய்த் தீரும்நோய் செப்பக் கேளு
நீட்டவே யென்தெந்த நோய்கள் குஷ்டம்
நினைவான அனுப்பான மறிந்து செய்யே. (38)

செய்யவே இரும்பதனைத் தேனி லுண்ணச்
செகத்திலுள்ள பாண்டுவகை யெல்லாந் தீரும்
மையவே காந்தத்தைத் தேனிற் கொள்ள
மகத்தான வாயுவொடு பாண்டு போகும்
உய்ய அப்பிரேயஞ் சஞ் சீவியதிற் கொள்ள
உகந்தந்த நீரழிவு ஓடிப்போகும்
நையவே கருடனைத்தான் தேனிற் கொள்ள
நாடாது கண்ரோகம் நாடிப்பாரே (39)

பாரப்பா கல்காரச் கரையிற்கொள்ளப்
பாரிலுள்ள கொடியசிலேத் துமந்தான்தீரும்
தேரப்பா சாஸ்திரபேதி பாலிற் கொள்ளத்
தேகத்தி லுள்ளநோய் சிதறிப்போகும்
வாரப்பா டங்கணத்தை யிஞ்சிச்சாற்றில்
மருகிடவே வாதசுர சன்னிபோகும்
சீரப்பா அண்டந்தூ ளளேச்சாற்றில்
திருமடா சயகாசம் இளைப்புயிளை. (40)

ஈளைபோஞ் சங்குசுண்ணம் பனைவெல்லத்தில்
இட்டாக்கால் வாயுமெல்லா மிறந்துபோகும்
கோழைபோம் பித்தமெல்லாம் மாண்டுபோகும்
குமரனே அனுப்பான மறிந்துசெய்தால்
காளையாஞ் சலாசத்துச் செந்தூரத்தை
கடுக்காயிற் தின்றிடவே மகோதரங்கள்
பேழைபெறு வயிறுநீ ராம்பல்போகும்
பெரிதான ரத்தினத்தின் பெருமைகேளே. (41)

பெருமைசெம் மணிசாதிக் காயிற்கொள்ள
பெரும்பாடு யெனும்புருக்கி பிரிந்துபோகும்
அருமையென்ற பச்சைக்கற் கண்டிற்கொள்ள
அஸ்திசுரம் வெட்டைமுத லகன்றுபோகும்
தருமையென்ற வயிரத்தைச் சீனியதிற்கொள்ளச்
சலக்கழிச்சல் நீரழிவு சாராதோடும்
ஒருமைவயி டூரியமும் பாலிற்கொள்ள
உள்வரச்சி கபரோக மோடிப்போமே. (42)

போகும்கோ மேதகத்தை நெய்யிற்கொள்ளப்
புகழான யிளையொடு சயரோகம்போம்
வாகுசேர் கலங்கொம்பைத் தேனிற்கொள்ள
மைந்தனே கண்துலங்கும் மயக்கந்தீரும்
ஆகும்நீ லத்தைதிரி கடுகிற்கொள்ள
ஆச்சரியங் குட்டமெல்லா மகன்றுபோகும்
மோகமாய் முத்துதனைத் தின்பாயானால்
மூர்க்கமாம் பவளத்தின் முறைமைக்கேளே. (43)

முறையான பவளம்முலைப் பாலிற்கொள்ள
முக்கியமாந் தேகமது வலுத்துப்போச்சு
மறையான பித்தமெல்லாம் மாய்ந்துபோகும்
மகத்தான மேகமெல்லாம் மாண்டுபோகும்
உறையான வப்ரேகஞ் சீனியதிற்கொள்ள
உடம்பிலுள ரோகமெலா மோடிப்போகும்
துரையான கஸ்தூரி தின்றயானால்
சுரசன்னி யகன்றுபோம் சுகமிதாமே (44)

சுகமான ஆமைசத்து தின்றயானால்
சோர்வில்லாச் சன்னியொடு சூலைதீரும்
இகமான வகைக்கெல்லா மனுப்பானங்கள்
இனமறிந்து கொண்டாக்கா லகலும்நோய்கள்
தகமான செந்தூர மினங்கள்தோறும்
தான்குருகாற் கழஞ்சளடை தாக்கிக்கொண்டு
முகமான குளிக்கல்லி லொக்கவிட்டு
முலைப்பாலா லாட்டிவிடு சாமமொன்றே. (45)

ஒன்றான சாமமது அரைத்துவாங்கி
உருட்டிவிடு குன்றிஎடை உலர்த்திக்கொண்டு
நன்றாக வேயரைத்து யிஞ்சிச்சாற்றில்
நலமாகக் கொண்டிடவே சன்னிதீரும்
பண்டான வலியைந்தும் பறந்துபோகும்
படுபாவி யானசுரங் காணாதோடும்
உண்டான சேதியெல்லாஞ் சொல்லிப்போட்டேன்
ஒளிக்கரியோம் மறைப்பில்லை யுலகத்தோர்க்கே. (46)

உலகத்தோர் பிழைக்கவென்று கருவைச்சொன்னேன்
உரித்தாக வைத்தியத்தை யூன்றிச்சொன்னேன்
நிலைகெட்ட மாந்தருக்குச் சொன்னதில்லை
நிலைதவிரா மனிதர்கட்கு நிகழ்த்தினேன்யான்
வலைகட்டி மீன்பிடிக்குந் தன்மைபோல
வையகத்து நோய்களுக்கு வலையீதாகும்
சிலையொத்த தேகமடா மனிததேகம்
செய்கையறி யாமலவர் செத்தார்பாரே. (47)

பாருநீ பலநூல்கள் நன்ருய்ப்பார்த்துப்
பகர்ந்ததொரு நாடிவகை யெல்லாம்நன்ருய்
தேருநீ குணங்குறிகண் நாவுபார்த்து
செயமான மருந்தினுட குணபாகங்கள்
சேருநீ சாதகசாஸ் திரத்தைக்கண்டு
தெளிவாக நோயினுட குணமுஞ்செய்கை
வாருநீ கர்மமது நிவர்த்தியாக
வளமான முப்பூவின் மார்க்கஞ் செய்யே. (48)

செய்யவே குருவதனை முடிக்கவேணும்
செந்தூர மானதெல்லாஞ் செய்யவேணும்
நையவே பிணியெல்லாந் தீர்க்கவேணும்
நாட்டிலுள்ள பேர்களெல்லாம் வணங்கவேணும்
துய்யவே தியானங்க ளுரைக்கவேணும்
துறையான பூசைமுறை யரியவேணும்
பையவே கோபத்தை நீக்கவேணும்
பண்டிதரே யிந்தமுறை பகருங்காலே. (49)

காலான வைத்தியத்தை யுறுதியாகக்
கைமுறைகள் தப்பாமற் கருவாய்ச்செய்தால்
பாலான நிறமுடைய பிரமனவான்
பண்டிதரிற் தன்வந்திரி பகவானவான்
சேலான மச்சமுனி சொல்லெண்ணூற்றைத்
தெளிவாய்ப்பார் களங்கமற்றுச் சித்தனவாய்
நாலான மணிபெற்றுப் பிரமன்சொல்ல
நலமுடைய முனிமொழிந்தார் நாடுமுற்றே. (50)

அகஸ்தியர் குருநூல் முப்பு ருய.

முற்றிற்று.

உ

பரமபதிதுணை

சிவானந்த சித்தர் திருவாய்மலர்ந்தருளிய.

# வாதசூத்திரம் ௬௰.

பாரப்பா ஐங்கரனும் பரையும்போற்றி
    பரிந்துநின்ற மூலகுரு பாதம்போற்றி
நேரப்பா நாதாக்கள் பாதம்போற்றி
    நிகராக வணங்கியே பூசைசெய்து
காரப்பா குருவருளால் முப்பூமார்க்கம்
    கடைத்தேறும் பொருட்டாக அறியச்சொன்னார்
ஆரப்பா யிதையறிவார் லோகத்தோர்கள்
    அம்மம்மா அரிதரிது வழலைப்போக்கே. (1)

வாகான வழலையது மூன்றென்பார்கள்
    வகையாக நாதாக்கள் வகுத்துச்சொல்வார்
பாகான முப்பூவே வழலையென்பார்
    பரிவான சிவஞ்சத்தி சோதியென்பார்
தாகான அடிமுடியாம் நடுவென்பார்கள்
    தனிக்கார சாரமுடன் பூரமென்பார்
வேகாத தலையோடுஞ் சாகாக்காலும்
    வெட்டவெளி யாமென்று மறைத்திட்டாரே. (2)

மறைத்திட்டா ரிந்தென்றும் ரவிதானென்றும்
    வளமான வன்னியென்றும் வாபேசார்கள்
நிறைத்திட்டா ரண்டமென்றும் விண்டதென்றும்
    நேரான கேசரியா மென்றுஞ்சொல்வார்
பறைந்திட்டா ரடியென்றும் மரந்தானென்றும்
    பரிவான தளிரென்றும் பண்பாய்ச்சொல்வார்
குறைத்திட்ட பச்சென்றுங் கால்தானென்றும்
    கொடியதொரு கெங்கையென்றுங் கூறுவாரே. (3)

கூறுவார் வெந்ததென்றுஞ் சுட்டதென்றும்
கொடியதொரு மூலமென்றுங் கூறுய்ச்சொல்வார்
மாறுவார் விந்ததென்றும் நாதமென்றும்
மருவியதோர் சுரோணிதமாம் வகையைச்சொல்வார்
தேறுவா ருவர்ப்பூபூ ரணியாமென்றும்
தெளிவான வழலையென்பார் செகத்தோர்க்கெல்லாம்
ஆறுவார் கல்லுப்பாம் பாறையுப்பாம்
அதீதமாம் நிலவுப்பாம் அரியென்பாரே. (4)

அறிந்துகொள் ளுவருப்பாம் வண்ணனென்பார்
அருமையாய் மெய்யுப்பு யென்றுசொல்வார்
பிறிந்துவருஞ் சுக்கிலமாம் புனல்தானென்பார்
பேரான நீருப்பாம் பிரித்துச்சொல்வார்
தெறிந்துவரும் அரியானும் பிரமனென்பார்
தெளிவான தேய்வாய்வா காசமென்பார்
நெறிந்துநில நிலசவுக் காரமென்பார்
நேராக அடிமுடியாம் நடுவுமாமே. (5)

ஆமென்னும் நாதாக்க ளாதிதிருமூலர்
அகஸ்தியர்கொங் கணர்சட்டை முனிபார்சுந்தரரும்
தாமென்னும் கருவூரார் மச்சமுனிநாதர்
சார்வான சிவவாக்கி யர்போகநாதர்
நாமென்னும் அழுகண்ணிச் சித்தரிடைக்காட்டர்
நலமாக நாதாக்கள் தொகுத்துச்சொன்னார்
பாமென்னும் பரமகுறிப் பறிவாய்வைத்தால்
பண்பான ரகசியமும் வெளிதானுமே. (6)

ஆமென்னும் நாதாக்கள் கடாக்ஷம்வைத்தால்
அப்பனே இட்டகுறை தொடர்ந்துமெய்தும்
காமுகனுக் கபடிகடுங் கோபியானல்
காணியள வாகிலுமே யெய்தாதப்பா
பூமணம்போல் வாசனையாய்க் கல்விமானுய்ப்
புகழ்சாந்தன் பொய்சொல்லார்க் கெய்துமெய்தும்
வாமென்றும் நாதாக்கள் கிருபைவைத்தால்
வழியோடே கைமுறையாய்ப் போதிப்பாரே. (7)

போதித்தாற் புத்தியிலே தோணப்பண்ணும்
புகழாகச் சொற்பனத்திற் சொல்லுவார்கள்
வாதித்தாற் குருவருளால் மனதுவைத்து
வழிபாடாய்க் கைமுறையாய் வழிசொல்வார்கள்
வேதித்தா லதுபிடிப்பு நினைவாய்வைக்கில்
நிசமாக வழலையுமாம் நேர்ந்துபாரு
ஆதித்தால் முப்பூவி னிடையேபாகம்
அறிந்துகுரு முடிப்பதுதா னடங்காமே (8)

நாமென்னும் அம்பலமாங் கூத்தராலே
நலமாகக் குருவதுதான் முடிந்துபோச்சு
ஓமிந்தக் குருவதினாற் சொல்லப்போகா
புரைக்கவென்றால் வேதையிதிற் சொல்லப்போகா
தாமிந்தக் குருவாலே சித்தாய்ப்போனார்
சாங்கமாய்ச் சித்தரென்ற நாமமாச்சு
போமிந்தக் குருகுளிகை தன்னைச்சூட்டப்
புகழ்கோடி பண்டவரை யோடேந்தானே (9)

ஓடினா ரிதுரெண்டும் விட்டார்சித்தர்
உபயமாம் ரெண்டினுட வழியோகானார்
தேடினா ரெங்கெங்கும் வழலையாதி
செகசாலங் காயசித்தி குளிகைக்கெல்லாம்
நாடினா ராறுகர்ம மிதுவேயாகும்
நலமாக விதையறிந்தா லெல்லாஞ்சித்தி
ஊடினா ரிதைவிட்டா லொன்றுமில்லை
ஓகோகோ வழலைவிட்டா லெல்லாம்போச்சே. (10)

போகாமல் வழலைவிட்ட குறையினாலே
புகலாகத் துடர்ந்துதென்று லெய்துமெய்தும்
வாகாக வழலையது பாகத்தோடே
மருவியே முடிந்துமது குருவேயானால்
சாகாத கற்பமது வாதஞ்சித்தி
தனியாறு கர்மமெல்லாம் யேவல்கேட்கும்
பாகாக மாயிகுரு யளிக்கையானால்
பண்பாக நாகத்தைக் கட்டக்கேளே. (11)

நாகமென்றால் சிறல்புகை கட்டப்போகா
நலமாக நாகத்தை கட்டக்கேளு
பாகமென்றாற் கறியுப்புச் சீனமபூரம்
பண்பான தளிரைவிட்டு ஆட்டிக்கொண்டு
தாகவென்றால் மூன்றுதாரஞ் சாய்த்தபின்பு
சார்பாக வில்லையைப்போ லெடுத்துக்கொண்டு
சோகமென்றாற் கன்னிக்கு ளடங்கும்போது
சுகமாக பஞ்சணையிற் புடத்தைப்போடே, (12)

புடமதுதா னேதுவாம் மூசையாகப்
புரளாமற் கைமுறைபா யெடுத்துக்கொண்டு
தடமதுதான் சீனத்தைத் தளிரில்நீத்திச்
சாகாத குக்குடத்தி லசனம்பண்ணி
நடமதுதான் அக்கார மெடுத்துக்கொண்டு
நலமான தாளகமுங் காரங்கூட்டித்
திடமதுதான் சேவலுட குருதிகூட்டித்
திரமாக அரைத்தபின்பு செய்யக்கேளே (13)

செய்யடா செங்கலுக்குட் புடத்தைப்போடு
திரமாக நாகமது சேர்ந்துகட்டும்
செய்யடா யுருக்கிப்பார் காரங்கூட்டித்
தெளிவானல் வயதெட்டு மணிபோற்காணும்
செய்யடா பரியோடே சமனைக்கூட்டிச்
செயமான லிங்கமது சேர்த்துக்கொண்டு
செய்யடா ரவிமதியிற் பத்துக்கொன்று
திடமாக வயதெட்டு தெளிந்துகாணே. (14)

தெளிவான நாகத்துக் கொப்போயில்லை
திரட்டிலே யிதுசேரான் தேர்ந்துசெய்தால்
வழியாக விசுவகர்மன நடந்தமார்க்கம்
மகத்தான நாதாக்கள் போதித்தார்கள்
சுழிவாக யிதையறிந்து செய்தானாகிற்
றுலேய மது மென்மேலும் களங்கமாகும்
களியான வித்தையிது கருவம்விட்டுக்
கண்டுபார் பராபரத்தைக் கருதிக்காணே. [15)

கருதடா பரையினுட அகண்டவீட்டைக்
நலங்காமல் நோக்கையிலே கடாக்ஷிப்பாள்தாய்
வருதடா மென்மேலும் வாதஞானம்
மயங்காம லாத்தாளை வருந்திப்பூசி
அரிதடா பௌரணையும் அம்மாவாசி
ஆத்தாளுக் குகந்ததுதா னறிந்துகொள்ளு
சரிதடா அவள்பேரும் வடுகன்பேரும்
சாங்கமாய் நடந்தாக்காற் றமிபனுமே. (16)

ஆமென்னுந் துருசினுட குருவைச்சொல்வேன்
ஐயாற்றி லந்தணனு மாசான் ஆசான்
ஓமென்னும் நாதாக்க ளுநந்தசொல்லாம்
உத்தமனே யுறுதியாய் நிலைத்திட்டார்கள்
தாமென்னும் உருவிநீர்ப் படியோரெண்டும்
சமன்ரெட்டி பாருப்புச் சட்டிதன்னில்
ஏமென்னுந் துருசுதனை யிதமாய்வைத்து
யேழ்சாம மெரியிட்டு யிறக்கிடாயே (17)

எரிக்குமுன்னே சட்டியதில் வைக்கும்போது
யிதமாகக் கீழ்மேலு முருவிநீரு
தரிக்குமுன்னே நடுவணையிற் பாரிலுப்புத்
தன்னடுவே துருசிதன்னைச் சமமாய்வைத்து
மரிக்குமுன்னே துருசதன்மேற் காரம்பூசி
வாகாகப் பரப்பியதை வைத்துக்கொண்டு
பரிக்குமுன்னே கைமுறையாய்ப் பதமாய்வைத்துப்
பாங்காக மூத்தீயு மெரித்திடாயே. (18)

எரித்தபின்பு துருசதுதான் குருவேயாச்சு
இதமாக எடுத்துப்பார் சிங்கிக்காரும்
மரித்தபின்பு யிதினோடே வீரங்கூட்டி
மால்தேவி தனக்குநன்றுய்ப் பொதிந்துவைத்துத்
தரித்தபின்பு சட்டிக்குட் சமனுப்முன்போற்
சாதமமாய்க கைமுறையாய் வைத்துமூடி
பரித்தபின்பு யெண்சாமம் பதமாய்ப்பார்ததுப்
பக்குவமாய்க் கைமுறையாய்ப் பரிந்தெடுத்தே. (19)

பரிந்தெடுக்க மால்தேவி சுண்ணமாகும்
பாங்கான வெளுப்பதுதான் கண்கொள்ளாது
வருந்தியதைக் கைமுறையாய் வீரங்கூட்டி
மகத்தான வங்கத்திற் பூசிப்போடு
திருந்தியது வங்கமது நீறிப்போகும்
சிதருமல் வங்கத்தால் நிமிளைகூட்டிப்
பொருந்தியது நிமிளைதன்னைச் சாரத்தாட்டிப்
புகழான சாரத்தால் துருசுக்கப்பே (20)

அப்பியந்தத் துருசதுதான் முன்போல்வைத்து
அரிதான கடுங்கார மதின்மேற்பூசி
ஒப்பியந்தத் துருசுதன்னைப் புடமேசெய்ய
உத்தமனே கொடிதான சுண்ணமாகும்
செப்பியந்தச் சுண்ணத்தாற் சூதங்கட்டும்
சிதருது வேதையெல்லாந் தெளிந்துபாரு
கொப்பியந்த அஷ்டசத்திக் கொக்குமொக்கும்
கொடிதான குருவினுட கூறுதானே. (21)

கூறதுதான் துருசுயென்ற சுண்ணத்தாலே
கொழுகியந்தச் சூதத்தைக் கட்டிக்கொண்டு
மாறதுதான் சூதத்தைச் சுண்ணம்பண்ணி
மருவியந்தச் சூதமென்ற சுண்ணமொன்று
ஆறதுதான் அயத்தினுட சத்ததொன்று
அப்பனே காந்தத்தின் சத்ததொன்று
பேறதுதான் கெந்தியுட சத்ததொன்று
பேசாதே கெவுரியுட சத்துமொன்றே. (22)

ஒன்றான தங்கமது சமனாய்க்கூட்டி
உருக்கியொன்றாய் மணியாக வாங்கிக்கொண்டு
நன்றான மணிமேலே துருசுச்சுண்ணம்
நல்வீரம் பூரத்தின் சுண்ணமொன்று
கன்றான வழலையுட சுண்ணமொன்று
கலந்துமதில் வீரமுடன் புழுகுங்கூட்டி
மன்றான சுக்கிலத்தா லரைத்துப்பூசி
மகத்தான அஞ்சுசுண்ணப் புடத்திற்போடே. (23)

போட்டபின்பு யீசானம் பூசைபண்ணிப்
புகழாக நிருவாணி பூசைபண்ணி
நாட்டபின்பு யெடுத்துப்பார் குருவாய்நிற்கும்
நலமான குருவோடே வீரம்லிங்கம்
மாட்டியிதிற் காரமுடன் மூன்றுங்கூட்டி
வகையாகக் குருவோடே சேர்த்துக்கொண்டு
ஆட்டியிது நவலோகந் தன்னில்வேதை
ஐயிரண்டு சகஸ்திரத்துக் கொன்றுதாக்கே. (24)

தாக்கப்பா வேதையிதிற் சொல்லப்போகா
தனியான பரையினுட வீசத்தாலே
வாக்கப்பா கொள்ளாது கண்கொள்ளாது
வாய்திறந்து பேசவென்றால் நாவோயில்லை
ஆக்கப்பா தினங்குன்றி யேழுநாள்தான்
அப்பனே தின்றிடவே அருணன்போலாம்
நீக்கப்பா செகத்தினுட மாயைவிட்டு
நிறைவோடே பரவெளியிற் புக்கிச்செல்லே. (25)

செல்லப்பா வழலையென்ற சுண்ணத்தாலே
திரமாகத் துருசதுதான் சுண்ணம்பண்ணி
மல்லப்பா சதுர்கள்ளிப் பாலிற்போட
வளமாகப் புஷ்டியத்து முரிஞ்சுநீராம்
வெல்லப்பா வெள்ளைக்குச் சுருக்குத்தாக்க
விரைச்சுப்போம் வெள்ளையது கட்டிப்போச்சு
அல்லப்பா பழுப்பில்வைத்துப் புடத்தைப்போடு
அப்பிரகந் தன்னில்வைத்துப் புடத்தைப்போடே. (26)

போட்டபின்பு உருக்கிப்பார் காரங்குத்திப்
புகழாக வுருக்கியது மணிபோல்நிற்கும்
நாட்டபின்பு யெடுத்துகரு வங்கத்திய
நலமாக வங்கமது குருவாய்ப்போச்சு
நீட்டபின்பு யிதுக்குவெள்ளி ரெண்டிற்றுக்க
நிலையாக வெள்ளியது குருவாய்ப்போச்சு
ஆட்டபின்பு யிந்திடைக்கு வெள்ளைதன்னை
யடைவாக நீர்குத்தி யறைத்திடாயே. (27)

அறைத்தபின்பு கருவங்கந் தன்னிற்கேளு
அப்பனே நூற்றுக்கொன் றீயவெள்ளி
வறுத்தபின்பு மாத்துப்பத் தாயிருக்கும்
வகையாக வங்கமுதல் லோகமெல்லாம்
இறுத்தியே கொடுக்கவுந்தான் தசமாத்தாகும்
இதுபோலே ரசிதவித்தை யினியேதப்பா
அறுத்தியே பால்முரிஞ்ச நீரைத்தொட்டு
அப்பனே முடிந்தகுரு அரைக்காலாமே. (28)

ஆமென்று சூதமென்ற சுண்ணமொன்று
அப்பனே நாலிடையாந் தங்கதூட்டி
ஓமென்று உருக்கியொரு மணியாய்வாங்கி
உத்தமனே துருசோடு பூரச்சுண்ணம்
தாமென்று வீரமொடு புழுகுங்கூட்டித்
தனித்தரைத்து மணிமேலே பூசிக்காய்ச்சிப்
பாமென்று அஞ்சுசுண்ணப் புடத்தைப்போடு
பக்குவமா யெடுக்கவுந்தான் குருவுமாமே. (29)

குருவெடுத்துப் பால்நீரி லரைத்துவைத்துக்
குணமான அண்டத்திற் குறிபோல்வைத்துத்
தருவெடுத்து ரவியில்வைக்கச் செந்தூரந்தான்
தனையெடுத்து லோகத்தில் நூற்றுக்கொன்று
கருவெடுத்துக் கொடுக்கையிலே மாத்துப்பத்து
கதிர்போலே தேகமுமாங் காயசித்தி
பருவெடுத்து மண்டலந்தான் கொள்ளுமைந்தா
பாங்காகக் கதிர்போலே தேகமாமே. (30)

தேகமதுக் காதராஞ் செலவுசெய்யத்
திரமாகச் சூதத்தை மணிபோல்வாங்கிப்
பாகமது அயத்தினுட சத்ததொன்று
பாங்கான கருவங்கச் சத்ததொன்று
ஆகமது தங்கமது ஒன்றுகூட்டி
அப்பனே யுருக்கிபொரு மணிபோல்வாங்கி
வேகமென்ற பால்நீரை விட்டுஆட்டி
வீடுபெட்ட லோகத்திற் பரிசம்பண்ணே. (31)

வரிசித்துப் புடம்போட மாத்துபத்தாம்
　　பாங்காக ரவிமேலே குருவின்வேகம்
வருவித்து மழைபொழிந்தாற் போலேயப்பா
　　வகையாகச் சொர்னமுந்தான் வருஷிக்கும்பார்
தருசித்து நவலோகப் படியேயாகுந்
　　தயங்காம லுபரசமப் படியேயாகும்
அரிசித்த குருவதுக்கொப் பொன்றுமில்லை
　　ஆகாகா பூரணந்தா னதுக்குலப்பே (32)

ஒப்பில்லா வழலையென்ற சுண்ணத்தோடே
　　உறுதியாய்ச் சமனிடைதான் சாரங்கூட்டித்
தப்பில்லாக் கல்வத்தி லாட்டிவைக்கத்
　　தனிமதியிற் பனிதனிலே செயநீராகும்
ஒப்பில்லா வீரமது துவைத்துவாட்ட
　　ஓகோகோ மெழுகாகும் உயர்ந்தவேதை
வெப்பில்லா மெழுகோடே தங்கங்காரம்
　　வேதித்துக் கொடுத்தாக்கால் வேதையாமே. (33)

வேதையாம் வெள்ளியிலே பத்துமாத்தாம்
　　விளங்கியதோர் செம்புதன்னிற் பத்துமாத்தாம்
பாதையாம் பித்தளையிற் பத்துமாத்தாம்
　　பரிசனமா மிதுமூன்றும் வேதையப்பா
பேதையாம் வன்னிகெற்பம் பெருமைகேளு
　　பிசகாமல் முன்செயநீர் தோய்துவாட்ட
ஆதையாய் மெழுகாகு மதனில்வேதை
　　அப்பனே சொல்லுகிறே னறிந்துபாரே. (34)

அறிந்துபார் வன்னிகெற்ப மெழுகுதன்னில்
　　அப்பனே தங்கமுடன் காரங்கூட்டிச்
செறிந்துபா ரொன்றாகச் சேர்த்துக்கொண்டு
　　செப்பமுடன் மதிமேலே கொடுக்கப்பத்தாம்
பறிந்துபார் செயநீரின் வேகந்தானும்
　　பகராதே கெந்தகந்தான் கட்டுங்கட்டும்
குறிந்துபார் சத்தாகுஞ் செயநீர்வேகங்
　　கொழுகுமக்காள் குருவருளாற் குளிந்துபாரே. (35)

குளிந்துபார் கட்டினதோர் சூதமொன்று
குறையாதே நாலிடைதான் தங்கத்தூட்டித்
தெளிந்துபார் வழலையுடன் பூரச்சுண்ணம்
திறமான துருசுயென்ற சுண்ணத்தோடே
வளிந்துபார் வீரமுடன் புழுகுசினம்
வாகான சுக்கிலத்தா லரைத்துப்பூசி
நெளிந்துபார் சுண்ணத்திற் புடத்தைப்போடே
நேற்கோச பீசமது குருவுமாமே (36)

குருவான சுண்ணத்தின் வீரங்கூட்டிக்
குறையாமல் மத்தித்து வைத்துக்கொண்டு
திருவானஅண்டத்திற் போட்டுவைக்கத்
திறமாக அண்டமது மெழுகுமாகும்
அருவான அண்டத்தில் வீரங்கூட்டி
அப்பனே வெடியுப்புப் பற்பம்போடு
பரிவான மெழுகதுவாம் வெடியுப்புத்தான்
பாங்குதிசைக் கொன்றுகரு வங்கத்தீயே. (37)

வங்கமது தங்கமதாம் பத்தும்பத்தாம்
வரிசையாம் வெடியுப்பு வேதைதானும்
பொங்கமதாம் வெடியுப்புச் செந்தூரித்தால்
பகழாக நவலோகம் வேதையாகும்
சிங்கமதாம் வழலையென்ற சுண்ணத்தாட்டு
திறமான சொர்னமுமாஞ் சென்றுபாரு
அந்தமென்ற மேருமுதற் பழுக்குமப்பா
அதீதமாம் வேதையிது அனுஷ்டியாதே. (38)

வேதையது பார்க்கநா தாக்கள்பாதம்
விரும்பியே தொழுதிறைஞ்சி விழிநீர்மல்கிச்
சாதகமாய் மனதுஒரு மித்துநாடித்
தனியான பரைவடுகன் றாள்கள்போற்றிப்
பேதமற மனதுவைத்தா லருளைப்பெற்றுப்
பிரளாம லாதிகுரு வழலைமார்க்கம்
நீதியுடன் தவறும லுண்டாமப்பா
நினைவுகெட்டு வழலைவிட்டால் வாதம்போச்சே. (39)

யோகாமற் கணேசன்பொற் பாதம்போற்றி
புகழாகக் குருவின்பொன் னடியைப்போற்றி
வாகான பராபரையை வணங்கிப்போற்றி
மறைகாணு மீசனுட பதத்தைப்போற்றித்
தாகான வைரவனைத் தயவாய்ப்போற்றிச்
சாதகமா யைவரையுஞ் சாங்கமாகப்
பாகாகப் பூசைசெய்தாற் தவறுதப்பா
பண்பாகக் குருமுறையைப் பரிந்துபாரே. (40)

சிவானந்த சூஸ்திரம் சமி முற்றிற்று

உ

கடவுள் துணை

அநாதிநர்தரேன்ற நாதாந்தச்சித்தர் அருளிச் செய்த

# சூஸ்திரம் ௰௬.

ஆதியென்ற மூலகண பதியைப்போற்றி
அம்பிகையாம் வாலைமனோ மணியைப்போற்றி
சோதிமதி கொன்றைறதும்பை யறுகுகங்கை
துலங்கவே முடிக்கணிந்த சிவனைப்போற்றி
வீதியென்ற வாறுதலங் கடந்துமேவி
வேதமதின் முடிவறிந்து துவிதமின்றி
சாதியென்ற பேதமற்று அபேதமான
சத்துவமா மெய்ஞ்ஞானஞ் சாற்றுவேனே. (1)

சாற்றுவே னறிவல்லோ விவேகம்புத்தி
தன்மையொடு பொறையீத லிரக்கம்வேண்டும்
போற்றவே யாவருக்கு முதவவேண்டும்
பொருள்பூமி பெண்ணாசை மறக்கவேண்டும்
மாற்றிடா மன்னுயிர்தன் னுயிர்போலாக
மதித்தெண்ணி பரிபாக மறியவேண்டும்
தோற்றவே ரவிதனிலே சார்ந்துகொண்டு
துலக்கமுடன் ஞானமதைத் தொடர்ந்துபாரே. (2)

தொடர்ந்துமனம் பற்றியருள் தெளியாவிட்டால்
துன்மார்க்க மாயையல்லோ சூழ்ந்துகொள்ளும்
அடர்ந்துபா ரென்னுசான் மகிமையென்றே
அனுதினமும் மதிதேயப் பழக்கஞ்செய்து
கடந்துபா ரங்குபரன் நடனக்கூத்தை
கண்டுபிச காமலங்கே குறியிலேதான்
தொடர்ந்தேறச் சோதியொளி தீபங்காணுந்
தாண்டுவாய்ச் சுழிமுனையைத் தாண்டுவாயே. (3)

தூண்டுவாய் பூரணத்தில் மனதைவைத்து
சுழன்றோடும் வாசிதனை நிறுத்திக்கொண்டு
ஈண்டுரவி சிவயோகத் தாதியாகுங்
கிருபையுள்ள சிவதீட்சை யதீததீட்சை
ஆண்டுபார் மதியங்கே யழிந்துபோகும்
அல்லலற்றுச் சுழிமுனையைப் பற்றியேறிப்
பூண்டுபா ரசையாமல் விலகிடாமற்
புத்தியுடன் சிவயோக மார்க்கம்பாரே. (4)

பாரேநீ சிவயோகத் திருக்கும்போது
பழியான பிணிகளெல்லாந் தீருமானல்
கோரியுனை யண்டியே மண்பொன்னோடு
கோதையென்ற மின்னார்க ளின்பந்தீனி
நேரேயிவ் வாசையெலாஞ் சூழ்ந்துவந்து
நிஷ்டைவிட்டு மிரண்டிடவே செய்யும்பாரு
சாரேயிவ் வாசைமுற்றுஞ் சங்கரித்துத்
தற்பரத்தை யெந்நாளுஞ் சார்ந்துகூடே. (5)

சார்ந்துபா ரவியறிவு மொன்றாய்ச்சேரத்
தப்பாமற் சந்திரனைத் தேயச்செய்து
நேர்ந்துநீ யிடகலையை வங்கென்றேத்தி
நிதானமாய் மேலேதான் அங்கென்றாதி
கூர்ந்தேநீ சிங்கென்று தவறிடாமற்
குற்றமில்லா ரவிதனிலே நிலைக்கவூது
சேர்ந்துமே ரவியில்மதி யொன்றதாகித்
திரமாக வாசிநிலை பெலக்குந்தானே. (6)

தானென்ற ரவிதனிலே தேறவேண்டுந்
தன்மயமாம் பூரணத்தை நிறுத்தவேண்டும்
கோனென்ற தவமறிந்து கூடவேண்டுங்
குறிப்புடைய மவுனமதைத் தாக்கவேண்டும்
தேனென்ற சிவயோக வாழ்க்கைதன்னில்
திறமாக நீயிருந்தால் மாயைதீயும்
மானென்ற தேவியல்லோ ரவியினோடு
மருவாமற் செய்துவைத்த மார்க்கந்தானே. (7)

தானென்ற திருநடன விதத்தைக்காண
சதகோடி ரவியொப்பாங் கூசுங்கண்ணு
மானென்ற சுழிமுனையி லே சார்ந்துநின்றால்
மகத்தான பாக்கியங்க ளதிகஞ்சேரும்
நானென்ற யில்லமதி லிருந்தாலென்ன
நலமற்று வனகிரியிற் சென்றாலென்ன
தேனென்ற வாசியது நிலைத்துதானாற்
சிவயோக முந்தன்கை சேருந்தானே. (8)

சேருகின்ற பூரணந்தான் தெய்வமாகுஞ்
சிறந்திலங்கும் பூரணமே கெதியென்றெண்ணித்
தேறியதில் நின்றவனே வல்லசித்தன்
சிவயோகி பாதேசி மௌனஞானி
ஏறியே யண்டரண்டங் கடந்துநின்று
எண்டிசையும் நிமைக்குமுன்னே கமனமோடி
கோரகச் சென்றவனைப் பேயனென்று
நெறியின்றிச் சொன்னவன்றான் பேயனாமே. (9)

ஆமேதான் பேயனென்ப தாரையென்றால்
அதிகாமி யெனும்போகி யானலோபி
நாமேதான் செய்நன்றி கெட்டபாவி
நற்குணமகன் னடக்கையிலான் பேயனாகும்
ஊமேதான் சின்முத்திரை பெற்றோனானால்
உற்றபர ஞானிசிவ யோகியாச்சு
தாமேதான் நாதாந்தச் சித்தனென்று
சகலருமே யதிசயிக்கச் சாற்றினாரே. (10)

தாளக பற்பம்.

அதிசயமாய்த் தாளகத்தின் பற்பந்தன்னை
அறிந்துமக்குச் சூட்சமுடன் சொல்லக்கேளு
துதிசெயிக்கத் தாளகந்தான் பலமொன்றப்பா
சுண்ணாம்புக் கல்லதனி லிருபானைந்து
கதிப்பான தரம்வைத்து நீத்திப்பாரு
கசடான விஷங்களெல்லாம் கழன்றுபோகும்
நிதிநிம்ப மரசுபட்டை வாகைமூலம்
நேர்த்திவைமூன் றுஞ்சுட்டுச் சாம்பலாக்கே. (11)

மூன்றுமொரு துகையாக வெடுத்துக்கொண்டு
முனைபெறவே புதுப்பாண்டந் தன்னிலேதான்
ஏன்றமொழி தவறுமற் சாம்பலிட்டு
இணையுடனே தாளகத்தை நடுவில்வைத்து
ஆன்றவுடன் மேலுமந்தச் சாம்பல்தன்னை
அடவுடனே போட்டிசைய வமுக்கியேதான்
கான்றவுற வாய்தனக்குச் சீலைசெய்து
கணக்காக விருசாம மெரிப்பீர்தானே. (12)

இருசாமங் கமலம்போற் றீயெரித்து
வெடுத்தாற்றிப் பதருமற் பார்த்தாயானால்
கருகாமற் றன்குலம்போல் நீறிநிற்கும்
களிப்புடனே பற்பமதைப் பதனமாகப்
பெருகவே சிமிழ்தனிலே வைத்துக்கொண்டு
பெரியஜய மந்தார காசத்திற்கும்
சுருக்கான விளைப்புமுத லிருமலுக்கும்
சுரத்திற்குங் குணமறிந்து கொடுப்பீர்தானே. (13)

கொடுப்பதற்கு அநுப்பானம் புகலக்கேளு
கோதறவே திரிகடுகுத் தேனிலேனும்
அடுத்துமின்ன முயல்நெய்யின் ரசாயனத்தில்
ஆராய்ந்து பணவிடைதா னீய்வாயாகில்
கடுத்தநோய் நீங்கிடும்பத் தியமாயுண்ணக்
கர்த்தாவின் றுணையதென்றே கருதுவீர்கள்
தொடுத்திதனைப் பொய்யென்று நினைக்கவேண்டாம்
துயாகலச் செய்தவர்க்குத் துலங்குந்தானே. (14)

துலக்கமுள்ள வாட்டிறைச்சி காடையாகுந்
துணையான முயற்கறியுங் கருணையாகும்
கலக்கமில்லாப் பசுநெய்கோ துமையுமாகுங்
கருணையுள்ள வாட்டுக்கால் ரசமுமாகும்
பெலக்கவே மிளகுநீர்ச் சாதத்தோடு
பிரியமுடன் பார்த்துநன்றாய் உண்ணவேதான்
சிலகனத்த கடிவிஷங்க ளரிப்புமேகஞ்
சீக்கிரத்தில் நீங்கிவிடுந் திறமைதானே. (15)

நீங்கிவிடு மிதிற்சொன்ன பற்பத்தாலே
நிதானமுடன் பார்த்துணர்ந்து செய்வீராகில்
தாங்கியதோ ரவிழ்தத்தா லெல்லாநோயும்
தப்பாமற் றீருமப்பா சார்ந்துபாரு
ஏங்கியே திரியாமல் மனதைத்தேற்றி
இயற்சந்த ஞதியதில் ஸ்நானஞ்செய்து
தூங்கிவிழு காத்தெய்வங் தன்னைப்போற்றத்
துலங்குமப்பா வேதாந்தச் சுருதிதானே. (16)

அநாதி நாதரென்ற நாதாந்தச்சித்தர் சூஸ்திரம் ௰௬.
முற்றிற்று.

அநாதி நாதரென்ற

# நாதாந்தச் சித்தர் பாடல் ௩௰.

ஓங்கார வட்டத் துள்ளிருக்குந் தேவிதனைப்
பாங்கா யறிந்தால் என்னையா
பத்திமுத்தி யுண்டாமே. (1)

ஆருதா ரப்பொருளை யறிந்தோர்கள் பாதமதை
நேராய்த் தெரிசித்து என்னையா
நிலைபெறவும் வேணுமையா. (2)

நினைவொன்ற தாகவுமே நின்மலநித் யானந்தந்
தனையடைந்தா யானால் என்னையா
சகலவினை யோடிடுமே. (3)

ஓடுமிரு காலை யொத்துப் பிடித்திழுக்கக்
கூடுமிதயத்தில் என்னையா
கொள்வாய் வலம்புரியாய். (4)

வலம்புரியா யூதினால் வாசிபூ ரித்துநல்ல
சிலம்பொலி பாடுமையா என்னையா
தேரோட்டம் பாராயோ. (5)

தேரோட்டம் ஓடையிலே திருப்பியே வாசிதனை
பாராட்டிச் சேர்க்க என்னையா
பண்ணுவது உத்தமமே. (6)

மூச்சுதனைக் கட்டுதற்கு மூவிருக் கும்வீட்டில்
பாச்சப்பா நான்குகலை என்னையா
பரவெளியில் நேத்திரம்போல். (7)

நேத்திர மிரண்டையும் நெருக்கிக் குவித்துநடுக்
காற்றிறத் தானூதி என்னையா
கருவி எரிப்பாயே. (8)

கருவி எரிப்பதற்குக் காட்டுமு பாயமதை
அறிவுடனே சொல்வேன் என்னையா
ஆவினுட கோமயமே. (9)

கோமயம்வற றக்காய்ச்சிக் குறுகில்வெண்ணுவின்நெய்யை
தாமே கலந்துகொண்டு என்னையா
தடவ வகைகேளே. (10)

தாமே கலந்து தளிர்போலத் தொங்கும்நாவுள்
போமே பெருவிரலால் என்னையா
புகட்டியுள்ளே தான்தடவாய். (11)

புகட்டி யுண்ணுக்கிற் பூரணமாய்த் தான்தடவ
பகட்டு மேல்வாசல் என்னையா
பண்பாக வேதிறக்கும். (12)

திறந்த வுடனமுதந் திரளாக வேபருகச்
சிறந்த அமுதமது என்னையா
திரளாக வேவருகும். (13)

வந்த அமுதத்தை மகரிஷிகள் தான்கூடி
விந்தைப் பெயரதற்கு என்னையா
விதவிதமா யிட்டார்கள். (14)

சிவப்புக்கு நாதமென்று செய்யதொரு வெள்ளைக்குநற்
சுகமான விந்துவென்றும் என்னையா
சொன்னார் பெரியோரே.

இந்தகல் லமுதம் யாருக்குங் கிட்டாது
பந்தமற்ற ஞானிகட்கு என்னையா
பாய்ந்துவரும் பார்த்தறிவாய். (16)

பாய்ந்துவரும் கற்பத்தைப் பாழாகச் செய்துவிட்டால்
தேய்ந்திடை பிங்கலையில் என்னையா
சேர்ந்துவிடுந் தப்பாது. (17)

தப்பாத முதமதைச் சரியான குப்பிதனில்
அப்போதே தான்பிடித்து என்னையா
அருணனிலே வைத்துவிடு. (18)

அகத்திய மாமுனிவர் அன்பாய்ப் பதினாறிற்
சுகமாகச் சொன்னபடி என்னையா
சூட்சுமமாய்ச் செய்தாக்கால். (19)

முப்பூ வதுவாகும் முடிந்ததொரு காரியமாம்
அப்பூவை விட்டு என்னையா
அலைந்தால்வா தம்வருமோ. (20)

தொட்டவிடம் பட்டவிடந் தொல்புவியும் பொன்னாகும்
பட்டப்பகல் போலே என்னையா
பக்குவமாய்ச் சொல்லிவிட்டேன். (21)

வழியோடு தானமுதம் வாங்குதற்குச் சொன்னவிந்தச்
சுழிமுனையை நன்றாய் என்னையா
சுருக்கமாய்க் கண்டுகொள்வாய். (22)

கண்டபின்பு மற்றவர்க்குக் காட்டமனம்வருமோ
தொண்டுபண்ணி வந்தோர்க்கு என்னையா
சொல்லிவிட லாகாதோ. (23)

திரிமூர்த்தி வாசஞ் செய்யுமிடந் தன்னைநன்றாய்க்
குருவின்மு கூர்த்தமாய் என்னையா
கூடியே கண்டுகொண்டு. (24)

திருவடி போற்றிசெய்து சிவகலை செய்துவாக்
குருவடியைப் போற்றி என்னையா
கும்பிட்டு வாவெனவே. (25)

வாவெனவே கூறியின்று வங்கென்றே உச்சரித்து
நாவினுண் ணாக்குமேல் என்னையா
நன்றாகத் தானூதே. (26)

நாதனைநீ போற்றி நாதாந்தக் காற்றாதிற்
கீதங்கள் பத்துவிதம் என்னையா
கிண்கிணியுங் கேட்டிடுமே. (27)

கேட்டவுட னேமமதைகெர்வமுடன் மாயையெலாந்
தாட்டிகமா யோடிவிடும் என்னையா
தானரசன் நீயாவாய். (28)

கண்டறிந்து கொண்டவனே காயசித்தி யும்பெறுவான்
அண்டபிண்ட முந்தெரிவான் என்னையா
அவர்க்கிணைவே றொருவ ருண்டோ. (29)

மாதவசி காலாட்டி வாய்ப்பாகச் சொன்னமந்த்ரஞ்
சாதகமாய்க் கண்டறிந்தோர் என்னையா
தக்கபெரி யோராவார். (30)

நாதாந்தச் சித்தர் பாடல் ௩௰. முற்றிற்று.